# சோமலெ

நிர்மலா மோகன்



இந்திய
இலக்கியச்
சிற்பிகள்

# சோமலெ

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில், பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை, மன்னர் சுத்தோதனருக்கு நிமித்தகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்திரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.

நாகார்ஜுன் மலைச்சிற்பம், கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.
பட உதவி : நேஷனல் மியூசியம், புதுதில்லி.

இந்திய இலக்கியச் சிற்பிகள்

# சோமலெ

நிர்மலா மோகன்

சாகித்திய அக்காதெமி

*Somale :* Monograph in Tamil by Nirmala Mohan,
Sahitya Akademi, New Delhi, 2001, Rs. 25/-

© சாகித்திய அக்காதெமி
முதல் வெளியீடு : 2001

**சாகித்திய அக்காதெமி**
தலைமை அலுவலகம் :
ரவீந்திர பவன், 35 பெரோஸ் ஷா சாலை,
புதுதில்லி - 110 001.

**விற்பனை**
'ஸ்வாதி' மந்திர் சாலை, புதுதில்லி 110 001.

ஜீவன் தாரா கட்டிடம், 4-வது மாடி,
டைமண்ட் ஹார்பர் சாலை, கொல்கத்தா 700 053.

172, மும்பய் மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை,
தாதர், மும்பய் 400 014.

மத்திய கல்லூரி வளாகம், பல்கலைக் கழக நூலகக் கட்டிடம்,
டாக்டர் அம்பேத்கர் சாலை, பெங்களூர் 560 001.

சி.ஐ.டி. வளாகம், டி.டி.டி.ஐ. அஞ்சல்,
தரமணி, சென்னை 600 113.

விலை : ரூ. 25

ISBN : 81-260-1242-0

**Typesetting by Shree Print House, Chennai - 20.**

அச்சிட்டோர் : உதயம் ஆப்செட்ஸ், சென்னை – 2
✆ : 8534808; 8520906

# பொருளடக்கம்


| | |
|---|---|
| தோரண வாயில் | 7 |
| 1. 'நெற்குப்பை பெற்றெடுத்துத் தந்த நிறைகுடம்' | 9 |
| 2. பயண இலக்கியம் | 17 |
| 3. மாவட்ட வரிசை நூல்கள் | 35 |
| 4. வாழ்க்கை வரலாற்று இலக்கியம் | 50 |
| 5. இதழியல் கையேடு | 66 |
| 6. நாட்டுப்புறவியல் முன்னோடி | 77 |
| 7. பிற படைப்புப் பணிகள் | 89 |
| 8. நடை நயம் | 107 |
| 9. முடிவுரை | 127 |
| பின்னிணைப்பு | 131 |
| துணைநூற்பட்டியல் | 135 |

# தோரண வாயில்

'சோமலெ' என்ற புனைபெயர் கொண்ட சோம. லெ. இலக்குமணச் செட்டியார் (1921-1986) ஓர் எளிய குடும்பத்தில் பிறந்து தமது கடுமையான உழைப்பின் மூலம் வாழ்வில் படிப்படியாக முன்னேறியவர்; 'உலகம் சுற்றிய தமிழர்' ஏ.கே. செட்டியாரின் எழுத்துக்களால் தூண்டப்பெற்று, பயண இலக்கியத் துறையில் அடியெடுத்து வைத்தவர்; 'உலக நாடுகள் வரிசை', 'இமயம் முதல் குமரி வரை', 'நமது தமிழ்நாடு வரிசை' என்றாற் போல் முப்பெரும் பரிமாணங்களில் நூல் வரிசைகளை வெளியிட்டுப் பயண இலக்கியத் துறையில் தனி முத்திரை பதித்தவர்; வாழ்க்கை வரலாற்று இலக்கியத் துறைக்கும் தமது முத்தான மூன்று நூல்களால் வளம் சேர்த்தவர்; தொடக்க நிலையில் இதழியலிலும் நாட்டுப்புறவியலிலும் மிகுந்த ஈடுபாடு காட்டி, இவ்விரு துறைகளையும் குறித்துத் தனித்தனியே இரு அரிய நூல்களை வெளியிட்டவர்; 'தமிழில் இத்துறையில் வெளிவரும் முதல் நூல் இதுவே' எனப் பெருமிதத்தோடு சொல்லத் தக்க வகையில் சில நூல்களைப் படைத்திட்ட சாதனையாளர்; பல்வேறு கோவில் குட நீராட்டு மலர்களைப் பதிப்பிப்பதிலும் தம் கைவண்ணத்தைக் கவினுறக் காட்டியவர். இங்ஙனம் எழுத்துத் துறையில் பல்வேறு பரிமாணங்கள் கொண்ட சோமலெயைத் தமிழ் கூறு நல்லுலகிற்கு எளிய முறையில் அறிமுகம் செய்யும் நோக்கில் எழுதப்பட்டுள்ள நூல் இது.

'இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசை' யில் இந்நூலினை உருவாக்கும் அரியதொரு வாய்ப்பினை எனக்கு அருளிய சாகித்திய அக்காதெமியினருக்கு என் நெஞ்சார்ந்த நன்றியும் நல்வணக்கமும் என்றென்றும் உரியனவாகும். இந்நூலாக்கப் பணியின் போது எனக்குச் சோமலெயின் கிடைத்தற்கரிய நூல்களைத் தந்து எனக்கு உற்றுழி உதவிய பெருமக்கள் பலர் ஆவர். இவர்களுள் என் நினைவில் மோனையைப் போல் முன்னிற்பவர் எழுத்தாளர் சோமலெயின் அருமந்த புதல்வர் திரு. சோமலெ சோமசுந்தரம் ஆவார். இதே போல், மூதறிஞர் தமிழண்ணல், பதிப்புச் செம்மல் ச. மெய்யப்பன், செந்தமிழ்க் கல்லூரி நூலகர் திரு. முருகேசன் ஆகியோரும் இங்கே சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். 'அகரம் முதல் னகரம் இறுவாய்' என்றாற் போல் இந்நூலின் அனைத்து நிலைகளிலும் எனக்கு உதவியும் ஒத்துழைப்பும் நல்கிய என் வாழ்க்கைத் துணைவர் முனைவர் இரா. மோகனுக்கும் இவ்வேளையில் என் இதயங்கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மதுரை - 625 019,
04-08-2001.

**நிர்மலா மோகன்**

# 1

## 'நெற்குப்பை பெற்றுத் தந்த நிறைகுடம்'

" அறிவுக் கடல் சோமலெ உழைப்பின் வடிவம். அவரே ஒரு பெரிய நிறுவனம்... இந் நூற்றாண்டில் தமிழுக்குப் புதுமைப் பொலிவு செய்தவர்".

- வ.சுப. மாணிக்கம்*

தமிழ் கூறு நல்லுலகால் 'சோமலெ' என்று மதிப்போடும் மரியாதையோடும் அழைக்கப்பெறும் சோம.லெ. இலக்குமணன், இராமநாதபுரம் மாவட்டத்தில் (இன்றைய பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில்) உள்ள நெற்குப்பையில் 11.2.1921-இல் நாட்டுக்கோட்டை நகரத்தார் மரபில், இளையாத்தக்குடி, கழனிவாசல் கோயில் பிரிவில் பிறந்தார். அவரது தந்தையார் பெயர் பெரி. சோமசுந்தரம் செட்டியார்; தாயார் பெயர் நாச்சம்மை ஆச்சி. இருவருக்கும் ஆறாவது குழந்தையாகப் பிறந்தவர் சோமலெ. சோமலெயின் உடன்பிறந்தோர் ஐவர். சொக்கலிங்கம், பெரிய கருப்பன் என்னும் இருவரும் அவரது மூத்த சகோதரர்கள்; திருவத்தாள், மங்கை, கல்யாணி ஆகிய மூவரும் அவரது மூத்த சகோதரிகள். சோமலெ குடும்பத்தின் 'கடைக்குட்டி'.

சோமலெ தம் பெற்றோர் மீது இளமையில் இருந்தே மிகுந்த மதிப்பும் ஈடுபாடும் கொண்டவராக விளங்கினார். பின்னால் வளர்ந்த நிலையிலும் தம் பெற்றோரது திருவுருவப் படங்களை வணங்கிய பிறகே அன்றாடச் செயல்களைத் தொடங்குவது அவரது வழக்கமாக-வாடிக்கையாக-அமைந்திருந்தது. பொற்குடத்துக்குப் பொட்டும் இடுவது போல் சோமலெ தம் தந்தையாரின் நினைவாகப் பேப்பனையம்பட்டியில் அருள்மிகு சோமசுந்தர விநாயகர் திருக்கோவிலைத் தம் சொந்தச் செலவில் கட்டியுள்ளார்; கோவில் கட்டிய விவரம் அனைத்தையும் கல்வெட்டாகப் பதிவு செய்து வைத்துள்ளார். இது அவரது ஆவணச் சான்று வழங்கும் திறனுக்கு (Documentation) நல்லதோர் எடுத்துக்காட்டு ஆகும்.

சோமலெ தமது பிறந்த ஊரான நெற்குப்பையையும் மறக்கவில்லை. பிற்காலத்தில் நெற்குப்பைக்கு இந்தியன் வங்கி, தொலைபேசி நிலையம்,

---

* தமிழண்ணல் தொகுத்தளித்த சோமலெ சோமசுந்தரம் - சௌந்தரம் திருமண வாழ்த்து மலர்கள், ப. 3.

காவல் நிலையம், அஞ்சல் நிலையம் ஆகியன வருவதற்கு அவர் ஒரு முக்கியமான காரணமாக விளங்கினார்.

## கல்வி

சோமலெ சென்னை மாநிலக் கல்லூரியில் பயின்று, 1941-ஆம் ஆண்டில் பி.ஏ. பட்டம் பெற்றார். பின்னர் அவர் 1947-ஆம் ஆண்டில் பம்பாயில் உள்ள ஹாரிமன் இதழியல் கல்லூரியில் சேர்ந்து படித்து பத்திரிகைத் துறையில் நிறைசான்றிதழ் (Diploma) பெற்றார்.

## திருமணம்

சோமலெ பதினாறு வயதில் பூலாங்குறிச்சியைச் சேர்ந்த நாச்சம்மையைத் தமது வாழ்க்கைத் துணைவியாக ஏற்றார். சோமலெ-நாச்சம்மை இருவரது இனிய இல்லறத்தின் பயனாகத் திருவத்தாள், மீனாட்சி, மல்லிகா, சீதா என்னும் பெண்மக்கள் நால்வரும், சோமசுந்தரம் என்னும் ஒரே மகனும் பிறந்தனர்.

## உறுதி கொண்ட நெஞ்சம்

சோமலெ தம் வாழ்க்கையில் என்ன துன்பம் நேர்ந்தாலும் அதனால் இடிந்து நிலைகுலையாத, உறுதியான உள்ளம் படைத்தவராக விளங்கினார் என்பதைக் காட்டும் ஒரு நிகழ்ச்சி வருமாறு :

மதுரை மாவட்டத்தைச் சார்ந்த கீழவளவு அருகில் உள்ள பேப்பனையம்பட்டியில் கொடுக்கம்பட்டியில் பல ஏக்கர் நிலத்தில் புதிய முறையில் பெரிய அளவில் விவசாயம் செய்யப் பல திட்டங்கள் தீட்டி வைத்திருந்தார். அதன் ஒரு பகுதியாக அவர் பெரும்பொருள் செலவு செய்து பெரிய கிணறு ஒன்றை வெட்டினார். அப்போது கிணறு இடிந்துவிட்டது. இத் தகவலை அறிந்த வேலையாட்களும் உறவினர்களும் வருத்தப்பட்டபோது சோமலெ மனம் தளராமல், "கிணறு இடிந்து விழுந்ததால் ஒன்றும் குடி மூழ்கிப் போகவில்லை, யாருக்கும் உயிர்ச்சேதம் இல்லையென்று சந்தோஷப்படுங்கள்" என்று அனைவரையும் சமாதானப்படுத்தினாராம். அன்று கிணறு இடிந்து விழுந்திருக்காவிட்டால் சோமலெ பெரிய விவசாயியாகத் தம் வாழ்வில் உயர்ந்திருப்பார்; ஆனால், எழுத்தாளர் சோமலெ நமக்குக் கிடைத்திருக்க மாட்டார்!

## வணிகராகச் சென்று எழுத்தாளராகத் திரும்பி வந்த சோமலெ

விவசாயத் தொழில் ஒத்து வராத நிலையில் சோமலெ தமது குடும்பத்தினர் நடத்தி வந்த ஏற்றுமதி-இறக்குமதி வணிகத்தில் ஈடுபாடு காட்டத் தொடங்கினார். இதன் காரணமாக அவர் 1948 ஆகஸ்டு முதல் 1949 பிப்ரவரி வரை ஆறு மாத காலம் வெளிநாடுகளில் விரிவான சுற்றுப் பயணம் மேற்கொண்டார்; பிரிட்டன், சுவீடன், ஜெர்மனி,

செக்கோஸ்லோவேகியா, பிரான்ஸ், அயர்லாந்து, அமெரிக்கா, ஹவாய்த் தீவுகள், ஆஸ்திரேலியா, மலேசியா போன்ற உலகின் பல நாடுகளில் ஏறத்தாழ நாற்பதாயிரம் மைல்கள் பயணம் செய்தார். "வணிகனாகச் சென்றேன், எழுத்தாளனாகத் திரும்பி வந்தேன்" எனச் சோமலெயே ஓர் இடத்தில் குறிப்பிடுவது போல், இந்த உலகச் சுற்றுப் பயணம் அவருள் குடிகொண்டிருந்த எழுத்தாளரை வெளிக்கொணர்ந்தது என்று கூறினால் மிகையாகாது.

தொடக்கத்தில் சோம.லெ. இலக்குமணச் செட்டியார் என்ற பெயரில் சில கட்டுரைகளையும், சில நூல்களையும் எழுதினார். ஆனால் நாளடைவில் 'சோமலெ' என்ற பெயரே அவருக்கு இலக்கிய உலகில் நிலைத்துநின்றது. " 'சோமலெ' என்றால் 'தெரியலெ' என்று தமிழ்நாட்டில் யாரும் சொல்ல மாட்டார்கள்" ('ஆனந்த விகடன்', 1965) என்று குறிப்பிடும் அளவிற்கு அந்தப் பெயர் அவருக்கு அமைந்தது.

## 'சுதந்திரப் பறவை'யாக வாழ்ந்த சோமலெ

சோமலெ தம் வாழ்நாள் முழுவதும் சுதந்திரப் பறவையாகவே வாழ்ந்தார். எனினும் அவர் 1955 முதல் 1958 வரை சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மக்கள் தொடர்பு அலுவலராகப் பணியாற்றினார். 1958 முதல் 1960 வரை செட்டிநாட்டில் உள்ள அண்ணாமலை தொழில் நுட்பக் கல்லூரியின் தாளாளராகவும் அவர் பொறுப்பேற்றிருந்தார். இவை தவிர, 1955 முதல் 1961 வரை சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிப் பேரவை உறுப்பினராகவும், 1965 முதல் 1971 வரை மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் ஆட்சிப் பேரவை உறுப்பினராகவும் சோமலெ இருந்துள்ளார். மதுரை காமராசர் பல்கலைக்கழக ஆட்சிப் பேரவை உறுப்பினராக சோமலெ இருந்த போது நடந்த ஒரு நிகழ்ச்சி இங்கே சிறப்பாகக் குறிப்பிடத்தகுந்தது. 1996-இல் தொடங்கப்பெற்ற இப்பல்கலைக்கழகம் ஆண்டுகள் பல ஆகியும் கூட, 'சர்வகலாசாலை', 'ரிஜிஸ்ட்ரார்' போன்ற ஆங்கிலச் சொற்களையே தன் விளம்பரங்களில் பயன்படுத்தி வந்தது. 'தமிழ்ப் பேராசியர் - பன்மொழி அறிஞர் - தெ.பொ.மீ. துணைவேந்தராக வீற்றிருக்கும் போது இந்நிலையா?' என்று சோமலெ நெஞ்சு கொதித்தார்; கிளர்ச்சி செய்யவும் துணிந்தார். இதனை அறிந்த பல்கலைக்கழக நிர்வாகம் அடுத்த விளம்பரத்திலேயே 'பல்கலைக்கழகம்', 'பதிவாளர்' போன்ற நல்ல தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தத் தொடங்கியது. சோமலெ எதனையும் தயங்காது எடுத்துச் சொல்லும் இயல்பினர் என்பதும் தீமை கண்டு கொதிக்கும் போர்க் குணம் அவர்க்கு உண்டு என்பதும் எடுத்த காரியத்தில் எப்படியும் வெற்றி பெறுவார் அவர் என்பதும் இந்நிகழ்ச்சியால் புலனாகின்றன.

சோமலெ 1965-இல் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைமைப் பொறுப்பிலும் வீற்றிருந்தார். இடையில் சில காலம் சோமலெ சாகித்திய

அகாதெமிக்காகத் தமிழில் வெளிவந்த நூல்களின் பட்டியலைத் தொகுக்கும் பணியிலும் ஈடுபட்டார்.

## சோமலெ மேற்கொண்ட கள ஆய்வு

இந்தியாவின் வட பகுதிகளில் வாழும் பெருந்தொகையினரான தமிழருடைய வாழ்க்கை முறை, சமூகம், பண்பாட்டுச் சூழல்கள், அவர்கள் எந்த அளவுக்குத் தமிழ் மொழியுடனும் தமிழ்நாட்டுடனும் தொடர்பு கொண்டிருக்கின்றனர் என்புனவற்றை நேரில் பார்த்து அறிக்கை வழங்குமாறு தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் சோமலெயைப் பணித்தது. இந்தப் பணியை ஏற்றுக் கொண்டு, 1983, சூன் 1 முதல் ஆகஸ்டு 16 வரை அவர் கீழ்க்கண்ட பகுதிகளில் சுற்றுப் பணம் செய்தார் :

1. மராட்டிய மாநிலம் (மகாராஷ்டிரா)
2. மத்திய பிரதேசம்
3. குஜராத்
4. இராஜஸ்தான்
5. அரியானா
6. பஞ்சாப்
7. சண்டிகர்
8. தில்லி

மேலே காட்டிய மாநிலங்களிலும் மத்திய ஆட்சிப் பகுதிகளிலும் வாழும் தமிழரைப் பற்றிய சோமலெயின் ஆய்வு அறிக்கையே 'வட மாநிலங்களில் தமிழர்' என்னும் நூல் வடிவில் 1988-இல் வெளிவந்துள்ளது. இந்நூல் கள ஆய்வின் அடிப்படையில் முறையாகவும் திறம்படவும் தொகுக்கப்பட்டுள்ளது. வட மாநிலத் தமிழர் அனைவரையும் ஒருமுகப்படுத்தவும் அவர்கள் விரும்பும் உதவிகளைச் செய்யவும் தமிழ்நாட்டின் தூதராக அவர்கள் இயங்குவதற்குத் தேவைப்படும் அணுகுமுறைகளை-வழிவகைகளை-இந்த அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளார் சோமலெ.

## இறுதி நாள்

அமெரிக்காவில் இருக்கும் தமது மகன் சோமசுந்தரத்திற்கு வாரத்தில் இரண்டு கடிதங்கள் எழுதும் வழக்கம் உடையவர் சோமலெ. அந்த வழக்கத்தின் படி அவர் 1988-ஆம் ஆண்டு நவம்பர் 4-ஆம் நாள் சென்னை அண்ணாசாலையில் உள்ள அஞ்சல் நிலையத்திற்குக் கடிதம் அனுப்புவதற்காகச் சென்றார்; அங்கே அஞ்சல் தலை (Stamp) வாங்கிவிட்டுக் கழிவறைக்குச் சென்ற போது மயங்கி விழுந்தார். பக்கத்தில் இருந்தவர்கள் அவரைத் தூக்கி, அவர் கைப்பையில் வைத்திருந்த கற்பகம் அச்சக முகவரிக்குத் தொலைபேசியில் தொடர்பு கொண்டனர்; கற்பகம் அச்சகத்தினர் அனுப்பி வைத்த காரில், உட்கார்ந்த நிலையில் அவரை வீட்டிற்குக் கொண்டு வந்தனர்; குடும்பத்தினர் வீட்டிற்கு அருகில் உள்ள

இந்திரா நகர் மருத்துவ மனைக்குக் கொண்டு சென்று காட்டினர். ஆனால், மருத்துவ மனையில் 'உயிர் பிரிந்து நீண்ட நேரம் ஆகிறது' என்ற தகவலே கிடைத்தது! வாழ்நாள் முழுவதும் இமைப்பொழுதும் ஓயாமல் எழுதி எழுதிக் குவித்து வந்த சோமலெ, தம் மூச்சுத் தொடருக்கு முற்றுப்புள்ளி வைத்த போதும் எழுத்துடன் தான் தொடர்பு கொண்டிருந்தார்; அஞ்சல் நிலையத்திற்கு எழுதிய கடிதத்தினை அனுப்பச் சென்ற போதுதான் விதியின் கை வேறுவிதமாக அவரது வாழ்க்கைப் பக்கத்தை எழுதிவிட்டது!

## 'நடமாடும் தகவல் களஞ்சியம்'

சோமலெயின் மறைவை ஒட்டித் தமிழ் இதழ்கள் அவரைப் பற்றிய இரங்கல் செய்திகளையும் பசுமையான நினைவுச் சித்திரங்களையும் வெளியிட்டிருந்தன. அவற்றுள் சிறப்பான இரண்டினை மட்டும் இங்கே சுட்டிக் காட்டுவது பொருத்தமாக இருக்கும்.

*'மறைந்த சோமலெயிடம் தங்களைக் கவர்ந்த அம்சம் எது?' என்ற கேள்விக்குக் 'கல்கி' இதழ் அளித்திருந்த அருமையான பதில் இதோ :

"எதையும் நுணுகி ஆராய்ந்து எழுதியவர். அவருடைய பல அரிய தகவல் நூல்களில் 'செட்டிநாடும் செந்தமிழும்' என்பது ஒன்று. அதில் பலரைப் பற்றியும் எழுதித் தலையணை அளவுக்குப் புத்தகம் போட்ட அவர், தம்மைப் பற்றி ஒரு வார்த்தை கூட எழுதிக் கொள்ளாத அடக்கம் என்னை இன்னமும் வியக்க வைக்கிறது. அவர் மறைந்த சமயத்தில், 'அவர் தமது தேவைகளையும் ஆசைகளையும் குறைத்துக் கொண்டதால்தான், தமக்குச் சரி என்று பட்டதைத் தைரியமாகச் சொல்லவும் செயல்படுத்தவும் முடிந்தது' என்று ஆர்.எம். வீரப்பன் சொன்னார். இதை விடவும் உண்மையான, சுருக்கமான, சிறந்த பாராட்டு வேறு இருக்க முடியாது".

சோமலெயின் அடக்கத்தை - 'நிறைகுடம் தளும்புவது இல்லை' என்று மூத்தோர் வாக்கிற்கு இலக்கியமாகத் தம் வாழ்நாள் முழுவதும் அவர் வாழ்ந்து காட்டிய விதத்தை - இதை விடச் சிறப்பாக வேறு எவரும் எடுத்துக்காட்டி விட முடியாது.

*இதே போல், 'மறைந்த எழுத்தாளர் சோமலெயுடன் உங்களுக்குப் பழக்கம் உண்டா?' என்ற கேள்விக்குக் 'கல்கண்டு' இதழ் எழுதியிருந்த பதிலும் சிறப்பாகக் குறிப்பிடத்தகுந்தது. அது வருமாறு :

"அறிமுகம் உண்டு. தலைமுறை இடைவெளி இருந்ததால் நெருங்கிப் பழகச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஆனால் அவர் மறைவிற்கு ஒரு வாரம் முன்னர்தான் அவருடன் மூன்று தினங்கள் உடன் இருக்க நேரிட்டது. கொச்சின், சோட்டாணிக்கரை, காலடி, பெரும்பாவூர் என்று அவரும் நானும் சுற்று சுற்றென்று சுற்றினோம். என் இளமைத் துள்ளலுக்கு ஈடு கொடுத்து அத்தனை இடங்களுக்கும் இளம்பிள்ளை போல் அலைந்ததை மறக்க முடியாது. தான் சிரிக்காமல் வாக்கியத்துக்கு வாக்கியம் ஏதேனும் சொல்லிச்

சிரிக்க வைப்பார். அவரைப் போன்றதொரு நடமாடும் தகவல் களஞ்சியத்தை வாழ்வில் நான் இனிமேல் தான் காணவேண்டும். மாவட்டங்களைப் பற்றி எழுதி, மாநிலங்களைப் பற்றி எழுதி, உலக நாடுகளைப் பற்றி எழுதி வரலாறு படைத்த எழுத்தாளர் அவர்".

இதில் 'நடமாடும் தகவல் களஞ்சியம்' எனச் சோமலெயின் வாழ்நாள் சாதனை மூன்றே மூன்று சொற்களில் இரத்தினச் சுருக்கமாக வெளிப்படுத்தப் பட்டிருக்கும் பாங்கு நெஞ்சை அள்ளுவதாகும்.

## கடிதக் கலைஞர் சோமலெ

சோமலெயுடன் கடிதத் தொடர்பு கொண்டிருந்த அனைவரும் அவரது கடிதங்களைத் தந்தி போன்றவை என்பார்கள். அவரிடம் இருந்து பதில் விரைவாக வரும், சுருக்கமாக இருக்கும்.

"நான் கோவையிலும் அமெரிக்காவிலும் பயின்ற காலத்தில் (1982-'86) எனக்குக் குறைந்தது வாரத்திற்கு இருமுறை அவர்களிடமிருந்து கடிதங்கள் வரும். பொதுவாக இவை நீண்ட கடிதங்கள், குடும்பத்தைப் பற்றி மட்டுமல்லாமல், பொது வாழ்வு, உலக நடப்புக்கள், தமிழகத்தின் நிலை, உலக அரங்கில் இந்தியா, நான் முன்னேறுவதற்கான வழிமுறைகள் - இப்படிப் பல அரிய கருத்துக்கள்! சுருக்கமாக, இவை நேருஜி, இந்திரா காந்திக்கு எழுதிய கடிதங்கள் போன்றவை" (நகரத்தார் குரல், நவம்பர் 1993, ப.41) எனச் சோமலெயின் மகன் சோமசுந்தரம், தந்தையார் தனக்கு அவ்வப்போது எழுதிய கடிதங்களைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பது இங்கே நினைவுகூரத் தக்கதாகும்.

சோமலெ தம் மகன் சோமசுந்தரத்திற்கு அவ்வப்போது எழுதிய கடிதங்களில் அனைவருக்கும் பயன்படும் வகையில் இடம்பெற்றுள்ள சில மணிமொழிகள் - அனுபவ உண்மைகள் - வருமாறு :

* உனக்கென்ற ஒரு நற்பெயரை மற்றவர்களிடம் உருவாக்கிக் கொள்வது கடினம், உருவாக்கிய பிறகு அதைப் பாதுகாப்பது இன்னும் கடினம்.

* கடின உழைப்பு, நேர்மை, அறிவுடைமை மூலம் வாழ்வில் உயர்வது தான் முக்கியம்.

* செல்வத்தை விடக் காலம் முக்கியமானது.

* பிறரிடமிருந்து நீ எதிர்பார்ப்பதையும், உன் தேவைகளையும் குறைத்துக் கொள்.

* மற்றவர்கள் சற்றும் எதிர்பார்க்காத நேரத்தில் சரியான முறைகள் மூலம் உன் பெருந்தன்மையைக் காண்பிக்க வேண்டும்.

* உனக்கு உதவி செய்தவர்களிடம் நன்றி உணர்வோடு நடந்துகொள். நன்றி உணர்வு இல்லாதவர்களைப் பரந்த உள்ளத்தோடு மறந்துவிடு.

* உபயோகமில்லாத நட்புக்களைத் தவிர்த்துவிடு.

* பேசுவதற்கும், அமைதியாக இருப்பதற்கும், அவற்றிற்கான சரியான நேரங்களை எடுத்துக்கொள். பேச வேண்டிய போது அமைதியாகவும், அமைதியாக இருக்க வேண்டிய போது பேசியும் விடாதே.

* கடின உழைப்பிற்காக நேரத்தைச் சேமித்துக் கொள்.

* சிறு விஷயங்களுக்குக் கூட முக்கியத்துவம் கொடு.

* சோகமான சூழ்நிலைகளில் உன் நடத்தை மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும்.

* கண்ணீர் விடுவதாலும், உணர்ச்சி வசப்படுவதாலும், மென்மையாக இருப்பதாலும் (Sensitive) எவற்றையும் சாதிக்கப் போவதில்லை.

* அமைதியே கோபத்தைக் காண்பிக்கச் சிறந்த வழி.

தம் கடிதங்களில் உள்ள செய்திகள் எல்லாம் பண்டிதமணி, ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், சர்தார் வேதரத்தினம், ஏ.வி.எம். போன்ற பலருடைய வாழ்க்கை வரலாற்றை எழுதும்போது அறிந்து கொண்ட கருத்துக்கள் என்றும், பல பெரியவர்களுடன் பழகியதாலும், அவர்கள் வாழ்வைப் படித்ததாலும் கிடைத்த அனுபவங்கள் இவை என்றும் சோமலெ குறிப்பிடுவாராம்.

"என் தந்தையாரின் கடிதங்கள் மிக அரிய பொக்கிஷங்கள். எனக்கு அவர்கள் விட்டுச் சென்ற மிகப் பெரிய செல்வம்; இன்றும் அவற்றைப் படித்துப் பயன்பெறுகிறேன்! அவர்கள் சென்னை அண்ணாசாலை அஞ்சலகத்தில் இறந்தபோது கூட எனக்குக் கடிதம் அனுப்பியது தான் அவர்கள் செய்த கடைசிச் செயல். சோமலெ இறந்து ஏழு வருடங்களாகிவிட்டாலும் இன்று கூடத் தபால்காரர் வரும்போது அவர்களிடமிருந்து கடிதம் வரவில்லையே என்ற ஏக்கம்/வருத்தம் வருவதுண்டு" எனச் சோமலெ சோமசுந்தரம் இந்நூலாசிரியருக்கு எழுதிய கடிதம் ஒன்றில் தமது தந்தையாரின் கடிதங்களைப் பற்றிய ஆழ்ந்த, தனிப்பட்ட உணர்வுகளைப் பதிவு செய்துள்ளார்.

## சோமலெ : சில நினைவலைகள்

1969 முதல் 1977 வரை சோமலெயிடம் உதவியாளராகப் பணியாற்றிய எஸ். சரவணன், சோமலெ குறித்துப் பதிவு செய்திருக்கும் சில நினைவலைகள் வருமாறு :

"திரு. சோமலெ அவர்களின் எளிமை, எனக்கு மிகவும் பிடித்த ஒன்று. தோற்றத்தைப் பார்த்தால், இவர்களா, இவ்வளவு அறிவு பெற்ற சோமலெ எனத் தோன்றும். வேஷ்டி, சட்டை இரண்டையும் சாகும் வரை துவைத்து உடுக்கும் வழக்கம் கொண்டிருந்தார்கள்..

திரு. சோமலெ அவர்கள், எங்கு சென்றாலும் ஒரு கைப்பையுடன் (Hand Bag) செல்வார்கள். அதில், சிறிய குறிப்பு நகல் புத்தகம், பேனா, தமது முகவரி, அவர்களுடன் நெருங்கிப் பழகும் முக்கிய நபர்களின் முகவரிகள், தொலைபேசி எண்கள், தம்முடைய பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம்

அனைத்தையும் வைத்திருப்பார்கள். பேனாவும் சிறிய துண்டுக் காகிதமும் இல்லாமல் வெளியில் செல்லாதீர்கள் என்று அடிக்கடி சொல்லுவார்கள்..

சாப்பாட்டிற்கு முக்கியத்துவம் கொடுப்பது இல்லை. எந்த உணவு என்றாலும் கவலைப்படுவதில்லை. ருசியைப் பற்றியும் ஒருபோதும் கவலைப் பட்டதில்லை. ஆடம்பரத்தை விரும்பாதவர்கள். கையில் ஒரு மோதிரம் கூட அணிந்து கொள்ள மாட்டார்கள்..

இரவில் நடுச்சாமத்தில் எழுந்து எதையாவது எழுதிக் கொண்டிருப்பார்கள். காலையில் எழுந்ததும் எல்லா ஆங்கிலப் பத்திரிகைகள், எல்லாத் தமிழ்ப் பத்திரிகைகளையும் படிப்பார்கள். படிப்பதற்கு முன்பாக, ஒரு சிறிய கத்திரிக்கோல் கையில் இருக்கும். பத்திரிகைகளில் அரசு சொல்லியுள்ள முக்கிய தகவல்கள், மாவட்டங்களைப் பற்றிய முக்கிய குறிப்புகள் போன்ற முக்கிய தகவல்களை வெட்டி எடுத்து, அந்தந்தக் குறிப்புகளை அதற்கென வைக்கப்பட்டுள்ள அட்டைப் பெட்டிகளில் வைக்கச் சொல்லுவார்கள். அன்றைய தினமே அந்தப் பத்திரிகை, பழைய பேப்பர்களைப் போடும் பெட்டிக்குப் போய்விடும்..." *(எஸ். சரவணன், 17.01.2000-இல் இந்நூலாசிரியருக்கு எழுதிய கடிதத்தில் இருந்து, பக். 2,3,5).*

## பொற்கிழிக் கவிஞரின் புகழாரம்

"நெற்குப்பை பெற்றுத் தந்த நிறைகுடம் சோம லேயின்
பொற்பினை முழுதும் எந்தப் புலவனும் அளக்க மாட்டான்
கற்பவை கற்றுத் தேர்ந்து கனிதமிழ் வளரத் தந்த
சிற்பியாம் சோம லேயின் திருப்புகழ் என்றும் நிற்கும்"

*(நகரத்தார் குரல், நவம்பர் 1993, ப. 4)*

என்று பொற்கிழிக் கவிஞர் சொ.சொ.மீ. சுந்தரம் எழுத்தாளர் சோமலெக்குச் சூட்டியிருக்கும் புகழாரம் உண்மை, வெறும் புகழ்ச்சி இல்லை!

# 2

# பயண இலக்கியம்

"தமிழ் உரைநடை இருபதாம் நூற்றாண்டில் பல்கிப் பெருகியுள்ளது. புதிய துறைகள் பலவற்றில் நூல்கள் வந்துள்ளன. இவற்றுள் முக்கியமான ஒரு பகுதி, பிரயாண இலக்கியம். இவ்வகை இலக்கிய வளர்ச்சியில் செட்டி நாட்டாரின் பங்கு குறிப்பிடத்தக்கது." -சோமலெ*

'சோமலெ' என்றதும் நம் நினைவிற்கு உடனடியாக வருபவை, அவர் எழுதிய பயணநூல்கள் தாம். சென்னை மாநிலக் கல்லூரியில் பட்டப் படிப்பை முடித்தவுடன், அவர் தம் குடும்பத்தினர் செய்து வந்த ஏற்றுமதி - இறக்குமதி வணிகத்தைத் தாம் ஏற்று நடத்தத் தொடங்கினார்; வணிகம் தொடர்பாக, 1947-48-ஆம் ஆண்டுகளில் அவர் பர்மா சென்றார். புதிய செய்திகளை அறிந்து கொள்வதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்த சோமலெக்குப் பர்மாப் பயணம் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. தாயகம் திரும்பியபோது, அவர், 'உலகம் சுற்றிய தமிழர்' ஏ.கே. செட்டியார், தம் அமெரிக்கப் பயணம் பற்றி எழுதி வெளியிட்டிருந்த 'அமெரிக்க நாட்டில்' என்ற நூலைக் காண நேரிட்டது. அது முதல், அவர், தாமும் வெளிநாடுகளுக்குச் செல்லவேண்டும் எனத் திட்டமிடலானார். தாம் செய்து வந்த தொழிலில் முன்னேற்றம் அடைவதற்காகவும், தம்முடன் தொடர்புடைய பெரிய வணிகர்களைச் சந்திப்பதற்காகவும் அவர் பல நாடுகளுக்குச் சென்றார். ஜெர்மனியில் தமிழ்த் தட்டச்சு இயந்திரங்கள் செய்யும் வணிகர்களைச் சந்திப்பதற்காகவும், ஆஸ்திரேலியாவில் 'பேயர்' மருந்துகள் செய்யும் தொழிற்சாலையைக் காண்பதற்காகவும், 1948-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், தம் உலகச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டார் சோமலெ. பிரிட்டன், சுவீடன், ஜெர்மனி, செக்கோஸ்லோவேகியா, பிரான்ஸ், அயர்லாந்து, அமெரிக்கா, கனடா, ஹவாய்த் தீவுகள், ஆஸ்திரேலியா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குப் பயணம் செய்து 1949-ஆம் ஆண்டு பிப்ரவரியில் தாயகம் திரும்பினார் அவர்.

---

* செட்டிநாடும் தமிழும், ப. 191.

## வாழ்வில் நிகழ்ந்த திருப்புமுனை

அமெரிக்கப் பயணமும், ஆஸ்திரேலியப் பயணமும் சோமலெயின் வாழ்க்கையில் நிகழ்ந்த முக்கிய நிகழ்ச்சிகள் என்று கூறலாம். அவர் அமெரிக்கா நாட்டின் கிழக்குக் கரையில் உள்ள நியூயார்க் நகரில் இருந்து, மேற்குக் கரையில் உள்ள சான்பிரான்சிஸ்கோ நகரம் வரை உள்ள பல்வேறு இடங்களுக்கும், கனடா நாட்டிற்கும் சென்றார்; அமெரிக்காவுக்குச் சொந்தமான ஹவாய்த் தீவுகளுக்குச் சென்று, பின் ஆஸ்திரேலியா அடைந்தார். ஆஸ்திரேலியா பின்பற்றி வந்த கடுமையான அயல்நாட்டுக் கொள்கையால், எவரும் அங்கு எளிதில் செல்ல முடியாது என்ற எண்ணம் நிலவி வந்த கால கட்டத்தில் ஆஸ்திரேலியா சென்று வந்தவர் சோமலெ என்பது குறிப்பிடத்தக்கது. வெள்ளைக்காரர் அல்லாத வேறு எவரையும் அனுமதிக்காத ஆஸ்திரேலிய நாட்டிற்கு வணிகத்தின் பொருட்டு வருவதாகக் கூறித் தக்க சான்றுகளைக் காட்டி அவர் இசைவு பெற்றதைக் கண்டு அக்காலத்தில் வியக்காதவர் இல்லை எனலாம். ஆஸ்திரேலியாவில் ஒரு மாதம் தங்கிப் பின் மலேசியா, சிங்கப்பூர் வழியாகத் தாயகம் திரும்பினார் அவர். இயல்பாகவே, கூர்த்த மதியும், தாம் காணுகின்ற பொருட்களில் உள்ள நன்மை தீமைகளை அலசி ஆராயும் திறனும் பெற்ற சோமலெ, ஆங்காங்கே தாம் கண்ட காட்சிகளை, தம் மனத்தை ஈர்த்த சிறப்பான நிகழ்ச்சிகளைக் குறித்துக் கொண்டு, தாயகம் திரும்பிய பிறகு, பல பயணக் கட்டுரைகளையும் நூல்களையும் எழுதினார். சோமலெ பயண இலக்கியம் படைக்கும் ஓர் ஆசிரியராக உருவான விதத்தைக் காட்டும் சுருக்கமான வரலாறு இதுவாகும்.

## சோமலெயின் பயண நூல்கள்

சிறுசிறு நூல்களாகவும், கட்டுரைத் தொகுப்புகளாகவும், ஆய்வறிக்கைகளாகவும் சோமலெ படைத்துள்ள பயண நூல்களின் எண்ணிக்கை *34* ஆகும். அவையாவன :

### I. நூல்கள் : 27

1. அமெரிக்காவைப் பார் *(1950)*

2. ஆஸ்திரேலியாவில் ஒரு மாதம் *(1950)*

3-12 : உலக நாடுகள் வரிசை - 10 : கனடா, சுவீடன், குவாயிட், தாய்லாந்து, பிரான்ஸ், ஜப்பான், பிஜித் தீவுகள், வத்திக்கான், மொரிசியஸ், இந்தோனேசியா ஆகிய 10 நாடுகள் பற்றிய 10 சிறுசிறு நூல்களின் தொகுப்பு *(1960)*.

13-24 : ஆப்பிரிக்க நாடுகள் வரிசை - 12 : ஆப்பிரிக்கா *(1964)*, ஐக்கிய அரபுக் குடியரசு *(1964)*, எத்தியோப்பியா *(1965)*, தென் ஆப்பிரிக்கா *(1968)*, கானா *(1964)*, நைஜீரியா *(1964)*, மேற்கு ஆப்பிரிக்கா *(1968)*,

கிழக்கு ஆப்பிரிக்கா (1968), வடமேற்கு ஆப்பிரிக்கா (1969), நடு ஆப்பிரிக்கா (1968), சஹாரா (1969), சூடானும் காங்கோவும் (1969) ஆகிய 12 சிறுசிறு நூல்களின் தொகுப்பு.

25. உலக நாடுகள் (1987)

26. பர்மா

27. இமயம் முதல் குமரி வரை

## II. கட்டுரைத் தொகுப்புக்கள் : 5

28. நான் கண்ட வெளிநாட்டுக் காட்சிகள் (1949)

29. என் பிரயாண நினைவுகள் (1950)

30. நமது தலைநகரம் (1952)

31. பிரயாணம் ஒரு கலை (1955)

32. பிரயாண இலக்கியம் (1958)

## III. ஆய்வறிக்கைகள் : 2

33. வட மாநிலங்களில் தமிழர் (தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, 1988)

34. Travel Literature in Tamil (ஜாதவ்பூர் பல்கலைக்கழகக் கருத்தரங்கில் படிக்கப்பட்ட ஆங்கிலக் கட்டுரை, 1969)

## பயணத்தால் ஏற்படும் நன்மைகள்

"பிரயாணத்தால் ஏற்படும் நன்மைகள் கணக்கிலடங்கா. அந்த அனுபவச் செல்வத்தை அடையும் பேறு பெறாதவர்கள், பிரயாண நூல்களையாவது படித்துப் பயன் பெறலாம்" (மேற்கோள் : சோமலெ, பிரயாண இலக்கியம், ப. 14) என்று பாரத நாட்டின் முன்னாள் தலைமை அமைச்சர் ஜவஹர்லால் நேரு ஒரு முறை குறிப்பிட்டார் இக்கருத்திற்கு ஏற்ப, உலகம் சுற்றி வந்து சோமலெ படைத்துத் தந்த நூல்கள் யாவும் பயண இலக்கியத்திற்கு நல்லதோர் எடுத்துக்காட்டாய் அமைந்தன. 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னும் திருமூலர் கூற்றுப்படி, தாம் கண்ட வெளிநாட்டுக் காட்சிகளை எல்லாம் நூல்களின் வாயிலாகப் படம்பிடித்துக் காட்டினார் சோமலெ. மேலும், அவர், தாம் கலந்து கொண்ட விழாக்களின் சிறப்புக்களை எடுத்துரைத்தார்; அடுத்த வீடு கூடத் தெரியாது இருந்த பலருக்கு உலக நாடுகளைக் கண்முன்னே கொண்டுவந்து நிறுத்தினார்; ஊர் காண்பதில், உலகம் சுற்றுவதில் அக்கறையும் ஆர்வமும் உண்டாக்கினார். அதனால்தான்,

"எல்லா நாடும் தன்நாடாய், எங்கும் சுற்றி ஆராய்ந்து
நல்லார் பலரின் கருத்தையெல்லாம், நாளும் தேடித் தமிழ்மக்கள்

பல்லார் அறியச் செந்தமிழில், பண்பாய் உரைக்கும்என் நண்பன்"
(மேற்கோள் : ச. மெய்யப்பன், சோமலெ, ப.45)

என்று கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை, சோமலெயைப் பாராட்டிக் கவிதை பாடியுள்ளார்.

## கடவுள் நமக்குக் கால்களைப் படைத்ததன் காரணம்

"பிரயாணம் மனிதனுக்கு இயற்கையாக அமைந்தது. இல்லாவிட்டால் கடவுள் நமக்குக் கால்களையே படைத்திருக்க மாட்டார்" (பிரயாண இலக்கியம், ப.12) என்பது சோமலெயின் கருத்து. சித்தர் பாடல் ஒன்றை அடிக்கடி நினைத்துப் பார்ப்பது அவரது வழக்கம். அப்பாடல் வருமாறு :

"உண்டதே உண்டும், உடுத்ததே உடுத்தும், உரைத்ததே
அடுத்தடுத்து உரைத்தும்,
கண்டதே கண்டும், கேட்டதே கேட்டும், கழிந்தன
கடவுநாளெல்லாம்
வெண்தாமரைமேல் வீற்றிருக்கும், விளநீர் வெண்காடவ
உய்யுமாறு அருளே."

இப்பாட்டைப் பொருளுணர்ந்து அடிக்கடி ஓதியதன் பயனாக, முன்பு காணாததை எல்லாம் காணுகின்ற ஒரு வாய்ப்பும், முன்னர்க் கேட்காத சிறந்த செய்திகளை எல்லாம் கேட்டறியும் பேறும், புதுப்புது வகையான உணவு வகைகளை உட்கொள்ளுகின்ற சூழ்நிலையும் அவ்வப்போது பல்வேறு உலக நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டமையால் தமக்கு ஏற்பட்டன எனக் குறிப்பிட்டுள்ளார் அவர் (பிரயாண இலக்கியம், ப.6).

## 'உலகத்தைச் சுற்றிப் பார்!'

பயணத்தால் பல நன்மைகள் ஏற்படுவதை உணர்ந்தே, பழங்காலத்தில் யாத்திரை செய்யும் வழக்கத்தை நம் முன்னோர் ஏற்படுத்திக் கொண்டனர். 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்னும் பழமொழிக்கு ஏற்பப் பிற்காலத்தில் வாணிகத்திற்காகப் பல இடங்களுக்குச் செல்லும் வழக்கம் ஏற்பட்டது. போக்குவரத்து வசதிகள் பெருகிவிட்ட இன்றைய சூழ்நிலையில், அரசியல் அலுவலை முன்னிட்டோ, கலை, இலக்கிய வளர்ச்சிக்காகவோ, பண்பாட்டுப் பரிமாற்றத்திற்காகவோ, அன்றிப் பொழுதுபோக்காகச் சுற்றிப் பார்ப்பதற்காகவோ பயணம் செய்வது என்பது அன்றாட நிகழ்ச்சி ஆகிவிட்டது. பயணத்தால் பிற நாட்டு மக்களின் வாழ்க்கை நெறிமுறைகள், அவர்தம் விருப்பு வெறுப்புகள், பல்வேறு நாடுகளின் தனிப்போக்குகள், அறிவியல் முன்னேற்றங்கள், கலை இலக்கியப் போக்குகள் போன்றவற்றை அறிந்து கொள்ள முடிகிறது.

"சென்றிடுவீர் எட்டுத் திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்"

என்று மகாகவி பாரதி பாடியது போல், பயணம் செய்வது என்பது நம் நாட்டின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக அமைகின்றது. பயணத்தால்

பிற நாட்டின் பண்பாடுகளை நாம் அறிந்து கொள்ள முடிகின்றது; நம் பண்பாட்டுப் பெருமைகளைப் பிறர் அறிவதற்கும் பயணம் துணைபுரிகின்றது. ஆயினும், பயணம் செய்வது என்பது அத்துணை எளிய செயலன்று; 'ஆய கலைகள் அறுபத்து நான்கு' என்பர் அறிஞர். அவற்றுடன் பயணத்தையும் ஒரு கலையாகச் சேர்க்கலாம். ஏனெனில், அதில் நன்மையும் உண்டு, சிக்கலும் உண்டு. 'வீட்டைக் கட்டிப் பார், கல்யாணம் செய்து பார்' என்பது தமிழ்நாட்டில் வழங்கிவரும் ஒரு பழமொழி. அந்தச் செயல்களிலே உள்ள தொல்லைகளைக் குறிப்பிடுவதற்காகத்தான் இந்தப் பழமொழி ஏற்பட்டிருக்கின்றது. வீடு, கல்யாணம் ஆகியவற்றோடு, 'உலகத்தைச் சுற்றிப் பார்' என்பதையும் சேர்த்துக் கொள்ளலாம். இவ்வகையில் சோமலெயும் பிரயாணம் செய்வதில் உள்ள சிக்கல்களைத் தம் நூலில் ஓர் இடத்தில் சுட்டிக் காட்டியுள்ளார்:

"வெளிநாடுகளுக்குப் புறப்படுவதற்குப் 'பாஸ்போர்ட்' என்னும் அடையாளச் சீட்டை நமது அரசியலாரிடமிருந்து வாங்கிக் கொள்ள வேண்டும். பிறகு, வெளிநாட்டு அரசியலாரிடமிருந்து 'விசா' என்னும் இசைவைப் பெறவேண்டும் வெளிநாட்டில் செலவு செய்ய, நம்மிடமுள்ள இந்திய நாயணத்தை அந்த நாடுகளில் செலாவணியாகும் நாணயமாக மாற்ற வேண்டும்... தொத்து நோய்களைத் தடுப்பதற்கான ஊசி போட்டுக் கொண்டதற்குரிய சான்றிதழ்களைப் பெரிய மருத்துவர்களிடமிருந்து பெற வேண்டும். இவ்வளவு சடங்கும் செய்தால் போதுமா? கூலி வேலை செய்வதற்காக நாம் வெளிநாட்டுக்குச் செல்லவில்லை என்பதற்குரிய ஆதாரத்தை 'வெளிநாடு செல்லுவோரின் பாதுகாப்பாளர்' அலுவலகத்திலிருந்தும், அரசியலாருக்கு நாம் செலுத்த வேண்டிய வருமான வரிப் பாக்கிகளைச் செலுத்தி விட்டதற்குரிய விடுதலைத் தாளை வருமான வரி அலுவலரிடமிருந்தும் வாங்கிக் கொள்ள வேண்டும். அரை வீசை நிலுவையுள்ள மேலே கண்ட தாள்களைப் பெற ஆறு மாதம் ஆகும்! ஆம்; உண்மையாகவே, சில சமயம் கூடுதலாகவே ஆகலாம்" (பிரயாணம் ஒரு கலை, பக். 10-11). இங்ஙனம் பயணம் மேற்கொள்வதற்கு முன் ஏற்படும் சிக்கல்களைத் தமக்கே உரிய பாணியில் சுட்டிக்காட்டியுள்ளார் சோமலெ. மேலும், பயண நூல்களை எழுத விரும்புவோருக்கு என்னென்ன இயல்புகள் இருக்க வேண்டும், பயண நூல்களின் சிறப்புகள் எவை என்பதைப் பற்றியும் அவர் தம் நூல்களில் ஆங்காங்கே கூறிச் சென்றுள்ளார்.

## தொடக்கச் சிறப்பும் சீர்மையும்

ஒவ்வொரு நாட்டிற்கும் ஏதேனும் ஒரு தனிச் சிறப்பு உறுதியாக இருக்கும். அச்சிறப்பினைச் சுட்டிக்காட்டி, அந்நாட்டை அறிமுகப்படுத்தும் போக்கினைச் சோமலெயின் பயண நூல்களில் பரவலாகக் காணலாம். ஓர் எடுத்துக்காட்டு:

"சூரியனும் ஜப்பானும் ஒரே காலத்தில் தோன்றியதாக ஜப்பானியர் நம்புகின்றனர்... உலகத்தின் கீழ்க்கோடியில் ஜப்பான் இருப்பதால் அங்கு ஞாயிறு உதிக்கிறது. ஜப்பானுக்குப் பதிலாக வேறு எந்த நாடு அங்கே இருந்தாலும், ஞாயிறு அங்குத் தோன்றியே தீரும். ஆனால் ஜப்பானியர் அவ்வாறு நினைக்கவில்லை. தாங்கள் சூரிய பகவானால் உலகை உய்விக்க உண்டாக்கப் பெற்றவர்களென்றும், அதனால் பிற நாடுகளிலுள்ள மக்கள் உறங்கும்போதே தாங்கள் விழித்து விடுவதாகவும் அவர்கள் கருதுகின்றனர். 'உதய ஞாயிற்றொளி பெறு நாடு' என்று தங்கள் நாட்டைக் குறிப்பிடுவதில் அவர்கள் பெருமகிழ்ச்சியடைகின்றனர்; ஜப்பானியர் தங்கள் நாட்டை 'நிப்பன்' என்று கூறுவர். இச்சொல் 'சூரியன் தோன்றும் இடம்' என்று பொருள்படும். 'நிப்பன்' என்பதே 'ஜப்பான்' என்று மருவிவிட்டது. ஜப்பான் நாட்டின் கொடியில் 'சூரியன்' படம் மட்டுமே இருக்கிறது. பல நூறு ஆண்டுகளாக இதுவே அவர்களுடைய நாட்டின் சின்னமாக நிலவி வருகிறது" (உலக நாடுகள் வரிசை 6 - ஜப்பான், பக். 3-4). இந்த அறிமுகப் பகுதி ஜப்பானியரின் நாட்டுப்பற்றைத் துலக்கிக் காட்டுவது கண்கூடு.

இதே போல், 'சுவிட்சர்லந்து' நாட்டைப் பற்றிய சோமலெயின் அறிமுகமும் சுவையானதாகும். அதனை அவரது சொற்களிலேயே இங்கே காணலாம்:

"சுவிட்சர்லந்து என்று சொன்னவுடனே, இயற்கைக் காட்சிகள் பலரின் மனக்கண்ணெதிரில் தோன்றும்; நமது முதலமைச்சரின் வாழ்க்கைத் துணைவி கமலா நேரு உயிர் நீத்த நாடு என்ற நினைவு சிலருக்கு ஏற்படும். கொந்தளிப்பான உலகில், அமைதிக்கு அடையாளமாக விளங்குஞ் சிறுநாடு என்று சிலர் அதனைக் கருதுவர். ஆனால், எல்லோருமே தாம் அணிந்திருப்பது சுவிஸ் நாட்டில் செய்யப்பெற்ற கடிகாரந்தானா என்பதைக் கவனிப்பார்கள். சுவிட்சர்லந்து பூலோக சுவர்க்கம் போன்றது. அந்த நாட்டில் அழகு நடமாடுகிறது; நீர் மட்டுமன்று, இலக்கியமும் விஞ்ஞானமுங் கூட அங்கே வெள்ளமாகப் பெருகியிருக்கின்றன" ('சுவிட்சர்லந்து', என் பிரயாண நினைவுகள், ப. 38). சுவிட்சர்லந்து பற்றிய சிறப்பான செய்திகளை எல்லாம் இங்கே நிரந்து இனிது சொல்லியுள்ளார் சோமலெ.

ஒரு பொதுவான நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்டி, அந்நிகழ்ச்சியில் இருவர் நிகழ்த்தும் சுவையான உரையாடலின் வழியாகத் தாம் பயணம் மேற்கொண்ட நாட்டின் சிறப்பினையும், சீர்மையினையும் அறிமுகப்படுத்தும் போக்கும் சோமலெயிடம் காணப்படுகிறது. சான்றாக, மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள நாடுகளுள் ஒன்றான சிராலியோனை அவர் அறிமுகப்படுத்தும் பாங்கினை இங்கே சுட்டிக்காட்டலாம்:

"அமெரிக்க நாட்டின் தலைநகரான வாஷிங்டனில் உள்ள வெள்ளை மாளிகையில் ஒரு விருந்து நடைபெறுகிறது. அவ்விருந்தில் பல நாட்டுத் தூதர்கள், அவர்களின் மனைவியர், பெரிய இடத்துப் பெண்கள், அழகான

மகளிர் பலர் கலந்துகொள்வது வழக்கம். பிறரைப் பற்றியும், அவர்தம் நாட்டைப் பற்றியும் தெரிந்து கொள்வதற்காகவும், புதிய நண்பர்களுடன் பழகுவதற்காகவும், தெரியாதவர் அருகில் உட்கார்ந்து உரையாடுவார்களாம். ஒரு தூதரும், அடுத்து ஒரு நங்கையும் உரையாடிக் கொண்டிருக்கிறார்கள். தூதரிடம், 'அவர் எந்த நாட்டின் தூதர்?' என்று அந்தப் பெண் கேட்க, அவர் தம் நாட்டைக் கூறுகிறார்; 'கேள்விப்படாத பெயராக இருக்கிறதே' என்று அவள் கூற, அவளுடைய கேள்விக்குத் தூதர் மறுமொழி கூறுமுன், அப்பெண், 'அது சரி, உங்கள் நாட்டில் அப்படி என்ன சிறப்பாகக் கிடைக்கிறது?' என்று வினவுகிறாள். அதற்கு அத்தூதர், 'உங்களைப் போல அழகும் கவர்ச்சியும் உடைய மங்கையருக்கு மேலும் எழிலும் ஏற்றமும் ஊட்டும் விலையுயர்ந்த வைரங்களையும், கண்ணைப் பறிக்கும் ரத்தினங்களையும் தருவது எங்கள் நாடு' என்று சொன்னதும், அப்பெண் வாயடங்கிப் போனாளாம்''. இவ்வுரையாடலைச் சுட்டிவிட்டு, சோமலெ தொடர்ந்து எழுதுகிறார்: ''அந்தத் தூதரின் நாடு சிராலியோன்; சிராலியோனில் வைரச் சுரங்கமுள்ள பரப்பு 480 சதுர மைல்'' (ஆப்பிரிக்க நாடுகள் வரிசை - 7 : மேற்கு ஆப்பிரிக்கா, பக். 5-7). இங்ஙனம் அந்நாட்டின் சிறப்பினைச் சுவையான முறையில் எடுத்துக்கூறி நூலைத் தொடங்குவது, அந்நாட்டைப் பற்றி மேலும் அறிந்து கொள்ள வேண்டும் என்னும் ஆவலைப் படிப்பவர் உள்ளத்தில் தூண்டும் வண்ணம் அமைந்துள்ளது.

## தாய்நாட்டைப் பற்றிய செய்திகளையும் அறிந்திருத்தல்

''பிரயாண நூல்கள் எழுத விரும்புபவர்கள், தம் நாட்டைப் பற்றிய பல செய்திகளையும் அறிந்திருக்க வேண்டியது மிக மிக முக்கியமானது. ஏனெனில், அவர்களுடைய நாட்டைப் பற்றி நாம் அறிந்து கொள்ள ஆவலாக இருப்பதைப் போன்றே, அவர்களும் நம் நாட்டைப் பற்றி அறிந்து கொள்ள ஆவலாக இருப்பார்கள். எனவே, அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு எல்லாம், நாம் பொறுமையாகவும், சுவையாகவும், ஆதாரத்துடனும் பதில் கூறினால் தான், அவர்களும் தம் நாட்டைப் பற்றிச் சொல்ல முன் வருவார்கள்'' (பிரயாண இலக்கியம், ப. 8) என்னும் தம் கருத்திற்கு ஏற்ப, வெளிநாட்டவரின் பற்பல வினாக்களுக்கு மிகத் திறமையாகவும், அறிவார்ந்த நிலையிலும் இந்தியாவைப் பற்றிய செய்திகளையும் விளக்கங்களையும் எடுத்துச் சொல்லி, வெளிநாட்டவரிடம் இருந்து அவர்கள் நாடுகளைப் பற்றித் தெரிந்து கொள்வதில் மிகவும் வல்லவராக விளங்கியிருக்கிறார் சோமலெ.

1948-ஆம் ஆண்டு அமெரிக்காவுக்குச் சென்றிருந்தபோது, நவம்பர் 23-ஆம் தேதி ஒஹையோ இராச்சியப் பல்கலைக்கழக வானொலி நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேட்டி அளித்தார் சோமலெ. அப்பேட்டி, இந்தியர்களைப் பற்றிய அமெரிக்கரின் எண்ணத்தைப் புலப்படுத்துவதோடு, அவர்கள் இந்தியாவைப் பற்றிக் கொண்டிருக்கும் தவறான கருத்தை மாற்றக் கூடியதாகவும் அமைந்திருப்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

சோமலெயைப் பேட்டி கண்டவர், ஒஹையோ பல்கலைக்கழக வானொலிக் கல்வித்துறைத் தலைவர் டாக்டர் கீத் டைலர் ஆவார். "இன்றைய உலகின் பெரிய நாடுகளில் இந்தியா ஒன்று ஆகும். பல கோடி மக்களுள்ள இந்நாடு பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து சமீபத்தில் விடுதலை பெற்றுள்ளது. ஆசியாவில் மட்டுமின்றி, உலக முழுவதிலும் இந்தியாவுக்கு மகத்தான பங்கு எதிர்காலத்தில் உண்டு. இந்த நாட்டு வியாபாரி ஒருவர் - சென்னையிலிருந்து மிஸ்டர் சோமலெ-இன்று நம் நிலையத்திற்கு வந்திருக்கிறார். அவருடைய நாட்டைப் பற்றி இப்போது அவரிடம் பேசுவோம்" என்ற முன்னுரைக் குறிப்போடு டாக்டர் டைலர், சோமலெயிடம் கேள்வி கேட்கத் தொடங்குகிறார் :

"கேள்வி : பழைய இந்தியாவானது புதிய இந்தியா, பாக்கிஸ்தான் என்ற இரு கூறுகளாகப் பிரிக்கப்பட்டதே, இப்பிரிவினை மத அடிப்படையில் நிகழ்ந்தது. நான் சொல்லுவது சரியா?

"பதில் : தங்கள் கருத்து சரியன்று. பாக்கிஸ்தான் மத அடிப்படையில் நிறுவப்பட்டது உண்மையே; ஆனால் இந்தியா மதச் சார்பற்ற நாடாகவே இருக்கிறது. பழைய இந்தியாவைப் போலவே, இன்றைய இந்தியாவிலும் வேறுபட்ட பல மதத்தினர் உள்ளனர். கோடிக்கணக்கான முஸ்லிம்கள் இன்னும் இந்தியாவில் வாழ்கின்றனர். இந்திய அரசாங்கத்திலும் பல மதத்தினர் உள்ளனர். முன்னைய இந்திய அரசினர் ஆட்சிசெய்த நிலப்பரப்பை விட இன்றைய இந்திய அரசினர் ஆட்சிசெய்து வரும் நிலப்பரப்பு அளவில் சிறியது; மற்றபடி வேறுபாடு இல்லை" (அமெரிக்காவைப் பார், பக். 125-126).

இப்பேட்டியில், இந்தியாவுக்கும் பாக்கிஸ்தானுக்கும் இடையே உள்ள உறவு, இவ்விரு நாடுகளின் பொருளாதார அமைப்புகள், இவை ஒன்றுக் கொன்று துணையாக அமைந்திருக்கும் நிலை, இவ்விரு நாடுகளும் அமெரிக்க-கனடா உறவைப் பின்பற்றித் தற்காப்புக் கொள்கை வகுத்துக் கொள்ள வேண்டிய சூழல், அமெரிக்க அரசியலைப் போலவே மாநிலங்கள், சமஸ்தானங்கள் மைய அரசுக்குட்பட்டு இயங்கும் நிலை, நாட்டு வளத்தை, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு இந்திய அரசு செய்துவரும் முயற்சிகள், அணைகள் கட்டுதல், அறிவியல் முன்னேற்றங்களால் வறுமையை ஒழிக்க முயலல், இந்தியாவில் கல்வியின் நிலை, இந்தியக் குடும்பங்களின் அமைப்பு என்று பலவற்றையும் பற்றிப் பேட்டியாளர் தொடர்ந்து கேட்டுக் கொண்டே செல்ல, அவற்றிற்கெல்லாம் சோமலெ அளித்த திறமையான பதில்கள், நாட்டின் மீது அவர் கொண்டிருந்த ஆழ்ந்த அக்கறையையும், தாய்நாட்டைப் பொறுத்த வரையில் அவர் ஓர் அறிவுக் களஞ்சியமாகத் திகழ்ந்ததையும் எடுத்துக் காட்டுவனவாக விளங்குகின்றன.

மாறாக, இன்று, படித்து முடித்துவிட்டு, வேலை பார்ப்பதற்காக வெளிநாடு செல்லும் இளைஞர் பலர், நம் நாட்டைப் பற்றிப் பிற நாட்டார் கேட்கும் கேள்விகளுக்கு விடை சொல்லத் தெரியாமல், நாட்டைப் பற்றிய

தவறான கண்ணோட்டம் ஏற்படுவதற்குக் காரணமாவதையும் சோமலெ சுட்டிக் காட்டியுள்ளார். இதனால், "இப்போது அமெரிக்காவில் 'சீ அமெரிக்கா பர்ஸ்ட்' (See America First) என்று ஒரு இயக்கம் தோன்றியிருக்கிறது. அந்த இயக்கத்தின் கருத்து என்னவென்றால், வெளிநாடுகளுக்குச் செல்லுவதற்கு முன்னர் ஒவ்வொருவரும் தங்கள் நாட்டைப் பற்றி நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதுதான்" (பிரயாண இலக்கியம், பக். 9-10) என்று மேலும் அவர் குறிப்பிட்டுள்ளார். இக்கருத்து இன்று வெளிநாடு செல்ல விரும்பும் ஒவ்வோர் இளைஞரும் தங்கள் மனத்தில் இருத்திக் கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

## சுவையான படப்பிடிப்பு

"பிரயாண நூல்கள் பிற இலக்கியங்களைப் போல வாழ்க்கையோடு தொடர்பு உடையவை. அவற்றைப் படிக்கும்போது, வெறும் புள்ளி விவரங்களாக மட்டும் இருத்தல் கூடாது. பிரயாண நூல்களைப் படிக்கும் மக்களில் சிலர் தாங்களும் பிரயாணம் செய்ய வேண்டும் என்ற ஆவல் உள்ளவர்கள். ஆனால் அந்த வாய்ப்பு இல்லாதவர்கள். எனவே, ஆசிரியருடைய கண்கொண்டு தாமும் வெளிநாடுகளைப் பற்றி அறிய வேண்டுமென்ற நோக்கத்துடன் படிக்கக்கூடும்" (பிரயாண இலக்கியம், ப. 14) என எழுதியதோடு நின்றுவிடவில்லை சோமலெ; தம் கருத்தினை நடைமுறைப்படுத்தியும் காட்டினார் அவர். தம் பயண நூல்களில் அவர் வெறும் புள்ளி விவரங்களை மட்டும் தந்து செல்லவில்லை; அந்நாட்டு மக்களுடன் நன்றாகப் பழகி, அவர்தம் நிலையை நன்கு உணர்ந்து, அவற்றைத் திறம்பட வெளிப்படுத்திச் சென்றுள்ளார்.

வணிகத்தின் பொருட்டுப் பிற நாடுகளுக்குச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டபோதிலும், அந்நாடுகளைப் பற்றி அறிந்துகொள்வதிலும், மக்களின் வாழ்க்கை முறைகளைத் தெரிந்து கொள்வதிலுமே மிகுந்த கவனம் செலுத்தினார் சோமலெ. தம் பயணங்களின் இடையே அவர் பல்கலைக் கழகங்களுக்குச் சென்று கல்வி முறையை ஆராய்ந்தார்; பண்ணைக்குச் சென்று மாடுகள் வளர்க்கப்படும் முறையை வினவினார்; தொழிற் சாலைகளுக்குச் சென்று, தொழிலாளர்களைச் சந்தித்து, அவர்தம் வாழ்க்கை நிலையை அறிந்து கொண்டார்; பொதுமக்களுடன் பழகி, அவர்களுடைய குணநலன்களைத் தெரிந்து கொண்டார். இவ்வாறு ஒவ்வொரு நாட்டிற்குச் செல்லும்போதும், அந்நாட்டில் உள்ள கல்வி, தொழில், வேளாண்மை, வாணிகம், உணவுமுறை, பத்திரிகை, வானொலி, திரை அரங்குகள், வங்கிகள், உணவு விடுதிகள் என்று ஒவ்வொரு துறையைப் பற்றியும் செய்திகளைத் திரட்டுவதில் அவர் மிகுந்த கவனத்தைச் செலுத்தினார்; மக்களின் அன்றாட வாழ்க்கை அனுபவங்களைப் பற்றி அறிந்து கொள்ளுவதில் ஆர்வம் காட்டினார். இங்ஙனம் அறிந்து கொண்ட

ஒவ்வொன்றையும் நம் நாட்டு நிலையுடன் ஒப்பிட்டுப் பார்த்தார்; இதே போல், அயல்நாடுகளில் உள்ள தொழில் நிறுவனங்களுக்குச் செல்லும்போது, அவற்றின் அமைப்பு முறை, அவை செயல்படும் முறை, அவற்றின் வெற்றிக்குக் காரணங்கள் ஆகியவற்றை அலசி ஆராய்ந்தார்; இத்தகைய வளர்ச்சி நிலைகள் நம் நாட்டிலும் ஏற்பட வேண்டும், இந்தியாவும் இத்தகைய முறைகளைப் பின்பற்றி உயர வேண்டும் என்னும் வேட்கையைத் தம் பயண நூல்களில் ஆங்காங்கே சுட்டிக்காட்டத் தவறவில்லை சோமலெ.

அவ்வப்போது உலகின் பல நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் செய்த சோமலெ, அவ்வந் நாட்டில் காணப்படும் - அவற்றிற்குப் பெருமை தரும் - பல சுவையான செய்திகளைத் தமக்கே உரிய நடையில் படம்பிடித்துக் காட்டியுள்ளார். நெஞ்சை அள்ளும் சில சான்றுகள் வருமாறு :

"மே மாதம் தொடங்கி மூன்று மாதங்கள் இளவேனிற் காலமாக இருக்கும். இக்காலத்தில் சுவீடனில் சூரியன் அல்லும் பகலும் ஒளி வீசுகிறது. அதாவது மே மாதத்தில் தோன்றும் சூரியன் ஜுலை மாதத்தில் தான் மறைகிறது. நள்ளிரவில் கூட மின்சார விளக்கோ, வேறு வகை விளக்கோ ஏற்றாமல் செய்தித்தாள்களைப் படிக்க இயலும். இதனால் சுவீடனுக்கு 'நள்ளிரவுச் சூரியன் நாடு' என்ற பெயர் வழங்குகிறது. ஆண்டுதோறும் ஏப்ரல் மாதம் 30-ஆம் நாள் இரவில் சுவீடிஷ் மக்கள் சொக்கப்பனை கொளுத்தி நள்ளிரவுச் சூரியனுக்கு நல்வரவு கூறி மகிழ்ச்சிக் கூத்தாடுகின்றனர்" ('நடுவழி நாடு', நான் கண்ட வெளிநாட்டுக் காட்சிகள், ப. 15).

"நயகரா நீர்விழ்ச்சி - இயற்கை அன்னை தம் வளத்தை வாரி வழங்கியுள்ள பகுதி நயகரா நீர்வீழ்ச்சி. மேகம் பொத்துக்கொண்டு வருவது போல, இங்கு நீர் பொழிவதாலும், அது பொழியும் ஓசை பத்து மைல் தொலைவுக்குக் கேட்பதாலும், இதனை 'அருவி' என்று கூறுதற்கில்லை. நயகராவில் நீராடுதல் நினைக்கவும் இயலாத ஒன்று. பார்த்து மகிழவும், பயன்படுத்தி வளப்படுத்தவும், நயகரா நீர்வீழ்ச்சி கனடாவுக்கும், அமெரிக்காவுக்கும் உதவுகிறது. இதன் நீளம் 4000 அடி (குற்றால அருவியின் நீளம் 200 அடி இருக்கலாம்); இந்த நீர்வீழ்ச்சி இரு பகுதிகளாக இருக்கிறது. அமெரிக்கப் பகுதியிலுள்ள நீர்வீழ்ச்சியின் தொலைவு 1400 அடி; உயரம் 165 அடி; கனடாப் பகுதியில் 2600 அடி; உயரம் 155 அடி" (உலக நாடுகள் வரிசை-1 : கனடா, ப. 29).

"உலகிலேயே அழகான நகரம் பாரிஸ். பாரிசில் மிக முக்கியமான காட்சி ஐபில் கோபுரம் என்பது. இது முழுவதும் இரும்பால் அமைக்கப் பெற்ற ஒரு கோபுரம்; இதன் உயரம் 984 அடி. சில ஆண்டுகளுக்கு முன் வரை, இதுவே உலகில் உயரமான கட்டிடமாக இருந்தது. இக்கோபுரத்தின் உச்சியில் ஏறிப் பார்த்தால், பாரிஸ் நகர முழுவதும் மிக நன்றாகத் தெரியும். இதைக் கட்டி முடித்தவர் ஐபில் என்ற பிரெஞ்சுப் பொறியியல் வல்லார்.

இவரே அமெரிக்காவிலுள்ள சுதந்திரச் சிலையை நிறுவியவர்" (உலக நாடுகள் வரிசை-5: பிரான்ஸ், ப. 37).

மேலே உள்ள பகுதிகளைப் படிப்பவர்கள் குறிப்பிட்ட நாடுகளுக்குச் சென்று பார்க்கும் வாய்ப்புக் கிடைக்காதவர்களாக இருந்தாலும், ஆசிரியருடைய கண்கொண்டு தாமும் அந்த நாடுகளைப் பற்றிய சுவையான தகவல்களைப் பற்றி அறிந்து இன்புற முடியும்.

சோமலெ அமெரிக்க நாட்டில் இருக்கும்போது, புட்டியில் பால் அடைப்பதைப் பற்றிப் பத்திரிகையில் ஒரு செய்தி வெளியாகியிருந்தது. "ஓர் இத்தாலிய விஞ்ஞானி அமெரிக்காவில் புட்டிகளில் பால் அடைக்கும் இயந்திர சாலை ஒன்றைப் பார்வையிடப் போனார். அப்பொழுது அங்கே ஒரு குழாய் வெடித்ததினால் பால் எல்லாப் பக்கங்களிலும் சிதறி விழுந்தது. ஒரு கணங்கூடத் தாமதியாமல் ஒரு தொழிலாளி இயந்திரத்தை நிறுத்தினார்; இன்னொருவர் பழுது பார்த்து முடித்தார் உடனே மீண்டும் வேலை தொடங்கிற்று. இதைப் பார்த்து வியப்புற்ற இத்தாலிய விஞ்ஞானி சொல்லியதாவது: 'இதுபோல் எங்கள் நாட்டில் நடந்தால், பெரிய குழப்பம் ஏற்படும்; பாலெல்லாம் பாழாகும்; நாளெல்லாம் அதே பேச்சாகப் பேசுவார்கள்" (அமெரிக்காவைப் பார், பக். 79-80). இந்நிகழ்ச்சியின் மூலம் அமெரிக்க நாட்டுத் தொழிலாளரின் தொழில் ஈடுபாட்டினை (Sincerity) எடுத்துக் காட்டுவதோடு, நம் நாட்டுத் தொழிலாளர்களின் உள்ளங்களிலும் இத்தகைய ஈடுபாடு தோன்ற வேண்டும் என்பதைக் குறிப்பாகப் புலப்படுத்துகின்றார் சோமலெ.

## ஒப்பீட்டு நோக்கு

சோமலெ இந்திய நாட்டு நிலையையும், இந்திய நாட்டுக் காட்சிகளையும் மேனாட்டு நிலைகளுடன் ஒப்புமை காட்டி எழுதிச் செல்லும் பாங்கிற்கு 'அமெரிக்காவைப் பார்!' என்னும் நூலில் இருந்து ஒரு பகுதியை இங்கே சான்றாகச் சுட்டலாம்.

"நம் நாட்டில் செல்வ நிலையிலும், மற்றும் பல துறைகளிலும் பம்பாய் முதன்மையாயிருப்பது போல, அமெரிக்காவில் நியூயார்க் இருக்கிறது. பம்பாயில் தலால் தெருவிலுள்ள பங்கு, பருத்தி, தங்கம், வெள்ளி மார்க்கட்டுகள் இந்தியாவுக்கு எவ்வளவு முக்கியமோ, அது போலவே நியூயார்க்கின் வால் ஸ்ட்ரீட் உலகப் பொருளாதாரத்தையே சீராக்கவும், சீர் குலைக்கவும் வல்லது... பம்பாயைப் போல நியூயார்க்கும் ஒரு தீவு... பம்பாய்க்கு வருபவர்களை 'இந்தியாவின் தலைவாயில்' (Gateway of India) என்ற மண்டபமும், நியூயார்க்குக்கு வருபவர்களைச் 'சுதந்திரச் சிலை'யும் எதிர் கொண்டழைக்கின்றன... பம்பாயில் ஏழு, எட்டு மாடிக் கட்டிடங்கள் மிகுதியாக இருப்பது போல, நியூயார்க்கில் நாற்பது ஐம்பது மாடிக் கட்டிடங்கள் பல இருக்கின்றன" (அமெரிக்காவைப் பார், பக். 16 - 17). இங்கே அமெரிக்க நாட்டின் நியூயார்க் நகரில் தாம் கண்ட காட்சிகளுடன் இந்திய நாட்டின்

பம்பாய் நகரக் காட்சிகளை ஒப்புமை காட்டி எழுதியிருப்பது ஆசிரியரின் ஒப்பீட்டுப் பார்வையைத் தெற்றெனப் புலப்படுத்துவதாகும்.

இவ்வகையில் குறிப்பிடத்தக்க இன்னும் இரு சான்றுகள் வருமாறு:

"ஆறுகளும் நயாகரா அருவியும் ஆங்காங்கு அமைந்து கனடாவுக்கு வளமும் வாழ்வும் தருகின்றன. மலை வளம் சிறிதளவு உண்டு; மலைகள் யாவும் சாதாரணமாக நமது குன்னூர் உயரம்தான் (5000 அடி) உள்ளன. கனடாவின் மிக உயரமான மலை 'மவுண்ட் லகான்' என்பது. அதன் உயரம் 19,850 அடி; இமய மலையை விட இது பத்தாயிரம் அடி குறைவு; தமிழ்நாட்டின் மிக உயர்ந்த மலையான டாப்ஸ்லிப்சை விட 11,000 அடி கூடுதலான உயரம்" (உலக நாடுகள் வரிசை-1; கனடா, ப. 7).

"தைகோன் என்ற நடனக்கலை தாய்லந்தில் பரவியிருக்கிறது. இது மலையாளத்துக் கதகளி போன்றது. தைகோன் நடனமும், பொம்மலாட்டமும் தான் தாய்லந்து நடனத்தில் சிறப்பாகக் கவனிக்கத்தக்கன" (உலக நாடுகள் வரிசை - 4: தாய்லந்து, ப. 13).

நம் நாட்டு ஆறுகள், மலைகள், கலைகள் ஆகியன பற்றிய விவரங்களை சோமலெ எந்த அளவு துல்லியமாக அறிந்து வைத்திருந்தார் என்பதை மேலே எடுத்துக்காட்டியுள்ள பகுதிகளால் நன்கு உணர்ந்து கொள்ளலாம்.

எந்த நாட்டிற்குச் சென்றாலும், அந்நாட்டைப் பற்றிய பழைய வரலாற்றை அறிந்து கொள்ளுவதிலும் சோமலெ மிகுந்த ஆர்வம் காட்டினார். அத்துடன் நில்லாமல், அந்நாடு எந்த வகையில் எல்லாம் இந்தியாவுடன் ஒப்பிடக்கூடியதாக- தொடர்புடையதாக - இருந்தது என்பதையும் அவர் தம் நூல்களில் சுட்டிச் சென்றார். இவ்வகையில் குறிப்பிடத்தக்க சில சான்றுகள் வருமாறு:

"லலிபேலா எத்தியோப்பியாவின் மாமல்லபுரம்... மாமல்லன் என்பது போல, லலிபேலா என்பதும் ஓர் அரசனின் பெயர். அரசர் ஆதரவும், சமய உணர்வும் சேர்ந்து உருவான நகரங்கள் மாமல்லபுரமும் லலிபேலாவும் என்று தங்குதடையின்றிச் சொல்லலாம்'' (ஆப்பிரிக்க நாடுகள் வரிசை-3: எத்தியோப்பியா, பக். 34-36).

"சுமத்திராவை ஆண்ட அரசர்கள் சோழர், பாண்டியர், பல்லவர், தெக்காணர் என்ற பெயர்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஓராயிரம் ஆண்டுகள் சுமத்திராவுக்கும் தமிழகத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. 11-ஆம் நூற்றாண்டில் சோழர் இத்தீவின் மீது படையெடுத்தனர். 1088-ல் ஏற்பட்ட தமிழ்க் கல்வெட்டு ஒன்று லுபாத்துவா என்னுமிடத்திலிருக்கிறது; சுமத்திராவில் வாழும் பதாக் என்ற இனத்தவர், இன்றும் தமிழ்ப் பெயர்களையே வைத்துக் கொள்ளுகின்றனர். சுமத்திரா மலைகளை 'குறிஞ்சி' என்ற தமிழ்ச் சொல்லால் குறிப்பிடுகின்றனர்...

நம் நாட்டுடன் ஜாவாத் தீவுக்குத் தொடர்பு மிகுதி. நமது பழைய நூல்கள் இத்தீவைச் 'சாவகம்' என்று குறிப்பிடுகின்றன" *(உலக நாடுகள் வரிசை - 10: இந்தோனேசியா, பக். 24-25)*.

## மக்களின் உணவு, உடை, பழக்கவழக்கங்கள் ஆகியவற்றைச் சுட்டுதல்

வணிகத்தின் பொருட்டு வெளிநாடுகளுக்குச் சென்றபோதிலும், அவ்வந் நாட்டு மக்களுடன் பழகி, அவர்தம் உணவு, உடை, பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை அறிந்து கொள்ளுவதில் தனிப்பட்ட விருப்பம் கொண்டவராக விளங்கினார் சோமலெ. இவ்வகையில் அமெரிக்கா, சோமாலியா நாட்டு மக்களிடம் காணப்படும் உணவுப் பழக்கங்களாக அவர் எடுத்துக்காட்டி இருப்பன வருமாறு :

"அமெரிக்கர் மற்ற நாட்டவரின் உணவுகளின் மீது வெறுப்புக் காட்டுவதில்லை... இந்தியாவில் சில காலம் தங்கிய ஓர் அமெரிக்கர் 'இட்டிலி என்பது ஒரு சிறந்த சிற்றுண்டி. சாம்பார் என்னும் கடலில், இட்டிலி ஓர் நீர்மூழ்கி போல ஒளிந்து கொண்டிருக்கிறது' என்று ஓர் அமெரிக்கப் பத்திரிகையில் எழுதியிருந்தார். இங்கு,

"இட்டிலி யென்பது இனியஉணா; மற்றதனை
ஒட்டி நுகர்வதுசாம் பார்"

என்னும் கேலிப்பாடல் நினைவில் வருகின்றது. இட்டிலியைப் போலவே. அப்பளமும் இந்தியாவில் தயாரிக்கப்படும் காப்பியும் பெயர்பெற்றவை. *ஆகையால், அமெரிக்காவில் இவை கிடைக்க ஏற்பாடு செய்வது, நம் அரசினரின் டாலர் பற்றாக்குறையைச் சரிக்கட்ட எளிதான, அனுபவ சாத்தியமான, உடனே பலன்தரத்தக்க வழியாகும்" (அமெரிக்காவைப் பார், ப. 164)*.

"சோமாலியா மக்கள் டிக்காக்சன் மிகுந்த காப்பியையே விரும்புகின்றனர். காப்பியை நெடுநேரத்துக்குக் குடிப்பதும் அவர்கள் மரபு. நம் நாட்டில் போல மடமட என்று குடிக்கமாட்டார்கள். மருந்து போலச் சிறிதளவே குடிப்பார்கள். ஒரு வாய் காப்பிக்கும் அடுத்த வாய் காப்பிக்கும் இடையே தண்ணீரும் குடித்துக் கொள்வர். தண்ணீரையும் இந்த நாட்டில் விலை கொடுத்துத்தான் வாங்கவேண்டும். ஒரு கோப்பைக் காப்பிக்கும், ஒரு கோப்பைத் தண்ணீருக்கும் சேர்த்துப் பணம் கொடுக்க வேண்டும்" *(ஆப்பிரிக்க நாடுகள் வரிசை - 11: சஹாரா, பக். 39-40)*.

நம் நாட்டில் காண இயலாத சில வியக்கத்தக்க பழக்க வழக்கங்களைப் பிற நாட்டு மக்களிடம் காணும்பொழுது, அவற்றைச் சுவைபடச் சுட்டிக்காட்டும் போக்கும் சோமலெயிடம் காணப்படுகின்றது. இரு சான்றுகள் இதோ:

"அமெரிக்கர் பாலில் தண்ணீரையோ, தண்ணீரில் பாலையோ கலப்பதில்லை; கலக்க இயலும் என்பதையும் அறியார்" (அமெரிக்காவைப் பார், ப. 78).

"சுவீடிஷ்காரர்கள் தங்கள் சைக்கிள்களைப் பூட்டி வைப்பதில்லை; இரவிலும் அவரவர் வீட்டுக்கு முன்பாகத் தெருவிலேயே விட்டுவிடுவர். இவ்வாறிருந்தும், ஒரு சைக்கிள் கூடத் திருட்டுப் போவதில்லை" (உலக நாடுகள் வரிசை - 2: சுவீடன், ப. 12).

## நம் நாடு அறிந்துகொள்ள வேண்டிய படிப்பினைகள்

பயணம் பல்வேறு அனுபவங்களை மட்டுமன்றி, படிப்பினைகளையும் தரும். இவ்வகையில் சோமலெ தாம் பயணம் மேற்கொண்டுள்ள நாட்டினரிடம் இருந்து கற்றுக்கொள்ள வேண்டிய படிப்பினைகள் எவையேனும் இருப்பின், அவற்றைத் தவறாமல் எழுதிச் செல்கின்றார். சான்றாக, 'ஆஸ்திரேலியாவில் ஒரு மாதம்' என்னும் நூலில் இருந்து பின்வரும் பகுதியைச் சுட்டிக்காட்டலாம்:

"ஆஸ்திரேலியாவிலிருந்து நம் நாடு அறியக் கூடிய படிப்பினைகள் சில உண்டு... ஆஸ்திரேலிய நாட்டின் விரைவான அரசியல் வளர்ச்சிக்கு அடிப்படையான காரணம் அங்குள்ள அரசியல் கட்சிகளினிடையே நிலவும் கருத்து ஒற்றுமையேயாகும். நாட்டின் முக்கியத் தொழில்களை அரசியலார் உடைமையாக்குவதை எல்லா ஆஸ்திரேலியக் கட்சிகளும் ஒப்புக் கொண்டுள்ளன. பேங்குகளையும், எஃகுத் தொழிற்சாலைகளையும் அரசியலார் நடத்துவது பற்றி மட்டும் அங்கு வேறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றன. பிரிட்டிஷ் பேரரசு நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் பொருள்களுக்குக் குறைவான சுங்கவரி விதிப்பது (Imperial Preference), வெள்ளை ஆஸ்திரேலியக் கொள்கை, கம்யூனிசத்தை எதிர்ப்பது, பிரிட்டனுடன் நெருங்கிய உறவு கொண்டிருப்பது ஆகியவற்றிலெல்லாம் ஆஸ்திரேலியக் கட்சிகள் ஒற்றுமையாய் இருக்கின்றன. நம் நாடும் தக்க முன்னேற்றம் அடைவதற்குத் துணையாக, இந்தியா பாகிஸ்தான் உறவு, சில அடிப்படைத் தொழில்களை அரசியலார் நடத்துவது, மொழிவாரி இராச்சியங்கள் அமைப்பது, இராச்சியங்களுக்கு மிகுதியான உரிமைகள் வழங்குவது, பொருளாதார வளர்ச்சிக்குத் திட்டமிடுவது, மதச் சார்பில்லாத அரசு, நடுநிலைமையான வெளிநாட்டுக் கொள்கை ஆகியவை பற்றி எல்லாக் கட்சியினரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அடிப்படைகள் வகுக்கப்பட வேண்டும்" (ஆஸ்திரேலியாவில் ஒரு மாதம், பக். 118-119).

'ஒரு நாட்டின் விரைவான அரசியல் வளர்ச்சிக்கு அங்கே உள்ள அரசியல் கட்சிகளின் இடையே கருத்து ஒற்றுமை நிலவ வேண்டுவது மிகவும் இன்றியமையாதது ஆகும்' என்பதை மேற்குறித்த பகுதியின் வாயிலாகத் தெள்ளத் தெளிவாக வலியுறுத்தியுள்ளார் சோமலெ.

இதே போல், ஜெர்மனி பயணத்தின் போது சோமலெவுக்கு நேர்ந்த பிறிதொரு அனுபவமும் இங்கே நினைவுகூரத்தக்கதாகும். இரண்டாவது

உலகப் போர் 1945-ஆம் ஆண்டில் முடிவுற்றது. போர் முடிந்து நான்கு ஆண்டுகள் கழித்து - அதாவது 1949-ஆம் ஆண்டில் - ஜெர்மனிக்குச் செல்லக் கூடிய வாய்ப்பு சோமலெவுக்குக் கிடைத்தது. ஹிட்லரின் சர்வாதிகாரப் போக்கினால் ஜெர்மனி பாழடைந்தது. பாழடைந்த ஜெர்மனியின் நிலையைச் சோமலெ கல்லும் கரையும் வண்ணம் எடுத்துக் காட்டிச் செல்வது, இனி இத்தகைய நிலைமை எந்த நாட்டுக்கும் ஒருகாலும் வந்துவிடக் கூடாது என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்கிறது.

"இரண்டாம் உலகப் போரால், ஜெர்மன் மக்கள் தினசரிப் பத்திரிகையை விலைக்கு வாங்கும் நிலையில் இல்லை... அதனால் 20 பிரதிகளை ஊருக்குப் பொதுவில் வாங்கி, ஒவ்வொரு முக்கியச் சந்திப்பிலும், இரண்டு பிரதிகளை, ஒன்றை முன்பக்கமும், மற்றொன்றைப் பின்பக்கமுமாகச் சுவரில் ஒட்டிவிடுவதாகவும், அவற்றைப் படித்துத்தான் அம்மக்கள் செய்திகளை அறிந்து கொள்வதாகவும் அவர் (ஜெர்மானியர் ஒருவர்) சொன்னார். பத்திரிகை படிப்பதில், இவ்வித முறையை யான் இதற்குமுன் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை; நாவல்களில் கூடப் படித்ததுமில்லை...

விமான நிலையத்திலேயே ஜெர்மனியின் சிதைந்த காட்சி தென்பட்டது; உடைந்து போன விமானங்கள், உருக்குலைந்த பகுதிகள் எல்லாம் தோற்றமளித்தன... போரினால் ஏற்பட்ட சேதம் அவ்வழி நெடுகப் புலனாயிற்று... உணவுப் பங்கீட்டுச் சீட்டை வாங்கிக்கொண்டு இராணுவ ஹோட்டலுக்குச் சென்றேன். நான் சென்ற சாலைகளின் இரு மருங்கிலும் இருந்த காட்சிகள் காணச் சகியாதவை; ஒளியிழந்த கட்டிடங்கள் ஒரு புறம், தாயினை இழந்த சேய்கள் மற்றொரு புறம், கணவனை இழந்த காரிகையர் இன்னொரு புறம்! இக்காட்சிகள் என்னுடைய உள்ளத்தில் ஊடுருவிப் பாய்ந்தன" ('பாழடைந்த ஜெர்மனி', என் பிரயாண நினைவுகள், பக். 10-11).

கண்ணாடி உடைந்த சன்னல்கள், சன்னல்கள் அழிந்த வீடுகள், கதவு இல்லாத கட்டிடங்கள், மக்களில்லாத வீடுகள், வீடுகளில்லாத மக்கள், நடைப்பிணங்கள் இவற்றை ஜெர்மனி முழுவதும் காணலாம். ஓர் அறையிலேயே 20 பேர் வாழ்வதையும் அங்கே காணலாம்... சுருங்கக் கூறின், ஜெர்மனி முழுவதுமே ஒரு சுடுகாடு எனலாம்" ('பாழடைந்த ஜெர்மனி', என் பிரயாண நினைவுகள், ப. 22) என்று பாழடைந்த ஜெர்மனியைப் பற்றி சோமலெ வருணித்துள்ள ஒவ்வொரு காட்சியும் இப்படிப்பட்ட அவலநிலை வேறு எந்த நாட்டிற்கும் ஏற்படக்கூடாது என்னும் எண்ணத்தைப் படிப்பவர் உள்ளத்தில் தோற்றுவிக்க வல்லதாகும்.

## குறைகளையும் நாகரிகமாகச் சுட்டிக் காட்டல்

"பிரயாண நூல்கள் எழுதுவோர், ஒரு நாட்டின் நிறைகளை மட்டுமன்றி, அந்நாட்டின் குறைகளையும் சுட்டிக் காட்ட வேண்டும்; ஆனால் அவற்றை மிகைப்படுத்திக் கூறாமல், குறைபாடுகளைத் தந்திரமாகவும்,

மறைமுகமாகவும் சுட்டிக் காட்ட வேண்டும்; வெளிப்படையாகவும், பிரசார முறையிலும் வேறொரு நாட்டின் குறைபாடுகளை எழுதினால், அந்த நாட்டுக்கும், நம் நாட்டுக்கும் உள்ள நல்லுறவு கெடும்" (பிரயாண இலக்கியம், ப. 23). இவ்வகையிலும் சோமலெ தம் கடமையைச் செய்யத் தவறவில்லை. அவர் தம் பயண நூல்களில் பிற நாடுகளின் குறைகளைக் குறிப்பாகச் சுட்டிக்காட்டியுள்ளார்; அவற்றை மிகைப்படுத்திக் கூறாமல் தேவையான அளவிற்குக் குறிப்பிட்டுள்ளார்.

220 பக்கங்களில் அமெரிக்காவின் சிறப்பை விரிவாகவும் விளக்கமாகவும் கூறிய சோமலெ, 'அமெரிக்காவைப் பற்றி இந்த நூல் பாராட்டு இதழாக விளங்குகிறதே. அந்த நாட்டில் குறை ஒன்றும் இல்லையா?' என்று வாசகர் சிலர் கேட்பது என் செவிகளில் ஒலிக்கிறது' என்று ஓர் இடத்தில் எழுதிவிட்டு, அந்நாட்டில் நிலவும் ஒருசில குறைகளையும் சுருக்கமாகச் சுட்டிச் சென்றுள்ளார்.

"பணம் பணம் என்று எப்போதும் அமெரிக்கர் அலைகிறார்கள். எந்தப் பொருளைப் பார்த்தாலும் அதற்கு ஒரு விலை மதிக்கிறார்கள். அது, அவர்களுடன் உடன்பிறந்த நோய்.

ஆயுதங்களைச் சேகரிப்பதில் அமெரிக்க அரசு அதன் செல்வம் முழுவதையும் செலவிடுகிறது. இவ்வாறு செலவிடும் பணத்தில் பத்தாயிரத்தில் ஒரு பங்கை மட்டும் ஏழை நாடுகளுக்கு வழங்கினால் கூட, உலகத்தின் வறுமை நீங்கிவிடும்.

அமெரிக்காவில் நான் காணும் மூன்றாவது குறை, எல்லாம் இயந்திரமயமாக்கப்பட்டிருப்பதாகும். இதனால் மனிதனே இயந்திரமாகி விட்டான்.

அடுத்த குறை, அமெரிக்கருக்கு மன அமைதி அல்லது திருப்தி என்பது மருந்துக்குக் கூட இல்லை. சந்திர மண்டலத்தை அடைய வேண்டும், அடைந்தாகி விட்டது. ஆனாலும் ஒரு கவலை. இதைவிட உயரமாக அடுத்து எங்கே செல்லுவது என்பதுதான் அந்தக் கவலை.....

அறிவுப் பசி அளவு கடந்து இருப்பதாலும் சில கேடுகள் நேருகின்றன. மருத்துவம் படித்த அமெரிக்கர் சிலர், தங்கள் மனைவி கருவுற்றிருக்கும்போது எக்ஸ்-ரே படம் எடுத்துப் பார்த்துத் தங்கள் அறிவை வளர்த்துக் கொள்ளுகின்றனர். ஆனால், இவ்வாறு செய்வதால் அந்த டாக்டர்களின் குழந்தைகள் உடற்குறைபாடுகளுடன் பிறக்கின்றன" (அமெரிக்காவைப் பார், பக். 224-225).

'உலக வல்லரசுகளுள் மூத்தது அமெரிக்கா, செல்வம் கொழிக்கும் சீமை அமெரிக்கா, சந்திர மண்டலத்திற்கு மனிதனை அனுப்பிய முதல் நாடு அமெரிக்கா, மக்கள் ஆட்சி முறைக்கு எடுத்துக்காட்டாக விளங்குவது அமெரிக்கா, தொலைபேசி, ஆகாய விமானம், கணிப்பான் போன்ற ஆயிரம் அறிவியல் புதுமைகளைக் கண்டுபிடித்தது அமெரிக்கா, நம் நாட்டுப்

பெருமக்கள் பலர் கடுமையான நோயால் பாதிக்கப்பட்ட போது மருத்துவ வசதி பெறச் சென்ற நாடு அமெரிக்கா' என்றாற் போல் அமெரிக்க நாட்டின் நல்ல பக்கத்தையே - நிறைகளையே-அடுக்கிச் சொல்லிக் கொண்டிராமல், அந் நாட்டின் மறுபக்கத்தையும் - அந்நாட்டில் நிலவும் ஒருசில குறைகளையும் - சுட்டிக்காட்டி இருப்பது சோமலெயின் 'நக்கீரப் பார்வை'க்கு நல்லதொரு சான்றாகும்.

## 'இமயம் முதல் குமரி வரை'

அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, ஐரோப்பா போன்ற உலக நாடுகள் பலவற்றை மட்டுமன்றி, இந்தியா முழுவதும் பல முறை சுற்றி வந்தவர் சோமலெ. மேற்கு வங்காளம் தொடங்கி, தமிழ்நாடு முடிய உள்ள மாநிலங்கள் பலவற்றிலும் அவரது காலடி பதிந்திருக்கிறது எனலாம். ஆறுகளாலும் மலைகளாலும் பேசும் மொழிகளாலும் பிரிந்திருந்தாலும் 'இந்தியாவின் இதயம் ஒன்றே; இந்தியர் அனைவரும் ஒருவரே' என்பதனை மெய்ப்பிக்கும் நூலாக சோமலெயின் 'இமயம் முதல் குமரி வரை' விளங்குகின்றது. வழக்கமான முறையில் மாநில எல்லை, நிலப்பரப்பு, மக்கள் தொகை என்றாற் போல் வெறும் புள்ளி விவரங்களை மட்டுமே அடுக்கிக் கூறிக் கொண்டிராமல், ஒவ்வொரு மாநிலத்திற்கும் உரிய தனித்தன்மைகளை மட்டும்-சுவையான தகவல்களை மட்டும் - தமக்கே உரிய பாங்கில் இந்நூலில் பதிவு செய்துள்ளார் சோமலெ. படிப்பவர் உள்ளத்தை அள்ளிக்கொள்ளும் சில சான்றுகள் வருமாறு:

"குஜராத்தில் விதவைகள் தான் தங்க வளையல்கள் போட்டுக் கொள்வார்கள். சுமங்கலிகள் கண்ணாடி வளையல்கள் தான் போட்டுக் கொள்வார்கள் (ப. 46).

*ராஜஸ்தானில்* விதவைகள் கறுப்புச் சேலை கட்டுகிறார்கள். சுமங்கலிகள் வெள்ளைச் சேலை உடுத்துகிறார்கள் (ப. 67).

இந்தியாவைப் பாதுகாக்கும் போர் வீரர்களின் வீரத்தின் விளைநிலம் பஞ்சாப்... அதனால் திருமணத்தன்று வரும் வாழ்த்துத் தந்தியை விட முதல் இரவுக்குப் பின் மகளிடமிருந்து வரும் தந்தியைத் தான் பெண்ணின் தாயார் ஆவலுடன் எதிர்பார்ப்பாள். சில சமயம் இப்படிப்பட்ட தந்திகள் வரும் : 'என் கணவருக்கு ஒரு கால்தான் இருக்கிறது' (ப. 107)

ஹிமாசல பிரதேசத்தில் பெண்கள் தொகை குறைவு. ஆகையால் ஒவ்வொரு குடும்பத்திலும் மூத்த பையனுக்கு மட்டும் திருமணம் செய்வது என்ற வழக்கம் நிலவுகிறது. காதலித்துக் குழந்தைகள் பிறந்த பிறகு இரண்டாவது மகன் திருமணம் செய்து கொள்ளலாம் (ப. 127).

மருந்தாகவும் சமையலில் நறுமணப் பொருளாகவும் பயன்படும் குங்குமப்பூ காஷ்மீரில் மட்டுமே கிடைக்கிறது. வயல்களில் பூச்செடி போலப் பயிரிடப் படுகிறது. குங்குமப் பூவுக்குக் 'காஷ்மீர் ராஜா' என்ற பட்டம் வழங்குகிறது (ப. 198).

அந்தமான் என்ற பெயருக்கு தமிழர்கள் ஒரு காரணம் கற்பிக்கிறார்கள். படகுகளில் வந்த தமிழர்கள், கடலோரமெல்லாம் துள்ளியோடிய மான்களைக் கண்டு வியந்தார்களாம். 'அந்தோ! மான் நிக்குது பார்! அந்தோ! மான் நிக்குது பார்! ' என்று திருப்பித் திருப்பிச் சொன்னார்களாம். அதிலிருந்து தான் அந்தத் தீவுகளுக்கு, 'அந்தமான் நிக்கோபார்' என்ற பெயர் தோன்றிற்றாம் (ப. 202)."

## முடிவுரை

உலகம் சுற்றுதல் என்பது இக்காலத்தில் எளிது. ஆனால், ஐம்பது ஆண்டுகளுக்கு முன் மிக மிக அரிதான செயல் அது. அந்த அரிய செயலில் ஈடுபட்டுப் பெருமை பெற்றவர் சோமலெ. சுருங்கக்கூறின், இவர் உலகம் சுற்றுதலைத் திருத்தலப் பயணமாக மேற்கொண்ட ஒரு 'தமிழ் நாயனார். ' 'நகரத்தார் கலைக்களஞ்சியம்' மதிப்பீடு செய்வது போல், "பயண இலக்கியத்தைச் சுவையுடனும், பிறருக்குப் பயன்படும் செய்திக் களஞ்சியங்களாகவும் எழுதுவதில் இவர் மிகவும் சிறந்தவர். 'சோமலெயின் பயண நூல்களைப் படித்த பின்னர் தான் எனக்கு அமெரிக்கா போக வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது' என டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி குறிப்பிடுவது இவரது பயண இலக்கியத்தின் பயன்பாட்டுக்கு ஒரு நற்சான்றாகும்" (ப. 218).

# 3

# மாவட்ட வரிசை நூல்கள்

“இந்நூல் வரிசையால் தமிழகத்தின் பல பகுதிகள் வரலாற்று விளக்கமும் அறிமுகத் தெளிவும் பெறுவதோடு மட்டும் அல்லாமல், கற்கும் மக்களின் உள்ளத்தில் எழும் கடமையுணர்ச்சியாலும் புதிய ஊக்கத்தாலும் சீரும் சிறப்பும் பெற்றுக் குறை தீர்ந்து பொலிவதற்கும் இடம் உண்டு.”

– மு. வரதராசன்*

வெளிநாடுகளைப் பற்றிய எந்தச் செய்தியையும் நாம் உடனே வேண்டிய அளவிற்குத் தெரிந்து கொள்ள இயலும்; குறிப்பிட்ட எந்தப் பொருளைப் பற்றியும், எந்தப் பகுதியைப் பற்றியும் அறிந்து கொள்ளத் தேவையான நூல்களை நூல் நிலையங்களில் காணலாம்; அவ்வாறு அங்கே நூல்கள் கிடைக்கவில்லை என்றால், அந்தந்த நாடுகளின் தூதுவர் அலுவலகங்களுக்கோ, செய்தி நிறுவனங்களுக்கோ எழுதிப் பெறலாம்.

நம் நாட்டைப் பற்றிய இத்தகு நூல்களை விடுதலை பெற்ற பிறகு இந்திய அரசினர் வெளியிட்டு வருகின்றனர். ஆனால், நமது மாநிலங்களைப் பற்றியும் மாவட்டங்களைப் பற்றியும் நூல்கள் வெளிவரவில்லை. மாவட்டங்களைப் பற்றி இதுவரை வெளிவந்திருப்பவை, வெள்ளைக்கார ஆட்சியாளர்கள் (Collectors) எழுதிவைத்த 'மானுவல்', 'கெசட்டியர்' என்பன மட்டுமே. இவை சிறந்த முறையில் எழுதப் பெற்றவை; அரிய செய்திகளைத் தெரிவிப்பவை; ஆனால், இவை ஆங்கில மொழியிலேயே உள்ளன. மேலும். ஆங்கிலேயரால் எழுதப்பட்டமையால், நமக்குச் சாதாரணமாகத் தெரிந்த செய்திகளுக்கும் இவை மிகுந்த முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றன. ஆட்சியாளராகவும் அயல்நாட்டினராகவும் இருந்ததால் அவர்கள் நம் நாட்டுச் சாதிகளைப் பற்றித் துணிவோடு குறிப்பிட்டுள்ளனர். இந்நூல்கள் யாவும் அரசாங்கக் கண்ணோட்டத்துடனும், வருவாய்த் துறை (Revenue Department) அலுவலர்க்குப் பயன்படும் வகையிலும் அமைந்துள்ளன.

இச் சூழ்நிலையில், தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்களைப் பற்றி விரிவான நூல்கள் வெளிவர வேண்டும் என்ற எண்ணம் 1950-இல் சோமலெவுக்கு ஏற்பட்டது (முன்னுரை, சேலம் மாவட்டம், ப. 5). இதன்

---

* சிறப்புரை, வட ஆர்க்காடு மாவட்டம், ப. 4

விளைவாக, தக்கவர்களுடன் கலந்து பேசித் தம் எண்ணத்திற்குச் செயல் வடிவம் தரும் முயற்சியில் ஈடுபட்டார் அவர். இடையில் 1955-இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்து ஆட்சித்துறையில் சோமலெ அலுவலராகச் சேர்ந்தார்; அதனால் மாவட்ட விவர நூல்கள் எழுதும் பணி சிறிதுகாலம் தடைப்பட்டது. இந்நிலையில் 1958-இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பணியினின்றும் சோமலெ தம்மை விடுவித்துக் கொண்டார். சென்னையில் உள்ள 'பாரி நிலையம்' என்னும் பதிப்பகத்தின் உரிமையாளரும் இனிய நண்பருமான திரு. செல்லப்பனின் தூண்டுதலால் மீண்டும் மாவட்ட விவர நூல்களுக்கு வேண்டிய செய்திகளைத் தொகுக்கும் பணியில் முனைப்புடன் ஈடுபட்டார் சோமலெ. "மாவட்டங்களின் பல பகுதிகளுக்குச் சென்றேன். அறிஞர் பலருடன் உரையாடினேன். எண்ணற்ற நூல் நிலையங்களுக்கும் சென்றேன்; பழைய புத்தகக் கடைகளையும், பல்லாண்டுகளுக்கு முன் நிகழ்ந்த மாநாடுகளின் அறிக்கைகளையும், சங்கங்களின் வெளியீடுகளையும், கல்லூரிகளின் இதழ்களையும், 1925-இல் வெளியிடப் பெற்ற இரயில்வே அட்டவணையையும் கூடப் புரட்டினேன். குப்பையிலே குண்டுமணி கிடைக்காமற் போகவில்லை... ஏறத்தாழ ஓராயிரம் பேருக்குக் கடிதங்கள் எழுதினேன்... நகராண்மைக் கழகங்களின் ஆணையர்கள், சட்டசபை உறுப்பினர்கள், நெடுங்காலமாக ஓர் ஊரிலேயே இருந்து வரும் சிறந்த தலைமை ஆசிரியர்கள், அரசாங்க அலுவலர்கள், ஆராய்ச்சியாளர்கள் ஆகியோர் துணையையெல்லாம் நாடினேன்" என்று மாவட்ட விவர நூல்களின் உருவாக்கத்தின் போது தாம் மேற்கொண்ட பலவகையான முயற்சிகளைப் பற்றி சோமலெ விரிவாகக் குறிப்பிட்டுள்ளார் (முன்னுரை, சேலம் மாவட்டம், பக். 6-7). இங்ஙனம் அவர் தம் நூலுக்கு வேண்டிய செய்திகளைப் பல இடங்களில் இருந்தும் பலரிடம் இருந்தும் ஒரு தேனியைப் போல் அலைந்து திரிந்து, அரும்பாடுபட்டுத் தொகுத்துள்ளார்.

"பயணஞ் செய்தும், நூல்களைப் படித்தும், முதிர்ந்த வயதினரான பெருமக்களிடம் பேசியும், தமிழ்நாடெங்கும் சுற்றியதால் உற்றுநோக்கியும், ஒப்பிட்டுப் பார்த்தும் யான் குறித்து வைத்தவை பல துளி பெருவெள்ளமாகப் பெருகின... பல்வகையான, பல அளவான தாள்கள், வேறுபட்ட எழுதுகோல்கள், பறக்கும் பயணங்களில் கிறுக்கியன, பகலுணவுக்கு ஊடேயும் நள்ளிரவில் தூக்கத்துக்கு இடையேயும் குறிப்பாக எழுதி வைத்த மலர்களை யானே மாலையாகத் தொடுக்க முடியும்" (ப. 6) என்று 'இராமநாதபுரம் மாவட்டம்' நூலுக்கு எழுதிய முன்னுரையிலும் நூலாக்கத்தின் போது தாம் மேற்கொண்ட பல்வேறு முயற்சிகளைப் பற்றித் தெரிவித்துள்ளார் சோமலெ.

இங்ஙனம் மாவட்ட வரிசையில் சோமலெ எழுதிய நூல்கள் எல்லாம் இருந்த இடத்தில் இருந்துகொண்டே எழுதிய நூல்கள் அல்ல. ஒவ்வொரு மாவட்டத்திற்கும், மாவட்டத்தில் உள்ள ஒவ்வோர் இடத்திற்கும் சென்று தகவல்களைத் தேடித் தொகுத்து எழுத வேண்டிய நூல்கள் அவை.

இவ்வரிசையில் வெளிவந்துள்ள ஒரு நூலைப் படித்தாலே, அதனை உருவாக்குவதற்குச் சோமலெ எடுத்துக் கொண்டுள்ள பெருமுயற்சியை நாம் அறிந்து கொள்ளலாம்.

## சோமலெ வெளியிட்டுள்ள மாவட்ட வரிசை நூல்கள்

சோமலெ எழுதி வெளியிட்டுள்ள மாவட்ட வரிசை நூல்கள் பத்து ஆகும். 1961-ஆம் ஆண்டு, 'நமது தமிழ்நாடு வரிசை'யில், சேலம், கோயம்புத்தூர், கன்னியாகுமாரி, தஞ்சாவூர், வட ஆர்க்காடு ஆகிய ஐந்து மாவட்டங்களைப் பற்றிய அவரது நூல்கள் வெளிவந்தன. அடுத்து, 1963-ஆம் ஆண்டு தென் ஆர்க்காடு மாவட்டம், செங்கற்பட்டு மாவட்டம் ஆகிய இரண்டும், 1965-ஆம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டமும், 1972-ஆம் ஆண்டு இராமநாதபுரம் மாவட்டமும், 1980-ஆம் ஆண்டு மதுரை மாவட்டமும் வெளிவந்தன. இங்ஙனம் இருபது ஆண்டுக் கால இடைவெளியில் (1961 - 1980) கடுமையான உழைப்பின் பயனாகச் சோமலெயின் மாவட்ட வரிசை நூல்கள் பத்து தமிழ் கூறு நல்லுலகிற்குக் கிடைத்துள்ளன. அறிஞர் மு. வரதராசன் வட ஆர்க்காடு மாவட்டத்திற்கு எழுதிய சிறப்புரையில் குறிப்பிடுவது போல், "ஆஸ்திரேலியா, அமெரிக்கா முதலான நாடுகளைப் பற்றி எழுதிய இவர்தம் எழுதுகோல் தமிழ்நாட்டினைப் பற்றி விரிவாக எழுத முன்வந்தது மகிழத்தக்கது" (ப. 3).

## அணிந்துரையும் சிறப்புரையும் வழங்கிய பெருமக்கள்

சோமலெ தமது மாவட்ட வரிசை நூல்களுக்கு அணிந்துரை அல்லது சிறப்புரை பெறும்பொழுது தனிப்பட்ட முறையிலான ஓர் உத்தியைக் கையாண்டுள்ளார். அந்தந்த மாவட்டத்தைச் சார்ந்த அறிஞர்களிடம் இருந்தோ அல்லது அந்த மாவட்டத்தில் நீண்ட காலம் வாழ்ந்த பெருமக்களிடம் இருந்தோ அவர் அணிந்துரை அல்லது சிறப்புரை பெற்றுள்ளார். சான்றாக, அவரது சேலம் மாவட்டத்திற்குச் சிறப்புரை வழங்கியிருப்பவர் அம் மாவட்டத்தைச் சேர்ந்த, இந்திய அரசாங்கத்தின் போக்குவரத்துத் துறை அமைச்சர் டாக்டர் ப. சுப்பராயன் ஆவார்; அவ்வாறே வடஆர்க்காடு மாவட்டத்திற்கு, அம் மாவட்டத்தைச் சார்ந்த அறிஞர் மு. வரதராசனும், கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு, அம்மாவட்டத்தைச் சார்ந்த, தமிழ்நாட்டின் கல்வி மற்றும் நிதி அமைச்சராக இருந்த சி. சுப்பிரமணியமும், செங்கற்பட்டு மாவட்டத்திற்கு, அம்மாவட்டத்தைச் சார்ந்த அறிஞர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனாரும், இராமநாதபுரம் மாவட்டத்திற்கு இராமநாதபுரம் மன்னர் இராமநாத சேதுபதியும் அணிந்துரைகள் வழங்கியுள்ளனர். தென்னார்க்காடு மாவட்டத்திற்கு அணிந்துரை வழங்கியிருப்பவர், 25 ஆண்டுகளுக்கு மேல் அம் மாவட்டத்தில் வாழ்ந்து அம்மாவட்டத்தின் வளர்ச்சியில் ஈடுபட்ட அறிஞர் அ. சிதம்பரநாதன் ஆவார்.

## மாவட்டக் கலைக்களஞ்சியங்கள்

சோமலெயின் மாவட்ட வரிசை நூல்கள் ஒவ்வொன்றும் அந்தந்த மாவட்டத்தின் கலைக்களஞ்சியம் (Encyclopaedia) போல விளங்குகின்றன. பொது நிலை, சிறப்புப் பார்வை என்னும் இரு கோணங்களிலும் ஒவ்வொரு மாவட்டத்தையும் பற்றிய பல்வேறு விவரங்களை அரிதின் முயன்று தொகுத்துத் தந்துள்ளார் சோமலெ. தோற்றுவாய், வரலாறு, வாழும் மக்கள், நில வளம், நீர் வளம், நாட்டு வளம், கனி வளம், காட்டு வளம், புவியியல் வளம், மலை வளம் போன்ற பல்வேறு வளங்கள், பருவ நிலை, பாசன வசதி, வேளாண்மை, வாணிகம், தொழில் வளர்ச்சி, ஆட்சி முறை, அரசியல் நிலை, போக்குவரத்து வசதிகள், மருத்துவ வசதிகள், கல்வி நிலை, கலை வளர்ச்சி, தமிழ்ப் பணி, சமய நிறுவனங்கள், இதழ்கள், திரைப்படங்கள், நாட்டுப் பாடல்கள், விடுதலைப் போரில் பங்கு, ஊர்களைப் பற்றிய குறிப்புகள், காணத்தக்க இடங்கள், குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் ஆகியவை மாவட்ட வரிசை நூல்களில் பொது நிலையில் இடம்பெற்றுள்ள கூறுகள் ஆகும். கல்லணை, சரசுவதி மகால், கலைகளின் தாயகம் (தஞ்சாவூர்), காங்கேயம் மாடுகள், பஞ்சாலைத் தொழில் (கோயம்புத்தூர் மாவட்டம்), நாஞ்சில் நாட்டுத் தமிழ் (கன்னியாகுமரி), மாம்பழம் (சேலம் மாவட்டம்) என்றாற்போல் சிறப்புப் பார்வையில் அந்தந்த மாவட்டங்களுக்கே உரிய தனிச்சிறப்புக்களையும் சோமலெ தக்க வகையில் எடுத்துக் காட்டியுள்ளார். இங்ஙனம் தமிழ்நாட்டின் பத்து மாவட்டங்களை நன்கு ஆராய்ந்து ஆங்காங்கே கிடைக்கும் குறிப்புக்களை எல்லாம் விடாமல் தொகுத்து, நிரல்பட வகுத்து, அழகிய நூல்களாக ஆக்கித் தந்துள்ள அவரது முயற்சி போற்றுதற்கு உரியதாகும். மாவட்ட வரிசை நூல்களில் இடம்பெற்றுள்ள சிற்சில செய்திகளையும் தகவல்களையும் காணும்போது, 'இத்தகைய குறிப்புக்கள் இவருக்கு எப்படிக் கிட்டினவோ?' என்று நினைத்து வியக்க வேண்டியுள்ளது. இடங்களையும் மக்களையும் கூர்ந்து நோக்கி ஆய்வதில் இவர் பெற்றுள்ள தனிப்பயிற்சியே இத்தகைய நூல்கள் எழுதுவதில் இவருக்குக் கைகொடுத்து உதவியுள்ளது எனலாம். "ஏறத்தாழ ஐம்பதாண்டுக் காலம் நான் கண்டும் கேட்டும் படித்தும் திரட்டிய குறிப்புகளின் தொகுப்பே இது" (p. vi) என்று 'மதுரை மாவட்டம்' நூலுக்கு எழுதிய முன்னுரையில் சோமலெ குறிப்பிட்டிருப்பது இங்கே மனங்கொளத்தக்கதாகும். இக்குறிப்பில் இடம் பெற்றுள்ள 'கண்டும் கேட்டும் திரட்டிய குறிப்புகள்' என்பது இவ்வரிசை நூல்களை எழுதுவதற்குச் சோமலெ மேற்கொண்ட கள ஆய்வினைப் புலப்படுத்தி நிற்கின்றது; 'படித்துத் திரட்டிய குறிப்புகள்' என்பது அவரது பரந்துபட்ட நூலறிவைப் பறைசாற்றுகின்றது.

"பிற மாவட்டத்தார் கேட்டால் பெரிதும் நகைக்கக்கூடிய இரு சொற்கள் இங்கு வழங்குகின்றன. இங்கு மாம்பழத்தை 'மாங்காய்ப் பழம்' என்றும், வெந்நீரைச் 'சுடுதண்ணீர்' என்றும் கூறுவர். 'மாங்காய்' என்ற சொல் பொதுச் சொல்லாகி 'மா' என்ற சொல்லுக்குப் பதிலாக நின்று

மாங்காய் மரம், மாங்காய் இலை, மாங்காய்த் தோப்பு, மாங்காய்ப் பழம் என்று வழங்குகின்றது. தண்ணீர் என்ற சொல், 'நீர்' என்ற சொல்லின் இடத்தைப் பிடித்துக் கொண்டு 'வெந்நீர்' என்ற சொல்லை மறக்கச் செய்து, 'சுடு தண்ணீர்' ஆகிவிடுகிறது. பச்சைத் தண்ணீர், கஞ்சித் தண்ணீர், மழைத் தண்ணீர் முதலிய சொற்கள் வழக்கில் உள்ளன" *(ப. 101)* - 'வட ஆர்க்காடு மாவட்டம்' நூலில் இடம்பெற்றிருக்கும் இக் குறிப்பு, சோமலெயின் கள ஆய்வின் மூலமாகத் திரட்டப் பெற்றதாகும்.

"மதுரையைப் பற்றி ஏராளமாக எழுதப்பெற்றிருக்கிறது. பிளினி, தாலமி, மெகஸ்தனிஸ் போன்ற கிரேக்க மேதைகள் மதுரையின் புகழை வரைந்துள்ளனர். இந்நாளில் ஆங்கில எழுத்தாளர்களுள் தலைசிறந்தவராக விளங்கும் சாமர்சட் மாம் (W. Somerset Maugham) என்ற நாவலாசிரியர் தமது 'The Razor's Edge' என்னும் இணையற்ற படைப்பில் 'மதுரைக் கோயில் இந்து மதத்தின் உயிர்நாடியான கொள்கைகளை உணர்த்த வல்லது' என்று தம் மதுரைப் பயணத்தினை ஆதாரமாகக் கொண்டு எழுதியிருக்கிறார்" (ப. 245) - 'மதுரை மாவட்டம்' நூலில் இடம்பெற்றிருக்கும் இத்தகவல், சோமலெயின் பரந்துபட்ட படிப்பறிவைப் புலப்படுத்துவதாகும். மேலும் நூலின் பின்னிணைப்பில் சாமர்சட் மாமின் புதினத்தில் மதுரை மாநகர் பற்றி இடம்பெற்றிருக்கும் மூன்று பக்க அளவிலான குறிப்பை முழுவதுமாக இணைத்துத் தந்திருப்பது, நூலுக்கான முதன்மை ஆதாரங்களைத் திரட்டுவதில் சோமலெ எவ்வளவு கண்ணும் கருத்துமாக இருக்கிறார் என்பதை எடுத்துக்காட்டுவதாகும்.

## பெருமைகளையும் தனித்தன்மைகளையும் எடுத்துக்காட்டல்

'செல்வம் நிறைந்த சேலம்' *(சேலம் மாவட்டம், ப. 1)*, 'ஓங்கு புகழ் கொங்கு நாடு' *(கோயம்புத்தூர் மாவட்டம், ப. 9)* என்றாற் போல் எதுகையும் மோனையும் களிநடமிடும் சிறுசிறு தொடர்களில் சோமலெ மாவட்டங்களின் பெருமையையும் புகழையும் சுட்டிக்காட்டுவதும் உண்டு. 'மதுரை மாவட்டம்' நூலின் தொடக்கத்தில், "தமிழ் மொழி, தமிழர் நாகரிகம், தமிழ்ப் பண்பு - இவற்றின் நிலைக்களம் மதுரை. மேலைநாட்டு நாகரிகத்தில் ஏதென்ஸ், கான்ஸ்டான்டிநோபிள் போன்று தமிழர் நாகரிகத்தின் தாயகமாக இருந்து வருவது மதுரை மாநகர்" (ப. 1) எனச் சுட்டி, முகப்பில் பரிபாடல் ஆறாம் பாடலில் இருந்து மேற்கோள் காட்டி, தொடர்ந்து மதுரை மாவட்டத்தின் எண்ணற்ற பெருமைகளையும் ஏனைத் தனித்தன்மைகளையும் தமக்கே உரிய பாணியில் எழுதிச் சென்றுள்ளார் சோமலெ.

"இலண்டனிலுள்ள வெஸ்ட் மினிஸ்டர் அபே என்னும் திருமடத்துக் கோயிலுடன் இங்கிலாந்தின் வரலாறு இணைந்து இருக்கிறது. பாரிஸ் மாநகரிலுள்ள நாட்ரிடாம் தேவாலயத்துடன் பிணைந்தது பிரெஞ்சு நாட்டு வரலாறு. உரோமாபுரியிலுள்ள தூய பீட்டர் பேராலயத்தை ஒதுக்கிவிட்டு அந்நாட்டு வரலாறு, கலை, சிற்பம் எவற்றையும் எண்ணுவதற்கில்லை. தமிழ்

நாட்டில் இத்தகு சிறப்புகளுடையது மீனாட்சியம்மன் கோயில். இந்த ஆலயம் நம்மையறியாமலே நமக்கு ஒரு பெருமித உணர்வை ஊட்டுகிறது" *(பக். 2-3)* என மதுரை மாநகருக்கு என்றென்றும் பெருமையும் பொலிவும் சேர்த்துக் கொண்டிருக்கும் மீனாட்சியம்மன் திருக்கோயில் குறித்துச் சோமலெ எழுதியிருக்கும் வரிகள் படிப்பவர் நெஞ்சை அள்ளும் பான்மை பெற்றனவாகும். மேலும், இங்கிலாந்து, பிரான்ஸ், உரோமாபுரி ஆகிய நாடுகளில் புகழ்பெற்று விளங்கும் திருமடத்துக் கோயில், தேவாலயம், பேராலயம் ஆகியவற்றுடன் நம் மதுரை மாநகரின் மீனாட்சியம்மன் கோயிலை ஒப்பிட்டுக் காட்டியிருப்பது சோமலெயின் பொதுமை நோக்கினைப் புலப்படுத்துவதாகும். இங்ஙனம் ஒவ்வொரு மாவட்டத்தின் பல்வேறு பெருமைகளையும் உரிய இடங்களில் எடுத்துக்காட்டும் சோமலெ, அடுத்த நிலையில் அந்த அந்த மாவட்டத்தின் தனிச்சிறப்புக்களையும் புலப்படுத்தத் தவறவில்லை. ஓர் எடுத்துக்காட்டு : சேலம் என்றதும் நம் நினைவுக்கு உடனே வருவது மாம்பழம் தான். கவியரசு கண்ணதாசனும் தம் திரை இசைப்பாடல் ஒன்றில் 'சேலம் ஜில்லா மாம்பழம் போல் கனிந்திருப்பாளாம்' என்று இளம்பெண் ஒருத்தியின் பருவ எழிலைப் பாடும் போது சேலம் மாவட்டத்து மாம்பழத்தைச் சுட்டியிருப்பார். சோமலெயும் சேலம் மாவட்டத்தின் சிறப்புக் கனி வகையான மாம்பழத்தைப் பற்றிக் குறிப்பிட்டு விட்டு, "சேலம் செல்வம் நிறைந்த கனிகள் மட்டுமன்றி, சுவை மிகுந்த கனிகளின் வளமும் பெற்றிருக்கிறது... மாஞ்செடிகளுக்கு வேண்டிய இரும்புச் சத்தும் கால்சியமும் சேலத்துச் செம்மண் பூமியில் இருப்பதால், இம்மாவட்டத்து மாம்பழங்கள் சுவையாக உள்ளன. காற்றைத் தடுத்துப் பழ உற்பத்தியைப் பெருக்குவதற்கேற்றவாறு மலைகளுக்கிடைப்பட்ட பகுதிகளும் பள்ளத்தாக்குகளும் இருப்பதால், மாமரம் வைத்து வளர்க்கச் சேலம் மாவட்டம் ஏற்றதாக இருக்கிறது" *(ப. 21)* என்று சேலம் மாவட்டத்து மாம்பழத்தின் சுவைக்கான காரணத்தையும் எடுத்துக்காட்டியிருப்பது மனங்கொளத் தக்கதாகும். இத்துடன் நில்லாது, குண்டு, பாதாமி, நடுச்சாலை, ஆம்லட், ஜெய்லர், மல்கோவா, ருமானி, பங்களூரா, நீலம், குதாத்த, கிரேப், கலப்பாடு, கட்டிமார், சேலம் பங்களூரா, இருபோகம், சர்க்கார் கிளிமூக்கு, பீகம் பசந்த், சொர்கமதி, பங்கனப்பள்ளி, கோலா, காசாலட்டு, ஜஹாங்கீர் எனச் சேலத்து மாம்பழ வகைகளின் பெயர்களையும் விடாமல் பட்டியல் இட்டுள்ளார் சோமலெ *(பக். 36-37)*. வேளாண்மைத் துறையில் அவருக்கு உள்ள சிறப்பான ஈடுபாட்டை இதனால் உய்த்துணரலாம்.

இராமநாதபுரம் மாவட்டம் என்றதுமே அனைவருடைய மனத்திலும் முதலில் எழுவது வீரத்துறவி விவேகாணந்தரின் உருவம் தான். இராமநாதபுர மாவட்டத்திற்கே பெருமை சேர்க்கும் இச்செய்தியைச் 'சமய நிறுவனங்கள்' என்னும் பகுதியில் நயம்படச் சுட்டிக்காட்டுகிறார் சோமலெ:

"மேனாட்டாரும் புகழும் வண்ணம் இந்து சமயப் பெருமையை உணர்த்தியவர்கள் விவேகானந்தரும் (1862-1901), ரமண மஹரிஷியும் (1871-1950).

சிக்காகோவில் நடைபெற்ற உலகச் சமயப் பாராளுமன்றத்தில் தம் புகழை நிலைநிறுத்தினார் விவேகானந்தர். அவரை அம்மாநாட்டுக்கு அனுப்பி வைத்தவர் இராமநாதபுரம் சேதுபதி ஆவார். செல்லுமாறு யோசனை சொல்லியவரும் அமெரிக்காவுக்குப் போய் வருவதற்குரிய செலவை ஏற்றவரும் அவ்வரசரே. அமெரிக்காவில் வாகை சூடிய பிறகு இந்திய மண்ணில் அவர் முதலில் காலெடுத்து வைத்தது இந்த இராமநாதபுரம் மாவட்டத்தில் தான். 1897-இல் பாம்பனில் கடற்கரையில் படகிலிருந்து இறங்கியதும் அவருக்குக் கொடுக்கப் பெற்ற வரவேற்பில் அவரை ஓர் அழகிய வண்டியில் வைத்து, குதிரைகளுக்குப் பதிலாகச் சேதுபதியும் மற்றவர்களும் அவ்வண்டியை இழுத்தனர். அவ் வரவேற்புக்கு நன்றி கூறி விவேகானந்தர் ஆற்றிய உரை (From Colombo to Almora என்ற நூலில்) அச்சிடப்பட்டிருக்கிறது... இராமநாதபுரத்தில் விவேகானந்தர் தங்கிய சங்கர விலாசம் என்னும் அரச மாளிகையில் விவேகானந்தர் மண்டபம் உள்ளது...

திருவண்ணாமலையில் ஆசிரமம் அமைத்துப் பிற நாட்டாரையும் நமது பண்பாட்டிலும் சமய தத்துவக் கருத்துக்களிலும் ஈடுபடச் செய்த ரமண மஹரிஷி பிறந்த ஊர் இம்மாவட்டத்து அருப்புக்கோட்டை வட்டத்துத் திருச்சுழி" (பக். 82-83). இங்ஙனம் இராமநாதபுரம் மாவட்டத்தில் தோன்றி ஆன்மிகத் துறையில் தடம் பதித்த விவேகானந்தரையும் ரமண மஹரிஷியையும் பற்றிய சிறப்பான தகவல்களைப் பதிவு செய்துள்ளார் சோமலெ.

"தஞ்சை மாவட்டம் தமிழ்நாட்டின் சொற்களஞ்சியம் மட்டும் அன்று; கலைக்களஞ்சியமாகவும் இருக்கிறது" (ப. 143) என்று ஒரே வரியில் இரத்தினச் சுருக்கமாகத் தஞ்சை மாவட்டத்தின் புகழைப் போற்றும் சோமலெ, அம்மாவட்டத்திற்குப் பெருமை சேர்க்கும் கல்லணை பற்றிக் குறிப்பிடும் போது உணர்ச்சி வயப்பட்ட நிலையில் மனம் மகிழ்ந்தும் நெகிழ்ந்தும் எழுதிச் செல்கின்றார். அவரது உணர்வின் வெளிப்பாடாக அமைந்துள்ள பகுதி இதோ:

"சோழ வள நாட்டைச் சோறுடையதாகச் செய்து வருவன பொன்னியாறும் அவ்வாற்றின் நீரைத் தக்கவாறு தரும் கல்லணையும் ஆகும். கல்லணை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கரிகாலச் சோழனால் கட்டப் பெற்றது என்பதை எண்ணும்போது நம் உள்ளத்தில் எழுச்சியும் மகிழ்ச்சியும் கிளர்ச்சியும் ஏற்படுகின்றன" (ப. 79).

இங்ஙனம் மாவட்ட வரிசை நூல்களில் அந்தந்த மாவட்டத்தின் பல்வேறு பெருமைகளையும் தனித்தன்மைகளையும் பாங்குடன் தொகுத்தும் வகுத்தும் தந்துள்ளார் சோமலெ.

## ஆராய்ச்சித் திறம் விளங்க எழுதுதல்

சோமலெ, ஒவ்வொரு மாவட்டத்தின் ஊர்களைப் பற்றியும் பல அரிய விளக்கங்களைத் தந்துள்ளார். பல நூல்களைப் படித்தும் பலரிடம் கேட்டறிந்தும் உண்மையான சொல் வடிவங்கள் இவை, இன்று பிழையாக எழுதப்பட்டு வருபவை இவை என்று எடுத்துக்காட்டித் தம் கருத்திற்கு அரண் சேர்க்கும் மேற்கோள்களையும் தகவல்களையும் அவர் ஆங்காங்கே இணைத்துச் சென்றுள்ளார். இவ்வகையில் மாவட்ட வரிசை நூல்களில் பல இடங்களில் அவரது ஆய்வுத் திறம் வெளிப்படுவதைக் காணலாம். காட்டாக, 'ஆர்க்காடு' என்னும் பெயரைப் பற்றிச் சோமலெ தரும் பெயர் விளக்கத்தைக் காணலாம் :

"ஆர்க்காடு என்பது ஒரு நாட்டுக்கும் ஒரு நகருக்கும் பெயராகும். ஆர் என்பது ஆத்தி மரத்தைக் குறிக்கும். ஆர்க்காட்டு நாடு ஆத்தி மரங்கள் மிகுந்த நாடாகும். ஆறு காடுகள் இருந்த இடமென்று புராணங்களை ஆதாரமாகக் கொண்டு கூறுவாரும், ஆறும் காடுகளும் நிறைந்த பகுதி என்று சொல்லுவாரும் உள்ளனர்.

ஏராளமான பெரிய ஆல மரங்கள் நிறைந்த காடுகள் இருந்ததாகவும் அதனால் 'ஆற்காடு' என்று பெயர் ஏற்பட்டதாகவும் வேறு சிலர் கருதுகின்றனர் ... திருவாலங்காடு வட ஆர்க்காட்டில் இருந்ததையும் இதற்கு ஆதரவாகச் சுட்டிக் காட்டுகின்றனர்.

ஆர்க்காடு என்னும் பெயர் பற்றித் தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள் வட ஆர்க்காடு ஜில்லா 14-வது அரசியல் மாநாடு வேலூரில் கூடியபோது 3.5.1920-இல் பின்வருமாறு கூறியிருக்கிறார்கள் :

'இப்பொழுது வட ஆறுகாடு, தென்னாறு காடு என்று வழங்கப்பட்டு வரும் நிலப்பகுதி, பண்டைக் காலத்தில் ஆர்க்காடு என்றும், இடைக்காலத்தில் ஆறுகாடு என்றும் வழங்கப்பட்டு வந்தது. முன்னையது பழந்தமிழ் நூல் வழக்கு; பின்னையது புராண வழக்கு. இவ்விரு வழக்கும் இற்றை ஞான்று வீழ்ந்து பட்டன. இதுகாலை ஆற்காடென்றே பல்லோர் எழுதுகின்றார். நம் ஊர்ப் பெயர்கள் இந்நாளில் மருவிப் பொருளின்றிப் 'பொலிவதை' நோக்குழி எனது மனம் வருந்தா நிற்கிறது. நம் ஊர்ப் பெயர்களை நமது மொழியின் இயல்புக்கேற்றவாறு உச்சரிக்கும் வழக்கில் நம்மவர் தலைப்படுவராக" (வட ஆர்க்காடு மாவட்டம், பக். 11-12).

இங்கே தமிழ்த் தென்றல் திரு.வி.க.வின் கருத்தை மேற்கோள் காட்டி விளக்கிச் சென்றுள்ளார் சோமலெ. எனினும் எது சரியான வடிவம் என்பதைப் பற்றிய தம் தனிப்பட்ட கருத்தினை அவர் இங்கே வெளிப்படுத்தவில்லை. 'ஊர்ப் பெயர்கள்' என்னும் பகுதியில், "வடாற்காடு என்று சிலரும், வடார்க்காடு என்று சிலரும் எழுதுகின்றனர். வட ஆர்க்காடு என்பதே சரியான வடிவம். இச்சொல் 'ஆர்க்காடு' என்ற வடிவிலேயே சங்க நூல்களில் காணப்படுகிறது" (ப. 89) என்று எடுத்துக்கூறி, 'ஆர்க்காடு' என்னும்

வடிவத்தை ஏற்றுக் கொண்டதற்கு அடையாளமாகச் சோமலெ தம் நூல்களின் பெயர்களை 'வட ஆர்க்காடு மாவட்டம்', 'தென் ஆர்க்காடு மாவட்டம்' என இடையின 'ரகரம்' அமைத்தே எழுதியுள்ளார். இந்நூற் பெயர்கள் அவரது ஆராய்ச்சித் திறத்தினையும், நுண்மாண் நுழை புலத்தினையும் ஒருங்கே எடுத்துக் காட்டுவனவாகும். 'தென் ஆர்க்காடு மாவட்டம்' நூலுக்கு அணிந்துரை வழங்கிய அறிஞர் அ. சிதம்பரநாதனும் சோமலெயின் ஆராய்ச்சித் திறனை நெஞ்சாரப் பாராட்டியுள்ளார். அவரது பாராட்டுரை வருமாறு:

"ஆர்க்காடு என்பது ஆத்திக் காட்டைக் குறிக்கும் என டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் 'ஊரும் பேரும்' என்ற நூலில் எடுத்துக் காட்டியுள்ளனர். இதனைப் பிழைபட ஆறுகாடு என முதலில் எழுதி, ஷடாரணியம் என மொழிபெயர்த்து ஆறு காட்டுப் புராணம் அமைக்கப் பட்டது வருந்தத்தக்கது எனச் 'சொல்லின் செல்வர்' பல மேடைகளிற் கூறியுள்ளார். இந்த நூலுக்குத் தலைப்பாக 'ஆர்க்காடு' என இடையின ரகரம் பொருந்திய சொல் வழங்கப்பட்டிருப்பது பாராட்டுதற்கு உரித்து. தென் ஆர்க்காடு மாவட்டத்தைப் பற்றிய மாவட்டக் கருப்பொருள் நூலின் (District Gazetteer) புதிய பதிப்பிலும் ஆறுகாடுகளை ஒட்டியே சொல் கொள்ளப் பட்டுள்ளது. ஆராய்ச்சியின் பயனாய்க் கிடைக்கப் பெற்ற கருத்தினை இந்நூலாசிரியர் முதலிலேயே பயன்படுத்தியிருப்பது மகிழ்ச்சிக்குரியது" இங்ஙனம் ஆங்காங்கே தம் ஆராய்ச்சித் திறம் நுண்ணிதின் விளங்கும் வகையில் மாவட்ட வரிசை நூல்களை உருவாக்கியுள்ளார் சோமலெ.

## உணர்ச்சியையும் குறிக்கோளையும் வெளிப்படுத்துதல்

காய்தல் உவத்தல் அகற்றி, ஆராய்ச்சி முறையில் செய்திகளையும் தகவல்களையும் தொகுத்தும் வகுத்தும் தரும் கடமையை மேற்கொண்டு சோமலெ மாவட்ட வரிசை நூல்கள் பலவற்றை எழுதிய போதிலும், ஆங்காங்கே அவருடைய உள்ளமும் புலனாகாமற் போவதில்லை. 'இவ்வூரில் இருப்பவை', 'இவ்வூரில் காணத் தக்கவை' என்ற தலைப்புக்களில் வெறும் பட்டியல் போல் சில பெயர்களையும் தொடர்களையும் தர வேண்டிய இடத்திலும், அவருடைய உணர்ச்சியும் குறிக்கோளும் இன்னவை என விளங்கி விடுகின்றன. இது சோமலெயின் கை வண்ணத்தில் காணப்படும் ஒரு தனிப்பெரும் பண்பாகும். காட்டாக, 'வட ஆர்க்காடு மாவட்டம்' நூலில் இருந்து ஒரு பகுதி இதோ :

"பழமைப் பெருமையை உணர்த்தும் இடங்களைப் பேண அமெரிக்காவில் ஆயிரக்கணக்கான கோடிகளை அள்ளித் தெளிக்கின்றனர். 1715-இல் புகழுடன் நிலவிய (வர்ஜினியாவின் தலைநகரான) கலோனியல் வில்லியம்ஸ்பர்க் என்னும் நகரை அன்றைய நிலையில் இருந்தவாறு - அணுவளவும் மாறாமல் - அமைக்க 25 ஆண்டு வேலை நடைபெற்றது;

720 புதிய கட்டிடங்கள் இடித்துப் பழைய கட்டிடங்களைப் போலக் கட்டப்பட்டன; பழங்காலத்து மரங்கள் நடப்பட்டன; அக்காலத்துக் கோச்சு வண்டிகளும் செய்யப்பட்டன. ஆனால் கலைவளம் நிறைந்த வேலூரில் பழமைச் சின்னமான கோயில் தேடுவாரின்றியும் கோட்டை அரசாங்க அலுவலகமாகவும் இருக்கிறது. நாம் இந்தியாவில் இருக்கிறோம்; அமெரிக்காவில் இல்லை" (ப. 153). அமெரிக்கர்கள் பழமையைப் போற்றுவதில் - பேணிக் காப்பதில் - கண்ணும் கருத்துமாக இருப்பதையும், நாம் பழமையைப் போற்றத் தவறுவதையும், கண்டும் காணாமல் இருப்பதையும் இங்கே தமக்கே உரிய பாணியில் சுட்டிக்காட்டியுள்ளார் சோமலெ. 'நாம் இந்தியாவில் இருக்கிறோம், அமெரிக்காவில் இல்லை' என்னும் முத்தாய்ப்பு வரி, அவரது முத்திரை அழுத்தமாகப் பதிந்த வரியும் ஆகும்.

பிறிதோர் எடுத்துக்காட்டு : 'செங்கற்பட்டு மாவட்டம்' நூலில் இடம் பெற்றுள்ள ஓர் இடம். செங்கற்பட்டு பூவிருந்தவல்லியில் அமைந்திருக்கும் குருடர்களுக்கான அரசாங்கப் பள்ளியைப் பற்றி எழுத முற்படுகிறார் சோமலெ. இங்கே அவர் மேனாட்டு நிலையையும் நம் நாட்டு நிலையையும் ஒப்பிட்டுக் காட்டி, அதன் மூலம் தம் குறிக்கோளைப் புலப்படுத்துகிறார்.

"அரிது அரிது மானிடராகப் பிறத்தல் அரிது
மானிடராகப் பிறந்த காலையும் கூன்குருடு
செவிடு பேடு நீங்கிப் பிறத்தல் அரிது"

என்பது ஔவையார் பாடல். பார்வையிழந்த பலர் அறிவாற்றல்களிலே சிறந்து விளங்குவதைப் பல நாடுகளிலே காண்கிறோம். அதற்குக் காரணம் மற்றவர்களைப் போல் கல்வி கற்றுக் கொள்ளவும் வாழ்க்கையில் சிறப்படையவும் அவர்களுக்கு அந்த நாடுகளில் வாய்ப்பும் வசதியும் இருப்பதுதான். நம் நாட்டில் இப்போது அது போன்ற முயற்சி ஓரளவு தொடங்கியிருக்கிறது. இதுவரை இந்த வசதிகள் இல்லாத காரணத்தால் தான் வெளிநாடுகளில் பார்வையிழந்தவர் கூடப் படித்துப் பயன் அடையும் ஒரு தொழிலைச் செய்து வரும்போது நம் நாட்டில் பிச்சைக்காரர்களாகவே இருந்து விட்டால் குருடர்களுக்குக் கூடுதலான வருவாய் கிடைக்கும் என்ற எண்ணம் இருந்து வந்தது.

குருடர்கள் தங்கள் விரல்களால் தொட்டு அதனால் ஏற்படும் உணர்ச்சியால் படிக்கக் கூடிய நூல்களுள்ளன. இந்த நூல்களுக்கு பிரைல் எழுத்து நூல்கள் என்று பெயர். அதற்கெனத் தனி அச்சகமும் இருக்கிறது.

இந்த முறையில் படித்தவர்கள் பலர் பேராசிரியர்களாகவும் புலவர்களாகவும் தொழில் அறிஞர்களாகவும் இருக்கின்றனர்.

குருடர்களுக்கெனப் பள்ளிக்கூடங்கள் அமைப்பதில் இன்னும் ஒரு நன்மை இருக்கிறது. தம்முடைய ஊழ்வினைப் பயனை எண்ணித் தனிமையாக இருந்து அவர்கள் வருந்தாமல் தம்மைப் போன்ற மற்றவர்களோடு சேர்ந்து பழகி இன்னல்களை மறக்க இயல்கிறது" (பக். 78-79).

குருடர்களுக்காகப் பிறநாட்டு நல்லறிஞர்கள் 'பிரைல்' எழுத்து முறையை உருவாக்கியுள்ளனர்; நாமோ அவர்களைப் பிச்சை எடுப்பவர்களாக இரங்கத்தக்க அவல நிலையில் வைத்திருக்கிறோம். வெளிநாட்டினர் அவர்களின் முன்னேற்றத்திற்குச் செய்ய வேண்டிய கடமைகளையும் வழிவகைகளையும் பற்றிச் சிந்தித்துச் செயல்படுகின்றனர்; நாமோ 'ஊழ்வினை', 'தலைவிதி' என்றெல்லாம் காரணம் காட்டி அவர்கள் மூலையில் முடங்கிக் கிடக்கவே வழிவகை செய்கிறோம். இதை எண்ணி நெஞ்சு பொறுக்காத சோமலெ, பார்வையிழந்து வாடும் பலரது முன்னேற்றத்திற்காகத் தம் நூலில் குரல் கொடுத்துள்ளார்; தம் தனிப்பட்ட கருத்தினையும் பதிவு செய்துள்ளார்.

## விடுதலை இயக்கத்திற்கு ஆற்றிய பங்களிப்பினைச் சுட்டிக்காட்டல்

இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சிறப்பான பங்கு உண்டு; இந்திய விடுதலைப் போரில் முனைப்புடன் பங்கு கொண்ட தலைவர்கள் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலும் தோன்றியுள்ளனர். இவ்வகையில் சோமலெ தமது மாவட்ட வரிசை நூல்களில் விடுதலை இயக்கத்திற்கு என்று ஓர் இயலை ஒதுக்கியுள்ளார்; 'விடுதலை இயக்கம்', 'விடுதலைப் போர்', 'உரிமைப் போர்', 'உரிமைப் போரில் பங்கு' என்னும் தலைப்புக்களில் இந்திய விடுதலைக்குப் பாடுபட்ட தலைவர்களைப் பற்றிய அரிய தகவல்களையும் சீரிய செய்திகளையும் திரட்டித் தந்துள்ளார்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் இராமநாதபுர மாவட்டத்திற்குச் சிறப்பான ஓர் இடம் உண்டு. அம்மாவட்டத்தில் தலைவர்கள் பலர் தோன்றி, இந்தியர்களுக்கு எதிரான அடிமைத் தளையினை எதிர்த்து அஞ்சா நெஞ்சுடன் போர் புரிந்துள்ளனர்; இதனாலேயே இம்மாவட்டம் ஆங்கிலேயர்களால் புறக்கணிக்கப்பட்டிருந்தது என்பது வரலாறு காட்டும் ஓர் உண்மை. "18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் சிவகங்கைச் சீமையைப் பெரிய மருது, சின்ன மருது என்ற இரண்டு சகோதரர்கள் தமிழ் மணம், தெய்வ நெறி, தேசிய வெறி நிறைந்த இலட்சிய வாழ்க்கை மூலம் ஆட்சி நடத்தினர். அவர்கள் ஆங்கில ஏகாதிபத்திய வெறியர்களை எதிர்த்துக் காளையார்கோவிலில் போராடினர். அப்போரில் ராணி வேலு நாச்சியம்மையார் காட்டிய வீர உணர்ச்சி தமிழ் மக்களின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கத்தக்கது. வட நாட்டில் ஜான்சி ராணி என்னும் வீரமங்கை தோன்றுவதற்கு 50 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழகம் பெற்றெடுத்த புகழ் மங்கையே ராணி வேலு நாச்சியார்" (இராமநாதபுரம் மாவட்டம், பக். 173-174) என்று இராமநாதபுர மாவட்டத்தில் தோன்றிய ராணி வேலு நாச்சியாரை 'வீர மங்கை' என்று சுட்டி, அவரை வட நாட்டின் ஜான்சி ராணியாருடன் ஒப்பிட்டுக் காட்டி, அவருக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னரே தமிழகத்தின் சிவகங்கைச் சீமை பெற்றெடுத்த வேலு நாச்சியார்

தனிப்பெரும் புகழ் மங்கையாக விளங்குவதை உணர்ச்சி பொங்கும் நடையில் எடுத்துக் காட்டியுள்ளார் சோமலெ.

இதே போல், இந்திய விடுதலை இயக்கத்தில் திருநெல்வேலி மாவட்டத்தின் பங்களிப்பினைப் பற்றி எழுதும் போது, "இந்திய நாட்டின் உரிமைக்காகப் பாடுபட்டுத் தமிழ்நாட்டிற்குப் பெருமையும் புகழும் தந்திருப்பது திருநெல்வேலி மாவட்டம். சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு உடல் உடைமை உயிர் ஆகிய அனைத்தையும் தியாகம் செய்த மாவீரர்களைப் பெற்றெடுத்தது திருநெல்வேலி மாவட்டம். இவ்வீரர்களின் வரலாற்றை எண்ணிப் பார்க்கும் போது, 'திருநெல்வேலி மாவட்டமே என்ன தவம் செய்தனை?' என்று வியக்க நேரிடுகிறது" (ப. 104) என மன நெகிழ்வோடு எழுதிச் செல்கின்றார் சோமலெ. வீரபாண்டிய கட்டபொம்மன், ஊமைத்துரை, புலித்தேவர், வ.உ. சிதம்பரனார், கவியரசர் சுப்பிரமணிய பாரதியார் எனச் சோமலெ இப்பகுதியில் எடுத்துக் காட்டும் விடுதலைப் போராட்ட வீரர்களின் பட்டியல் நீண்டுகொண்டே செல்கின்றது. மேலும்,

"ஊமைத்துரை எனும் பேரைச் சொன்னாலங்கே
சீமைத்துரைகள் எல்லாம் ஒடுங்கிச் சேமத்தை நாடியே
தென்திசை நோக்காமல் சித்தங் கலங்குவர் மொத்தமுமே" (ப.105)

என இம்மாவட்டத்தில் வழங்கி வரும் நாட்டுப்புறப் பாடலை எடுத்துக்காட்டி, இன்றும் வீரபாண்டிய கட்டபொம்மனும் அவன் தம்பி ஊமைத்துரையும் தலைமுறை தலைமுறையாய்ப் புகழ்ப்பெற்று மக்கள் நெஞ்சங்களில் நிலைத்து வாழும் பாங்கினைப் புலப்படுத்தியுள்ளார் அவர். முத்தாய்ப்பாக, "இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் முதலிடம் பெறத்தக்க மாவட்டம் திருநெல்வேலியே ஆகும்" (ப. 112) எனக் குறிப்பிட்டு இவ்வியலை நிறைவு செய்துள்ளார் சோமலெ.

இந்திய விடுதலைப் போரில் மதுரை மாவட்டம் பெரும்பங்கு கொண்டதையும் மகாத்மா காந்திக்கும் மதுரைக்கும் உள்ள நெருங்கிய தொடர்பினையும் 'மதுரை மாவட்டம்' நூலில் இடம்பெறும் 'விடுதலைப் போர்' என்னும் இயலில் சோமலெ விரிவாகக் குறித்துள்ளார். காந்தியடிகள் 'அரை நிர்வாணப் பக்கிரிக் கோலம்' கொண்டது மதுரை மாநகரில் தான் என்பதையும், 1921–ஆம் ஆண்டு செப்டம்பர் மாத இறுதியில் கருமுத்து தியாகராசர் இல்லத்தில் தங்கியிருந்த போது அந்நிகழ்ச்சி நடைபெற்றது என்பதையும் சோமலெ எடுத்துக்காட்டியுள்ளார். 'மகாத்மாவும் மதுரையும்' என்னும் உட்தலைப்பில் அவர் குறிப்பிடுவது வருமாறு :

"அந்நிய நாட்டுத் துணியை மக்கள் கொளுத்திவிட்டனர். ஆனால் அதற்குப் பதிலாகக் கதர்த்துணி வாங்கப் பணம் இல்லாமல் அவர்கள் தவிக்கிறார்கள். 'இனி அவர்கள் கோவணத் துணியுடன் மட்டும் வாழ்ந்து திருப்தி அடையட்டும். அவர்களுக்கு வழிகாட்டியாக நானே இன்று முதல் என்னுடைய வேட்டியையும் தொப்பியையும் உள்சட்டையையும் கூடக் கைவிட்டு

விடுகிறேன். ஒரு சிறு துணி மட்டுமே இனி என் ஆடையாக இருக்கும். தேவையான போது உடலைக் குளிரிலிருந்து பாதுகாத்துக் கொள்ள, ஒரு துண்டு-உபயோகிப்பேன்' என்று காந்தியடிகள் மதுரையில் தான் அறிவித்தார்" (பக். 176-177) என்று உணர்ச்சி பொங்கச் சோமலெ எடுத்துக் காட்டியுள்ள இந்நிகழ்ச்சியை மனம் கலந்து படிக்கும் எவரும் அவ்வுணர்வில் ஆழ்ந்து போவர் என்பது உறுதியிலும் உறுதி.

## பேச்சு வழக்குத் தமிழைப் பதிவுசெய்திருத்தல்

மொழி ஒன்றாக இருப்பினும் இடத்துக்கு இடம் அதன் பேச்சு வடிவம் மாறுபடுகிறது. இந்தப் போக்கை ஆங்கில மொழியைப் பேசும் நாடுகளில் காணுகிறோம். பிரெஞ்சு மொழி வழங்கும் நாடுகளுக்கும் இது பொருந்தும். எல்லா மொழிகளுக்கும் பொதுவான ஒரு நிலை இது என்று சொல்லலாம். தமிழ் மொழியிலும் மாவட்டத்துக்கு மாவட்டம் பேச்சு வழக்கு வேறுபடுகிறது. தமிழக மாவட்டங்களுக்கு இடையே பேச்சு வழக்கில் காணப்படும் வேறுபாடுகளைச் சோமலெ தம் மாவட்ட வரிசை நூல்களில் சிறப்பாகப் பதிவு செய்துள்ளார். சான்றாக, கோவை மாவட்டத்துப் பேச்சுத் தமிழ் பற்றி அவர் குறிப்பிட்டிருப்பது வருமாறு :

"கோவை மாவட்டத்தே வாழும் மக்கள் பேசும் மொழியில் ஒவ்வொரு சொல்லுக்கும் இராகம் இழுத்துப் பேசுவர். 'ஆமுங்க நீங்க எதுக்குங்க வந்திங்க?' என்று கேட்பர். 'ஆமுங்கறேனுங்க' என்று அவர்கள் நீட்டி முழக்கிக் கூறுவதில் தனி இசை ஒலிக்கும். ஒருவர் பேசும்போது மற்றவர் 'சரிங்க சரிங்க' என்றும், 'ஆமுங்க ஆமுங்க' என்றும் சலிக்காமல் தலையாட்டும் காட்சி கண்டும் கேட்டும் சுவைக்கத்தக்கது. இங்ஙனம் பேச்சு வழக்கில் வியங்கோள் (மரியாதை) பேரிடம் பெறுவது இக்கொங்கு மாவட்டம் ஒன்றில் தான்..." (ப. 62).

இதே போல், திருநெல்வேலி மாவட்டத்துப் பேச்சுத் தமிழுக்கும் ஒரு தனித்தன்மை உண்டு. பேச்சின் இடையே 'கேட்டிளா' என்று சொல்லிக் கொண்டே பேசுகின்ற பான்மையை நெல்லை மாவட்டத்தாரிடம் காணலாம். சோமலெ எடுத்துக்காட்டும் திருநெல்வேலி மாவட்டத்துப் பேச்சுத் தமிழின் ஒரு பகுதி வருமாறு :

"வாருங்க அண்ணாச்சி! வடக்கேருந்து எப்படி வந்திய? என்ன, எல்லாரும் சொகந்தானா? பட்டணத்திலே வச்சுப் பார்த்தது உங்களை?'...

'என்னலே சொல்லுதே, சிரிப்பாணியைப் பாரு சிரிப்பாணியை! ஆக்கங்கெட்ட மூதி! ஏட்டைக் கட்டி இறப்பிலே வச்சுப்புட்டு ஆயிரத்தை காலே மாகாணி ஆக்கினியே, அப்பம் தெரிஞ்சுதாலே கண்ணு? சோலியைப் பாருலே"... (திருநெல்வேலி மாவட்டம், ப. 127). இத்தகைய பேச்சு வழக்குகள்

கலந்த தமிழை எங்கேயாவது கேள்விப்பட்டால் பேசுபவர் திருநெல்வேலி மாவட்டத்தார் என்பதை உறுதியாகத் தெரிந்து கொள்ளலாம்.

கன்னியாகுமரி மாவட்டம் முழுவதிலும் பேச்சு வழக்கில் இருந்து வரும் தமிழை 'நாஞ்சில் நாட்டுத் தமிழ்' என்று குறிப்பிடுகின்றார் சோமலெ. இதில் 'ஓய்' என்னும் விளிச்சொல் மிகுதியாக இருக்கும். வா, போ என்பதற்கு முறையே 'வாடை, போடை' என்று அசைச்சொல் சேர்ப்பது இவர்களுடைய வழக்கம் (ப. 104).

இங்ஙனம், ஒவ்வொரு மாவட்டத்திலும் வழங்கி வரும் பேச்சுத் தமிழுக்குத் தக்க சான்றுகள் காட்டிச் செல்வது சோமலெயிடம் சிறப்பாகக் காணப்படும் ஒரு பண்பு ஆகும். குறிப்பாக, மதுரை மாவட்டப் பேச்சுத் தமிழ் பற்றிக் குறிப்பிடும் இடத்தில், "மதுரை மாவட்டத்தில் ஒலிக்கும் பேச்சுத் தமிழ், தமிழ் பேசப்பட வேண்டும் முறைக்கும் எடுத்துக்காட்டாகும்" (ப. 150) என அவர் சுட்டிக்காட்டுவது இங்கே மனங்கொளத்தக்கது ஆகும். இவ்வகையில் அவர் காட்டும் சில சான்றுகள் வருமாறு :

"இடப் பெயர்களிலும் பழந்தமிழின் இனிமை தெரியவரும். அனுப்பானடி, அரசரடி என்பவை ஏற்கனவே உழுநிலமாக இருந்ததை அடி (வயல்) என்ற சீர் குறிக்கும்.

ஒரு குழந்தை இறந்துவிட்டது என்பதைக் குறிக்க 'தடுமாறி விட்டது' என்பர். இது 'தடம் மாறிவிட்டது' என்பதன் மரூஉ. 'இயல்பான தடத்தில் செல்லாது எமன் வரும் தடத்தில் எதிரில் சென்றுவிட்டது' என்பது பொருள்.

ஏறு தழுவுதல் என்று இலக்கியம் குறிப்பிடும் விழா மஞ்சுவிரட்டு, சல்லிக்கட்டு என்ற பெயர்களால் வழங்கி வருகிறது. சலசல என்று ஓசை கேட்குமாறு மணிகட்டி மாடுகளை விரட்டுவதால் ஏற்பட்ட பெயர் போலும்.

'எத்தனை வட்டம் வந்தாலும் பார்க்க முடியவில்லை' என்பர். வட்டம் - தடவை. வேறு வேலைகளை விடுத்து இவரைப் பார்ப்பதற்காகவே வட்டமிடுகின்றனராம்" (ப. 150).

இங்ஙனம் பரந்துபட்ட தமது கள ஆய்வின் அடிப்படையில் பல்வேறு மாவட்டங்களின் பேச்சு வழக்குகளைப் புலப்படுத்தியுள்ளார் சோமலெ.

## என்றென்றும் இருக்கும் ஏக்கமும் ஆறுதலும்

சோமலெயின் மாவட்ட வரிசை நூல்கள் பத்தும் நிறைந்த தகவல்களோடும் பயனுள்ள செய்திகளோடும் அந்தந்த மாவட்டங்களைப் பற்றிய கலைக்களஞ்சியங்கள் போல் விளங்குகின்றன. ஆங்கிலத்தில் இத்தகைய விளக்க நூல்கள் பல வெளிவந்துள்ளன. தமிழ் மொழியில் சோமலெ மேற்கொண்ட அருமுயற்சியின் பயனாகவே மாவட்ட வரிசை நூல்கள் வெளிவந்துள்ளன. இத்துறையில் அவர் அரிதின் முயன்று முழுவெற்றி கண்டுள்ளார் என்பது அறிஞர் உலகம் ஒருமனதாக ஒப்புக்கொள்ளும் ஓர் உண்மை ஆகும். ஒன்றை மட்டும் உறுதியாகச்

சொல்லலாம் : சோமலெ மட்டும் இன்று இருந்திருந்தால் தமிழ்நாட்டில் உள்ள இருபத்தொன்பது மாவட்டங்களைப் பற்றியும் நூல்கள் எழுதி வெளியிட்டிருப்பார்; அது இயலாமல் போயிற்று என்பதில் ஒருபுறம் நம் மனத்தில் ஓர் ஏக்கம் எழுந்தாலும், தமிழ்நாட்டின் பத்து மாவட்டங்களைப் பற்றியேனும் சோமலெயின் மாவட்ட வரிசை நூல்கள் வெளிவந்துள்ளதைக் காணும்போது மறுபுறம் ஓர் ஆறுதல் நம் மனத்தில் எழவே செய்கின்றது. ஆம், இந்த ஏக்கமும் ஆறுதலும் என்றென்றும் இருக்கும்படி தம் படைப்புத் திறத்தால் செய்துவிட்டார் சோமலெ!

---

# 4

# வாழ்க்கை வரலாற்று இலக்கியம்

"வாழும் காலத்தில் சிறப்புற்றிருப்பவர் அல்லது மரணத்துக்குப் பிறகு புகழுக்குரியவராக உயர்ந்து விடுபவர் என்னும் இரண்டு வகையினரைப் பற்றியே வாழ்க்கை வரலாறுகள் எழுதப்படுகின்றன"

-உலகப் புத்தகக் கலைக்களஞ்சியம்*

இன்று புதினம், சிறுகதை ஆகியவற்றிற்கு அடுத்தபடியாக, வாழ்க்கை வரலாற்று நூல்களும் தன்வரலாற்று நூல்களும் தமிழில் பெருகி வருகின்றன. "தனக்கும், பிறருக்கும் சிறப்புத் தரும் முறையில் அமைவதே சிறந்த வாழ்க்கை. அந்த வாழ்வில் நடந்த நிகழ்ச்சிகளில், உரியவற்றை உரியவாறு வகைப்படுத்திச் சுவைபட அமைப்பதே தனிமனித வரலாறு. இந்த வரலாற்றுக்கு உரிய நாயகனோடு நெருங்கிப் பழகியோ, அவனைப் பற்றிய செய்திகளை முழுமையாக அறிந்தோ, அவனிடத்தே ஒரு தொடர்புறவும் பரிவுணர்வும் கொள்ளுகிற ஓர் எழுத்துக் கலைஞன் படைப்பதே வாழ்க்கை வரலாற்று இலக்கியம். இந்த இலக்கியத்தைப் படைப்பதற்கு, நாயகனின் நாட்குறிப்பு, கடிதங்கள், தன்வரலாறு, அவருடைய புத்தகங்கள் முதலியன துணைக்கருவிகளாகப் பயன்படுகின்றன" (சாலினி இளந்திரையன், வாழ்க்கை வரலாற்று இலக்கியம், ப. 60) என்று வாழ்க்கை வரலாற்று இலக்கியத்திற்கு இலக்கணம் உரைப்பர் அறிஞர்.

சோமலெயும் 'வளரும் தமிழ்' என்னும் தம் நூலின் ஓர் இயலில் வாழ்க்கை வரலாற்று நூல்கள் குறித்து எழுதியுள்ளார். வாழ்க்கை வரலாறு எழுத விரும்புபவர்க்குப் பயன்படும் குறிப்பு ஒன்றையும் அதில் அவர் தந்துள்ளார்: "இந்நூல்களில் மிகுதியான செய்திகள் இருக்கலாம்; அவை சுவைபடக் கூறப் பெறவேண்டும். உண்மையான நிகழ்ச்சிகளைக் கூறுவது மட்டும் போதியதாகாது; தாம் எடுத்துக் கொண்ட அறிஞரைப் பற்றி ஆசிரியர் உணர்ச்சியோடும், உற்சாகத்தோடும் எழுதவேண்டும். ஏராளமான விவரங்களிலிருந்து, பயன்படும் சில குறிப்புக்களை மட்டும் பொறுக்குவதிலேயே அவர் தம்முடைய திறமையைப் பயன்படுத்த வேண்டும்..." (வளரும் தமிழ், ப. 307). மேலும் அவர், "பெரும்பாலும், வாழ்க்கை வரலாறுகள்

---

* மேற்கோள் : சாலினி இளந்திரையன், வாழ்க்கை வரலாற்று இலக்கியம், ப. 24.

அனைத்தும் ஒரே உயர்வு நவிற்சியாக - வெறும் பாராட்டாக- அமைந்துள்ளன. எந்தப் பெரியவரைப் பற்றியும், கருத்து வேற்றுமைக்கு இடமுண்டு. ஆகையால் வாழ்க்கை வரலாறுகளை எழுதுபவர்கள் தாம் சிறப்பிக்க எடுத்துக்கொள்ளும் அறிஞரின் குறைபாடுகள் இரண்டொன்றைச் சுட்டிக்காட்டுவது நலம்" என்று வாழ்க்கை வரலாற்று இலக்கியம் பற்றிய தம் மதிப்பீட்டினையும் குறிப்பிட்டுச் சென்றுள்ளார். இக்கருத்துக்களின் அடிப்படையில் சோமலெ எழுதிய வாழ்க்கை வரலாற்று நூல்களைப் பற்றி இவ்வியலில் காணலாம்.

## சோமலெ எழுதிய வாழ்க்கை வரலாற்று நூல்கள்

சோமலெ எழுதிய வாழ்க்கை வரலாற்று நூல்கள் மூன்று. அவற்றுள் 'பண்டிதமணி', 'விவசாய முதலமைச்சர்' ஆகிய இரண்டு மட்டும் நூல் வடிவம் பெற்றுள்ளன. சர்தார் வேதரத்தினம் பற்றி அவர் எழுதிய வாழ்க்கை வரலாறு, இன்னும் நூல் வடிவம் பெறவில்லை; தட்டச்சு' செய்யப்பெற்ற நிலையிலேயே உள்ளது.*

சோமலெயின் இம்மூன்று வாழ்க்கை வரலாற்று நூல்களும் மூன்று வகையில் சிறப்புப் பெற்றவை ஆகும். பண்டிதமணி மு. கதிரேசனார், தமிழ் மொழியிலும் வடமொழியிலும் மிகுந்த புலமை பெற்றவர்; சிறுவயதிலேயே இளம்பிள்ளைவாதத்தால் பாதிக்கப்பட்டமையால் வெளியே எங்கும் செல்ல இயலாத நிலையில், தாமாகவே தனிப்பட்ட முறையில் நூல்களை ஊன்றிப் படித்துத் தம் அறிவைப் பெருக்கிக் கொண்டவர். ஏழு மாதம் கூடப் பள்ளிக் கூடத்தில் கல்வி பயிலாத அவர், பன்னிரண்டு ஆண்டுகள் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக இருந்து, தமிழ்ப்பணி ஆற்றிய சிறப்பு மிக்கவர். சோமலெயின் சொற்களிலேயே சுட்டவேண்டும் என்றால், "முயற்சியும், மன உறுதியும் இருக்குமானால் உடல் ஊனமுற்றவர்களும் உயர்நிலையை அடைய இயலும் என்பதற்குக் கதிரேசனாரின் வாழ்க்கை எடுத்துக்காட்டாகும்" (பண்டிதமணி, முன்னுரை ப. 3).

'விவசாய முதலமைச்சர்' என்று அழைக்கப்பெற்ற ஓமந்தூர் பி. இராமசாமி ரெட்டியார், சென்னை மாநிலத்தின் இரண்டாவது முதல் அமைச்சர் பதவியில் 1947-ஆம் ஆண்டு மார்ச் 23 முதல் 1949-ஆம் ஆண்டு ஏப்ரல் 6-ஆம் நாள் வரை வீற்றிருந்தவர். அவர் அஞ்சா நெஞ்சர்; ஒழுக்க சீலர்; கொள்கைப் பிடிப்பு உள்ளவர்; சத்தியம் தவறாதவர்; எளிய வாழ்வை மேற்கொண்டவர்; ஆற்றல் மிக்கவர்; மனதில் தோன்றும் உண்மையைத் தயங்காமல் சொல்லக் கூடியவர்; இராமகிருஷ்ண பரமஹம்சரிடமும், வள்ளலாரிடமும் பரம பக்தி கொண்டவர்; நமது நாட்டின் மிகப் பெரிய தொழிலான விவசாயத் தொழிலின் நுட்பங்களை நன்கு அறிந்த நிலையான

* இத் தட்டச்சுப் படியினை நூலாசிரியருக்கு வழங்கியவர் சோமலெயின் மகனான சோமலெ சோமசுந்தரம் ஆவார்.

விவசாயி; தரிசு நிலங்களை உழுது வெற்றி கொண்ட பண்ணைப் புலவர்; வேளாண்மைப் பண்டிதர்; அடக்கமே உருவானவர்; ஆழ்ந்த அறிவாளி; நிறைகுடம்; படாடோபம், பகட்டு, போலி விளம்பரங்கள் இன்னதென்றே அறியாதவர்; அரசியலில் தூய்மை காத்தவர். ஓ.பி. ஆரைப் பற்றிய இவ்வாழ்க்கை வரலாற்று நூல், நா. மகாலிங்கம் அணிந்துரையில் குறிப்பிடுவது போல், 'தமிழ் மக்கள் கோழைகளாக, அஞ்சி அஞ்சிச் சாகாமல், அவ்வப்போது பதவியில் இருப்பவர்களுக்குத் தாளம் போடாமல், நேர்மைக்கும், நியாயத்துக்கும் மதிப்பளித்து வாழ்வதற்கு வழிகாட்டும்' வகையில் அமைந்துள்ளது.

'இந்திய விடுதலை இயக்கத்தின் குறுமுனிவராக விளங்கியவர் சர்தார் வேதரத்தினம். இந்திய விடுதலைப் போராட்டத்தின் ஒவ்வொரு நிலையிலும் - குறிப்பாக, இராஜாஜியின் உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் பெரும்பங்கு கொண்டவர் அவர்; காந்தியடிகளின் ஒப்பற்ற தலைமையை ஏற்று வாழ்ந்த தொண்டராய், தேசபக்தராய், நாட்டிற்காகத் தம் செல்வத்தையெல்லாம் வழங்கிய தியாகியாய், ஒழுக்க சீலராய், கடமை உணர்ச்சி மிக்கவராய், தன்னலம் என்பதே இன்னது என்று அறியாதவராய் வாழ்ந்தவர் அவர்; சென்ற தலைமுறையில் எடுத்துக்காட்டான வாழ்க்கை வாழ்ந்த ஒரு முதியவரை, நாட்டு நலனுக்கு மட்டுமே தம்மை அர்ப்பணித்துக் கொண்ட தலைவரைப் படம்பிடித்துக் காட்டுவதன் மூலம், 'புதிய சர்தார்கள் சிலரேனும் உருவாக வேண்டும்' (முன்னுரை) என்னும் விருப்பத்தின் அடிப்படையில் சோமலெ எழுதிய வாழ்க்கை வரலாற்று நூல் இது. இந்நூலுக்கு, 'தமிழ்நாட்டில் ஒரு சர்தார்' அல்லது 'வேதாரண்யம் தந்த வேதரத்தினம்' அல்லது 'விந்தை மனிதர் வேதரத்தினம் பிள்ளை' என்னும் மூன்று தலைப்புகளைக் கொடுத்திருக்கிறார் சோமலெ. இனி, ஒவ்வொரு நூலின் அமைப்பும் அழகும் குறித்துச் சுருங்கக் காணலாம்.

## I. 'பண்டிதமணி'

சோமலெ எழுதிய வரலாற்று நூல்களுள் பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் பற்றிய நூலே முதலில் - 1955-ஆம் ஆண்டில் - வெளியாயிற்று.

### வாழ்க்கை வரலாறு எழுத நேர்ந்த சூழல்

பண்டிதமணியுடன் பல்லாண்டுகள் நெருங்கிப் பழகியவர் சோமலெ. அவர், 'நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பு' (குறள் : 783) என்னும் குறளுக்கு இலக்கணமாகவும், இலக்கியமாகவும் ஒருங்கே திகழ்ந்த பண்டிதமணியின் புலமைத் திறத்தாலும் பண்புடைமையாலும் ஈர்க்கப்பட்டார்; பிறர் துணையின்றித் தமது நுண்ணறிவால் செந்தமிழ்ப் பெருநூல்களைத் தெளிவாகக் கற்றதோடு, வடமொழியும் நன்கு பயின்ற சிறப்புடைய பண்டிதமணியின் வாழ்க்கை வரலாறு சிறந்த முறையில் வெளிவருமானால், தாய்மொழி வளர்ச்சியிலும்,

கல்வித் துறையிலும், சமய வாழ்விலும், தமிழர் நாகரிகத்திலும், அரசியல் முன்னேற்றத்திலும் பண்டிதமணி கருதிய கருத்துக்களும், தமிழ் மக்கள் செய்தற்குரிய சிறந்த பணிகளாக அவர் மேற்கொண்ட செயல்களும் தமிழ் மக்கள் உள்ளத்தில் நிலையான இடம்பெறும் என்னும் உயரிய நோக்கத்தோடு பண்டிதமணியின் வாழ்க்கை வரலாற்றை எழுதத் துணிந்தார். அவர்தம் எண்ணத்தை உணர்ந்த பண்டிதமணி, தாம் எழுதி வைத்திருந்த குறிப்புக்களையெல்லாம் சோமலெவுக்குக் கொடுத்து உதவினார். அக்குறிப்புக்களையும், பண்டிதமணியின் நூல்களையும், அவர் மற்றவர்களது நூல்களுக்கு அளித்த அணிந்துரைகளையும், முகவுரைகளையும், தமிழகத்தில் பல பேரவைகளில் அவர் நிகழ்த்திய சொற்பொழிவுக் குறிப்புக்களையும், அவரைப் பற்றிப் பல தமிழறிஞர்கள் வெளியிட்ட கருத்துக்களையும் அடிப்படையாகக் கொண்டு பண்டிதமணியின் வாழ்க்கை வரலாற்றைச் சீரிய முறையில் படைத்துத் தந்துள்ளார் சோமலெ.

## கவிமணியின் வழிகாட்டுதல்

பண்டிதமணியின் வரலாற்றை எழுதும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதை அறிந்த கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, "பிறந்த நாள் முதலிய குறிப்புகளும், திருமணம் முதலிய பொது நிகழ்ச்சிகளுமாக மக்கள் எல்லார்க்குமுரிய சாதாரண வாழ்க்கைக் குறிப்புக்களை விரித்துரையாமல், பண்டிதமணியவர்களின் புத்தி நுட்பத்தையும், சிறந்த பண்புகளையும், பாட்டும் உரையும் வரையும் அவரது புலமை நலத்தையும், சுவை நிறைந்த சொல் வளத்தையும், தமிழ் வளர மேற்கொண்ட அரிய முயற்சிகளையும் படிப்போர் மனங்கொள்ளும்படி, அவர்களது வாழ்க்கை வரலாற்றினை எழுதுதல் வேண்டும்" (முன்னுரை, பண்டிதமணி, ப. vi) என சோமலெவுக்கு அறிவுறுத்தினாராம். அவர்தம் அறிவுரையை மனத்திருத்தி, இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழ் கூறு நல்லுலகில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களின் வரலாறாகவும், தமிழ் இலக்கிய மறுமலர்ச்சியின் வரலாறாகவும் இந்நூலைப் படைத்துள்ளார் சோமலெ. பண்டிதமணியின் கல்வியறிவு, சமய நூலறிவு, வடமொழிப் புலமை, சொற்பொழிவுத் திறன், விளக்கவுரைத் திறன், தமிழ்ப் புலவர்களுடன் அவர் கொண்டிருந்த தொடர்பு, அவரது பழுத்த பாவன்மை, குணச்சிறப்புக்கள் முதலியன வெளிப்படும் வகையிலேயே இந்நூலை நன்கு திட்டமிட்டு உருவாக்கியுள்ளார் சோமலெ.

## சுவையான வாழ்க்கை நிகழ்ச்சிகள்

"பேரறிஞர்களது வரலாற்றில் காணப்படும் அரிய நிகழ்ச்சிகள் மக்கள் எல்லார்க்கும் நன்கு பயன்படும் என்னும் நம்பிக்கையுடன் யான் பழகிய அறிஞர்களின் சிறப்பியல்புகளைக் குறித்துக் கட்டுரை வாயிலாக வெளிப் படுத்துதல் எனது பொழுதுபோக்காகும்" என்று 'பண்டிதமணி' நூலுக்கு

எழுதிய முன்னுரையில் (ப. V) குறிப்பிட்டுள்ளார் சோமலெ. இவ்வகையில் அவர் பண்டிதமணியின் வாழ்வில் நடைபெற்ற எத்தனையோ அரிய, சுவையான நிகழ்ச்சிகளை உரிய இடங்களில் பதிவு செய்துள்ளார். உள்ளங்கவர் நிகழ்ச்சி ஒன்று இதோ:

"சிறிது தொலைவிலுள்ள இடங்களுக்கும் பண்டிதமணி அவர்கள் மாட்டு வண்டியிலேயே செல்ல நேர்ந்தது. எனவே, அண்ணாமலை நகரிலிருந்த போது, அவரிடம் ஓர் ஒற்றை மாட்டு வண்டி இருந்தது. அதில் அவர் ஏறிக்கொண்டு நாள்தோறும் மாலை நேரத்தில் உலாவி வரச் செல்வார். ஒரு நாள் நண்பர் ஒருவரையும் வண்டியில் உடனழைத்துச் சென்றார். வண்டி போகும்போது, முன்பக்கமாக உட்கார்ந்து கொண்டு, 'இப்படிப் போ, அப்படிப் போ' என்று கூறி, வண்டிக்காரனுக்கு வழிகாட்டிக் கொண்டே சென்றார். உடன் வந்தவரோடு ஒரு சிறிதும் பேசவில்லை. அதனால், அந்த நண்பரின் மனம் புண்பட்டது. அப்போது பண்டிதமணி, 'வண்டியில் பூட்டப்பெற்றிருக்கும் மாடு புதிது; வண்டிக்காரனும் புதிய ஆள். அவன் மாட்டை ஓட்டுகிறான்; நான் அவனை ஓட்டுகிறேன். எனவே, என் கருத்தனைத்தும் அப்பக்கமே திரும்பிவிட்டது' என்றார்" (பண்டிதமணி, ப. 23).

பிறிதொரு நிகழ்ச்சி : 'கம்பர் யார்?' என்ற கிளர்ச்சி தமிழகத்தில் நடைபெற்றபோது, "கம்பை உடையவன் கம்பன்; அவ்வகையில் பார்க்கும்போது யானே கம்பன்" என்று பண்டிதமணி வேடிக்கையாகச் சொன்னாராம் (பண்டிதமணி, ப. 25).

நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும் மிக்கவர் பண்டிதமணி என்பதைப் புலப்படுத்தும் இன்னொரு நிகழ்ச்சியும் இங்கே மனங்கொளத்தக்கதாகும். அந்நிகழ்ச்சி வருமாறு : "ஒரு முறை ஓர் அமைச்சர், தமிழாசிரியர்களைக் குறை கூறினார் : 'அவர்களுக்குக் க, கா என்ற இரண்டுக்கு மேல் ஒன்றும் தெரியாது. க என்பது கடவுள், கா என்பது காதல்' என்றார். எல்லோரும் கை கொட்டி அமைச்சரைப் பாராட்டினர். அதன்பின் அங்கே சொற்பொழிவாற்ற இருந்த பண்டிதமணியவர்கள், 'தமிழாசிரியர்களுக்குக் க, கா என்ற இரண்டிற்கு மேல் ஒன்றும் தெரியாது என அமைச்சர் கூறுவது உண்மை; அதற்கு மேல் இவர் அறிந்தது என்ன? இவ்வுலகில் கடவுளுக்கும் காதலுக்கும் மேலாக எப்பொருள் இருக்கிறது? இந்த வகையில் தமிழ்ப் புலவர்கள் மாத்திரமல்ல. இங்கிலீஷ் புலவர்களும் அரசியல் நிபுணர்களும் எல்லோரும் ஒன்றுதான். இந்த அறியாதவர் கூட்டத்தில் அமைச்சர் விலக்கல்ல" (பக். 83-84) என்றாராம். எவருக்கும் அஞ்சாமல் தம் மனத்திற்குப் பட்டதை எடுத்துக் கூறிக் கண்டிக்கும் பண்டிதமணியின் பண்பினை இந்நிகழ்ச்சியின் வாயிலாக நன்கு எடுத்துக்காட்டியுள்ளார் சோமலெ.

## நகைச்சுவை உணர்வு

ஆழமான அறிவும், தாம் படித்ததைப் பிறருக்கு விளங்குமாறு சொல்லும் ஆற்றலும் பெற்றிருந்த பண்டிதமணியிடம் இயல்பான நகைச்சுவை

உணர்வும் காணப்பட்டது. அவருடைய நகைச்சுவை, வாழ்க்கையை வாழ்வாங்கு வாழ விரும்பும் எல்லோருக்கும் இன்றியமையாது வேண்டிய ஒன்றாகும்.

*'ஒரு சமயம் பண்டிதமணி தம் நண்பர் ஒருவர் வீட்டிற்குச்* சென்றிருந்தார். அப்போது அவரைக் கண்டு பேசச் சிலர் வந்திருந்தார்கள். பேசிக் கொண்டிருக்கும் போது, வேலைக்காரன், பண்டிதமணிக்குப் பால் கொண்டு வந்து கொடுத்தான். பண்டிதமணி பாலைக் கையிலே வாங்கினார்; அதை ஒரு முறை பார்த்தார். பிறகு, 'திருப்பாற்கடலில் சீனிவாசன் துயில் கொள்ளுகிறான்' என்றார். இருந்தாற் போலிருந்து அவர் இப்படிக் கூறியது, மற்றவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. சிலர் விழித்தனர்; வேறு சிலர் எதிரே சுவரில் தொங்கிக் கொண்டிருந்த திருமால் படத்தைப் பார்த்து, 'இதைப் பற்றித் தான் பண்டிதமணி கூறுகிறாரோ' என்று நினைத்தனர். இன்னுஞ் சிலர் ஆழ்ந்து சிந்திக்கலாயினர். நகைச்சுவை கடைசியாக விளங்கிவிட்டது. எல்லோரும் சிரிக்கலாயினர். 'பாலில் எறும்பு விழுந்து கிடக்கிறது' என்று கூறுவதற்குப் பதிலாகத்தான் 'திருப்பாற்கடலில் *சீனிவாசன் துயில் கொள்ளுகிறான்' என்று கூறினார் பண்டிதமணி எனப்* புரிந்து கொண்டனராம்' (பக். 265-266).

'ஒரு கூட்டத்திற்குப் பண்டிதமணி தலைமை வகித்தார். கூட்டத்தின் ஒரு பகுதியில் பெண்கள் இருந்தனர். ஆகையால் கூட்டத்தை அமைதியாக நடத்த முடியவில்லை. கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தவர்கள், பெண்கள் பகுதியிலிருந்து அடிக்கடி சப்தம் வருவதைக் குறிப்பிட்டு அமைதியாயிருக்கும் படி கேட்டுக் கொண்டார்கள். அப்போது பண்டிதமணி, 'பெண்மணிகள் - ஒலித்துக் கொண்டு தானிருக்கும்' என்று வேடிக்கையாகக் கூறினார். பண்டிதமணியின் இந்த ஒலியைக் கேட்டதும், கூட்டத்தில் சிரிப்பின் ஒலி எழுந்தது' (ப. 266).

சோமலெ, பண்டிதமணி பற்றிய தம் கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டிருப்பது போல், "இப்படி நகைச்சுவையான நிகழ்ச்சிகள் நூற்றுக்கணக்கில் பண்டிதமணியுடைய வாழ்க்கையில் உண்டு" (பல்சுவைக் கட்டுரைகள், ப. 93).

## வடமொழிப் புலமையும் பயனும்

"நம் தமிழ் மொழியின் ஆக்கத்திற்கு ஒருதலையாக வேண்டுவனவற்றுள் இம்மொழிபெயர்ப்புச் செயலும் ஒன்றாகும்" (உரைநடைக் கோவை : இரண்டாம் பகுதி, ப. 26) என்பது பண்டிதமணியின் அழுத்தம் திருத்தமான கருத்து. அதே போல், 'ஒரு மொழியில் நிரம்பிய புலமை அடைய வேண்டுமானால், பிறிதொரு மொழிப் பயிற்சி வேண்டும்' என்ற கருத்தும் அவரது உள்ளத்தில் ஆழமாகப் பதிந்திருந்தது. அதன் அடிப்படையிலேயே அவர் வடமொழியில் வல்லுநராக விளங்கிய தருவை நாராயண சாஸ்திரியாரிடம் ஐந்து ஆண்டுகள் வடமொழி பயின்றார்;

பயின்றதோடு மட்டுமன்றி, வடமொழியினின்றும் சில அரிய நூல்களை மொழிபெயர்த்துத் தந்து தமிழ் மொழிக்கு வளம் சேர்க்கவும் முன்வந்தார். 'உதயண சரிதம்', 'சுலோசனை', 'மண்ணியல் சிறுதேர்', 'சுக்கிர நீதி' என்பன பண்டிதமணி வடமொழியில் இருந்து தமிழுக்கு மொழிபெயர்த்துத் தந்துள்ள நூல்கள் ஆகும். பண்டிதமணியின் வடமொழிப் புலமையைப் பறைசாற்றும் இயலுக்கு 'வடமொழிப் புலமையும் பயனும்' என ஆழ்ந்த சிந்தனையின் அடிப்படையில் தலைப்புச் சூட்டியுள்ளார் சோமலெ. வடமொழிக் கல்வியின் பயனாகப் பண்டிதமணி பெற்ற வடமொழிப் புலமையின் சிறப்பையும், அதனால் தமிழுக்கு விளைந்துள்ள பயனையும் பற்றி இவ்வியலில் அவர் விரிவாகக் கூறியுள்ளார். "பண்டிதமணியவர்கள் தம் வடமொழிப் புலமையைத் தமிழினை வளப்படுத்தவே பயன்படுத்தினார்... பல சமயங்களில் அவர் வட நூல்களையும் தமிழ் நூல்களையும் ஒப்பிட்டு விளக்கித் தமிழின் மேன்மையை நிலைநாட்டியிருக்கிறார்" (பண்டிதமணி, ப. 98) எனப் பண்டிதமணியின் தனிப்பெருஞ்சிறப்பினையும் சோமலெ சுட்டிக்காட்டியுள்ளார்.

''பண்டிதமணியவர்களின் இருமொழிப் புலமைக்கு ஏற்ப, அவர்களுடைய இயற்பெயரும், 'கதிர்' என்னும் தமிழ்ச் சொல்லும் 'ஈசன்' என்னும் வடசொல்லும் சேர்ந்து அமைந்திருப்பதையும் அவர்கள் சில சமயம் நகைச்சுவைபடத் தெரிவிப்பது உண்டு. இவரைப் பற்றிப் புகழ்ந்து பேசிய சில புலவர்களும், இவருக்கமைந்துள்ள 'பண்டிதமணி'யென்னும் பெயர் இவரது இருமொழிப் புலமையினைக் காட்டுகின்றது; 'பண்டித' என்ற வடசொல்லும் 'மணி' என்ற தமிழ்ச் சொல்லும் ஒன்றுசேர்ந்து விளங்குவதைக் காண்க' எனக் கூறியுள்ளார்கள்" (பண்டிதமணி, ப. 99) என்னும் பகுதி சுவையும் நயமும் களிநடமிடும் சோமலெயின் நடைத்திறனுக்கு நல்லதொரு சான்றாகும்.

இங்ஙனம் பண்டிதமணியின் வாழ்க்கை, தமிழில் திளைத்த தனிப்பெரும் வாழ்க்கையாகத் திகழ்வதையும், அவரது வியத்தகு புலமை வளத்தையும், பழுத்த நாவன்மையினையும், தமிழ்மொழி வளர்ச்சிக்கு அவர் ஆற்றியுள்ள அரும்பெரும் பணிகளையும் இந்நூலில் அழகுறப் பதிவு செய்துள்ளார் சோமலெ.

## பாட நூல் ஆதல்

பண்டிதமணியோடு பதினெட்டு ஆண்டுகள் நெருங்கிப் பழகும் வாய்ப்பினைப் பெற்ற சோமலெ தம் அனுபவ அறிவின் அடிப்படையில் உருவாக்கிய வரலாற்று நூல் 'பண்டிதமணி'. இதன் நல்விளைவாக அரசினர் மகிபாலன்பட்டியில் பண்டிதமணி கதிரேசனாருக்கு உருவச் சிலை எழுப்பி மரியாதை செய்தனர். மதுரைப் பல்கலைக்கழகப் பாடத்திட்டக் குழு இவ்வாழ்க்கை வரலாறு, மாணவர்க்குப் பெரும் பயன்தரும் என்று கருதி, இதைப் பாட நூலாகப் பரிந்துரை செய்தது. ஏறத்தாழ 280 பக்கங்களின் அளவில் அமைந்த இந்நூலைப் புகுமுக வகுப்பு மாணவருக்கு ஏற்ற

முறையில் 150 பக்கங்கள் கொண்டதாக சோமலெயே சுருக்கிக் கொடுத்து உதவினார்.

"சோமலெ முயன்றிராவிடில் ஒரு பெரும்புலவரின் புகழ் மிக்க வரலாறு மறைந்து போயிருக்கும். எனவே, பண்டிதமணியின் புகழை எல்லோரும் அறியச் செய்த பெருமை, சோமலெ ஒருவரையே சேரும்" என்று ச. மெய்யப்பன் (சோமலெ, பக். 20-21) குறிப்பிடுவது முற்றிலும் உண்மையேயாகும்.

## II. 'விவசாய முதலமைச்சர்'

ஓமந்தூர் பி. இராமசாமி ரெட்டியாருடைய வாழ்க்கை வரலாற்று நூல் 'விவசாய முதலமைச்சர்' என்னும் பெயரில் 1979-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வெளிவந்துள்ளது.

### நூல் எழுதக் காரணம்

"ஒழுக்க சீலராகவும், அஞ்சா நெஞ்சினராகவும், நம் நாட்டின் பண்பாட்டுச் சின்னமாகவும் விளங்கியவர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவருடைய வாழ்க்கை வரலாற்றை இளைஞர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். தமிழ்நாட்டு வரலாற்றில் ஒரு காலப்பகுதியை எழுத விழைபவருக்கும் அவருடைய வாழ்க்கை விவரங்கள் இன்றியமையாது தேவைப்படும்" என்னும் நோக்கத்தில் இந்நூலை எழுதியதாக முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார் சோமலெ.

### நூலாக்கத்தின் போது எடுத்துக் கொண்ட முயற்சிகள்

பொள்ளாச்சி நா. மகாலிங்கம் அவர்களின் வேண்டுகோளை ஏற்று, ஓ.பி.ஆர். பற்றிய இந்நூல் உருவாக்கத்தில் ஈடுபட்டார் சோமலெ; பத்து மாதங்கள் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து, ஓ.பி.ஆருடன் பழகிய முன்னூறுக்கு மேற்பட்ட வயது முதிர்ந்த பெரியோர்களைச் சந்தித்து, அவரைப் பற்றிய செய்திகளைத் திரட்டினார்; இரண்டு முறை ஓமந்தூராரை நேரில் சந்தித்து அவருடன் விரிவாக உரையாடினார்; ஓமந்தூராரின் குடும்பத்தினர், உறவினர்கள், நீண்ட கால நண்பர்கள், அவருடன் சிறையில் இருந்தவர்கள், அவர் முதலமைச்சராக இருந்த போது உயர்பதவிகளில் இருந்தவர்கள், முதலமைச்சரின் அலுவலகத்தில் பணி புரிந்தவர்கள், அவர் நியமித்த அமைச்சர்கள், அவருடைய அரசியல் கட்சியினர், மாற்றுக் கட்சியினர், அவருடைய உடல் நலத்தைப் பேணிய மருத்துவர்கள், விமானம் ஓட்டியவர்கள், அவருக்கு முடிவெட்டியவர்கள் ஆகியோரைச் சந்தித்தார்; அவர்கள் தெரிவித்த தகவல்களின் அடிப்படையில் நூலை உருவாக்கினார்; மேலும், தமிழக அரசின் தலைமைச் செயலகம், ஆவணக் காப்பகம் ஆகியவற்றில் உள்ள ஆதாரங்கள், சட்ட சபை, மேலவை நிகழ்ச்சிகள் பற்றிய குறிப்புகள் ஆகியவற்றினின்றும் தமக்குத் தேவையான செய்திகளைத் திரட்டினார். நூலின் பிற்சேர்க்கையில் சோமலெ, 'தேதிகள் சொல்லும்

செய்திகள்' என்னும் தலைப்பில், ஓமந்தூராரின் வாழ்க்கையில் நிகழ்ந்த முக்கியமான நிகழ்வுகளை ஆண்டுவாரியாகக் குறித்துள்ளார்: தமக்குப் பேட்டி தந்த 166 பேர்களின் பெயர்களை மாவட்ட வரிசையில் கொடுத்துள்ளார்; நூலாக்கத்தின் போது உற்றுழி உதவிய 12 நூல் நிலையங்களின் பெயர்களையும், பயன்பட்ட 9 பழைய இதழ்களின் பெயர்களையும், மற்றும் துணைநின்ற 23 பேர்களின் முகவரிகளையும் நன்றியுணர்வோடு தந்துள்ளார்; கல்கத்தா வரலாற்றுக் கல்வி மையத்தின் சார்பில் வெளியாகும் 'தேசிய வாழ்க்கை வரலாற்றுக் களஞ்சிய'த்திற்காக (Directory of National Biography, Vol. VII) 'Reddiar O.P. Ramaswami' என்ற தலைப்பில் தாம் எழுதிய சிறு ஆங்கிலக் கட்டுரையையும் இணைத்துத் தந்துள்ளார். மேலும், சோமலெ நூலின் அடிக்குறிப்பில் ஓமந்தூராருடன் அவ்வப்போது தொடர்பு கொண்டிருந்தவர்களைப் பற்றியும் சுருக்கமாகக் குறித்துச் சென்றுள்ளார். 'நேற்றைய வரலாற்றை இன்றைய இளைஞர்களுக்கும் அடுத்த தலைமுறையினர்க்கும் புரிய வைக்க இந்த உத்தி' என்று அவரே அதற்கான காரணத்தையும் சுட்டியுள்ளார். நாடகத்துக்குள் நாடகம் போல, ஒரு வாழ்க்கை வரலாற்றுக்குள் பல வாழ்க்கை வரலாறுகளாக இது அமைந்துள்ளது. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், ஒரு வாழ்க்கை வரலாற்று நூல் எவ்வாறு நன்கு திட்டமிட்டு உருவாக்கப்பெறுதல் வேண்டும் என்னும் இலக்கணத்தை உணர்த்தும் உயிருள்ள இலக்கியமாக இந்நூல் விளங்குகிறது எனலாம்.

## நூல் எழுதியதால் கிடைத்த நன்மைகள்

இந்நூலை எழுதியதால் தமக்கு என்ன நன்மை கிடைத்தது என்பதைப் பற்றியும் சோமலெ முன்னுரையில் தன்னடக்கத்துடன் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

"துறவிகளையும் அரசியல் தலைவர்களையும் எழுத்தாளர்களையும் - தமிழ்நாட்டில் வாழும் 70 வயதுக்கு மேற்பட்ட முக்கியமானவர்களையும் - சந்தித்து, அவர்களுடைய ஆசியைப் பெறும் பேற்றினை எனக்கு இந்தப் பணி நல்கியது. 20, 25 ஆண்டுகளுக்கு முன் வேறு நிலைகளில் நான் அறிந்திருந்த பெருமக்களின் நட்பைப் புதுப்பித்துக் கொள்ளவும் நேரிட்டது".

முன்னுரையின் இறுதியில்,

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி யிருப்பதுவும் நன்று"

என்னும் மூதுரைப் பாடலை (8) மேற்கோள் காட்டியிருப்பது ஆசிரியரின் நல்ல உள்ளத்தை எடுத்துக்காட்டுவதாகும்.

## அறிமுகப்படுத்தும் பாங்கு

முதற்கண், ஓமந்தூராரைப் படிப்பவருக்கு அறிமுகம் செய்யும் பாங்கே சோமலெயின் கைவண்ணத்தைப் புலப்படுத்துவதாய் விளங்குகின்றது.

ஓமந்தூரார், ஒரு முறை தமது ஊரில் இருந்து 10 கி. மீ. தொலைவில் உள்ள திண்டிவனத்திற்கு ஒரு பெரியவரைப் பார்க்கப் போனாராம். தம் பண்ணையிலிருந்து எலுமிச்சம்பழம் கொண்டு வராததால், திண்டிவனம் சந்தைக்குள் நுழைந்து விலைக்கு எலுமிச்சம்பழம் வாங்கினாராம். அப்போது ஓமந்தூராருக்கும், கூடைக்காரிக்கும் இடையே நடந்த உரையாடலை எடுத்துக்காட்டித் தம் நூலைத் தொடங்குகிறார் சோமலெ :

"ஓமந்தூரார் : 4 எலுமிச்சம்பழம் கொடம்மா, என்னம்மா விலை?

கூடைக்காரி : பழம் 10 காசு சாமி.

ஓமந்தூரார் : 5 காசு என்று கொடு அம்மா.

கூடைக்காரி : 5 காசுக்கு வேண்டுமானால் அதற்கு வேறு எலுமிச்சம்பழம் இருக்கு, தாரேன். இந்தக் கூடையில் இருக்கிறது நல்ல பழம்; நிறமானது; சாறு ரொம்பப் பிழியலாம்; பம்பாய், மெட்ராசுக்கு எல்லாம் லாரி லாரியா போவுது. சாறு பிழிந்து பாட்டல் பாட்டலா சீமைக்கு விக்கிறாங்க. திண்டிவனம் பஜார் பூராவும் விசாரிச்சுப் பாரு பெரியவரே; ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் தோட்டத்துப் பழம்னு கேளு. ஒருத்தரும் 10 பைசாவுக்குக் குறஞ்சு தர மாட்டாங்க. இது பேரம் பண்ணுகிற சரக்கு இல்லை".

'யார் இந்த ஓமந்தூரார்?' என்று கேள்வியை எழுப்பி, வாசகருக்கு அவரைச் சுவைபட அறிமுகப்படுத்துகிறார் சோமலெ. இந்த அறிமுகப் பகுதியின் இன்னொரு சிறப்பு 'விவசாய முதலமைச்சர்' என்பதற்கு ஏற்ப அமைந்திருப்பதாகும்.

## பொதுவாழ்வில் ஈடுபடுவோர்

சோமலெயின் கருத்தில் பொதுவாழ்வில் ஈடுபடுவோர் மூவகையினர் ஆவர். 'சுயநலமி', 'அரசியல்வாதி', 'நாட்டை உருவாக்கும் சான்றோர்' என்னும் பெயர்களால் அவர்களைச் சுட்டுகின்றார் அவர். தொடர்ந்து அவர்களது பண்பு நலன்களையும் அவர் விளக்கிக் கூறுகின்றார்.

சுயநலமி, தன் குடும்பத்துக்குப் பணம் சேர்ப்பதிலும், தன் உறவினர்களுக்கு வேலை கொடுப்பதிலும், தன் புகழைப் பரப்புவதிலும், தனக்குச் சிலைகள் முதலியன வைத்துக் கொள்ளுவதிலும், தனக்குப் பிறகு தன் உறவினர்களை அரியாசனத்தில் அமர்த்துவதிலும் கவனம் செலுத்துவானாம்.

அரசியல்வாதி, அடுத்த தேர்தலில் தானும் தன் கட்சியும் வெற்றிபெற வேண்டும் என்ற ஒரே குறிக்கோளை நிறைவேற்ற எதையும் துணிந்து செய்வானாம்.

நாட்டை உருவாக்கும் சான்றோர்கள் (Statesmen) அடுத்த தலை முறையினரைப் பற்றியும் நாட்டுநலனைப் பற்றியும் மட்டுமே சிந்திப்பார்களாம்.

இவர்களுள் ஓமந்தூரார் மூன்றாவது வகையினர் என நயமாக அறிமுகம் செய்கின்றார் சோமலெ (பக். 2-3).

இந்த அறிமுகமே, ஓமந்தூராரைத் தன்னலமற்ற-நாட்டை உருவாக்கும் சான்றாண்மை மிக்க - ஒரு பெரியவராகக் காட்டி நிற்கின்றது.

## அஞ்சா நெஞ்சம்

காந்தியடிகளாக இருந்தாலும், நேருவாக இருந்தாலும் கூடத் தம் கருத்துக்கு ஒவ்வாதது என்றால் அதை அஞ்சாமல் எடுத்துக் காட்டுவார் ஓ.பி.ஆர். 'ஓமந்தூரார் கடவுளுக்கு அஞ்சுவார், கடவுளுக்கு மட்டுமே அஞ்சுவார்' என்று சென்னை உயர்நீதி மன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி திரு. பி.வி. இராஜமன்னார் ஓமந்தூராரைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பதும் இங்கே நினைவுகூரத்தக்கதாகும். இதற்கு அரண் செய்யும் வகையில் முதலமைச்சராக இருந்தபோது, ஓமந்தூராரின் வாழ்வில் நடந்த நிகழ்ச்சி ஒன்றைச் சுட்டிக்காட்டுகிறார் சோமலெ.

"சென்னை அரசாங்கத்திற்கு ஓர் இலச்சினை வேண்டும் என்றும், அது கோயில் கோபுரமாக இருப்பது என்றும் முடிவு செய்தவர் ஓ.பி.ஆர். இது குறிப்பிட்ட ஒரு சமயத்தாரின் சின்னம் என்றும், இதை மதச்சார்பற்ற இந்திய அரசு அனுமதிக்கலாகாது என்றும் சிலர் ஜவஹர்லால் நேருவுக்கு எழுதினர். உடனே நேரு பெருமகன் தமக்கு முறையீடுகள் வந்திருப்பதைச் சுட்டிக்காட்டி ஓமந்தூராருக்கு எழுதினார்.

ஓமந்தூரார், இந்தியப் பிரதம மந்திரிக்குச் சுடச்சுட பதில் அளித்தார்: 'கோபுரம் என்பது சமயச் சின்னம் அன்று. இந்த மாநிலத்தின் தனிச்சிறப்பாக விளங்கும் திராவிடர் கட்டிடக் கலையின் அடையாளம். காந்தியடிகளின் இனிய நண்பரும் கிறிஸ்தவப் பெருமகனுமான மேனாட்டார் சி.எப். ஆண்டிரூஸ் என்ற வணக்கத்துக்கு உரிய மத குருவின் ஆதரவுடன் வட ஆர்க்காடு மாவட்டம் திருப்பத்தூரில் கோபுரத்துடன் கூடிய தேவாலயம் கட்டப்பட்டிருப்பதையும் இந்தியப் பிரதம மந்திரிக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

நேரு அந்த அளவில் வாயடைத்துப் போனார்" (பக். 122-123). ஓமந்தூராரின் அஞ்சாமையை எடுத்துக்காட்டும் இந்த அரிய நிகழ்ச்சியை உரிய இடத்தில் பதிவு செய்துள்ளார் சோமலெ.

## நேர்மைத் திறம்

'வில்லுக்கு விதுரன், சொல்லுக்கு அரிச்சந்திரன்' எனின், 'நேர்மைக்கு ஓ.பி.ஆர். ரெட்டியார்' என்று சொல்லலாம். அவருடைய பரம்பரைப் பகைவன் கூட அவர் மீது ஊழல் குற்றச்சாட்டைக் கூறியதில்லை. அவர் அவ்வளவு நாணயமாகவும், எளிமையாகவும் வாழ்ந்து வந்தவர்' என ஓமந்தூராரின்

நேர்மை தவறாத பண்பினை நெஞ்சாரப் போற்றும் சோமலெ, அவரது நேர்மைத் திறத்திற்குச் சான்றாக ஒரு நிகழ்ச்சியை சுட்டிக்காட்டுகிறார். சோமலெயின் சொற்களிலேயே அந்நிகழ்ச்சியைக் காண்போம் :

"ஒரு துணைச் செயலாளர், ஒரு கோப்பின் மீது நடவடிக்கை எடுக்காமல் சுணங்கி வந்தார். அவரைக் கூப்பிட்டார் ஒ.பி.ஆர். 'உன்னிடம் இந்தக் கோப்பு எவ்வளவு நாளாக இருக்கிறது?' 'ஒரு மாதம்'. 'சரி, இன்னும் எவ்வளவு நாளாகும்?' என்று கேட்டார் ஒ.பி.ஆர். 'செக்ரட்டரியிடம் கையெழுத்து வாங்கி நாளைக்கு முதலமைச்சரிடம்...' என்றார் துணைச்செயலர். மறுநாளும் கோப்பு வரவில்லை. ஒ.பி.ஆர். மீண்டும் துணைச்செயலாளரை வரவழைத்தார். 'எங்கே ஐயா கோப்பு? உனக்கு 24 மணி நேரம் கொடுக்கிறேன். கோப்பு இங்கு வர வேண்டும், அல்லது நாளை இதே நேரம் உன் வேலைக்குச் சீட்டு கிழிந்துவிடும்' என்றார்.

சீட்டுக் கிழிவதற்குக் குறிப்பிட்ட கெடுவுக்கு முன் கோப்பு வந்து விட்டது" (ப. 285).

இப்படிப் பல சுவையான நிகழ்ச்சிகள், ஓமந்தூராரின் நெஞ்சுரத்திற்கும் நேர்மைத் திறத்திற்கும் சான்றாக இந்நூலில் காணப்-படுகின்றன.

## தமிழ்ப் பற்று

தாய்மொழி தெலுங்காக இருப்பினும், பிறந்து வளர்ந்த நிலையில் பேசிய தமிழ்மொழியே தம் தாய்மொழி என்னும் அழுத்தமான எண்ணம் கொண்டவராக விளங்கினார் ஒ.பி.ஆர். முதலமைச்சராக இருந்தபோது ஒருமுறை அவர் திருப்பதிக்குச் சென்றிருந்தார்; வழிபாடு முடிந்து, நகருக்கு வந்து ஓலைச்சுவடி மையத்தைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தார்; அப்போது அங்கிருந்த மக்கள் அவரைப் பேசுமாறு வேண்டினர்; அவ்வேண்டுகோளுக் கிணங்கிப் பேசத் தொடங்கிய போது, 'தெலுங்கிலேயே பேசுங்கள்' என்று கூட்டத்தார் கூச்சல் போட்டனர். 'திருப்பதி தெலுங்கர்களுக்கு உரியதா? தமிழர்களுக்கு உரியதா?' என்று அப்போது கிளர்ச்சி நடந்து கொண்டிருந்தது. ஓமந்தூரார் அந்தக் கூட்டத்தில் பின்வருமாறு பேசினார்:

"நான் தமிழில் தான் பேசுகிறேன். என்னால் தமிழில் மட்டுமே பேச முடியும். நான் பள்ளிக்கூடத்தில் படித்தது தமிழ். ஏதோ ஒரு சில தெலுங்குச் சொற்கள் எனக்குத் தெரியும் என்பதற்காக நான் தெலுங்கன் என்று சொல்லக் கூடாது. ஆங்கிலம் தெரிந்தவர்கள் எல்லாம் ஆங்கிலேயர்களா?

என் தாய்மொழி தெலுங்கு என்று சொல்லுவது தவறு. என் தாயாருக்கு 300 அல்லது 400 கொச்சையான தெலுங்குச் சொற்கள் பேசத் தெரியும். அவர்களுக்குத் தெலுங்கு எழுதவோ, படிக்கவோ தெரியாது. அவளுடைய மொழியும் தமிழ்தான்... நான் தமிழன்; என் தாய்மொழி தமிழ். ஆகையினாலே நான் தமிழன் என்பதையும், என் தாய்மொழி தமிழ்தான் என்பதையும் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன்" (ப. 106).

இங்ஙனம் ஓமந்தூராரின் தமிழ் நெஞ்சைத் தக்க இடத்தில் திறந்து காட்டியுள்ளார் சோமலெ.

ஓமந்தூரார் தம் ஆட்சிக் காலத்தின்போது தமிழ் மொழிக்கு ஆற்றிய வளர்ச்சிப் பணிகளைச் சோமலெ இந்நூலில் ஆங்காங்கே நன்கு சுட்டிக் காட்டியுள்ளார். தமிழை ஆட்சிமொழியாக ஆக்குவதற்கான நடவடிக்கையை எடுத்தது, தமிழில் கலைக்களஞ்சியம் வெளியிடுவதற்கான முயற்சி மேற்கொண்டது (ப. 109), திருக்கோயில்களில் தமிழ் மணம் பரப்ப ஆணையிட்டது (ப. 112), அரசு ஆதரவுடன் முதன்முறையாகச் சென்னையிலும், எட்டயபுரத்திலும் பாரதி விழா கொண்டாடப்பட்டது (ப. 113) பாரதியாரின் பாடல்களை நாட்டுடைமை ஆக்கி, பாரதியாரின் கவிதைகள் எங்கும் பரவுவதற்கு அடிகோலியது (ப. 116) என ஓமந்தூராரின் தமிழ் உணர்வை ஒல்லும் வகையெல்லாம் தம் நூலில் எடுத்துக்காட்டியுள்ளார் சோமலெ.

## வாழ்ந்தும் வாழாதவரும் செத்தும் சாகாதவரும்

உலகத்தில் தோன்றிய மக்களை 'வாழ்ந்தும் வாழாதவர்', 'செத்தும் சாகாதவர்' என இரு வகைப்படுத்திக் கூறுகின்றார் சோமலெ (பக். 411-412).

நாள்தோறும் நாம் சந்திக்கும் பலர், தங்களால் நாட்டுக்கோ, மொழிக்கோ, மக்கள் சமுதாயத்துக்கோ எவ்விதப் பயனும் இன்றித் தம் வாழ்நாளை ஓட்டிச் செல்கின்றனர்.

பலர் தங்கள் மனைவி மக்கள் நலத்தை மட்டுமே பேணும் தன்னலக்காரர்களாக விளங்குகின்றனர்.

வேறு சிலர், தங்கள் குடும்பத்திற்குக் கூடப் பயன்படாமல் பூமிக்குப் பாரமாக இருந்து வருகின்றனர். இவர்கள் 'வெந்த சோற்றைத் தின்று, விதி வந்த போது சாவோம்' என்று இருப்பவர்கள்; 'என்று வருமான் எமன்' என்று எதிர்நோக்குபவர்கள்.

இரத்தினச் சுருக்கமான இவர்களை 'நடைப்பிணங்கள்' அல்லது 'நடமாடும் பிணங்கள்' என்ற தொடரால் சுட்டுகின்றார் சோமலெ. இவர்களே 'வாழ்ந்தும் வாழாதவர்' என்ற பிரிவில் அடங்குவர்.

மக்களுடைய மேம்பாட்டுக்காகவும், அவர்களுக்கு வழி காட்டுவதற்காகவும், அவர்களை உய்விப்பதற்காகவும் தோன்றியவர்கள் 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்கள்' என்று போற்றப் பெறுகின்றனர்.

கௌதம புத்தர், மகாவீரர், வள்ளலார், மகாத்மா காந்தி போன்றவர்கள் இந்த வகையில் இடம்பெறுகிறார்கள். சோமலெயின் கருத்தின்படி ஓமந்தூராரும் இவ்வரிசையில் இடம்பெறத்தக்க தகுதி படைத்தவர் ஆகிறார்.

இவர்கள், சில கொள்கைகளுக்காக வாழ்ந்தவர்கள். அந்தக் கொள்கைகளுக்கு மக்களிடையே ஆதரவு இருக்கும் வரை இவர்கள் வாழ்வதாகவே கருத வேண்டும் என்கிறார் சோமலெ.

'செத்தும் சாகாதவர்' என்னும் பொருள் பொதிந்த தொடரால் நாட்டு மக்களுக்காகவும் நல்ல கொள்கைகளுக்காகவும் வாழ்ந்த நல்லவர்களைச் சுட்டுகின்றார் சோமலெ.

நா. மகாலிங்கம் அணிந்துரையில் குறிப்பிடுவது போல் "இந்த நூல் ஒவ்வொரு தமிழனுடைய வீட்டிலும் இருக்க வேண்டிய ஒப்பற்ற வரலாற்று நூல். வாழ்க்கையில் அவ்வப்போது ஏற்படும் ஒவ்வொரு சோதனையிலும் எப்படி ஈடுகொடுத்து உயரலாம் என்பதையும் இந்த நூல் போதிக்கிறது. இந்த நூலைப் படிப்பதன் மூலமாக ஒரு மனிதன் எப்படித் தூய்மையாக வாழ வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்."

## III. 'தமிழ்நாட்டில் ஒரு சர்தார்'

சர்தார் வேதரத்தினம் பற்றி சோமலெ எழுதிய இந்நூல் பிழை திருத்தம் செய்யப்பெற்று தட்டச்சு வடிவில் உள்ளது. இது நூலாக வெளிவந்தால், தமிழ்நாட்டின் விடுதலைப் போராட்டம் பற்றியும், விடுதலைப் போரில் மிக முக்கியமான நிகழ்ச்சியாக விளங்கிய உப்புச் சத்தியாக்கிரகம் பற்றியும், அப்போராட்டம் நடத்துவதில் இராஜாஜிக்கு வலக்கரமாக விளங்கிய சர்தார் வேதரத்தினம் பற்றியும் மக்கள் முழுமையாக அறிந்து கொள்வதற்கான வாய்ப்பு ஏற்படும். வாழ்க்கை வரலாற்று இலக்கிய மாலையில் இந்நூல் மற்றும் ஓர் அழகிய மணியாகவும் விளங்கும்.

### அறிமுகம் செய்துள்ள பாங்கு

'தமிழ்நாட்டில் ஒரு சர்தார்' என்று இந்நூலுக்குப் பெயர் சூட்டியதற்கேற்ப, 'சர்தார்' என்னும் சொல்லை வைத்தே வேதரத்தினத்தை அறிமுகப்படுத்துகிறார் சோமலெ. "சர்தார் என்னும் சொல், வட இந்தியாவில் வீரர்களையும், மக்கள் சமுதாயத்தின் ஒரு பகுதியின் தலைவராக இருப்பவர்களையும் குறிக்கும். சர்தார் என்னும் அந்தப் பொதுப்பெயர் ஒரு தனி நபருக்கு உரியதாகிவிட்டது... ஐரோப்பாவில் பலம் பொருந்திய நிர்வாகத்திற்கு அடிகோலிய பிஸ்மார்க்கைப் போல, இந்தியாவின் வரலாற்றில் வல்லபாய் பட்டேல் என்றென்றும் நிலைக்கக் கூடிய இடத்தைப் பெற்றிருக்கிறார்... அவரையே முன்மாதிரியாகக் கொண்டு பொது வாழ்விலும், போராட்டங்களிலும் ஈடுபட்டுத் தமிழ்நாட்டுக்கு நிலைத்த பெருமை தேடித் தந்தவர் அ.வே. மன்னர்களையெல்லாம் சாதாரண மக்களாக ஆக்கியவர் சர்தார் வல்லபாய் பட்டேல். மூலையில் உள்ள வேதாரண்யத்தை முழு உலகமும் அறியும்படி செய்தவர் சர்தார் வேதரத்தினம்" (பக். 8-9) என்று வடநாட்டுச் சர்தாரையும், தென்னாட்டுச் சர்தாரையும் ஒப்பிட்டுக் காட்டி மறைக்காட்டு மாணிக்கம் ஆன வேதரத்தினத்தைத் தமக்கே உரிய பாங்கில் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளார் சோமலெ.

## 'சிறையில் முந்தி இருப்பச் செயல்'

திருமறைக்காட்டுக் கோயிற்பணிகளைச் செய்து வந்த சர்தார் வேதரத்தினத்தின் தந்தை அப்பாக்குட்டிப் பிள்ளை வீரம் மிக்கவராக விளங்கினார். அப்பாக்குட்டிப்பிள்ளை எத்தகைய இயல்பு படைத்தவர் என்பதற்கு ஒரு நிகழ்ச்சியைச் சான்றாக எடுத்துக் காட்டுகிறார் சோமலெ. அந்நிகழ்ச்சி வருமாறு:

"வேதாரண்யம் உப்புச் சத்தியாக்கிரகத்தில் இக்குடும்பத்தினருடைய சொத்துக்களை ஆங்கிலேய அரசு பறிமுதல் செய்ததாலும், அ.வே. சிறை சென்றதாலும், இக்குடும்பத்திற்குப் பெருத்த பொருள் நஷ்டம் ஏற்பட்டது. ஒவ்வொரு நாளும் குடும்பத்தை நடத்துவது பெரிய பிரச்சினையாக இருந்தது. பொருள் முட்டுப்பாடு ஒரு பக்கம். அதிகாரிகளின் தொல்லை மற்றொரு பக்கம். இந்த நிலையில் அதிகாரிகள் அ.வே.வின் 96 வயதான தந்தை அப்பாக்குட்டிப் பிள்ளை அவர்களைச் சந்தித்தனர். 'தங்கள் மகனிடம் சொல்லி மன்னிப்புக் கேட்கச் செய்தால் பறிமுதல் செய்யப்பட்ட சொத்துகள் அனைத்தையும் திருப்பித் தருவோம்' என்று மேலதிகாரிகளின் சார்பாகக் கூறினர். 'என் அன்பு மகன் மன்னிப்புக் கேட்டு அவமானத்துடன் வெளிவருவதை விட, சிறையிலேயே இருக்கட்டும்' என்று 96 வயது அப்பாக்குட்டிப் பிள்ளை அறிவித்து விட்டார்" *(ப. 25)*.

'தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து, முந்தி இருப்பச் செயல்' *(குறள் : 67)* என்னும் குறட்பா, அப்பாக்குட்டிப் பிள்ளையின் தனிப்பெருஞ் செயலால், 'தந்தை மகற்கு ஆற்றும் நன்றி *(நாட்டுக்காக)* சிறையில் முந்தி இருப்பச் செயல்' என்றாயிற்று!

## 'வேதாரண்யக் காண்டத்தின் நாயகன்'

காந்தியடிகள் நடத்திய இந்திய விடுதலைப் போரில் உப்புச் சத்தியாக் கிரகமே மிகவும் முக்கியமான கட்டம் ஆகும். அத்துடன் ஆங்கிலேய ஏகாதிபத்தியம் அழிந்து விட்டது. 1934-க்குப் பிறகு ஏற்பட்ட இயக்கங்களும், கிடைத்த வெற்றிகளும் உப்புச் சத்தியாக்கிரகத்தின் பலன்கள் தாம். இத்தகைய சிறப்பு மிக்க சத்தியாக்கிரகம், தமிழ்நாட்டில் வெற்றி பெற்றதற்கு சர்தார் வேதரத்தினம் தான் காரணம் என்பதையும், அதை அவர் எவ்வாறு நடத்திக் காட்டினார் என்பதையும் நூலில் விரிவாக விளக்கிச் சென்றுள்ளார் சோமலெ.

"உப்புச் சத்தியாக்கிரகத்தை மகாத்மா காந்தி குஜராத் மாநிலத்திலுள்ள தண்டியில் நடத்தினார். அது போன்ற ஓர் இயக்கம் இந்தியாவில் தமிழ்நாட்டில் மட்டுமே நடத்தப்பெற்றது. நடந்த இடம் வேதாரண்யம். நடத்துவதற்கு அனைத்து ஏற்பாடுகளையும் செய்தவர் - அந்தப் போராட்டம் வெற்றியாக அமையக் காரணமாக இருந்தவர் - சர்தார் வேதரத்தினம். இயக்கத்துக்குத் தலைமை தாங்கியவர் இராஜாஜி... இராம

காதையில் சுந்தர காண்டத்தின் நாயகன் அனுமன் என்பது போல, நம் நாட்டின் சுதந்திரப் போரில் வேதாரண்யக் காண்டத்தின் நாயகன் அ.வே. என்று சொல்லலாம்" *(பக். 135, 142)* என்று சோமலெ குறிப்பிடுவதில் இருந்து, இந்நிகழ்ச்சியில் சர்தாரின் பங்கு எவ்வளவு முக்கியமானது என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

## 'பாரத மாதாவின் விலங்கை ஒடித்த வேதாரண்யம்'

குடியரசுத் தலைவர் பாபு இராஜேந்திர பிரசாத் 1951-ஆம் ஆண்டு அளித்த விருந்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது, நாகப்பட்டினம் நாடாளுமன்ற உறுப்பினர் தம் தொகுதி 'வேதாரண்யம்' என்று குறிப்பிட்டாராம். உடனே குடியரசுத் தலைவர், 'வேதாரண்யமா? அது ஒரு சரித்திரப் பிரசித்தி பெற்ற ஊர் அல்லவா? பாரத மக்கள் சுதந்திரத்தைப் பார்க்க, அண்ணல் நடத்திய சத்தியாக்கிரகத்தில் அணிவகுத்து, இந்தப் பாரத மண்ணின் மானத்தைக் காத்த, பாரத மாதாவின் விலங்கை ஒடித்த வேதாரண்யம் பகுதியைச் சேர்ந்தவரா தாங்கள்?' என்று கேட்டாராம். முத்தாய்ப்பாக, "அ.வே.வைப் பெற்றெடுத்தால் வேதாரண்யம் இன்று பெரும்புகழ் அடைந்திருக்கிறது" என்று சுட்டிக் காட்டுகிறார் சோமலெ *(ப. 144)*.

*தேச பக்தராய், தியாகியாய், போராட்ட வீரராய், பன்மொழிப் புலவராய்,* சகலகலா வல்லவராய், பண்பின் பாதுகாவலராய், கல்வியாளராய், அருளாளராய் சர்தார் வேதரத்தினம் விளங்கிய சிறப்பினையும் சீர்மையினையும் இந்நூலில் நன்கு எடுத்துக்காட்டியுள்ளார் சோமலெ.

'பண்டிதமணி', 'விவாசய முதலமைச்சர்', 'தமிழ்நாட்டில் ஒரு சர்தார்' என்னும் அழகிய தலைப்புக்களில் சோமலெ எழுதியுள்ள மூன்று வாழ்க்கை வரலாற்று நூல்களும் இன்றைய இளைஞர்களும் அடுத்த தலைமுறையினரும் அறிந்து கொள்ளவேண்டிய நல்லவர்களைப் பற்றியே எழுந்துள்ளன. சிறந்த வாழ்க்கை வரலாற்று நூல்கள் எங்ஙனம் எழுதப்பெறல் வேண்டும் என்பதை இந்நூல்கள் நன்கு எடுத்துக்காட்டுகின்றன. சுருங்கக் கூறின், தமிழக வரலாற்றில் மும்மணிகளாக விளங்கிய மூவரைப் பற்றிய சிறந்த நூல்களைப் படைத்துத் தந்ததன் *வாயிலாக வாழ்க்கை வரலாற்று* இலக்கியத்திற்கு வளம் சேர்த்துள்ளார் சோமலெ.

# 5

# இதழியல் கையேடு

"தமது ஆய்வின் பயனாகத் தோன்றிய சில கருத்துகளையும் தேவைகளையும் ஆங்காங்கே வெளியிட்டு அனைவரையும் சிந்திக்கத் தூண்டியிருக்கிறார் திரு. 'சோமலெ'." - நெ.து. சுந்தரவடிவேலு*

1974-ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத்தில், சோமலெ, கல்கி அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்; சொற்பொழிவுகள் மூன்று நாட்கள் நிகழ்ந்தன. இவையே 'தமிழ் இதழ்கள்' என்னும் நூல் வடிவில் வெளிவந்துள்ளன.

முதல் நாள் சொற்பொழிவில் சோமலெ, 'தமிழ் இதழ்களும் தமிழும்' என்னும் தலைப்பில், தமிழ்ப் பத்திரிகைகளின் தோற்றம், வளர்ச்சி பற்றியும், அவை எந்த அளவுக்குத் தமிழ் நடையை உருவாக்கியுள்ளன என்பது பற்றியும் விரிவாக விளக்கினார்; இரண்டாம் நாள் பொழிவில், முன்னோடியாக விளங்கும் வார இதழ்கள், திங்கள் இதழ்கள் சிலவற்றைப் பற்றியும், அவற்றின் ஆசிரியர்களைப் பற்றியும் எடுத்துரைத்தார்; மூன்றாம் நாள் பொழிவில், இலக்கிய வளர்ச்சிக்காகத் தொடங்கப்பெற்று, காலச் சூழ்நிலையால் நின்றுபோய்விட்ட சில வார, மாத இதழ்கள் பற்றி உரை நிகழ்த்தினார்.

## இதழியல் ஈடுபாடு

அறக்கட்டளைச் சொற்பொழிவின் தொடக்கத்தில், "இந்தத் தலைப்பில் பேச நான் ஒரு பத்திரிகைக்காரன் அல்லன். எந்த இதழையும் நான் நடத்தியதும் இல்லை" என்று தன்னடக்கத்துடன் கூறிக்கொண்டாலும், சோமலெவுக்குப் பத்திரிகைத் துறையின் மீது நீண்ட காலமாகவே ஈடுபாடு இருந்து வந்திருக்கிறது. "1953 முதல் நான் சிந்தித்து வந்திருக்கும் ஒரு பொருளைப் பற்றிய கருத்துக்களுக்கு எழுத்து வடிவம் கொடுக்கவும் அக்கருத்துக்களை ஆராய்ச்சியாளர் முன் படைக்கவும் வாய்ப்புக் கிடைத்தமைக்கு மீண்டும் என் நன்றியைப் புலப்படுத்திக் கொள்கிறேன்" (ப. xvi) என்று நன்றியுரையில் சோமலெ குறிப்பிடுவதிலிருந்து அவர் 1953 முதல் இதழியலில் ஈடுபாடு கொண்டிருந்தமையை அறிய முடிகிறது. மேலும்,

---

* 'அணிந்துரை', சோமலெயின் 'தமிழ் இதழ்கள்', p. vii.

1955-ஆம் ஆண்டில் 'தமிழ்ப் பத்திரிகைகள் பற்றிய ஒரு சுருக்கமான மதிப்பீடு' (A Brief Survey of the Tamil Press) என்னும் தலைப்பில், 'தமிழ்ப் பண்பாடு' (Tamil Culture) என்னும் இதழில் அவருடைய ஆங்கிலக் கட்டுரை ஒன்று வெளிவந்துள்ளது. 1956-ஆம் ஆண்டு வெளியிட்ட 'வளரும் தமிழ்' என்னும் நூலிலும் அவர் 'செய்தித் தாள்கள்' என்னும் தலைப்பில் ஓர் இயலை எழுதியுள்ளார். மூன்று அறக்கட்டளைச் சொற்பொழிவுகளும் சேர்ந்து நூலில் 95 பக்கங்களில் அமைந்துள்ளன; ஆனால், 110 பக்கங்களில் 26 பிற்சேர்க்கைகள் நூலின் பின்னால் இணைக்கப்பட்டுள்ளன. சோமலெயின் இதழியல் ஈடுபாட்டைப் புலப்படுத்துவதற்கு இதுவே போதுமான சான்றாகும்.

இன்று பல்வேறு பல்கலைக்கழகங்களில் இதழியல் பட்டப் படிப்பாகவும், பட்டயப் படிப்பாகவும் இடம்பெற்றுள்ளது. எனவே இதழியல் பற்றிப் பற்பல நூல்கள் வெளிவந்துவிட்டன. இதழியல் பற்றிய ஆய்வு முயற்சிகளும் மிகுதியாக மேற்கொள்ளப் பெற்றுவிட்டன. ஆனால், இதழியல் பற்றிய அறிமுகம் போதிய அளவு இல்லாத ஒரு காலகட்டத்தில், விரிவான பல பிற்சேர்க்கைகளுடன், இதழியல் பற்றிய ஒரு முழுமையான கையேடாகத் 'தமிழ் இதழ்கள்' என்னும் நூல் விளங்குவது, சோமலெவுக்குப் பெருமை தேடித்தருவதாகும்.

## பத்திரிகைத் துறையின் முதன்மை

இது தகவல் யுகம் (Age of Communication). 'காலை எழுந்தவுடன் படிப்பு' என்னும் பாரதியின் வாக்கோடு பத்திரிகையைச் சேர்த்துக் கொள்ளலாம். அந்த அளவிற்குப் பத்திரிகை இன்று நம் அன்றாட வாழ்வுடன் பின்னிப் பிணைந்துள்ளது. "வாழ்வோடு இணைந்து, பெருவளர்ச்சி பெற்றுத் திகழ்கிறது பத்திரிகைத் துறை. நாழிகைதொறும் வளர்ந்து வரும் அறிவியலால் ஆக்கம் பெற்று, மலர்ந்து வரும் மக்களாட்சி முறையில் ஊக்கம் அடைந்து, மக்களை ஈர்க்கும் ஆற்றல் படைத்து விளங்குகிறது பத்திரிகைத் துறை. பத்திரிகை படிக்காத நாளெல்லாம் பிறவாத நாளே என்னும் அளவுக்கு மக்களின் அன்றாட நடைமுறையில் பத்திரிகை இடம் பெற்றுவிட்டது'' (ப. 5) என்று நூலின் தொடக்கத்தில் சோமலெயும் பத்திரிகைத் துறையின் முதன்மையை - அதன் இன்றியமையாமையை - எடுத்துரைத்துள்ளார். ஆனால், ஒரு பத்திரிகையைத் தொடங்கி நடத்துவது என்பது இன்றைக்கும் கூட ஓர் அரிய செயலே எனலாம். இதை ஒரு சுவையான குட்டிக்கதையின் வாயிலாகப் புலப்படுத்தியுள்ளார் சோமலெ. "நீங்கள் ஏன் ஒரு பத்திரிகை தொடங்கக்கூடாது?" என்ற கேள்வி கேட்கப்பட்டபோது சோமலெ, "தொடங்கி மூடுவதை விடத் தொடங்காமல் இருப்பதே சாலச் சிறந்தது. பத்திரிகை நடத்துவதில் உள்ள இடர்ப்பாடுகளை, நேரமிருந்தால் கடைசி நாளில் விளக்குவேன். இப்போது ஒரு கதை மட்டும் சொல்லுவேன்'' என்று கூறி அக்கதையைக் குறிப்பிட்டுள்ளார். அக் கதை வருமாறு :

"ஒருவன் பெரிய கோடீசுவரனாக இருந்தான். பணத்தை எப்படிச் செலவு செய்வது என்று அவனுக்குத் தெரியவில்லை.

கோயில்கள் கட்டினான். அதிலும் அவன் செலவு செய்ததற்கு மேல் உண்டியலில் பணம் சேர்ந்தது. குளங்கள் வெட்டினான். அவற்றிலிருந்து புதையல் கிடைத்தது. கல்விச் சாலைகள் நிறுவினான். அவற்றையும் அரசாங்கம் எடுத்துக்கொண்டு நஷ்ட ஈடு கொடுத்தது. இவ்வாறு அறச்செயல்கள் செய்துங்கூட, அவனுடைய பணம் குறையவில்லை.

தேர்தலுக்கு நின்றான். அதில் கூட அவனுடைய பணத்தில் ஒரு பகுதிதான் அழிந்தது. குதிரைப் பந்தயத்துக்குச் சென்றான். அவன் கட்டிய குதிரைகள் எல்லாம் வெற்றி பெற்றன.

பிறகு சூதாட்டமான பல தொழில்களைச் செய்தான். ஒன்றிலும் அவன் பணம் கரையவில்லை.

கடைசியாக விளம்பர ஆசை மேலிட்டு, ஒரு பத்திரிகையைத் தொடங்கினான். பத்து ஆண்டுகளில் பணம் முழுவதும் காலியாயிற்று" (பக். 1-2).

ஒரு பத்திரிகையைத் தொடங்கி நடத்துவதில் உள்ள இடர்ப்பாடுகளை விளங்கிக் கொள்ளுவதற்கு இக் குட்டிக் கதையே போதுமானதாகும்.

## செய்தி எது?

பத்திரிகை உலகில் கேட்கப்படும் ஓர் அடிப்படையான கேள்வி 'எது செய்தி?' என்பது. சோமலெ இக் கேள்விக்கு மிக எளிமையாக, எல்லோர்க்கும் விளங்கும் ஓர் உதாரணத்தைக் கொண்டு பதில் கூறியுள்ளார். அவரது கருத்தில் செய்தி என்பதற்கான விளக்கம் வருமாறு :

"நியூஸ் (News) என்னும் ஆங்கிலச் சொல் New அல்லது புதியது என்பதன் பன்மையாகும். N என்பது North அல்லது வடக்கையும், E என்பது East அல்லது கிழக்கையும், W என்பது West அல்லது மேற்கையும், S என்பது South அல்லது தெற்கையும் குறிக்கும். எனவே News என்பது நான்கு திக்குகளிலும் புதிதாக நிகழ்ந்தவற்றைச் சுட்டும்...

பத்திரிகைக் கல்வி வகுப்பில் சொல்லிக் கொடுக்கப்படும் முதல் பாடம் வருமாறு:

"நாய் மனிதனைக் கடிப்பது செய்தியன்று. அது நாயின் இயல்பு. அன்றாட நிகழ்ச்சி. மனிதன் நாயைக் கடிப்பது அபூர்வமாக, மிக அரிதாக நடைபெறக் கூடியது. எனவே அது செய்தி. அதைக் கொட்டை எழுத்தில் வெளியிட வேண்டும்" (ப. 9). இந்த விளக்கத்திற்கேற்பத் தமிழ்ப் பத்திரிகைகள் இயங்குகின்றன என்பதையும் தொடர்ந்து எடுத்துக்காட்டுகிறார் சோமலெ.

## பத்திரிகை இயக்கத் தலைவர்கள்

பக்தி இயக்கம், தனித்தமிழ் இயக்கம், விடுதலை இயக்கம் என்றாற் போல், 'பத்திரிகை இயக்கம்' என்னும் ஒரு புதிய தொடரைக் கையாண்டுள்ளார் சோமலெ. 'பத்திரிகை இயக்கத் தலைவர்கள்' என்று

ஏழு பெயர்களை அவர் இப்பகுதியில் சுட்டிக்காட்டியுள்ளார். 'தமிழ்ப் பத்திரிகை உலகின் தந்தை' ஜி. சுப்பிரமணிய ஐயர், 'தமிழ்த் தென்றல்' திரு.வி.க., டாக்டர் பா. வரதராஜுலு நாயுடு, ஆசிரியர் டி.எஸ். சொக்கலிங்கம், பெரியார் ஈ.வெ.ரா., திரு. ஏ.என். சிவராமன், திரு. சி.பா. ஆதித்தன் ஆகியோரே சோமலெ குறிப்பிடும் ஏழு பத்திரிகை இயக்கத் தலைவர்கள் ஆவர். இத் தலைவர்களின் தனிச்சிறப்பையும் பத்திரிகை வளர்ச்சிக்கு அவர்கள் ஆற்றிய அருந்தொண்டினையும் தக்க சான்றுகளுடன் தம் பொழிவில் எடுத்துக் காட்டியுள்ளார் சோமலெ.

"சுதேசமித்திரனை வார இதழாகத் தொடங்கி, பிறகு நாளிதழாக ஆக்கியவர் இவரே... தமிழ் மக்களிடையே அரசியல் உணர்வும் காந்தியமும் வேரூன்ற அவர் அரும்பாடுபட்டார். ஆங்கிலம் தெரியாத தமிழர்களுக்கு அரசியல் அறிவு ஊட்டியவர் அவரே ஆவார்... தேசிய உணர்ச்சியைப் பரப்புவதிலேயே கண்ணுங் கருத்துமாய் இருந்தார்" *(பக். 12-13)* என்பது ஜி. சுப்பிரமணிய ஐயரைப் பற்றிய சோமலெயின் மதிப்பீடு. ஜி. சுப்பிரமணிய ஐயரின் பத்திரிகைப் பணியை, அவருக்கு இருந்த ஆழ்ந்த தேசிய உணர்ச்சியை, அதை மக்களிடம் பரப்ப அவர் எடுத்துக்கொண்ட அருமுயற்சியை இங்கே அழகுற எடுத்துக் காட்டியுள்ளார் சோமலெ.

'தமிழ்த் தென்றல்' திரு. வி.க. 1917-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் 1920-ஆம் ஆண்டு ஜுன் மாதம் வரை 'தேச பக்தன்' என்ற நாளிதழையும், 1920 அக்டோபர் முதல் 1933 இறுதி வரை 'நவசக்தி' என்ற நாளிதழையும் நடத்தியவர். சோமலெ இப்பத்திரிகைகளின் சிறப்பியல்புகளாக மூன்றினைச் சுட்டிக் காட்டுகின்றார். அவை வருமாறு:

"1. இவை வெளியிட்ட கருத்து
2. இவற்றின் நடை
3. இவை தந்த பல்வகை அறிவு"

சோமலெயின் கருத்தில், 'நல்ல தமிழை எழுத வேண்டும் என்னும் எண்ணத்தைப் பத்திரிகை உலகில் உண்டாக்கியது திரு.வி.க.வின் தனிப் பெருஞ் சாதனை' ஆகும். மேலும் திரு.வி.க.வின் பத்திரிகை நடையில் காணப்பெற்ற தனித்தன்மைகளையும் அவர் நன்கு எடுத்துக் காட்டியுள்ளார். "கருத்துக்களைத் தொகுத்து, ஒரு கவர்ச்சியான தலைப்பிட்டு, அவற்றை வகை செய்து பல உட்பிரிவுகள் ஏற்படுத்தி, ஒவ்வோர் உட்பிரிவையும் பின்பு விளக்கி எழுதுகின்ற அவரது முறை சிறப்பானது. சிறு சிறு சொற்றொடர்கள், அலசி விளக்கும் பாங்கு, அருந்தமிழ்ச் சொற்கள் இவற்றையும் திரு.வி.க. நடத்திய இதழ்களில் காணலாம்" *(ப. 18)* என்பது திரு.வி.க.வின் மொழிநடை பற்றிய சோமலெயின் மதிப்பீடு ஆகும்.

முத்தாய்ப்பாக, திரு.வி.க.வின் நடைப்போக்கினைப் புலப்படுத்தும் வகையில் ஒரு சுவையான நிகழ்ச்சியையும் சோமலெ சுட்டிக்காட்டியுள்ளார். அந்நிகழ்ச்சி வருமாறு:

"ஒருநாள் நவசக்தி அலுவலகத்தில் துணை ஆசிரியராக இருந்த கல்கியிடம் அச்சுக் கோக்கும் தலைமை ஊழியர் வந்து, 'இன்று யார் தலையங்கம் எழுதப் போகிறார்கள்?' என்று கேட்டாராம். 'ஏன் அப்பா, நீ அதைக் கேட்கிறாய்? வழக்கம் போலத்தான். ஐயா (திரு.வி.க.) தலையங்கம் எழுதுவார், நான் துணைத் தலையங்கம் எழுதுவேன்' என்றாராம் கல்கி.

'அப்படியானால் இன்று நமது பத்திரிகை வராது' என்று அந்த ஃபோர்மன் சொல்லிவிட்டாராம். காரணம் என்ன என்று வினவ, அவர் சொன்ன பதில் இதுதான்:

'ஆச்சரியக் குறியாகப் போட்டுத் தள்ளி விடுவார். இங்கு டைப் இல்லை. ஆகையால் ஆச்சரியக் குறி டைப் 5 பெட்டியும், கேள்விக் குறி டைப் 2 பெட்டியும் உடனே டைப் பவுண்டரியிலிருந்து வரவழைத்தால் தான் பத்திரிகை வரும்'" (ப. 19).

டாக்டர் பா. வரதராஜுலு நாயுடு, பெரியார் ஈ.வெ.ரா., டி.எஸ். சொக்கலிங்கம், ஏ.என். சிவராமன் போன்ற பத்திரிகை இயக்கத் தலைவர்கள் அனைவரும் ஒழுக்கத்தால் உயர்ந்தவர்களாக இருந்தார்கள். அவர்களுடைய சொல்லுக்கும் செயலுக்கும் வேறுபாடு இராது. சிக்கலான பிரச்சினைகளையும் எளிய தமிழில் மக்கள் மனத்தில் பதியும் வண்ணம் தெளிவாகவும் விளக்கமாகவும் அழுத்தமாகவும் எடுத்துக்கூறும் ஆற்றல் படைத்தவர்களாக அவர்கள் இருந்தார்கள். அதனால் அவர்கள் நடத்திய பத்திரிகைகளுக்கு-அவர்களுடைய தலையங்கங்களுக்கு - தனிமதிப்பு இருந்தது. இன்னும் சொல்ல வேண்டும் என்றால், முதலில் பத்திரிகைத் தலையங்கத்தையே விரும்பிப் படிக்கும் வாசகர்களும் இருந்தனர். தமிழ்ப் பத்திரிகை உலகில் பெரியாருக்குச் சிறப்பிடம் உண்டு. பத்திரிகையின் தேவைக்கு ஏற்ப, எழுத்துச் சீர்திருத்தம் செய்ய முன்வந்தவர் பெரியாரே எனச் சுட்டும் சோமலெ, "பெரியாருடைய எழுத்துச் சீர்திருத்தத்தை ஏற்பதே தமிழக அரசு அவருக்கு நாட்டக்கூடிய உண்மையான நினைவுச் சின்னமாகும்" (ப. 27) என்றும் குறிப்பிட்டிருப்பது மனங்கொளத்தக்கது. இன்று, பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தம் தமிழக அரசாலும் பத்திரிகை உலகாலும் முழுமையாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பது, சோமலெயின் தொலைநோக்கினைப் புலப்படுத்துவதாகும்.

பத்திரிகை இயக்க வரலாற்றில் சி. பா. ஆதித்தனாரின் பணியும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க ஒன்று ஆகும். சாதாரணக் கூலியாள், ரிக்ஷா இழுப்பவன் போன்றோரையும் பத்திரிகை படிக்கச் செய்தவர் அவர். எனவே, ஆதித்தனார், அவர்களுக்கு அக்கறையும் ஆர்வமும் உள்ள செய்திகளை மட்டும் வெளியிடுவார்; அவர்களுக்குப் புரியும் நடையையே கையாளுவார். சி. பா. ஆதித்தனாரின் பத்திரிகைப் பணியைப் பற்றிக் குறிப்பிடும் இடத்தில், "மக்கள் தமிழ் என்ற புதிய தமிழை ஆதித்தனார் உருவாக்கியிருக்கிறார். புலவர் தமிழைக் கல்கி எளிய தமிழாக்கினார். அதைத் 'தினத்தந்தி' மக்கள்

தமிழ் ஆக்கிற்று" (ப. 32) என்று கூறி, அதற்கான சான்றையும் தந்துள்ளார் சோமலெ.

| புலவர்களின் தமிழ் | கல்கியின் தமிழ் | மக்கள் தமிழ் |
|---|---|---|
| புள் | பறவை | குருவி |

கையேடு (Style book) வெளியிட்டிருப்பதும் 'தினத்தந்தி' யின் தனிச் சிறப்பு ஆகும். ஒரு பத்திரிகையாளர் எத்தகைய சொற்களைப் பயன்படுத்தலாம், பதிப்பு முறை யாது, என்ன என்ன சொற்களைத் தவிர்க்க வேண்டும், எவ்வாறு எழுதினால் எல்லோருக்கும் புரியும் என்பன போன்ற பயனுள்ள செய்திகள் இதில் இடம்பெற்றுள்ளன. இதில் காணப்படும் சட்ட திட்டங்கள், விதிகள் ஆகியவற்றை வழிகாட்டியாகக் கொண்டே ஒவ்வொரு நாளும் உதவி ஆசிரியர்கள் தினத்தந்தியை உருவாக்குகிறார்கள் என்னும் குறிப்பையும் தந்துள்ளார் சோமலெ.

## தமிழ் நாளிதழ்களின் குறைகளையும் சுட்டல்

தமிழ்ப் பத்திரிகை உலகில் காணப்பெறும் பல நிறைகளையும் தனித் தன்மைகளையும் பாராட்டிக் கூறும் சோமலெ, அதன் குறைபாடுகளையும் சுட்டிக் காட்டத் தவறவில்லை. "பொதுவாக, தமிழ் நாளிதழ்களின் தரம் குறைவு; அருகேயுள்ள கேரளத்தில் வெளிவரும் மலையாள மொழி நாளிதழ்களோடு ஒப்பிட்டால் மலையாள இதழ்களின் தரம் சிறந்தது. அங்கு இனக்கவர்ச்சிக்குச் சிறப்பிடம் கிடையாது. மற்றும் ஒரு குறைபாடு. தமிழ் நாளிதழ்களைப் படிப்பவர்களில் சிலர், தமிழ் இதழைப் படிப்பதோடு நிற்பதில்லை. ஓர் ஆங்கில இதழையும் படிக்கிறார்கள். காரணம், வெளிநாட்டுச் செய்திகளோ, பல துறைகளில் நிகழும் மாறுதல்களைப் பற்றிய குறிப்புக்களோ பெரும்பாலான தமிழ் இதழ்களில் வருவதில்லை. இதற்கு முற்றிலும் மாறாக, மலையாள நாளிதழ்கள், வாசகரின் அறிவுப் பசியைத் தீர்க்கும் அளவுக்கு எல்லாச் செய்திகளையும் தருகின்றன. எனவே அங்கு ஆங்கில இதழ்களைப் படிப்பவர்கள் தொகையை விரல் விட்டு எண்ணி விடலாம்" (ப. 37) என்னும் சோமலெயின் கருத்தினைத் தமிழ்ப் பத்திரிகை உலகை ஊன்றிக் கவனித்து வரும் எவரும் ஏற்கவே செய்வர். 'தமிழ்ப் பத்திரிகைகள் இனக்கவர்ச்சிக்குச் சிறப்பிடம் தராது, வாசகர்களின் அறிவுப் பசியைத் தீர்க்கும் அளவுக்கு அனைத்துச் செய்திகளையும் தர வேண்டும்' என்னும் சோமலெயின் விமர்சனக் குறிப்பு தமிழ்ப் பத்திரிகையாளர் அனைவரும் ஆழ்ந்து சிந்தித்துச் செயல்பட வேண்டிய ஒன்றாகும்.

## பத்திரிகை உலகில் தடம் பதித்த நால்வர்

சோமலெயின் இரண்டாம் நாள் சொற்பொழிவு கல்கி, ஆனந்த விகடன், குமுதம், தினமணி கதிர் ஆகிய வார இதழ்களின் ஆசிரியர்களாக விளங்கிய எஸ்.எஸ். வாசன், 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி, எஸ்.ஏ.பி., சாவி ஆகியோரது கொள்கைகளையும் பணிகளையும், அவர்களது ஆளுமையில்

காணப்படும் சிறப்பியல்புகளையும் எடுத்துரைக்கும் வகையில் அமைந்துள்ளது.

'எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே' என்னும் தாயுமானவரின் வாக்கைக் குறிக்கோள் வாசகமாகக் (Motto) கொண்டது 'ஆனந்த விகடன்' பத்திரிகை. அதன் ஆசிரியர் எஸ்.எஸ். வாசனுக்குத் தனிப்பட்ட ஒரு கொள்கை இருந்தது. 'தீயவை வழுக்கியும் வாயால் சொலல்' என்னும் வள்ளுவர் வாய்மொழியை நினைவூட்டுவது போல், எஸ்.எஸ். வாசன் தடை ஒன்று விதித்தார். "ஆனந்த விகடனில் வரும் எந்தக் கட்டுரையிலும் கவிதையிலும், பிணம், கோழை, சாம்பல் என்பன போன்ற சில சொற்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்பதே அந்தத் தடை. மங்கலமில்லாத சொற்களை விலக்க வேண்டும் என்று அவர் நினைத்தது வரவேற்கத்தக்கது" (ப. 43) என வாசனின் தனிப்பட்ட கொள்கையைப் புலப்படுத்தி, அதனை வரவேற்கவும் செய்கிறார் சோமலெ.

'ஆனந்த விகடன்' பத்திரிகையில் பணியாற்றிப் பின் அந்நிறுவனத்தை விட்டு வெளியேறிய நிலையில் 'கல்கி' என்னும் பெயரில் சொந்தப் பத்திரிகையைத் தொடங்கியவர் கிருஷ்ணமூர்த்தி. அவருடைய தனிச்சிறப்பு தொடர்கதைகளால் பல்லாயிரக்கணக்கான வாசகர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டது ஆகும். 'ஆனந்த விகட'னில் அவர் 'தியாக பூமி' என்ற தொடர்கதை எழுதி வந்த போது, ஆசிரியர் எஸ்.எஸ். வாசன், "தமிழ்நாட்டில் தொடர்கதைக்கு ஒரு மதிப்பும் அசையாத ஸ்தானமும் சம்பாதித்துக் கொடுத்தவர் கல்கி" என்று கூறியதை எடுத்துக் காட்டுகிறார் சோமலெ. மேலும், கல்கியின் வரலாற்றுப் பாத்திரங்களுக்கு மக்களிடையே அன்று இருந்த செல்வாக்கையும் அவர் சுட்டிக் காட்டத் தவறவில்லை. கல்கி இறந்து விட்டதாகச் சில பத்திரிகைகளில் தவறான செய்தி ஒன்று வெளிவந்து விட்டதாம். அப்போது "செத்தது தான் செத்தாரே, சிவகாமியின் சபதத்தை முடித்துவிட்டுச் செத்தாரா?" (ப. 46) என்று மக்கள் ஏங்கினார்களாம். படிப்பவர் உள்ளத்தை உருக்கும் இந்த நிகழ்ச்சியையும் தம் பொழிவில் தக்க இடத்தில் கையாண்டுள்ளார் சோமலெ.

கல்கியினுடைய பெருமைக்கெல்லாம் அடிப்படையாக விளங்கும் பண்புகள் ஐந்து. அவையாவன :

"1. ராஜாஜியிடமிருந்து அவர் பெற்ற அரசியல் அறிவு.
2. திரு.வி.க. விடம் அவர் பயின்ற பழந்தமிழ்
3. சதாசிவப் பண்டாரத்தாரிடம் அவர் கற்றுக் கொண்ட தமிழக வரலாறு.
4. ரசிகமணி டி.கே.சி.யுடன் பழகி அவர் அறிந்த மறுமலர்ச்சித் தமிழும் கம்ப ராமாயணத் தெளிவும்.
5. இசைக்குயில் எம்.எஸ். இடமிருந்து அவர் பெற்ற இசை அறிவு" (ப. 49)

கல்கியின் ஆளுமையையும் அவரது எழுத்தையும் சோமலெ எந்த அளவுக்கு ஊன்றிக் கவனித்திருக்கிறார் என்பதைப் பறைசாற்றவல்ல அரிய ஆய்வுக் கருத்து இது!

'இந்தியாவிலேயே வேறு எந்த வார இதழையும் விடக் கூடுதலான அளவு 'விற்பனையாகும் இதழ்' என்ற சிறப்பைப் பெற்றிருப்பது 'குமுதம்' ஆகும். குமுதத்தின் இந்த இமாலய வெற்றிக்குக் காரணம் அதன் திட்டமிடும் பாங்கே ஆகும். அதன் ஆசிரியரான எஸ்.ஏ.பி. அல்லும் பகலும் அதன் வளர்ச்சியிலேயே தம் சிந்தனையைச் செலுத்தி வருபவர். அவரது தனித்தன்மை யாது எனில், 'தன்னை மறந்தாள், தன்நாமம் கெட்டாள், தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே' என்று நாவுக்கரசர் பெருமான் தம் தாண்டகப் பாடல் ஒன்றில் கூறுவது போலத் தம்மை முன்னிறுத்தாது, புதிய எழுத்தாளர்களையும், தொடக்க நிலை எழுத்தாளர்களையும் ஊக்கப்படுத்தி, பத்திரிகை வளர்ச்சி ஒன்றிலேயே முற்ற முழுக்க ஈடுபாடு காட்டி வந்தமையே ஆகும். சோமலெயின் சொற்களிலேயே அதனைக் காண்பது இன்னும் சரியாகவும் சிறப்பாகவும் இருக்கும்.

"குமுதம் இதழை நடத்தும் திரு. எஸ்.ஏ.பி. நல்ல எழுத்தாளர். ஆயினும் அவர் ஏதாவது எழுதுவாரே தவிர, அவருடைய சொந்த ஆளுமையை (**Personality**) அதில் அவர் காட்டிக் கொள்வதில்லை. தகுதி நிறைந்த தம்முடைய உறவினர்களைப் பற்றிய செய்திகளையும் அவர் வெளியிடுவதில்லை. சான்று : ஜே.ஆர்.டி. டாட்டாவுக்கு முன்னரே, விமானம் ஓட்டும் லைசன்சு பெற்றவரும், சென்னை ஃபிளையிங் கிளப்பைத் தோற்றுவித்தவரும், இந்தியாவிலேயே சொந்த விமானம் வைத்திருந்தவர்களுள் முதல்வருமான அவருடைய சிறிய தந்தையார் எஸ்.ஏ.ஏ. அண்ணாமலைச் செட்டியாரைப் பற்றிக் கூட அவர் எழுதக் கூச்சப்பட்டார்" (ப. 51).

'ஆனந்த விகடன், 'வெள்ளி மணி', 'தினமணி கதிர்' ஆகிய பத்திரிகைகளில் பணியாற்றியவர் சாவி. அவருடைய தனித்தன்மை, இயல்பான நகைச்சுவையாகும். 'வாஷிங்டனில் திருமணம்' அவருடைய நகைச்சுவைத் திறத்திற்குக் கட்டியம் கூறும் படைப்பு. சாவியின் சிறப்பியல்பாகச் சோமலெ சுட்டுவது வருமாறு :

"எழுத்தாளர்களை ஊக்குவிப்பதிலும் தகுதியும் பண்பும் உடைய பலரைப் பாராட்டுவதிலும் இவர் கைதேர்ந்தவர்; சுற்றுலாத் துறையில் ஈடுபாடுடையவர்" (ப. 55).

இங்ஙனம் முக்கியமான நான்கு வார இதழ்களின் ஆசிரியர்களாக விளங்கி, பத்திரிகை உலகில் தடம் பதித்த நால்வரைப் பற்றிய தம் கருத்துக்களைத் திட்பமாகவும் நுட்பமாகவும் இந்நூலில் பதிவு செய்துள்ளார் சோமலெ.

## தமிழில் வெளிவந்த பல்வகை இதழ்கள்

மூன்றாம் நாள் சொற்பொழிவில் சோமலெ சில வார இதழ்கள், மாதம் இரு இதழ்கள் மற்றும் திங்கள் ஏடுகள் பற்றிய பல பயனுள்ள செய்திகளைத் தொகுத்தும் வகுத்தும் தந்துள்ளார்.

'ஆனந்த போதினி', 'பிரசண்ட விகடன்' என்ற காலத்தால் முற்பட்ட மாதம் இருமுறை இதழ்கள், 'செந்தமிழ்', 'ஞான சாகரம்', 'ஞான பானு', 'செந்தமிழ்ச் செல்வி', 'தமிழ்ப் பொழில்', 'கலா நிலையம்' போன்ற இலக்கிய இதழ்கள், 'மணிக்கொடி', 'கலைமகள்', 'பொன்னி', 'தமிழ்த் தென்றல்', 'தீபம்', 'கண்ணதாசன்', 'புதுமைக் குரல்', 'உமா', 'நண்பன்', 'அஞ்சுகம்', 'ஞான ரதம்', 'தென்மொழி' முதலான புதுமை இலக்கிய ஏடுகள், 'குயில்', 'எழிலோவியம்', 'சுரதா', 'கவிதை', 'முல்லைச் சரம்' ஆகிய கவிதை இதழ்கள், 'ஆராய்ச்சி', 'கொங்கு' என்னும் ஆராய்ச்சி இதழ்கள், 'ஞான சம்பந்தம்', 'குமரகுருபரன்', 'தியாக பூமி', 'திருக்கோயில்' போன்ற சமய இதழ்கள், 'மாத ஜோதிடம்', 'விதி', 'தலையெழுத்து' 'எதிர்காலம்' முதலான சோதிட இதழ்கள், பொருளாதாரம் மற்றும் தொழில்துறை சார்ந்த இதழ்கள், 'சக்தி', 'திங்கள்', 'கல்கண்டு' போன்ற பொது அறிவு இதழ்கள், 'மஞ்சரி', 'கூரியர்', 'குமரி மலர்', 'தாமரை', 'நூலகம்' போன்ற திரட்டு இதழ்கள், 'தமிழர் நேசன்', 'கலைக்கதிர்' போன்ற அறிவியல் இதழ்கள், எழுத்தாளர் ஏடுகள், 'ஊழியன்', 'குமரன்', 'இலக்கியம்', 'தமிழ்நாடு', 'நித்திலம்', 'நாடோடி' என்ற அரசியல் இலக்கிய ஏடுகள், மருத்துவத் துறை இதழ்கள், 'துக்ளக்' போன்ற அரசியல் கட்சிகளின் ஏடுகள், சமூக ஏடுகள், அரசினர் ஏடுகள், இந்திய அரசின் இதழ்கள், தொழிற்சாலை இதழ்கள் என்றாற் போல் நூற்றுக்கணக்கான இதழ்களின் பெயர்களையும், அவை பற்றிய செய்திகளையும் அரிதின் முயன்று தொகுத்துத் தந்துள்ளார் சோமலெ.

## தமிழ் இதழ்களின் நடை

மிக விரைவாகச் செய்திகளை வெளியிட வேண்டிய நெருக்கடி எழும் போது இதழ்களின் நடையில் சில குறைபாடுகள் இருக்கத்தான் செய்யும். அவை தவிர்க்க முடியாதவை. என்றாலும், வார இதழ்களிலும், மாத இதழ்களிலும் நல்ல தமிழ் கையாளப்பட வேண்டும் என்பதிலே சோமலெ உறுதியாக உள்ளார். அதே வேளையில், நாளிதழ், வார இதழ், மாத இதழ் என எந்த இதழை எடுத்துக் கொண்டாலும், ஐம்பது ஆண்டுக் காலத்தில் பத்திரிகைகளின் நடை மாறியிருக்கிறது என்பதையும் அவர் ஒப்புக் கொள்கிறார். "சமீப காலத்தில் சில பிரபல தமிழ்ப் பத்திரிகைகள் 'நியூ வேவ்' பாணியில் தரக்குறைவான கதைகளும், படங்களும் வெளியிட்டு நம் பண்பாட்டுக்கும் இலக்கியத் தரத்திற்கும் பெரும் கேடு விளைவித்து வருகின்றன... இதனால் நம் பெண்ணினத்தின் கௌரவத்திற்கும் பெரும் கேடு விளைகிறது" (பக். 91-92) என்று சில பத்திரிகைகள் பின்பற்றும்

தரக்குறைவான போக்கிற்கு எதிராகக் குரல் கொடுக்கவும் சோமலெ தவறவில்லை; தயங்கவும் இல்லை.

## தமிழ் இதழ்களின் விளைவுகள்

மூன்று சொற்பொழிவுகளின் நிறைவுப் பகுதியாக, 'தமிழ் இதழ்களின் விளைவுகள்' என்ற தலைப்பில் சோமலெ பதினான்கு கருத்துக்களைப் பட்டியல் இட்டுள்ளார். அக்கருத்துக்கள் இதழியல் துறையில் அவருக்கு உள்ள ஆழ்ந்த ஈடுபாட்டினையும், பரந்த அனுபவ அறிவையும் புலப்படுத்தி நிற்கின்றன. தமிழ் இதழ்களினால் ஏற்பட்ட முக்கியமான விளைவுகளாக அவர் சுட்டியிருப்பன வருமாறு :

"1. படிக்கும் பழக்கம் பெருகியிருக்கிறது
2. தமிழ் உரைநடை ஏற்றம் பெற்றிருக்கிறது.
3. கவிதை எளிமையாகியிருக்கிறது
4. எத்துறையைப் பற்றியும் சுவையாயும் இனிமையாயும் எழுதினால் படிப்பவர்களை ஈர்க்கலாம் என்பது உறுதியாகி இருக்கிறது.
5. இலக்கிய வகைகளில் சிறுகதை என்ற பிரிவே வாசகர் தொகையைப் பன்மடங்கு ஆக்கியிருக்கிறது.
6. வாசகரை இழுப்பதையே பத்திரிகைகள் தங்களுடைய நோக்கமாகக் கொண்டுள்ளன; திருத்துவது அன்று!
7. பத்திரிகைகளால் அரசியல் விழிப்பு பெரிய அளவில் ஏற்பட்டிருக்கிறது.
8. நாட்டுப் பற்றுப் போல் மொழிப் பற்று மக்களிடம் வேரூன்றி இருக்கிறது.
9. சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களை மக்களிடம் பத்திரிகைகள் பெரிதும் பரப்பியுள்ளன.
10. பத்திரிகைகளில் எது வெளிவந்தாலும் அது பிரச்சாரமாக இருக்குமோ அதில் ஏதாவது உள்நோக்கம் இருக்குமோ என்ற ஐயப்பாடு மக்களுக்கு ஏற்படுகிறது.
11. பெரும்பாலான மக்களுக்குப் பரவலான பொது அறிவு ஏற்பட்டிருக்கிறது.
12. பத்திரிகைகள் சிரிப்பூட்டி, தமிழ் மக்களுக்கு நகைச்சுவை உணர்ச்சி ஊட்டியுள்ளன.
13. பேச்சு நடையும், எழுத்து நடையும் இருவேறு உலகங்களாக இருந்த நிலை மாறி, இரண்டும் ஓரளவு நெருங்கி வருகின்றன. வட்டார வழக்குச் சொற்கள் எழுத்திலும் இடம் பெற்றுள்ளன.
14.. தமிழ்நாட்டைப் பற்றிய படப்பிடிப்பாகத் தமிழ் இதழ்களே, கடல் கடந்த நாடுகளில் வாழும் தமிழ் மக்களுக்குக் காட்சி தருகின்றன" (பக். 94-96).

## அணி வகுத்து நிற்கும் பிற்சேர்க்கைகள்

'செய்வன திருந்தச் செய்' என்பது ஆன்றோர் வாக்கு. தாம் எடுத்த எந்தக் காரியத்தையும் செம்மையாகத் திட்டமிட்டு, அதனைத் திருந்தச் செய்து முடிக்கும் திறம் படைத்தவர் சோமலெ. இதற்கு அடையாளமாக விளங்குபவை நூலின் உள்ளடக்கமான சொற்பொழிவுகளின் அளவை விடக் கூடுதலாகப் பின்னால் தரப்பட்டிருக்கும் பிற்சேர்க்கைகள் தாம். இப்பிற்சேர்க்கைகளில் சோமலெ அவ்வப்பொழுது பத்திரிகைகளுக்கு எழுதிய ஆங்கில, தமிழ்க் கட்டுரைகளும் உண்டு; ஆக்கூர் அனந்தாச்சாரி, மா.சு. சம்பந்தன், நா. பார்த்தசாரதி, இரா. நடராசன், முருகு. சுப்பிரமணியன், வையாபுரிப் பிள்ளை ஆகியோர் எழுதிய கட்டுரைகளும் உண்டு; 'தினமணி', 'தமிழ்நாடு' ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்த சுவையான தகவல்களும் உண்டு; சில பழைய இதழ்கள் பற்றிய அரிய விவரங்களும் உண்டு; தமிழ்நாட்டில் இருந்து வெளிவரும் இதழ்களின் பட்டியலும் உண்டு; சி.பா. ஆதித்தனாரின் 'நாள்-தாள் எழுத்தாளர் கையேடு' என்னும் வெளியீட்டில் இருந்து சில முக்கியமான பகுதிகளும் உண்டு; ஒவ்வொரு பத்திரிகையும் எவ்வளவு விற்பனை ஆகிறது என்பதைக் காட்டும் 'ஏ.பி.சி. (Audit Bureau of Circulations) சான்றிதழும் உண்டு; ஊடகங்களுக்கே உரிய 'கடைசிச் செய்தி'யும் உண்டு. இங்ஙனம் இதழியல் பற்றிப் பல்லாண்டுக் காலமாகத் தாம் சிந்தித்து வந்திருக்கும் கருத்துக்களுக்கு இந்நூலின் வாயிலாக நிலையான எழுத்து வடிவம் தந்துள்ளார் சோமலெ.

சுருங்கக் கூறின், இதழியல் துறையில் சோமலெ பெற்றிருந்த ஆழ்ந்த அனுபவத்தை இந்நூலின் பக்கந்தோறும் காணமுடிகின்றது. இந்நூல், இதழியல் ஆர்வலர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் ஒரு கையேடாகத் திகழும் தகுதி படைத்தது என்பது நெற்றித் திலகம்.

# 6

# நாட்டுப்புறவியல் முன்னோடி

"தமிழகத்தில் நாட்டுப்புறவியலை வளர்த்த முன்னோடிகளில் இவரும் *(சோமலெயும்)* ஒருவராவார்."
- சு. சக்திவேல்*

நாட்டுப்புறவியல் என்பது தமிழியலில் இன்று வளர்ந்து வரும் ஒரு துறை ஆகும். தொகுத்தல், வகைப்படுத்தல், கோட்பாடுகளை உருவாக்குதல் என மூன்று நிலைகளில் இன்று நாட்டுப்புறவியல் கல்வி வளர்ந்து வருவதைக் காண்கிறோம். அதே போல், நாட்டுப்புறவியலின் வகைகள், கோட்பாடுகள் ஆகியன குறித்து இன்று நிறைய நூல்கள் வெளிவந்து விட்டன. சோமலெ 1975-ஆம் ஆண்டிலேயே நாட்டுப்புறவியல் குறித்து ஆழமாகச் சிந்தித்துள்ளார். பாடல்கள், கதைகள், கதைப் பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள் என்னும் நாட்டுப்புறவியல் சார்ந்த வடிவங்களைப் பல ஊர்களுக்குச் சென்று பலரிடமிருந்து தொகுக்கும் முயற்சியில் அவ்வப் போது ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளார். இவ்வகையில் நாட்டுப்புறவியல் துறைக்கு அவர் அளித்திருக்கும் ஒரு நிலையான பங்களிப்பே 'தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும்' என்னும் நூலாகும். இந்தியாவின் சில முக்கியமான மாநிலங்களைச் சேர்ந்த மக்களின் மரபு, பண்பாடு ஆகியவற்றைப் புலப்படுத்தும் நூல்களை 'இந்திய மரபு - பண்பாட்டு வரிசை' என்னும் தலைப்பில் 'நேஷனல் புக் டிரஸ்ட்' நிறுவனம் வெளியிட்டு வந்தது. அவ் வரிசையில் 'Folklore of Tamil Nadu' என்னும் பெயரில் சோமலெ எழுதிய ஆங்கில நூலின் தமிழாக்கம் தான் இந்நூல்.

## நாட்டுப்புறவியலுக்குக் கிடைத்த ஏற்பும் ஏற்றமும்

சோமலெ சுட்டிக்காட்டுவது போல், "நாட்டுப் பாடல்களை ஐரோப்பியர்கள் தான் முதலில் தொகுத்தார்கள். அவற்றை ஒலிப்பதிவும் செய்தார்கள். அவை தீண்டப்படாத இலக்கியங்களாகக் கருதப்பட்டு, மரபு வழிவந்த தமிழ்ப் புலவர்களால் புறக்கணிக்கப்பட்டன. இப்போது அவை இலக்கியங்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, பல்கலைக்கழகங்களில் முதுகலைப் பாடத் திட்டத்திலும் ஆராய்ச்சியிலும் இடம்பெற்றிருக்கின்றன" (ப. 27).

---

* *ச. மெய்யப்பன் (பதிப்பாசிரியர்), சோமலெ, ப, 52.*

அண்மைக் காலத்தில் நாட்டுப்புறவியலுக்குக் கிடைத்திருக்கும் இந்த ஏற்பு-ஏற்றம் - சிறப்பாகக் குறிப்பிடத் தக்கதாகும். இதனைக் கருத்தில் கொண்டே சோமலெ நாட்டுப்புறவியல் ஆய்வில் தம் கவனத்தைச் செலுத்த முற்பட்டார். இம்முயற்சியின் விளைவாக வெளிவந்த நூலே 'தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும்' ஆகும்.

## நூலின் உள்ளடக்கம்

இந்நூல் 1. இடமும் மக்களும், 2. கற்பனைக் கதைகளும் இதிகாச புராணங்களும், 3. மதமும் மந்திரமும், 4. வழக்கங்களும் மரபுகளும், 5. தேரும் திருவிழாவும், 6. வாய்மொழி இலக்கியம், 7. பாமர மக்களின் இசையும் நடனமும், 8. தெருக்கூத்தும் பிற பொழுதுபோக்குகளும் என்னும் எட்டு இயல்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. 'வாய்மொழி இலக்கியத்திலிருந்து சில மேற்கோள்கள்' என்னும் பிற்சேர்க்கை நூலின் இறுதியில் இடம்பெற்றுள்ளது. திருவிழாக் காட்சி - தேர் இழுத்தல், ஒரு நாதஸ்வரக் கலைஞர், தாரை ஊதுதல், தப்பட்டை அடித்தல், கோலாட்டம், பின்னல் கோலாட்டம், காவடி நடனம், கரகம் ஆடுதல், பொய்க்கால் குதிரையாட்டம், ஜல்லிக்கட்டு நடனம், மயிலாட்டம், கோலம் ஆகிய நாட்டுப் புறக் கலைகளைக் காட்டும் பன்னிரண்டு நிழற்படங்களும் நூலில் ஆங்காங்கே இணைக்கப்பட்டுள்ளன. மேலும் எந்தெந்தக் கலைகள் எங்கெங்குச் சிறப்பாக நடைபெறுகின்றன என்பதைக் காட்டும் தமிழக வரைபடம் ஒன்றும் நூலின் இடையே இணைக்கப்பட்டுள்ளது. மக்களின் மரபு, பண்பாடு பற்றிப் பல செய்திகளைக் கூறி உதவிய 42 அறிஞர்களுக்கு நூலின் தொடக்கத்திலேயே நன்றி கூறிவிட்டு, நிறைவாகத் தமக்கு விடுகதைகளைத் தொகுத்துத் தந்ததற்காகத் தமது மகன் சோமசுந்தரத்துக்கும் நன்றியை உரித்தாக்கியுள்ளார் சோமலெ.

## சடங்குகள், வழிபாட்டு முறைகள் ஆகியவற்றின் உட்பொருளை உணர்த்தல்

பாமர மக்களுடைய ஒவ்வொரு நாள் வாழ்வும் மதத்தோடு பின்னிப் பிணைந்திருக்கிறது. பிறப்பு முதல் இறப்பு வரை அவர்களுடைய வாழ்க்கை முழுவதும் பல்வேறு சடங்குகளும், வழிபாட்டு முறைகளும் இடம் பெறுகின்றன. இச்சடங்குகளுக்கும் வழிபாட்டு முறைகளுக்கும் அடிநாதமாக ஓர் உட்பொருள் விளங்குவதை 'மதமும் மந்திரமும்' என்னும் இயலில் நுட்பமாக எடுத்துக் காட்டியுள்ளார் சோமலெ.

சான்றாக, பக்தர்கள் தங்கள் முதுகில் ஊக்குகள் குத்தி, அந்த ஊக்குகளுடன் இணைக்கப்பட்ட கயிற்றின் மூலம் சிறிய ரதம் அல்லது தேரை இழுத்தல், நெருப்பின் மீது நடத்தல், ஆணிகள் நீட்டிக் கொண்டிருக்கும் மரக் கட்டைகளைக் காலணிகளாகப் பயன்படுத்துதல், மலை வலம் வருதல், வீதியில் மண்ணில் புரண்டவாறே கோயிலை வலம்

வருதல் (அங்கப் பிரதட்சணம்) என்றாற்போல் இந்துக்கள் மேற்கொள்ளும் வழிபாட்டு முறைகளைச் சுட்டலாம். "மனிதனுடைய அகந்தையைக் குறைக்க ஏற்பட்ட பழக்கங்களே இவை . யாவும்" (ப. 49) என்று இவற்றின் உட்பொருளைச் சுட்டுகிறார் சோமலெ.

சோமலெ உணர்த்தும் பிறிதொரு உண்மையும் இங்கே மனங்கொளத் தக்கதாகும். தமிழ்நாட்டில் விநாயகரை வணங்கும் வழக்கம் மிகுதியாகக் காணப்படுகிறது. ஒரு கெடுதல் நேருவதைத் தடுக்கவோ, அல்லது ஏதாவது வேண்டிக் கொள்வதற்காகவோ அல்லது தங்கள் வேண்டுதல் நிறைவேறியதற்கு நன்றி செலுத்துவதற்காகவோ விநாயகரை நினைத்துத் தேங்காய்கள் துண்டு துண்டாகச் சிதறும்படி சூறை போடுவது மக்கள் வழக்கம். விநாயகருக்கு மிகவும் விருப்பமான இக்காணிக்கையின் உட்பொருள் என்ன என்று தெரியுமா?. "மனிதன் ஆன்மீக விடுதலை பெறுவதற்கு இடையூறாக அவனிடம் குடிகொண்டுள்ள முப்பெரும் தீய சக்திகளை அழிப்பதற்காகவே தேங்காய் சூறை போடப்படுகிறது" (ப. 50) என்று இவ்வழக்கத்தின் உட்பொருளை எடுத்துக் காட்டுகிறார் சோமலெ.

## நம்பிக்கைகளும் சகுனங்களும் சாத்திரங்களும்

பிறப்பு முதல் இறப்பு வரை மனிதனின் ஒவ்வொரு நாள் வாழ்விலும், ஒவ்வொரு சிறு செயலிலும் கூட, எத்தனையோ நம்பிக்கைகள், சகுனங்கள், சாத்திரங்கள் அவனை ஆட்டிப் படைக்கின்றன. "மெத்தப் படித்த மேதாவிகளும் பெருஞ்செல்வர்களும் அதிகாரத்தின் உச்சியில் உட்கார்ந்திருப்பவர்களும் சில சமயம் இவற்றை அலட்சியப்படுத்துவார்கள்; பிறகு அடுத்தடுத்து அவர்களுக்கு ஏதாவது தொல்லைகள் ஏற்படும். அவற்றுக்கு அறிவின் அடிப்படையில் ஆராய்ந்து காரணம் காட்ட முடியாது. கடைசியாக, அவர்களும் பாமரர்கள் போல இந்த நம்பிக்கைகளுக்கும் சகுனங்களுக்கும் சாத்திரங்களுக்கும் அடிமை ஆகிவிடுவார்கள். அப்போது அவர்கள் இந்தச் சடங்குகளில் காட்டும் வேகம், பாமரர்களின் ஈடுபாட்டைப் போலப் பன்மடங்காக மிளிரும்" (ப. 64) என்னும் சோமலெயின் கருத்து கசப்பாகத் தோன்றினாலும் எளிதில் மறுக்க முடியாத ஓர் உண்மையே ஆகும்.

நாட்டுப்புறங்களில் மக்களிடையே வழங்கி வரும் நம்பிக்கைகளும் சகுனங்களும் சாத்திரங்களும் ஏராளமாக உள்ளன. குழந்தைகள் பிறப்பது பற்றி - குழந்தைகளைப் பற்றி - கருவுற்ற பெண்ணைப் பற்றி - மறுபிறப்புப் பற்றி - பிரயாணத்தைப் பற்றி - எண்களைப் பற்றி - கிழமைகளைப் பற்றி - மாதங்களைப் பற்றி - மரணத்தைப் பற்றி - திக்குகளைப் பற்றி - திருமணத்தைப் பற்றி - கனவுகளைப் பற்றி - தொழில், வியாபாரம் பற்றி - கடவுளர், கோயில்கள் பற்றி - மக்களிடையே வழங்கி வரும் நம்பிக்கைகளுக்கு அளவே இல்லை. அரிதின் முயன்று பதினான்கு பக்க அளவில் (பக். 64-77) இவற்றைத் தொகுத்தும் வகுத்தும் தந்துள்ளார்

சோமலெ. பதச் சோறாக, குழந்தைகள் பிறப்பது பற்றி அவர் தொகுத்துத் தந்திருக்கும் நம்பிக்கைகள் சிலவற்றை இங்கே சுட்டிக்காட்டலாம் :

* "மூல நட்சத்திரத்தில் ஆண்பிள்ளை பிறப்பது நல்லது. ஆனால் இந்த நட்சத்திரத்தில் ஒரு பெண்குழந்தை பிறந்துவிட்டால், வீடு கண்ணீரும் கம்பலையுமாக இருக்கும். ஆண்மூலம் அரசாளும், பெண்மூலம் நிர்மூலம் என்பது பழமொழி.

* பரணியில் பிறப்பவன் தரணி ஆள்வான் என்பது மக்களுடைய நம்பிக்கை.

* அவிட்டத்தில் பிறந்தவள் தவிட்டுப் பானையைத் தொட்டாலும் தங்கம் இருக்கும் என்பது ஒரு நம்பிக்கை.

* பெண் குழந்தைகள் ஒற்றைப் படையாகப் பிறக்க வேண்டும். அதாவது முதல் குழந்தை, மூன்றாவது குழந்தை, ஐந்தாவது குழந்தைகள் பெண்ணாகப் பிறப்பது வரவேற்கத்தக்கது. நான்காவது பெண்ணால் குடும்பத்துக்குக் கேடு விளையும், ஐந்தாவது பெண்ணால் ஐசுவரியம் கிடைக்கும் என்பர்... ஆறாவது பெண்ணால் குடும்பம் செல்வத்தில் திளைக்கலாம், அல்லது வறுமையிலும் வாடக்கூடும். ஏழாவது பெண் பிச்சையெடுக்கப் போனால் கூட, அவளுக்கு ஒருவரும் பிச்சை போட மாட்டார்கள். எட்டாவது பெண் எட்டிப் பார்த்த இடமெல்லாம் குட்டிச்சுவர். பத்தாவதாகப் பெண் பிறந்தால், பணம் பஞ்சு போலப் பறந்துவிடும். இந்த நம்பிக்கைகளால், திருமணம் பேசும்போது, பெண் அல்லது பையன் எத்தனாவது குழந்தை என்று துருவித் துருவி விசாரிப்பார்கள். நாட்டுப் புறத்தில் இதை இன்றும் காணலாம். இரட்டைக் குழந்தைகள் - இரண்டும் ஆணாகப் பிறந்தால் - குடும்பத்துக்குப் பெருத்த யோகத்தைத் தருவார்கள் என்பர்... இரண்டும் பெண்குழந்தைகளாகப் பிறப்பதால் கெடுதல் இல்லை. ஆனால் பையனும் பெண்ணுமாகச் சேர்ந்து இரட்டைக் குழந்தைகளைப் பெற்றெடுப்பது நேரவிருக்கும் கெடுதலுக்கு முன்னோடி என்பர்" (பக். 64-66).

கண்படுதல் அல்லது கண்ணேறு படுவதைத் தடுப்பதற்காக மக்கள் கையாளும் பல்வேறு வழக்கங்களைப் பற்றியும் சோமலெ இவ்வியலில் சுட்டிக் காட்டியுள்ளார். கண்ணேறால் பாதிக்கப்பட்டவனை உட்கார வைத்து அவன் தலையைச் சுற்றி உப்பையும் மிளகாயையும் மும்முறை வலமாகச் சுற்றுவார்கள். இதை, 'திட்டி சுற்றல்' என்பர். பிறகு அந்த உப்பையும் மிளகாயையும் அடுப்பில் போட்டு எரித்து விடுவார்கள். எரியும்போது கெட்ட நாற்றம் உண்டானால், உரிய தாக்குதல் சமாளிக்கப்பட்டு விட்டதென்றும், யாருடைய கண் திருஷ்டி பட்டதோ அவனுக்கே இனி கேடு விளையும் என்றும் பொருள் கொள்ளலாம். வீடு கட்டிக் குடிபுகும் நாளில் கண்படுதலைத் தவிர்ப்பதற்காக வீட்டு வாசலில் பூசணிக்காயைத் தொங்கவிட்டு, அதில் மனிதனின் படத்தையும் வரைந்திருப்பார்கள். நன்கு விளைந்த வயல்களில் கண் திருஷ்டிக்குப் பரிகாரமாக, சோளக் கொல்லைப் பொம்மையை ஒரு கம்பில் நட்டு வைத்திருப்பார்கள். கடைக்காரர்கள் தங்கள் கடைகளில் இரண்டு கண்களைப்

படமாக வரைந்து தொங்கவிட்டு, 'என்னைப் பார் சிரி' என்று அதில் எழுதி வைத்திருப்பார்கள். இங்ஙனம் கள ஆய்வு (Field Work) மேற்கொண்டு மக்களிடையே வழங்கி வரும் பல்வேறு நம்பிக்கைகளையும் சகுனங்களையும் சாத்திரங்களையும் தொகுத்துத் தந்துள்ளார் சோமலெ.

## திருவிழாக்கள் கொண்டாடுவதன் நோக்கம்

தமிழ்நாடு கோயில்கள் மலிந்த மாநிலம். கோயில் என்றால் திருவிழா இருக்கும். அதுபோல் திருவிழா என்பதும் கோயில் தொடர்பின்றி நிகழாது. கோயில் திருவிழாக்கள் தமிழ்நாட்டைப் போல வேறு எங்கும் இவ்வளவு மிகுதியாகவோ, விரிவாகவோ கொண்டாடப்படுவதில்லை. சோமலெ சுட்டிக் காட்டுவது போல் "தனிப்பட்டவர்களின் மகிழ்ச்சி, குடும்பத்தில் களிப்பு, சமுதாயத்தில் குதூகலம் - இவைதான் திருவிழாக்களின் குறிக்கோள்" (ப. 118). மேலும், தமிழ்நாட்டில் கொண்டாடப்படும் பல்வேறு கோயில் திருவிழாக்களைப் பற்றித் 'தேரும் திருவிழாவும்' என்னும் இயலில் விளக்கமாகக் குறிப்பிட்டுச் செல்கிறார் சோமலெ.

திருவிழாக்கள் மூன்று நாட்கள் முதல் பத்து நாட்கள் வரை கொண்டாடப்படுகின்றன; அவ்வமயம், திருவிழாவுக்கு உரிய கடவுளரின் உற்சவ விக்கிரகம் உரிய வாகனத்தில் இருத்தப்பட்டு, வீதிகளில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படுவது இயல்பு. இதற்கு ஒரு நுட்பமான காரணத்தைக் காட்டுகிறார் சோமலெ. "பழங்காலத்தில் மக்கள் இறைவனைத் தேடிச் சென்ற போதிலும், இறைவனும் மக்களைத் தேடிச் சென்றதற்குத் திருவிழாக்கள் சான்றாக உள்ளன. கோயிலுக்குச் செல்ல இயலாத பக்தர்கள் பலர் இருந்தனர் - இருக்கின்றனர். முதிர்ந்த வயது, நடக்க இயலாமை, உடலுறுப்புக் குன்றியிருத்தல், நோய், தீட்டு, கீழ்ச்சாதி என்ற காரணத்தால் கோயிலுக்குள் விடப்படாதிருந்தது - இவை போன்ற நிலைகளில் இறைவனைத் தேடிச் செல்ல இயலாதவர்களுக்காக, இறைவன் தானே அவர்களைத் தேடிச் சென்றான்" (ப. 120) என்று திருவிழாக்கள் கொண்டாடப்படுவதன் நோக்கமாக சோமலெ எடுத்துரைக்கும் கருத்து ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய ஒன்றாகும்.

## ஒப்பீட்டு நோக்கு

சோமலெ உலகம் சுற்றிய தமிழர்; பல நாடுகளையும், பல ஊர்களையும் தம் வாழ்நாளில் சுற்றிப் பார்த்த அனுபவம் உள்ளவர். எனவே, தாம் பார்க்கின்ற ஒவ்வொரு காட்சியையும், திருவிழாவையும் பயண அனுபவத்தின் அடிப்படையில் பார்ப்பது என்பது அவரது இரத்தத்தில் ஊறிய ஒரு தனிப்பண்பாகவே உள்ளது.

தமிழ் ஆண்டின் இரண்டாவது மாதமான வைகாசியில் முழுநிலா நாளில் வரும் ஒரு சிறப்பான திருவிழா வைகாசி விசாகம் ஆகும். வைகாசி மாதத்து முழுநிலா நாள், முருகனுக்கு மிகவும் சிறப்பாக உரிய நாள். இத்திருநாளில் திருச்செந்தூர், திருப்பரங்குன்றம், பழனி ஆகிய நகரங்களில்

பால்குடம், பல்வேறு வகையான காவடிகள் ஆகியவற்றை எடுத்துச் சென்று மக்கள் கூட்டம் கூட்டமாக வழிபடுவர். "இந்த நாள் அறிவொளி பரப்பும் நாளாகக் கருதப்படுகிறது. வைகாசி விசாகத்தன்று தான் கௌதம புத்தர் பிறந்தார். அவர் ஞானம் பெற்றதும் வைகாசி விசாகத்தில். அவர் நிர்வாணம் அடைந்ததும் வைகாசி விசாக நாளிலேயே. எனவே வட இந்தியாவில் வைகாசி விசாகம் புத்த பூர்ணிமா என்ற பெயரில் கொண்டாடப்படுகிறது" (ப. 126) என்று இங்கே தமிழ்நாட்டுத் திருவிழாவை, வட நாட்டுத் திருவிழாவுடன் ஒப்பிட்டுக் காட்டுகிறார், சோமலெ.

சோமலெயின் ஒப்பீட்டு நோக்கிற்குப் பிறிதொரு சான்றையும் இங்கே சுட்டிக்காட்டலாம். செட்டிநாட்டில் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள், ஆண்களுக்குக் 'கார்த்திகைப் புதுமை' என்ற சடங்கையும், பெண்களுக்குத் 'திருவாதிரைப் புதுமை' என்ற சடங்கையும் செய்து வருகிறார்கள். 'கார்த்திகைப் புதுமை' என்றும் சடங்கு, கார்த்திகை மாதத்தில் வரும் திருக்கார்த்திகை நாளில் ஆண்களுக்கும், 'திருவாதிரைப் புதுமை' என்னும் சடங்கு மார்கழித் திங்களில் திருவாதிரை நட்சத்திரத்தில் பெண்களுக்கும் செய்யப்படுவது உண்டு. இச்சடங்குகளால், உரிய ஆண் அல்லது பெண், தன் வாழ்க்கையில் ஒரு பொறுப்பையும் மதிப்பையும் பெறுகிறான் அல்லது பெறுகிறாள். இவ்விடத்தில் "யூதர்களிடமும் இத்தகைய சடங்குகள் காணப்படுகின்றன. அவர்கள் நடத்தும் விழாவுக்கு பார் மிட்ஜவாஹ் என்று பெயர்" (பக். 101–102) என்று எழுதிச் செல்வது, சோமலெ ஒரு சிறந்த ஒப்பியல் அறிஞர் என்பதை உணர்த்துவதாகும்.

## சுவையான தகவல்களின் களஞ்சியம்

தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும் அறிவதற்காகப் பல இடங்களுக்கும் சென்று, கள ஆய்வு மேற்கொண்டு, அதன் அடிப்படையில் சுவையான தகவல்களைத் திரட்டியிருக்கிறார் சோமலெ. எனவே, 'தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும்' என்னும் அவரது நூல் அரிய, சுவையான தகவல்களின் களஞ்சியமாகவே திகழ்கின்றது. சான்றாக, 'தேரும் திருவிழாவும்' என்னும் இயலில் 'பொள்ளாச்சிச் சந்தை'யைப் பற்றி சோமலெ எழுதியிருக்கும் பகுதியை இங்கே சுட்டிக் காட்டலாம் :

"வாரந்தோறும் கூடும் சந்தைகளில் குறிப்பிடத்தக்கது பொள்ளாச்சிச் சந்தை... நெல், தானியங்கள், தேங்காய், மணிலாக் கடலை, எண்ணெய் வகைகள், காய்கறிகள், பதனிடப்பட்ட தோல், கோழி, துணிமணிகள் யாவற்றையும் பொள்ளாச்சிச் சந்தையில் மொத்தமாக வாங்கலாம். மலைப்பகுதிகளிலும் காடுகளிலும் பிடிக்கப்படும் யானைகளும், பிற விலங்குகளும் கூட இங்கு விற்பனையாகின்றன. தாயாரைத் தவிர எதை வேண்டுமானாலும் பொள்ளாச்சிச் சந்தையில் விலைக்கு வாங்கலாம் என்று பாமர மக்கள் பேசிக் கொள்வது வழக்கம்" (ப. 145). வியாழக்கிழமைகளில் கூடும் பொள்ளாச்சிச் சந்தையின் தனிச் சிறப்பினை இங்கே மென்மையான நகைச்சுவையோடு எடுத்துக் காட்டியுள்ளார் சோமலெ.

'பாமர மக்களின் இசையும் நடனமும்' என்னும் இயலில், "நாட்டுப் பாடல்களின் இசைச் சிறப்பு, ஒலிச் சிறப்பு, தாளச் சிறப்பு, உணர்ச்சியான பொருள், பேச்சு நடைப் .பாணி, இயற்கையோடு இணைந்த தன்மை ஆகியவை எந்தத் திரைப்படத்திற்கும் ஏற்றம் தருகின்றன. திரைப்படங்கள் நாட்டுப்பாடல்களின் மெட்டுக்களைப் பின்பற்றுகின்றன" என்னும் கருத்தைக் கூற வரும் சோமலெ, தம் கருத்திற்கு அரண் செய்யும் வகையில் புகழ்பெற்ற ஒரு நாட்டுப் பாடலையும் சான்று காட்டியுள்ளார். அப்பாடல் வருமாறு :

"தாழம்பூ முடித்து தடம்பார்த்து வழிநடந்து
சாலைவழி போனவனே பொன்னம்மா" *(ப. 182)*

இதேபோல், 'தெருக் கூத்தும் பிற பொழுது போக்குகளும்' என்னும் இயலில் சிலம்பம், சடுகுடு, பச்சைக் குதிரை, நிலாப் பூச்சி, நொண்டி எனத் தமிழ்நாட்டுச் சிற்றூர்களில் நீண்ட நெடுங்காலமாக நடைபெற்று வரும் நாட்டுப்புற விளையாட்டுக்களைப் பற்றிக் குறிப்பிடும் சோமலெ, 'கிளித்தட்டு' என்னும் விளையாட்டை, இன்றைய கிரிக்கெட் ஆட்டத்துடன் ஒப்பிட்டு எழுதியிருப்பது மிகுந்த சுவை பயப்பதாகும் :

"இந்த விளையாட்டை *(கிளித்தட்டை)* ஒரு வகையான கிரிக்கெட் ஆட்டம் என்று சொல்லலாம். இதற்கு வேண்டிய கருவிகள் இரண்டு மட்டைகள், ஒரு வட்டக் கம்பு, இரு முனைகளிலும் சீவி விடப்பட்டதும் நான்கு அங்குல நீளமுள்ளதுமான ஒரு முனை ஆகியவை.

முனையைக் கீழே வைத்து, நீளமான குச்சியால் அதை உயர்த்தி, பிறகு நீண்ட தூரம் செல்லும்படி அதை அடிப்பார்கள். அதை யாராவது பிடித்து விட்டால், அடித்தவன் ஆட்டத்திலிருந்து விடைபெற வேண்டும். மூளை, கண்களில் படக்கூடிய அபாயம் இருப்பது இந்த ஆட்டத்திலுள்ள குறைபாடு" *(ப. 217)*.

நடப்புச் செய்திகளை விரல் நுனியில் வைத்திருப்பவர் சோமலெ என்பதற்கு இப் பகுதி தக்க சான்றாகும்.

## வாய்மொழி இலக்கியத்தின் தன்மைகள்

வாய்மொழி இலக்கியத்தின் தன்மைகளை 'வாய்மொழி இலக்கியம்' என்னும் இயலில் சிறப்பாக எடுத்துக்காட்டியுள்ளார் சோமலெ. பேச்சு வழக்குச் சொற்களைக் கையாளுவது, தனி ஒருவர் பெயரைக் குறிப்பிடாதது ஆகியவை வாய்மொழி இலக்கியத்தின் தன்மைகளுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன ஆகும். மேலும், எழுத்து வடிவ இலக்கியங்களில் எழுதா இலக்கியங்களின் தாக்கம் காணப்படுவதையும் சோமலெ தக்க சான்றுகளுடன் சுட்டிக் காட்டியுள்ளார். "தமிழ் இலக்கியத்திற்கே முன்னோடியாக விளங்கும் தொல்காப்பியம் நாட்டுப் பாடல்களைக் குறிப்பிடுகிறது. 'பண்ணத்தி' என்பது நாட்டுப்பாடல்களுக்குத் தொல்காப்பியம் இட்டிருக்கும் பெயர். இளங்கோவடிகளின் சிலப்பதிகாரமும் கிராமிய ஆடல் பாடல்களைப் பற்றிப் பல இடங்களில் கூறுகிறது... கவியரசர் சுப்பிரமணிய

பாரதியார், நாட்டுப் பாடல்களில் தாம் நெஞ்சைப் பறிகொடுத்ததை, உள்ளம் உருகக் குயில் பாட்டில் குறிப்பிடுகிறார்" (ப. 147) என்னும் சோமலெயின் கருத்து இவ்வகையில் நினைவுகூரத்தக்கதாகும்.

சோமலெ ஒரு சிறந்த நாட்டுப்புறவியல் தொகுப்பாளர் என்பதை நிலைநிறுத்தும் வகையில் 'வாய்மொழி இலக்கியம்' என்னும் இயல் விளங்குகின்றது. நாட்டுப் பாடல்கள், கதைப் பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள் என்னும் நாட்டுப்புற இலக்கிய வடிவங்களில் இருந்து சுவையான சான்றுகளை அவர் இப்பகுதியில் தேர்ந்தெடுத்துத் தந்துள்ளார். இவ்வகையில் மனங்கொளத் தக்க சில வாய்மொழி இலக்கியப் பகுதிகளை இங்கே காணலாம்.

வாய்மொழி இலக்கியம் ஒன்றில் சிக்கனமாகத் திருமணம் நிகழ இருப்பது பற்றி இடம்பெற்றிருக்கும் குறிப்பு வருமாறு :

"அய்யாச்சாமிக்கு கலியாணம்
அவரவர் வீட்டில் சாப்பாடு
கொட்டு முழக்கு கோயிலில்
வெற்றிலை பாக்கு கடையிலே
சுண்ணாம்பு சூளையிலே" (ப. 149)

"ஆடிப் பட்டம் தேடி விதை"
"அகல உழுவதை விட ஆழ உழுவதே மேல்"
"வீட்டுச் செல்வம் மாடு, தோட்டச் செல்வம் முருங்கை"
"இறைத்த கிணறு ஊறும், இறைக்காத கிணறு நாறும்"
"விதை ஒன்று போட, சுரை ஒன்று முளைக்குமா?" (ப. 153)

-இவை சோமலெ எடுத்துக்காட்டியுள்ள சில பழமொழிகள். இவற்றோடு பயிர்த்தொழில் குறித்து உழவர்களிடையே வழங்கி வரும் நாட்டுப்புறப் பாடல்களையும் அவர் தொகுத்துத் தந்துள்ளார்.

தாலாட்டும் ஒப்பாரியும் நாட்டுப்புறப் பாடல்களின் இரு கண்களைப் போன்றவை எனலாம். இலக்கியச் சிறப்புடைய பல தாலாட்டுப் பாடல்களையும் ஒப்பாரிப் பாடல்களையும் சோமலெ 'வாய்மொழி இலக்கியம்' என்னும் இயலில் தொகுத்துத் தந்துள்ளார். பதச்சோறாக, தாலாட்டு, ஒப்பாரி ஆகிய இரு நாட்டுப்புறப் பாடல் வடிவங்களுக்கும் ஒவ்வொன்று காணலாம்.

தாய் ஒருத்தி பாடும் தாலாட்டு இது :

"ஆரடித்தார் ஏனழுதாய்...
மாமன் அடிச்சானோ
மல்லிகைப் பூச் செண்டாலே?
அத்தை அடித்தாளோ
அல்லிமலர்ச் செண்டாலே?
அடித்தாரைச் சொல்லியழு
ஆக்கினைகள் செய்து வைப்போம்!

தொட்டாரைச் சொல்லியழு
தோள்விலங்கு போட்டு வைப்போம்!
ஆரும் அடிக்கவில்லை,
ஐவிரலும் தீண்டவில்லை!
தானா அழுகின்றான்
தம்பி துணை வேணுமென்று!
அவனா அழுகின்றான்
ஆத்தாள் மடி தேடி!" *(ப. 158)*

'இன்னொரு குழந்தை வேண்டும்' என்னும் விருப்பம் இங்கே நனி நாகரிகமான முறையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

சிறு குழந்தை இறந்தபோது, பெற்ற தாய் ஒருத்தி பாடிய ஒப்பாரிப் பாடலில் இருந்து ஒரு பகுதி இதோ :

"ஈ கடிக்கச் சம்மதியோம்
எமன் வரச் சம்மதித்தோம்
காற்றடிக்கச் சம்மதியோம்
காலன் வரச் சம்மதித்தோம்" *(ப. 171)*

'ஒப்பாரிப் பாடல் உள்ளத்தை உருக்கும் உணர்ச்சிப் பாடல்' என்பதற்கு இதனினும் வேறு சான்று வேண்டியதில்லை.

இங்ஙனம் படிப்பவர் உள்ளத்தைத் தொட வல்ல நாட்டுப்புறப் பாடல்கள் பலவற்றை அரிதின் முயன்று இவ்வியலில் தொகுத்துத் தந்துள்ளார் சோமலெ.

கதைப் பாடல்கள் பற்றி சோமலெ கூறியிருக்கும் கருத்தும் இங்கே நினைவுகூரத்தக்கதாகும். சமுதாயத்தைப் பற்றியவை, இதிகாச புராணங்கள் பற்றியவை, வரலாற்றுச் சிறப்புடையவை எனக் கதைப் பாடல்களை மூன்றாகப் பகுத்துக் கூறும் அவர், செஞ்சியை ஆண்ட ராஜா தேசிங்கு கதைப் பாடலில் இருந்து எடுத்துக்காட்டி இருக்கும் ஓர் அரிய பகுதி வருமாறு:

"நவாப்பை எதிர்த்துத் தேசிங்கு போர்க் கோலம் பூண்டு புறப்படுகிறான். அதை அறிந்து அவன் தாய் அங்கு வந்து மகனிடம் பின்வருமாறு பாடி அவனைத் தடுக்கிறாள் :

'நீ பிறந்தது வெள்ளிக்கிழமை
மகனே தேசிங்கு!
உன் குதிரை பிறந்தது வெள்ளிக்கிழமை
ராஜா தேசிங்கு!
சண்டை பிறந்தது வெள்ளிக்கிழமை
ராஜா தேசிங்கு!
இன்றைக்கு இருந்து நாளைக்குப் போடா
மகனே தேசிங்கு!

இவ்வாறு கூறிய தாய்க்கு வீரச்சேய் கூறும் விடையைக் கேட்போம்:

'ஆறிலும் சாவு நூறிலும் சாவு,
என்னைப் பெற்ற தாயே!
பிறந்த அன்றைக்கே சாவு இருக்குது
என்னைப் பெற்ற அம்மா!' (ப. 164)

'வீரத்தின் விளைநிலம் தமிழகம்' என்பதைப் பறைசாற்றும் அற்புதமான வரிகள் இவை.

இங்ஙனம் வாய்மொழி இலக்கியத்தின் அடிப்படைப் பண்புகளும், கற்பனை, கருத்து, உணர்ச்சி, ஓசை முதலான இலக்கிய நயங்களும் ஒருங்கே புலனாகும் வண்ணம் பற்பல சான்றுகளை இந்நூலில் சிறப்பாகத் தொகுத்துத் தந்துள்ளார் சோமலெ.

## பயனுள்ள பிற்சேர்க்கை

நூலின் பிற்சேர்க்கையில் பாடல்கள், கதைகள், விடுகதைகள், சிறுவர் வினா - விடை, விளையாட்டு, பழமொழிகள், தெருக்கூத்தில் ஒரு பகுதி என்னும் குறுந்தலைப்புக்களில் வாய்மொழி இலக்கியத்தில் இருந்து சில சுவையான மேற்கோள்களைத் திரட்டித் தந்துள்ளார் சோமலெ. அவர் தம் நூலுக்கான தகவல்களைத் திரட்டுவதில் எவ்வளவு கண்ணும் கருத்துமாக இருக்கிறார்- திறந்த மனத்துடன் செயல்படுகிறார் - என்பதற்கு 'விடுகதைகள்' என்னும் பகுதியைச் சான்றாகச் சுட்டலாம். அதில் 16 விடுகதைகளைத் தொகுத்துத் தந்திருக்கும் சோமலெ அவற்றின் அடியில் "சென்னை அடையாறில் உள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், டாக்டர் ச.வே. சுப்பிரமணியம் அவர்களைத் தொகுப்பாசிரியராகக் கொண்டு, தமிழ் விடுகதைகளைத் தொகுத்து வருகிறது. இந்நூல் 1975 ஜூனில் வெளிவரக் கூடும் என்று தெரிகிறது" (ப. 231) என்னும் குறிப்பினையும் தந்துள்ளார். இது ஓர் ஆய்வாளர் என்ற முறையில் அவரிடம் காணப்படும் உயர்ந்த பண்பைப் புலப்படுத்துவதோடு நாட்டுப்புறவியல் துறையில் ஈடுபாடு கொண்டிருப்போருக்குப் பயன் தரும் தகவலாகவும் உள்ளது.

பிற்சேர்க்கையில் சோமலெ தந்திருக்கும் ஒரு பொருள் பொதிந்த விடுகதை இதோ :

"இங்கு உண்டு, அங்கு இல்லை
அங்கு உண்டு, இங்கு இல்லை
இங்கும் உண்டு, அங்கும் உண்டு
அங்கும் இல்லை, இங்கும் இல்லை"

இவ்விடுகதையின் பொருள்: "கடவுள் நம்பிக்கை இல்லாமலும் சுயநலமாகவும் வாழ்பவர்களுக்கு இந்த உலகில் நிம்மதி உண்டு; மறுஉலகில் நிம்மதி இல்லை. தரும சிந்தனை உடையவர்கள் இங்கு அமைதியின்றி துயரப்பட்டாலும், மேலுலகத்தில் மன அமைதி பெறுவர். செல்வமும் பிறருக்கு உதவும் பெருநோக்கமும் தாராள மனமும் உடையவர்கள் இங்கும் அங்கும்

எங்கும் கவலையில்லாமல் இருப்பார்கள். கொடியவர்கள் எங்கே இருந்தாலும் கவலையில் தோய்ந்தவர்களாக இருப்பார்கள்' (ப. 230).

## மலைச்சாதியார் வாழ்வியல்

மலைச்சாதியார் வாழ்வியல் பற்றிய குறிப்புக்களையும், அவர்களது இசை, திருமணம், அவர்களிடையே வழங்கி வரும் நாட்டுப்பாடல்கள், சடங்குகள், இசைக்குறிப்புக்கள் ஆகியன பற்றிய தகவல்களையும் ஆங்காங்கே தந்திருப்பது இந்நூலில் காணப்படும் ஒரு தனிச்சிறப்பாகும். இவ்வகையில் மலைச்சாதியார் வாழ்வியல் குறித்து சோமலெ வெளிப்படுத்தியுள்ள சில இன்றியமையாத செய்திகள் வருமாறு :

"தோதவர் (ஆங்கிலத்தில் 'TODAS' எனப்படுவர்), அமாவாசை உட்பட எந்த நாளிலும் திருமணம் செய்து கொள்ளுவர். அவர்களுடைய குடியிருப்புகளுக்கு 'மந்து' என்று பெயர்" (ப. 108).

"நீலகிரிக் கோட்டா இனத்தவர் தேர் போன்று அமைத்த ஒரு பாடையில் பிணத்தைத் தூக்கிச் செல்லுவார்கள்... இறந்தவரின் பாதத்தைத் தம் தலையால் தொட்டு வணங்கும் வழக்கம் இவர்களிடையே உண்டு. இதற்கு தவாமூத் சடங்கு என்று பெயர்" (ப. 117).

"தோதவர்களின் வாய்மொழி இலக்கியத்தின் தனிச்சிறப்பு, ஆட்களின் பெயர்களைச் சொல்லாமல் உருவகப்படுத்தியும் அடையாளங்களாலும் 'இன்னார்' என்பதைச் சுட்டிக்காட்டுவதாகும். எருமைகளைப் பற்றிய செய்திகள் அவர்களுடைய பாடல்களில் இடையிடையே இருக்கும்" (ப. 168).

"மலைச்சாதி மக்களுடைய வாழ்க்கையும் மழையும் ஒன்றோடொன்று இணைந்தன, பிணைந்தன. ஆகையால் அவர்கள் எந்தச் சடங்கிலும் மழை வேண்டும் என்று பிரார்த்தனை செய்து பாடுவார்கள்" (ப. 169).

"பொதுவாக, ஏனையவர்களை விட மலைச்சாதியினருக்கு இசையில் இயல்பான ஈடுபாடு இருக்கிறது. பழமையான பண்பாட்டைப் பேணிக் காக்க வேண்டும் என்ற எண்ணமும் அவர்களுக்கு உண்டு" (ப. 182). இங்ஙனம் வாய்ப்புக் கிட்டிய போதெல்லாம் மலைச்சாதியார் வாழ்வியலைப் பற்றிய அரிய தகவல்களை வெளியிட்டு வந்துள்ளார் சோமலெ.

## நாட்டுப்புறவியல் முன்னோடி

**'Folklore of Tamilnadu'**, 'தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும்' என்னும் இவ்விரு நூல்களைத் தவிர, நாட்டுப்புறவியலின் பல்வேறு வடிவங்களைப் பற்றிய ஆய்வுக் கட்டுரைகளையும் சோமலெ எழுதியுள்ளார். மேலும் அவர், 'நமது தமிழ்நாடு' என்னும் தலைப்பில் அறுபதுகளில் எழுதிய மாவட்ட வரிசை நூல்கள் அனைத்திலும் அந்தந்த மாவட்டங்களில் வழங்கும் நாட்டுப்புறப் பாடல்களையும் உரிய இடங்களில் சேர்த்து, அக்காலத்திலேயே

நாட்டுப்புறவியலுக்குப் பெருமை சேர்த்துள்ளார். இதே போல் 1954-ஆம் ஆண்டில் வெளியிட்ட 'செட்டிநாடும் தமிழும்' என்ற நூலிலும் அவர் செட்டிநாட்டுப் பகுதிகளில் வழங்கும் தாலாட்டு, ஒப்பாரிப் பாடல்களைக் குறித்து இரு இயல்களில் விரிவாக எழுதியுள்ளார். இங்ஙனம் தமிழகத்தில் தொடக்க நிலையில் நாட்டுப்புறவியலை வளர்த்த முன்னோடிகளில் சோமலெயும் ஒருவராக இருந்துள்ளார்.

# 7

# பிற படைப்புப் பணிகள்

"இத்தகைய நூலை உருவாக்க எத்தனை முயற்சியும் ஆராய்ச்சியும் பயணமும் நேரமும் தேவை என்பதை வாசகர்களின் சிந்தனைக்கு விட்டு விடுகிறோம்". – சோமலெ*

சோமலெ, தம் அறிவாற்றலாலும் ஆளுமைத் திறத்தாலும் பற்பல துறைகளில் தடம் பதித்தவராக விளங்குகிறார்; வாழ்நாள் முழுவதும் தமக்கு விருப்பமான துறைகளில் முனைப்புடன் ஈடுபட்டு, அவை தொடர்பான சிறந்த நூல்களை அவ்வப்போது எழுதி வெளியிட்ட பெருமை மிக்கவராக விளங்குகிறார். இதுவரை சோமலெயை ஒரு பயண நூல் வல்லுநராக, 'நமது தமிழ்நாடு' வரிசையில் பத்து மாவட்டங்களைப் பற்றிய நூல்களைப் படைத்த அறிஞராக, வாழ்க்கை வரலாற்று இலக்கியம் படைத்த சான்றோராக, நாட்டுப்புற இயல் முன்னோடியாக, இதழியலில் ஈடுபாடு மிக்க எழுத்தாளராகக் கண்டோம். அவர்தம் பிற படைப்புக்களைப் பற்றி இவ்வியலில் சுருங்கக் காண்போம்.

### 1. 'நீங்களும் தூதுவர் ஆகலாம்'

உலக நாடுகளுக்கு இடையே உள்ள சட்டங்களை விளக்கிச் சொல்லும் வகையில் சோமலெ எழுதிய நூல் 'நீங்களும் தூதுவர் ஆகலாம்' என்பது. தூதுவரின் தகுதி, தூதுவர் நியமனம், தூதுவரின் கடமைகள், தூதுவரின் தனிச்சலுகைகள், தூதுவரின் இன்னல்கள், தூதுவரின் அன்றாட வாழ்க்கை, தூதுவர் அலுவலகத்தில் பணியாற்றுவோர் எனத் தூதுவரின் பல நிலைகளை எடுத்துக்காட்டும் சோமலெ, இவற்றுள் ஏதேனும் ஒன்றைத் தலைப்பாகக் கொடுக்காமல், 'நீங்களும் தூதுவர் ஆகலாம்' எனப் படிக்கும் ஒவ்வொரு வாசகருக்கும் ஆர்வமும் நம்பிக்கையும் தோன்றும் வகையில் தலைப்புக் கொடுத்திருப்பது போற்றத்தக்கதாகும்.

#### 'தமிழில் வெளிவரும் முதல் நூல்'

"நாள்தோறும் பத்திரிகைகளில் தூதுவர்களின் அலுவலகங்களைப் பற்றி எத்துணையோ செய்திகள் படிக்கிறோம்; ஆனால் அவை நன்றாகப்

* பதிப்புரை, கோயில், ப. 3.

புரியவில்லை. அவற்றைப் புரிந்து கொள்ள உதவியாக ஒரு நூலை நீங்கள் எழுத வேண்டும்" என்று நண்பர் பலர் கூறிய வேண்டுகோளை ஏற்று இந்நூலை எழுதியுள்ளதாகக் குறிப்பிடுகிறார் சோமலெ (முன்னுரை, ப. iii). மேலும், "இந்தத் துறையில் தமிழில் வெளிவரும் முதல் நூல் இதுவே" என்றும் முன்னுரையில் பெருமையோடும் பெருமிதத்தோடும் சுட்டியுள்ளார் அவர்.

தூதுவர் அலுவலகங்களில் பல ஆண்டுகளாக அக்கறை கொண்டிருந்த சோமலெ, அவ்வப்பொழுது அவற்றைப் பற்றித் தாம் படித்ததையும், கண்டதையும், கேட்டதையும் குறித்து வைத்துக்கொண்டு, தக்க தருணம் வாய்த்தபோது இந்நூலை எழுதியுள்ளார். அவரே "இந்திய வெளிநாட்டுக் கொள்கையை விளக்குவதோ அல்லது நமது தூதுவர்களின் வெற்றி தோல்விகளை அளவிடுவதோ இந்த நூலின் நோக்கமன்று. தூதுவர் அலுவலகங்களில் பணியாற்ற வேண்டும் என்ற ஆர்வம் தமிழர் பலருக்கு - ஆடவருக்கும் பெண்டிருக்கும் - இந்த நூலின் விளைவாக ஏற்படுமானால் யான் மகிழ்ச்சியடைவேன்" (முன்னுரை, ப. iv) என்று நூலின் நோக்கம் பற்றிக் குறிப்பிடுவதும் இங்கே நினைவுகூரத்தக்கதாகும்.

## தூதுவரின் தகுதிகள்

ஒரு நாட்டின் தூதுவராக இருப்பது என்பது பெருமைக்குரிய செயல். எனவே, பல்லாற்றானும் தகுதி படைத்த ஒருவரே தூதுவராக நியமிக்கப் பெறல் வேண்டும். தூதுவருக்கு வேண்டிய தகுதிகள் என்ன என்பதைத் 'தூதுவரின் தகுதி' என்னும் இயலில் எடுத்துரைக்கின்றார் சோமலெ. பொதுவாக, செல்வாக்கு, திறமை, நாவன்மை, நுண்ணறிவு ஆகிய இயல்புகள் உள்ளவரையே தூதுவராக அனுப்புவது வழக்கம். மேலும், "புதிதாகப் பார்ப்பவரிடம் பல நாள் பழகிய நண்பர் போல நடந்து கொள்ளுதல், ஒரு வினாடிப் பொழுதிலே சிரித்து விடும் ஆற்றல், நகைச்சுவையான துணுக்குகளைத் தெரிவிக்கும் இயல்பு, வேறுபட்ட பல பொருள்களைப் பற்றி அமைதியாயும் இனிமையாயும் பிறர் மனம் புண்படாமலும் விவாதிப்பது - இத்தகுதிகளும் தூதுவருக்கு வேண்டும்" (பக் .23-24) என்று குறிப்பிடுகின்றார் சோமலெ.

## முதல் பெண் தூதுவர்

ஆண்கள் மட்டுமன்றிப் பெண்களும் இக்காலத்தில் அயல்நாடுகளுக்குத் தூதுவராக அனுப்பப்படுகின்றனர். ஆனால் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் இவ்வழக்கம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இருந்து வந்துள்ளது. தமிழ்நாட்டின் முதல் பெண் தூதுவர் யார் தெரியுமா? இதோ, சோமலெயின் சொற்களிலேயே இவ்வினாவிற்கான விடையினைக் காண்போம் : "அரசியல் தூதுவராகச் சென்ற முதல் பெண் ஔவைப் பிராட்டி என்று சொல்லலாம்.

அதியமானிடமிருந்து தொண்டைமானிடம் அவர் அரசியல் தூது சென்றதாகப் புறநானூறு கூறுகிறது. அந்த அம்மையார் காஞ்சி அரசரால் சிறப்பிக்கப் பெற்றதையும், அவரைப் புகழ்வது போல் பழிப்பதையும் புறநானூற்றுப் பாடல் வாயிலாக அறிகிறோம்" *(பக். 121-122)*. *பழைய செய்தியைப் புதிய நோக்கில் காணும் திறம் கொண்டவர் சோமலெ என்பதைப் பறைசாற்றும் சான்று இது!*

## ஒரு நாட்டின் பலம்

சோமலெயின் நோக்கில் ஒரு நாட்டின் பலத்தை முடிவு செய்வன ஆறு. அவையாவன:

"1. சிறந்த போர்க் கருவிகளை உடைய படை
2. மக்களுடைய வீரம்
3. பொருளாதாரச் செழிப்பு
4. தொழிலில் தன்னிறைவு (சாதகமான வெளிநாட்டு வாணிபம்)
5. நாட்டின் வருங்காலத்தில் மக்களுக்கு நம்பிக்கை
6. சிறந்த தூதுவர்கள்

முதல் ஐந்து வகைப் பலங்களும் சிறப்பாக இருந்தாலுங்கூட, சிறந்த தூதுவர்கள் இல்லாமையால் பல நாடுகள் எண்ணற்ற துயரங்களை அனுபவித்துள்ளன. எனவே, செலவைப் பாராமல் தூதுவர் அலுவலகங்கள் செம்மையாக நடைபெற ஏற்பாடு செய்வதும், தலைசிறந்த அறிஞர்களைத் தூதுவர்களாக நியமிப்பதும் நமது நாட்டைப் பலம் பொருந்திய நாடாக ஆக்குவதற்கு நாம் மேற்கொள்ளும் முயற்சிகளேயாகும்" (ப. 171). நமது நாட்டைப் பலம் பொருந்திய நாடாக ஆக்குவதற்கு நாம் செய்ய வேண்டியதெல்லாம் ஒன்றுதான் : தலைசிறந்த தூதுவர்களை நியமிப்பது தான் அது. இக்கருத்தினை அழுத்தம் திருத்தமாக எடுத்துக் கூறியுள்ளார் சோமலெ.

## பிற்சேர்க்கைகள்

நூலின் இறுதியில் இடம்பெற்றுள்ள பிற்சேர்க்கையில், அயல்நாடுகளில் இந்தியத் தூதுவர்களாகப் பணியாற்றித் தாய்நாட்டிற்கும் தமக்கும் புகழ் சேர்த்த ஐந்து பேரின் வாழ்க்கைக் குறிப்புக்களை மிகச் சுருக்கமாகக் குறித்துள்ளார் சோமலெ. 1946-ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையில் இந்தியப் பிரதிநிதியாகவும், 1947 முதல் 1952 வரை லண்டனில் இந்திய ஹை கமிஷனராகவும் இருந்த வி.கே. கிருஷ்ணமேனன், பிரான்ஸ், எகிப்து, சீனா ஆகிய நாடுகளில் தூதுவராகப் பணியாற்றிய சர்தார் கே.எம். பணிக்கர், மடகாஸ்கர், மாரிஷஸ் தீவுகள், எதியோப்பியா, இத்தாலி ஆகிய நாடுகளில் தூதுவராகப் பணியாற்றிய ஜான் ஏ.திவி, ஐக்கிய நாடுகளின் சபையில் இந்தியாவின் பிரதிநிதியாக இருந்து

பெரும்பணியாற்றிய பி.என். ராவ், அமெரிக்கா, சுவீடன், டென்மார்க், நார்வே, பின்லாந்து, சீனா ஆகிய நாடுகளில் இந்தியத் தூதுவராக விளங்கிய ஆர்.கே. நேரு (ரதன் நேரு) ஆகியோரைப் பற்றிய குறிப்புக்களையும், பிற உலக நாடுகளில் இந்தியத் தூதுவர்களாகப் பணியாற்றியவர்களின் பெயர்ப் பட்டியலையும், அவர்தம் முகவரிகளையும் குறிப்புக்களையும் பிற்சேர்க்கையில் இணைத்துள்ளார் சோமலெ. இத்தகவல்கள் இத்துறையைப் பற்றி மேலும் அறிந்து கொள்வதற்குப் பயனுடையனவாகவும் சோமலெயின் கடுமையான முயற்சியைப் புலப்படுத்துவனவாகவும் விளங்குகின்றன.

## 2. 'செட்டிநாடும் செந்தமிழும்'

1954-ஆம் ஆண்டில் 'செட்டிநாடும் தமிழும்' என்னும் நூலை எழுதினார் சோமலெ. இந்நூலின் இரண்டாம் பதிப்பு 1960-ஆம் ஆண்டில் வெளிவந்தது. இதே நூல் இன்னும் திருத்தமும் விரிவும் பெற்றுச் 'செட்டிநாடும் செந்தமிழும்' என மோனை நயம் மிளிரும் தலைப்பில் 1984-ஆம் ஆண்டு வெளிவந்தது. ஒரு நூலை எழுதி முடித்து வெளிவந்ததும் அதைப் பற்றிய சிந்தனைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட மாட்டார் சோமலெ. அந்த நூலைப் பற்றிய சிந்தனைகள் அவர் மனத்தில் தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கும்; வாய்ப்பு நேரும்போதெல்லாம் தமக்குக் கிடைக்கும் புதிய தகவல்களையும் அண்மைச் செய்திகளையும் சேர்த்துக் கொண்டே வந்து அடுத்த பதிப்பில் உரிய இடங்களில் அவற்றை இணைத்துக்கொள்வது அவரது வழக்கம். இதனை மெய்ப்பிக்கும் ஒரு சான்றாகச் 'செட்டிநாடும் செந்தமிழும்' நூல் விளங்குவதைக் காண்கிறோம்.

### 'செட்டிநாட்டைப் பார்!'

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் ஒருலகச் சிந்தனையை வழங்கிய சங்கப் புலவர் கணியன் பூங்குன்றனார் முதல் இருபதாம் நூற்றாண்டுத் திரையிசைப் பாடல் துறையில் சாதனை படைத்த கண்ணதாசன் வரை செட்டிநாடு, செந்தமிழ் வளர்ச்சியில் பங்கு கொண்ட விதத்தைப் புலப்படுத்தும் 40 இயல்களையும், 24 பிற்சேர்க்கைகளையும் தன்னகத்தே கொண்டது இந்நூல். "சீர்மை வாய்ந்த செட்டிநாட்டைப் பற்றிய 'எல்லாப் பொருளும் இதன் பாலுள; இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லை' என்று சொல்லத்தக்க சிறப்புடையது இந்நூல். பல நாடு கண்டு பண்புற்ற நண்பர் 'சோமலெ' அவர்கள் 'அமெரிக்காவைப் பார்!' என்று முன்னொருகால் மேலைநாட்டின் பெருமையைக் காட்டினார். எங்கெங்கே சென்றாலும், எந்நாட்டைக் கண்டாலும், தன்னாடே பொன்னாடாகத் தோன்றும் என்னும் உண்மைக்கு ஒரு சான்றாக, 'செட்டிநாட்டைப் பார்!' என்று இப்பொழுது அழைக்கின்றார். 'காட்டுவித்தால் யாரொருவர் காணாதாரே?' " (அணிந்துரை, ப. 3) என்று 'சொல்லின் செல்வர்' ரா.பி. சேதுப்பிள்ளை இந்நூலுக்குப் புகழாரம் சூட்டியுள்ளார்.

## 'செந்தமிழ் வளர்ச்சியின் வரலாறு'

"பாண்டித் தமிழும் பாரி வண்மையும் சூழ்ந்த செட்டிநாடு தமிழகத்தில் ஒரு சிறு பகுதி; எனினும் இங்கு வாழும் மக்கள் தமிழ் மொழியின் வளர்ச்சிக்குச் செய்திருக்கும் தொண்டு மிகப் பெரிது. அதை ஓரளவு தெரிவிப்பதே இந்நூலின் நோக்கம்" *(ப. 2)* என்று முதல் இயலில் நூல் எழுதப்பட்ட காரணத்தை எடுத்தியம்புகிறார் சோமலெ. இந்நூலில், ஒரு சமூகத்தைச் சிறப்பிக்க வேண்டும் என்றோ பிற சமூகத்தினரைக் குறை கூற வேண்டும் என்றோ எண்ணாமல், செட்டிநாட்டில் வாழ்ந்து வரும் பல்வேறு சமூகத்தினரைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார் அவர்; எனவே இந்நூல் தமிழகத்தின் ஒரு பகுதியின் வரலாற்று நூலாக விளங்கும் சிறப்பு வாய்ந்தது எனக் கூறலாம். "செட்டிநாடும் வரலாறும் என்பது செட்டி நாட்டுக்கும் செந்தமிழுக்கும் உள்ள தொடர்பினைக் கூறுவது என்ற அளவில் அமையாது செட்டிநாட்டு வரலாறும் செந்தமிழ் வளர்ச்சியின் வரலாறும் என்று சொல்லும்படியாகப் பரந்து விளங்குகிறது" என்று ஔவை நடராசன் இந்நூலுக்கு அளித்துள்ள அணிந்துரையில் *(ப. viii)* குறிப்பிட்டிருப்பது முற்றிலும் பொருத்தமானதேயாகும்.

'செட்டிநாடும் செந்தமிழும்' என்னும் இந்நூலின் வாயிலாக நாட்டுக் கோட்டை நகரத்தார்கள் அன்னைத் தமிழுக்கு ஆற்றிய பணிகளை எடுத்துக் காட்டிய சோமலெ, இச்சமூகத்தினர் இந்தியாவுக்கு வெளியே செய்துள்ள - செய்துவரும் - கோயில் திருப்பணிகளை 'அலைகடலுக்கு அப்பாலும் நகரத்தார்களின் ஆலயப் பணிகள்' என்னும் பிறிதொரு நூலில் வெளிப்படுத்தியுள்ளார். "நகரத்தார்கள் எங்கெங்கே சென்றாலும் தங்களுடைய சிறப்பியல்புகளைக் கைவிடுவதில்லை. சீனம் முதல் ஆங்கிலம் ஈறாகவுள்ள எத்துணையோ மொழிகள், நகரத்தார் செவிகளில் விழுந்தாலும், தாய்மொழியான தமிழ் ஒன்றே அவர்களின் செவிக்கு இனிமை பயப்பது" (அலைகடலுக்கு அப்பாலும் நகரத்தார்களின் ஆலயப் பணிகள், ப. 13) எனக் குறிப்பிட்டு, சமய உணர்வில் மட்டுமின்றி, தாய்மொழிப் பற்றிலும் தலைசிறந்து விளங்கியவர்கள் நகரத்தார்கள் என்பதைப் புலப்படுத்தியுள்ளார் சோமலெ.

## வாழும் மக்கள்

செட்டிநாட்டில் வாழும் மக்களில் பெரும்பாலோர் நாட்டார், நகரத்தார் என்ற இனப் பிரிவுகளில் அடங்குவர். நாட்டார் என்னும் சொல் கள்ளர், மறவர், அகம்படியர் என்னும் முக்குலத்துப் பெருமக்களைக் குறிக்கும். நகரத்தார் என்னும் சொல் நாட்டுக்கோட்டைச் செட்டியாரைச் சுட்டும். இவ்விரு சொற்கள்ளயும் மையமாகக் கொண்டு இலக்கிய உலகில் வழங்கி வரும் ஒரு சுவையான நிகழ்ச்சியைத் தம் நூலில் பதிவு செய்துள்ளார் சோமலெ. அந்நிகழ்ச்சி வருமாறு:

"நாவலர் பண்டித ந.மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள், கரந்தைத் தமிழ்ச் சங்க ஆண்டு விழா ஒன்றில் பண்டிதமணி அவர்களைச் சுட்டி 'இப்பேரவையில் நகரத்தார் முன்னிலையில் நாட்டார் பேச நேர்ந்தமை குறித்து யான் பெருமகிழ்ச்சி அடைகிறேன் என்று கூறியதன் நயம் இங்கு நினைக்கத்தகும்" *(ப. 7).*

இங்கே 'நாட்டார்', 'நகரத்தார்' என்னும் இரு சொற்களையும் வைத்துக் கொண்டு நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் நிகழ்த்தியுள்ள சொல் விளையாட்டு நயமான ஒன்றாகும்.

## அரிய தகவல்களின் பெட்டகம்

'செட்டிநாடும் செந்தமிழும்' என்னும் இந்நூலினை அரிதின் முயன்று, பல செய்திகளையும் சான்றுகளையும் திறம்படத் தொகுத்து எழுதியுள்ளார் சோமலெ. இந்த நூல் செட்டி நாட்டு மக்களுக்கு மட்டும் உரியதன்று; தமிழ் இலக்கியத்தில் ஆர்வம் உள்ள அனைவரும் படிக்க வேண்டிய ஓர் அடிப்படையான நூல் ஆகும்.

'கும்மாயம்' என்பது செட்டி நாட்டு உணவு வகைகளுள் ஒன்று. இதைப் பற்றிய குறிப்பு பழந்தமிழ்க் காப்பியமான மணிமேகலையிலேயே இடம்பெற்றுள்ளது. இக்குறிப்பினையும் இதற்கு உ.வே.சா. எழுதியுள்ள உரை விளக்கத்தையும் தந்து, இதற்கான செய்முறையையும் சுட்டிக் காட்டியுள்ளார் சோமலெ :

'பயிற்றுத்தன்மை கெடாது கும்மாயமியற்றி' என்று மணிமேகலையில் ஓர் உணவு வகை குறிக்கப் பெற்றிருக்கிறது. புழுக்கிய பச்சைப் பயிற்றோடு சருக்கரை முதலியன கூட்டி ஆக்கப்படுவதொரு சிற்றுண்டி என்று இதற்கு டாக்டர் உ.வே. சாமிநாத ஐயரவர்கள் விளக்கம் எழுதியுள்ளார்கள். இந்த உணவு இன்றும் செட்டி நாட்டில் ஆக்கப்பெறுகிறது. பாசிப்பயறு, பச்சரிசி இரண்டையும் கலந்து கும்மாயம் செய்வர்" *(ப. 41).*

இதே போல், பட்டினத்தார் நகரத்தார் இனத்தைச் சேர்ந்தவர் என்பதை நிறுவும் வகையில் கல்வெட்டுச் செய்தியையும், இலக்கியச் சான்றையும், நடைமுறை வழக்காற்றையும் எடுத்துக்காட்டித் தம் கருத்துக்கு அரண் சேர்த்துள்ளார் சோமலெ. இவ் வகையில் அவர் எழுதியிருப்பது வருமாறு:

"தாயாரை 'ஆத்தாள்' என அழைப்பது நகரத்தார்களிடையே வழக்கமாக இருந்து வருகிறது. பால் மணம் மாறாப் பச்சிளங் குழந்தைகள், 'ஆத்தாத்தா அன்பாத்தா கஞ்சி ஊத்திக் காப்பாத்து' என்று மழலை மொழியில் சொல்லுவர். பட்டினத்தடிகள் தம் பாடலில் தாயாருக்குத் தகனக் கிரியை செய்தது பற்றி, 'அரிசியோ நானிடுவேன் ஆத்தாள் தனக்கு வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல்' என்று குறிப்பிட்டிருக்கிறார்" *(ப. 73).*

இத்தகைய அரிய தகவல்களும் புதிய செய்திகளும் இந்நூலின் இயல்தோறும் இடம்பெற்றிருக்கக் காண்கிறோம்.

## தமிழ் இலக்கிய வளர்ச்சியில் செட்டிநாட்டாரின் பங்கு

'தொண்டு செய்வாய் தமிழுக்குத் துறைதோறும் துறைதோறும் துடித்தெழுந்தே' என்னும் பாவேந்தர் பாரதிதாசனின் வாக்கைப் பொன்னே போல் போற்றிப் பின்பற்றி இருக்கிறார்கள் செட்டி நாட்டுப் பெருமக்கள். பயண இலக்கியம், குழந்தை இலக்கியம், தமிழ் இசை, சிற்பக் கலை, பதிப்புத் துறை, இதழியல் முதலான பல்வேறு துறைகளுக்கு அவர்கள் அளித்திருக்கும் நிலையான பங்களிப்பினைச் சோமலெ தம் நூலில் விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துக்காட்டியுள்ளார். "பயண அனுபவங்களை நூலாக எழுதி, பயண இலக்கியம் என்ற புதிய துறைக்கு அடிகோலியவர், வழி வகுத்தவர், தமிழ்நாட்டு வாசகரிடையே பயண நூல் பசியை உண்டாக்கியவர்" (பக். 290-291) என்று 'பயணக் கலைஞர்' ஏ.கே. செட்டியாரைப் பற்றியும், "குழந்தைகளுக்காக எழுதிவரும் எழுத்தாளர்களுக் கெல்லாம் தலைவராகவும் வழிகாட்டியாகவும் அவர்களை ஊக்குவிப்பவராகவும் இருந்துவருபவர்" (ப. 298) என்று 'குழந்தைக் கவிஞர்' அழ. வள்ளியப்பா குறித்தும், "இலட்சிய வேகத்தால் உந்தப்பட்டு கைப் பொருள் இழந்தாலும் அயராது தமிழ் மக்களுக்கு மலிவு விலையில் தம் வெளியீடுகள் மூலம் தமிழ்ப் பணி செய்த சான்றோர்" (ப 321) என்று சக்தி வை. கோவிந்தனைப் பற்றியும், "பல புதிய உத்திகளைக் கையாண்டு தமிழ் மொழிக்கும் தமிழனுக்கும் தமிழ்நாட்டுக்கும் பெருமை தேடித்தந்தவர்" (ப. 352) என்று 'குமுதம்' ஆசிரியர் எஸ்.ஏ.பி. அண்ணா மலையைப் பற்றியும் சோமலெ இந்நூலில் எழுதியிருக்கும் வரிகள் இவ்வகையில் நினைவுகூரத் தக்கவை ஆகும்.

## செட்டிநாட்டுத் தமிழ்

செட்டிநாட்டு மக்கள், மரபு பிறழாமல் இனிமையாகவும் பண்புடனும் பேசக் கூடியவர்கள்; எப்போதும் மங்கலமான சொற்களையே பயன்படுத்தும் நல்லியல்பு படைத்தவர்கள். நகைகளின் பெயர்களாயினும் சரி, சிற்றுண்டிகளின் பெயர்களாயினும் சரி, செந்தமிழில் வழங்குவது செட்டிநாட்டில் காணப்படும் ஒரு சீரிய மரபாகும். செட்டிநாட்டுத் தமிழின் சிறப்பியல்புகளையும் தனித்தன்மைகளையும் புலப்படுத்தும் வகையில் சோமலெ எடுத்துக்காட்டியுள்ள சில சான்றுகள் வருமாறு :

" 'பந்தல்' என்னுஞ்சொல், செட்டிநாட்டில் பிணப் பந்தலையே குறிக்கும்; மணப்பந்தலை அன்று. மங்கலச் சொற்களாக, 'கொட்டகை' 'காவணம்' என்பவையே வழங்குகின்றன. 'இலக்கியத்தில் ஆளப்படுகின்ற காவணம் என்ற அருஞ்சொல் செட்டிநாட்டில் பழகுதமிழாய்ப் பயில்கிறது' என்கிறார் 'சொல்லின் செல்வர்' டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை" (ப. 464).

"கூட்டத்தைக் கலைக்கலாம் என்பதற்குக் கூட்டத்தைப் 'பெருக்கலாம்' என்றும், விளக்கை அணை என்று சொல்வதற்கு விளக்கை 'மலையேற்று' என்றும் மங்கலச் சொற்களால் தெரிவிப்பது செட்டிநாட்டு மரபு" (ப. 466).

"பரவாயில்லை என்று பிறர் சொல்லுவதை, செட்டி நாட்டில் கல்வியறிவில்லாதவருங் கூட, 'குற்றமில்லை' என்று இனிய தமிழில் சொல்லுவர்" (ப. 468).

இங்ஙனம் மங்கலச் சொற்களும் பழந்தமிழ்ச் சொற்களும் இன்றளவும் செட்டிநாட்டில் வழங்கி வருவதைப் பற்பல சான்றுகள் காட்டி நிறுவியுள்ளார் சோமலெ.

## 3. 'வளரும் தமிழ்'

1950-ஆம் ஆண்டில் சென்னை மாநிலக் கல்லூரி தம் மாணவர்களுக்காக ஒரு கட்டுரைப் போட்டியை நடத்தியது. 'பவ்வல் மோர்ஹெட் பரிசு' என்பது அப்போட்டியின் பெயர். கட்டுரை 'இருபதாம் நூற்றாண்டில் தமிழ் உரைநடை' என்னும் பொருள் பற்றி இருக்க வேண்டும் என்பது அப்போட்டியின் விதி. இப்போட்டிக்காகத் தம்மால் எழுதப்பட்ட கட்டுரைதான் விரிவடைந்து 'வளரும் தமிழ்' என்னும் தனி நூலாக உருவெடுத்ததாக முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார் சோமலெ.

### உரைநடையின் வளர்ச்சி

"இருபதாம் நூற்றாண்டில், தமிழ் மொழியின் வளர்ச்சி என்பது பெரும்பாலும் உரைநடையின் வளர்ச்சியேயாகும்" (ப. 1) என நூலின் தொடக்கத்தில் குறிப்பிடுகின்றார் சோமலெ. இக்கருத்திற்கு ஏற்ப, உரைநடையின் தோற்றம், அதன் வகைகள், உரைநடை வளர்ச்சியில் உரையாசிரியர்களின் பங்கு, கல்வெட்டுக்களிலும் செப்பேடுகளிலும் உரைநடை விளங்கிய முறைமை, ஐரோப்பியர் காலத்தில் உரைநடையை வளர்க்க முனைந்த சான்றோர்கள், சொற்பொழிவு, நாடகம், திரைப்படங்கள், செய்தித்தாள்கள், வானொலி, விளம்பரம், சமயம், விஞ்ஞானம், மொழிபெயர்ப்பு, ஆராய்ச்சி, அகராதி, கடிதங்கள் எனப் பல்வேறு வடிவங்களின் மூலம் உரைநடை வளர்ச்சி பெற்ற பாங்கு, உரைநடை வளர்ச்சிக்குப் பல்கலைக்கழகங்களும், அரசினரும் ஆற்றிவரும் பங்கு முதலானவை இந்நூலில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

### மூவகை உரைநடைகள்

இருபதாம் நூற்றாண்டில் தமிழ் உரைநடை 'செந்தமிழ் நடை', 'தனித் தமிழ் நடை', 'மறுமலர்ச்சி நடை' என மூன்று வகைகளில் வளர்ச்சி பெற்று விளங்கியது. இவற்றைப் பற்றி மூன்று இயல்களில் விரிவாக எழுதியுள்ளார் சோமலெ.

இருபதாம் நூற்றாண்டில் தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு ஏற்றம் தந்தவருள் முதல் வரிசையில் வைத்து எண்ணத்தக்கவர் திரு.வி.க. 'பெண்ணின் பெருமை', 'முருகன் அல்லது அழகு' முதலான பற்பல உரைநடை நூல்களை இயற்றிய பெருமை மிக்கவர் இவர். 'எனது இலங்கைச் செலவு' என்ற கட்டுரையை இவர் எழுதிய பின்னரே, 'செலவு' என்னுஞ் சொல்லுக்குப்

'பயணம்' என்ற பொருளும் உண்டு என்பதைத் தமிழ் மக்களிற் பலர் அறியலாயினர். இவ்வாறு அருமையான சொற்கள் பலவற்றைச் சிறிது படித்தவர்களும் அறியும்படி செய்த சிறப்பு இவருக்கு உண்டு" (ப. 62) என்று திரு.வி.க.வின் செந்தமிழ் நடைச் சிறப்பினை எடுத்துக்காட்டுகின்றார் சோமலெ.

பிற மொழிகளின் உறவாலும், அயலார் ஆட்சியாலும் தமிழ் மக்கள் தங்களது பேச்சு வழக்கிலும் எழுத்து நடையிலும் பிற மொழிச் சொற்களை மிகுதியாகப் பயன்படுத்தலாயினர். இதன் விளைவாக 'மணிப்பிரவாள நடை' ஏற்பட்டது. இச் சூழலில் மறைமலையடிகள் தோன்றிப் பிறமொழிச் சொற்களின் கலப்பால் தமிழ் மொழிக்கு நேரிடக் கூடிய தீங்கை எடுத்துக்காட்டினார்; 'தனித்தமிழ் இயக்கம்' என்னும் பெயரில் ஓர் இயக்கத்தைத் தோற்றுவித்தார். பெரும்பாலோர் தமிழைப் புறக்கணித்த அக் காலத்தே - ஆங்கிலம் கற்பதும் பேசுவதும் எழுதுவதுமே அழகெனக் கருதிய அக் காலத்தே-அடிகளார் தூய, தனித்தமிழ் நடையை நிலைநாட்டியது செயற்கரிய செயலாகும் அடிகளார் காட்டிய நெறியினைப் பின்பற்றி கா. சுப்பிரமணிய பிள்ளை, இளவழகனார், மா. இராசமாணிக்கனார், தேவ நேயப் பாவாணர், மு. வரதராசனார் போன்றோர் இயன்ற வரை தனித்தமிழில் எழுத முற்பட்டனர். இவர்களுள் மு.வ.வின் நடை குறித்துச் சோமலெ குறிப்பிட்டிருப்பது வருமாறு :

"தனித்தமிழ் என்றால் பல்லை உடைக்கும் தமிழ் என்று பிறர் எண்ணும் படியாக் அறிஞர் சிலர் பேசியும் எழுதியும் வருகின்றனர். இதற்கு மாறாக இனிய எளிய முறையிலும் தூய தமிழிலும் எப்பொருளையும் பற்றி எழுத இயலும் என்பதை நிலைநாட்டியிருக்கிறார்" (ப. 87). சோமலெ குறிப்பிடுவது போல், டாக்டர் மு.வ. தம் நாவல்களில் அருளப்பன், மலர்விழி, பாவை, அல்லி, கனிமொழி, செந்தாமரை, தேமொழி, வளவன் முதலான மக்கட் பெயர்களையும், பாரிமுனை போன்ற இடப் பெயர்களையும் பயன்படுத்தி, நாடெங்கும் அவற்றைப் பரப்பியுள்ளார். "இவருடைய நடை எளிமையானது, சிறிது படித்தவரும் புரிந்துகொள்ளக் கூடியது" (ப. 87) - என்பது சோமலெ, மு.வ.வின் நடைக்குச் சூட்டும் புகழாரம் ஆகும்.

'செந்தமிழ் நடை', 'தனித்தமிழ் நடை' என்னும் இருவகை நடைப் போக்குகளில் இருந்தும் வேறுபட்டு அமைவது 'மறுமலர்ச்சி நடை'. சோமலெயின் கருத்தில் 'கவியரசர் சுப்பிரமணிய பாரதியாரே உரைநடை எழுதுவதில் மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்'; மறுமலர்ச்சி எழுத்தாளருள் வ.ரா. என்னும் வ. ராமசாமி அய்யங்கார் குறிப்பிடத்தக்கவர் (பக். 158-159). மேலும் அவர், "நூல்களை அறிவு நூல்கள் என்றும், உணர்ச்சி நூல்கள் என்றும் இருவகையாகப் பிரிக்கலாம். எது உணர்ச்சி ஊட்டுகிறதோ அதுதான் இலக்கியம். எனவே விரைவான நடையில், உணர்ச்சி ததும்பும்படி மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் எழுதி வருவது மகிழ்ச்சிக்குரியது" (ப. 179) என்றும் மறுமலர்ச்சி எழுத்தாளர்களின் நடைப்போக்கினைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

## கலைச்சொல்லாக்கம்

விஞ்ஞான நூல்கள் தமிழில் மேலும் பெருகுவதற்கு இடராக இருப்பது நம் மொழியில் கலைச்சொற்கள் இல்லாமையேயாகும். இது குறித்து, 'விஞ்ஞான நூல்களும் கலைச்சொற்களும்' என்னும் இயலில் விளக்கிக் கூறியுள்ளார் சோமலெ. அவரது கருத்தில், "கலைச்சொற்களை ஆக்கும்போது தமிழ் மட்டுமே அறிந்த மக்களுக்குப் புரியும்படி கலைச்சொற்களை அமைப்பதே அறிவுடைச் செயல் ஆகும்" (ப. 331). தம் கருத்திற்கு அரண் சேர்க்கும் விதத்தில் பொதுமக்கள் உருவாக்கியுள்ள கலைச்சொல் ஒன்றையும் சோமலெ எடுத்துக்காட்டியுள்ளார்.

" 'Aeroplane' என்பதைக் குறிக்க 'பறவைக் கப்பல்' என்ற தமிழ்ச் சொல் வழங்கி வருகிறது. பொதுமக்கள் பறவையைப் பார்த்திருக்கிறார்கள்; கப்பலையும் பார்த்திருக்கிறார்கள்; இரண்டையும் இணைத்துப் 'பறவைக் கப்பல்' என்ற சொற்றொடர் ஆக்கியுள்ளனர்" (ப. 331).

## பேச்சு வழக்கில் தமிழ்

'பேச்சு வழக்கில் தமிழ்' என்னும் பகுதியில் பேசுவது போல் எழுதுவதும், எழுதுவது போலப் பேசுவதும் தவறான முறை என்பதை சோமலெ எடுத்துக் காட்டியுள்ளார். சான்றாக, ஒரு கருத்தைத் தெரிவிக்க, பல மாவட்டங்களில் பல சொற்களைப் பயன்படுத்துவதை அவர் சுட்டிக் காட்டியுள்ளார் :

"பெண் பூப்பு எய்திவிட்டாள் என்பது நெல்லை வழக்கு. மேஜராகி விட்டாள் என்று சொல்வது நாகரிக வழக்கு. மனுசியாகி விட்டாள் என்று சொல்வோரும் உளர். ருது ஆகி விட்டாள் என்ற சொற்றொடர்களையும் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆளாகி விட்டாள் என்ற வழக்கும் உண்டு. சடங்காகி விட்டாள் என்று செட்டிநாட்டில் சொல்வர். பெண் பெரியவளாகி விட்டாள் என்பர் பலர். புஷ்பவதியாகிவிட்டாள் என்பர் சிலர். சமைந்து விட்டாள் என்பர் தென்னார்க்காட்டு மக்கள்; புத்தி அடைந்துவிட்டாள் என்று அவர்கள் சொல்வார்கள். வட ஆர்க்காட்டில் திரண்டுவிட்டாள் என்ற சொற்றொடரைப் பயன்படுத்துவர். பேசுவது போல் எழுத வேண்டுமென்று சொல்லுகிற அன்பர்கள் இச்சொற்றொடர்களுள் எதைக் கையாள வேண்டுமென்று கருதுகின்றனரோ?" (ப. 396). இங்கே சோமலெ கேட்டிருக்கும் வினா, பேசுவது போல் எழுதுவதில் உள்ள சிக்கலைத் தெற்றெனப் புலப்படுத்துவதாகும். இங்ஙனம் தமிழ் உரைநடையின் பல்வேறு பரிணாமங்களையும் பரிமாணங்களையும் 'வளரும் தமிழ்' நூலில் இரத்தினச் சுருக்கமாக எடுத்துக்காட்டியுள்ளார் சோமலெ.

### 4. 'நெய்வேலி'

'அமெரிக்காவைப் பார்' என்றாற் போல் பற்பல உலக நாடுகளைத் தம் பயண நூல்களின் வழியே நாம் பார்க்க வழிவகுத்த சோமலெ, 'இமயம்

முதல் குமரி வரை' என்னும் நூல் எழுதி இந்தியாவையும் நமக்குக் காட்டினார்; பின்னர் 'நமது தமிழ்நாடு வரிசை' எனத் தமிழகத்தின் பத்து மாவட்டங்களைப் பற்றிய கலைக்களஞ்சியங்களை அளித்தார். முத்தாய்ப்பாக, 'தொழில் நகரம்' எனப் பெயர் பெற்ற நெய்வேலியைப் பற்றி 1960-ஆம் ஆண்டில் தனி நூல் ஒன்றினைப் படைத்துத் தந்தார் சோமலெ. இங்ஙனம் அவர், உலகம் - இந்தியா - தமிழ்நாடு (மாவட்டம்) - நகரம் எனப் படிப்படியாக நான்கு நிலைகளிலும் பயண நூல்களைப் படைத்துத் தந்திருப்பது ஒரு தனிப்பெருஞ் சாதனை ஆகும்.

## நூல் எழுதும் எண்ணம்

"செல்வம் எத்தனை யுண்டு புவிமீதே - அவை
யாவும் படைத்த தமிழ்நாடு"

என்று கவியரசர் பாரதியார் பாடியதற்கேற்ப, நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி கிடைக்கிறது என்பதை அறிந்தவுடன், அவ்வளத்தைப் பயன்படுத்தித் தொழில் வளர்ச்சிக்கு வித்திட முனைந்தது இந்திய அரசு. நெய்வேலித் திட்டத்தில் அரசியலார் அக்கறை காட்டிய நாளிலிருந்து அதைப் பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் சோமலெவுக்கு ஏற்பட்டது. அதன் விளைவாக அவர் பல முறை நெய்வேலிக்குச் சென்று, அங்கு நடக்கும் நிகழ்ச்சிகளைக் கவனித்து வரலானார். ஆறு ஆண்டுகள் இவ்வாறு கூர்ந்து நோக்கி எடுத்து வைத்த அரிய குறிப்புக்களைப் பயன்படுத்தி இந்நூலை உருவாக்கினார் சோமலெ. மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பழுப்பு நிலக்கரித் திட்டத்தைப் பற்றிய முதல் நூல் என்ற பெருமை இந்நூலுக்கு உண்டு.

## நூலின் அமைப்பு

இந்நூலில் பதினாறு இயல்களில் நெய்வேலி பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. நெய்வேலியின் அமைப்பு, பழுப்பு நிலக்கரியின் வரலாறு, அதன் பயன்கள், அதனின்றும் எடுக்கப்படும் மின்சார உற்பத்தி, கரிக்கட்டி அச்சு தயாரித்தல், நிலக்கரியுடன் தொடர்புடைய யூரியா உரத் தொழிற் சாலைத் திட்டம், எஃகு ஆலை, நிலக்கரியைத் தோண்டும்பொழுது கிடைக்கும் களிமண்ணிலிருந்து தயாரிக்கப்படும் பல பொருட்கள், அவற்றைச் சார்ந்து ஏற்பட்டிருக்கும் பிற தொழில்கள் எனச் செய்திகளைத் தொகுத்தும் வகுத்தும் நூலில் சுவைபடத் தந்துள்ளார் சோமலெ.

நெய்வேலி பழுப்பு நிலக்கரியின் கூறுகள், நெய்வேலி பழுப்பு நிலக்கரியும் பிற எரிபொருள்களும் பற்றிய ஒப்பீட்டுப் பட்டியல், பழுப்பு நிலக்கரி கண்டுபிடிக்கப்பட்டுள்ள பகுதிகளைப் பற்றிய சில புள்ளி விவரங்கள், இத்திட்டத்தில் பணியாற்றும் தொழிலாளர் தொகைப் பட்டியல், நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி இருப்பதாக 1828-இல் மாவட்ட ஆட்சியராக இருந்த வெள்ளைக்காரர் குறிப்பிட்டது முதல் இந்நூல் எழுதப்பட்ட 1960-ஆம்

ஆண்டு வரை இத்திட்டம் தொடர்பாக இந்திய அரசால் மேற்கொள்ளப்பட்ட சில நிகழ்ச்சிகள், உலக நாடுகளில் பழுப்பு நிலக்கரி கிடைக்கும் இடங்களும், அதன் அளவும் பற்றிய பட்டியல், இத்திட்டத்துடன் தொடர்புடைய சில கலைச்சொல் ஆக்கங்கள், நெய்வேலியைப் பற்றிய வரைபடம், அங்குச் செல்வதற்குப் பயன்படும் சில பயணக் குறிப்புகள், நெய்வேலியில் காணத்தக்கவை, 'நெய்வேலி : நாம் பெற்ற பேறு' என்னும் தலைப்பில் அமைந்த கவிஞர் தமிழ் ஒளியின் கவிதை, இந்நூல் எழுதுவதற்கு உதவியாக அமைந்த நூற்பட்டியல் என்பன முடிவுரையைத் தொடர்ந்து நூலின் இறுதியில் இடம்பெற்றிருக்கும் பிற்சேர்க்கைகள் ஆகும். இங்ஙனம் நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டம் பற்றிய அனைத்துச் செய்திகளையும் அரிதின் முயன்று தொகுத்து, அவற்றை அனைவரும் ஒரு முறை படித்தாலே தெரிந்து கொள்ளும் வண்ணம் எளிய நடையில் நூலாக உருவாக்கித் தந்துள்ளார் சோமலெ.

## நூலின் தொடக்கம்

நூலின் முதல் இயலுக்குக் கலை நயம் மிளிரத் 'தொழில் ஞாயிறு தோற்றம்' எனப் பெயர் இட்டுள்ளார் சோமலெ. " 'நல்ல காலம் பொறக்குது, நல்ல காலம் பொறக்குது...' என்று குடுகுடுப்பைக்காரன் தான் செல்லும் வீடுகளில் உள்ளவர்களையெல்லாம் வாழ்த்துகிறான். நெய்வேலியில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரி, தமிழ்நாட்டில் தொழில் பெருகி வளம் சிறக்குமென குடுகுடுப்பைக்காரனைப் போலவே வருங்காலத்தை அறிவிக்கிறது" (ப. 9) என்னும் நூலின் தொடக்க வரிகளே படிப்பவர்க்கு அத்திட்டத்தைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்னும் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அமைந்துள்ளன. முத்தாய்ப்பாக இத்திட்டத்தால் நாட்டிற்குக் கிடைக்கக் கூடிய நன்மைகளை இவ்வியலின் நிறைவுப் பகுதியில் எடுத்துக்காட்டியுள்ளார் சோமலெ. "நெய்வேலித் திட்டத்தால் தமிழ்நாட்டில் ஐந்து மாவட்டங்களின் வாழ்க்கை நிலையும் அமைப்பும் முற்றிலும் மாறிவிடும். சிற்றூர்கள் அனைத்துக்கும் மின்சாரம் கிடைக்கும். பல பகுதிகளில் புத்தம் புதிய தொழிற்சாலைகள் தோன்றும். பல்லாயிரவர்க்கு வேலை கிடைக்கும். மாபெரும் இந்த மாறுதலைச் செய்யக் கூடியது பழுப்பு நிலக்கரி என்னும் கனிச்செல்வம். இது, பொன்னையும் வைரத்தையும் விடப் பயனுள்ளது. சுருங்கச் சொன்னால், நிகழவிருக்கும் தொழில் புரட்சியின் உதய ஞாயிறு நெய்வேலியில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற பழுப்பு நிலக்கரி" (ப. 10).

## தொழில் வளர்ச்சியில் நெய்வேலியின் பங்கு

"ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்
ஆலைகள் வைப்போம் கல்விச் சாலைகள் வைப்போம்"

என்று கவியரசர் பாரதியார் கண்ட கனவு நனவானால் தான் நாட்டில் குடியிருக்கும் வறுமையையும் வேலையின்மையையும் விரட்டியடிக்க முடியும்;

தொழில் வளர்ச்சியை ஏற்படுத்த முடியும். இந்த நோக்கில் நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு நெய்வேலியின் பழுப்பு நிலக்கரித் திட்டம் எங்ஙனம் கைகொடுக்கும் என்பதைப் 'பழுப்பு நிலக்கரியின் பயன்கள்' என்னும் இயலில் விரிவாகச் சுட்டிக் காட்டியுள்ளார் சோமலெ.

"தொழில் வளர்ச்சி என்பது மந்திரத்தில் மாங்கனி வரவழைப்பதன்று. எத்தொழிலும் சிறப்படைய வேண்டுமாயின், அதற்கு உரிய மூலப்பொருள்கள் வேண்டும். அவ்வாறே, அந்த மூலப் பொருள்களைக் கொண்டு பயன்படும் பொருளாக உருவாக்க, உற்பத்தி செய்ய, இயந்திரங்களுக்கும் கொதிகலங்களுக்கும் வேண்டிய எரிபொருள்கள் - மின்சாரம், எண்ணெய், நிலக்கரி ஆகியவை - ஏராளமாகக் கையிருப்பு இருக்க வேண்டும். இந்த இருவகைச் செல்வங்களையும், அதாவது மூலப் பொருள்களையும் எரி பொருள்களையும் தன்னகத்து ஒருங்கே கொண்டிருப்பது பழுப்பு நிலக்கரி. அதனால் தொழில் துறையில் தென்இந்தியா அடையவிருக்கும் பெரு வளர்ச்சியின் அடிப்படை, அடித்தளம், ஆணிவேர், வித்து ஆகியவை நெய்வேலி பழுப்பு நிலக்கரி என்று கருதப்படுகிறது" (ப. 24) என்னும் பகுதி இவ்வகையில் நினைவுகூரத்தக்கதாகும். நூலின் இடையே ஓர் இடத்தில் "பழுப்பு நிலக்கரி பற்றி இதுவரை நடந்திருக்கும் ஆராய்ச்சி கைமண் அளவு; இனி, நடைபெற வேண்டியது உலகளவு. எனவே, இதற்கெனத் தனியே ஓர் ஆராய்ச்சி நிலையம் நெய்வேலியில் விரைவில் அமைக்கப்பட வேண்டும்" (ப. 71) என்ற தம் விருப்பத்தையும் வெளியிட்டுள்ளார் சோமலெ. பாரதியார் கண்ட தீர்க்க தரிசனம் போல், சோமலெ கண்ட தீர்க்க தரிசனமும் இன்று உண்மையாகி இருக்கிறது என்று கூறுவது மிகையன்று.

பழுப்பு நிலக்கரியைத் தோண்டி எடுக்கும்போது கிடைக்கும் களிமண் கூடப் பயனுடையது; அதைப் பயன்படுத்திப் பல வண்ண பொம்மைகள் செய்யும் பணி நடைபெற்று வருகிறது. இத்தகவலைத் தமக்கே உரிய பாணியில் நகைச்சுவை உணர்வோடு பதிவு செய்துள்ளார் சோமலெ. அப்பகுதி வருமாறு: "ஒருவனுடைய அறிவு கூர்மையாக இல்லை என்று நாம் நினைத்தால் 'உன் மூளையில் என்ன களிமண்ணா இருக்கிறது?' என்று கேட்கிறோம். இனி ஒருவரும் அவ்வாறு கேட்க வேண்டாம் என்று அன்பர்களை வேண்டுகிறேன். களிமண்ணின் பயன்கள் பல. ஐயப்பாடு இருந்தால் நெய்வேலிக்குச் சென்று பாருங்கள்... இதை நினைக்கும்போது, 'கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாமோ? களிமண் எல்லாம் நெய்வேலிக் களிமண் ஆகுமோ?' என்று ஒரு புதிய சொற்றொடரை உருவாக்கலாமென்று தோன்றுகிறது" (ப. 121).

## 'தமிழர்களுக்கு வருங்காலத்தை நினைவூட்டும் நெய்வேலி'

'எப்போதும் பழம்பெருமையையே பேசிக் கொண்டிருப்பது' என்பது தமிழனுக்கு வாய்த்திருக்கும் ஒரு தனிக்குணம். கடந்த காலத்தைப் பற்றிய நினைவுகளையே எப்போதும் பெருமையோடும் பெருமிதத்தோடும் அசை

போட்டுக் கொண்டிருப்பான் அவன். ஆனால், நெய்வேலிக்கு வந்தால் அவனது நிலையும் நினைப்பும் மாறிவிடும். வருங்காலத்தைப் பற்றிய சிந்தனை அவனது உள்ளத்தில் ஊற்றெடுக்கும்; வாழ்க்கையில் நல்ல திருப்பம் ஏற்படும். "நெய்வேலியில் இருக்கும்போது வருங்காலத்தைப் பற்றி நினைக்கிறோம். கி.பி. 2000-இல் தமிழ்நாடு தொழில் துறையில் அடையக்கூடிய முன்னேற்றத்தை எண்ணி எண்ணிப் பெருமூச்சு விடுகிறோம். பழமையைப் பாராட்டும் தமிழர்களுக்கு வருங்காலத்தை நினைவூட்டுகிறது நெய்வேலி. இது, தமிழ்நாட்டு வரலாற்றில் ஒரு திருப்பம்; நல்ல திருப்பம்; வரவேற்கத்தக்க திருப்பம்" *(ப. 137)* என்று சோமலெ இந்நூலின் முடிவுரையில் எழுதியிருக்கும் வரிகள் பொன் எழுத்துக்களால் பொறிக்கத்தக்கவை ஆகும்.

## 5. 'வேளாண்மைப் பல்கலைக்கழகம்'

'தந்தை மகற்குஆற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்' *(குறள் 67)*

என்று ஒரு குறட்பாவில் தந்தை தன் மகனுக்குச் செய்யத்தக்க நல்லுதவியைப் பற்றிக் குறிப்பிடும் வள்ளுவர், பிறிதொரு குறட்பாவில் மகன் தன் தந்தைக்குச் செய்யத் தக்க கைம்மாறு யாது என்பது பற்றியும் கருத்துரைப்பார். அக்குறட்பா வருமாறு :

'மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்எனுஞ் சொல்.' *(குறள் 70)*

இவ்விரு குறட்பாக்களுக்கும் உரிய உயிருள்ள சான்றுகளாக சோமலெயும் அவரது மகன் சோமசுந்தரமும் விளங்குகிறார்கள் என்று கூறினால், அது மிகையன்று. கற்றவர் கூட்டத்தில் தன் மகன் முந்தியிருக்கும்படியாக அவனைக் கல்வியில் மேம்படச் செய்த தந்தையாக சோமலெ விளங்குகிறார் என்பது எவ்வளவு உண்மையோ, அவ்வளவு உண்மையே 'இவன் தந்தை இவனை மகனாகப் பெற என்ன தவம் செய்தாரோ?' என்று பிறர் புகழ்ந்து சொல்லும்படியாக வாழ்ந்து காட்டும் மகனாக சோமசுந்தரம் திகழ்கிறார் என்பதும். இதனை உலகிற்குப் பறைசாற்றும் ஓர் எடுத்துக்காட்டே 'வேளாண்மைப் பல்கலைக்கழகம்' என்னும் நூல். சோமலெயும் அவரது மகன் சோமசுந்தரமும் இணைந்து இந்நூலை எழுதியுள்ளனர்.

இந்நூல் இரு வகைகளில் சிறப்பும் தனித்தன்மையும் வாய்ந்தது :

1. தந்தையும் மகனும் இணைந்து இந்நூலை உருவாக்கி இருப்பது குறிப்பிடத்தக்க ஒரு சிறப்பு.
2. ஒரு கல்வி நிறுவனத்தைக் குறித்து - தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தைப் பற்றி - முழு அளவில் வெளிவந்திருக்கும் முதல் நூல் என்பது பிறிதொரு தனிச்சிறப்பு.

## புகழாரம்

"எப்பொருளையும் அடி முதல் நுனி வரை ஆய்ந்தறிந்து தெளிவாகவும் விளக்கமாகவும் தென்றல் நடையிலும் வரைந்து தரும் ஆற்றலாளர் அவர் (சோமலெ). தமிழகத்தின் வேளாண்மைப் பல்கலைக்கழகம் பற்றி - துல்லியமாகவும் - எல்லாத் தகவல்களும் உள்ளடங்கும் வகையிலும் - அவரும் அந்தப் பல்கலைக்கழக மாணவ நன்மணியாம் அவர்தம் புதல்வரும்" (ப. 6) இந்நூலை நல்கியுள்ளனர் எனத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் அப்போதைய இணைவேந்தரும், தமிழக வேளாண்மை அமைச்சருமான மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து இந்நூலைப் பாராட்டியுள்ளார்.

தமிழ் நூல்களில் வேளாண்மைத் துறை பற்றிய நூல்கள் மிகமிகக் குறைவு என வருந்தி இருந்தவர்களின் மனக்குறையைப் போக்கும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது. சோமலெ, சோமசுந்தரம் ஆகிய இருவரது கடுமையான உழைப்பையும் பரந்த ஆராய்ச்சி அறிவையும் இந்நூல் முழுவதிலும் நன்கு காணலாம்; இந்தியாவின் பல்கலைக்கழக வரலாற்றையும் கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியையும் இவர்கள் ஆராய்ந்து கூறி இருப்பவையே இதனை மெய்ப்பிக்கும்.

## நூலாசிரியர்களின் திட்டமிடல்

"நூலைத் திட்டமிட்டபோதே, இன்றியமையாச் செய்திகளையும் சாதாரணமாகப் பெரும்பாலோர்க்குத் தெரியாத தகவல்களையும் மட்டுமே இந்நூலில் இடம்பெறச் செய்வது என்று முடிவு செய்தோம்" (ப. 11) என்று முன்னுரையில் குறிப்பிடுவதில் இருந்து எந்த ஒரு செயலையும் திட்டமிட்டுச் செய்யும் இயல்பு படைத்தவர்கள் இந்நூலின் ஆசிரியர்கள் என்பதை எவரும் எளிதில் உணர்ந்து கொள்ளலாம். மேலும், "நூற்றுக்கு மேற்பட்ட அறிஞர்களைப் பேட்டி கண்டும் சில ஆயிரம் பக்கங்களைப் படித்துப் பார்த்தும் இந்த நூலை உருவாக்கியிருக்கிறோம்" (ப. 12) என்றும், "தமிழ்நாட்டு மக்களுக்கு ஈடு இணையில்லாத பணியைச் செய்து வரும் ஒரு நிறுவனத்தைப் பற்றி இதுவரை சரியாக அறியாதவர்கள் ஓரளவாவது தெரிந்து கொள்ள இந்த நூல் உறுதுணையாக இருக்கும் என்று நம்புகிறோம்" (ப. 13) என்றும் நூலாசிரியர்களின் கூற்றாக வரும் பகுதிகள் அவர்களது உள்ளக் கிடக்கையினையும் உழைப்புத் திறத்தினையும் ஒருங்கே புலப்படுத்துவன ஆகும்.

## நூலின் உள்ளடக்கம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தொடங்கிய வரலாறு, அதன் வளர்ச்சி, கட்டமைப்பு, பல்வேறு துறைகள், அங்கே கற்பிக்கப்படும் படிப்பு வகைகள், மாணவர் சேர்க்கை முறை, வேளாண்மை அறிவியல் நிலையங்கள், மையங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள், தமிழ்நாட்டில் உள்ள

பல்வேறு வேளாண்மைக் கல்லூரிகள், வேளாண்மைப் பல்கலைக்கழக நூலகம், இணைவேந்தர், துணைவேந்தர்கள் முதலான பல்வேறு செய்திகளை இந்நூல் 31 இயல்களில் 256 பக்கங்களில் நிரந்து இனிது சொல்லியுள்ளது. நூலாசிரியர்களின் கை வண்ணத்திற்குக் கட்டியம் கூறும் ஓர் இடம்:

" 'மரங்கள் நடுவது நமக்காக அல்ல, நம் பேரன் பேத்திகள் பயனடைய' என்ற எண்ணம் முன்னர் நிலவியது.

இன்றைய சிந்தனை இதனின்றும் முற்றிலும் வேறுபட்டது.

நட்டு மூன்றாண்டுகளுக்குள்ளேயே பலன் தரக்கூடிய இரகங்கள் பல உள்ளன" (ப. 79).

கோவை தோட்டக் கலைக் கல்லூரி மேற்கொண்டுள்ள ஆராய்ச்சிகளைப் பற்றிக் குறிப்பிடும் இடத்தில் இத்தகவல் இடம்பெற்றுள்ளது.

பிறிதோர் இடம் :

" 'மாடு கட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல்லென்று
யானை கட்டிப் போரடிக்கும் அழகான தென்மதுரை'

என்பது ஒரு நாட்டுப் பாடல். இதன் ஆழமான கருத்து, பன்மடங்கு அதிக சக்தி பெற்ற கருவிகளை வேளாண் விளைபொருள் பெருக்கத்திற்குப் புதிது புதிதாகக் கண்டுபிடித்தாக வேண்டும் என்பதே" (ப. 97). கோவை வேளாண்மைப் பொறியியல் கல்லூரியைப் பற்றிய இயலின் தொடக்க வரிகள் இவை.

## நூலாசிரியர்களின் மதிப்பீட்டுத் திறம்

"இந்நூல் வாயிலாக (அதன் ஆசிரியர்கள் சோமலெயும் அவரது மகன் சோமசுந்தரமும்) ஒரு பெரிய நிறுவனத்தின் மிகச் சிறந்த சாதனைகளை காய்தல், உவத்தல் அகற்றி நடுநிலையோடு விளக்கும் திறம் தெற்றெனத் தெரிகிறது" (ப. 4). எதையும் மிகைபடக் கூறாது மதிப்பீடு செய்யும் ஆற்றல் கைவரப் பெற்ற இந்நூலாசிரியர்களுக்கு இன்னும் புகழ் சேர்க்கும் வகையில் இந்நூல் விளங்குகின்றது.

## 6. 'மலர் மன்னர்' சோமலெ

கோவில் குட நீராட்டு விழா (கும்பாபிஷேகம்) மலர், நூற்றாண்டு விழா மலர், சிறப்பு மலர் என்ற வகைகளில் சோமலெ பதினைந்து மலர்களைப் பதிப்பித்துள்ளார். இம்மலர்களால் இவருக்கு 'மலர்மன்னர் சோமலெ' எனப் பதிப்புலகில் ஒரு சிறப்புப் பெயர் வழங்கி வருகிறது. எதையும் செம்மையாகத் திட்டமிடும் பழக்கமும், செய்வன திருந்தச் செய்யும் இயல்பும் உடைய சோமலெ பதிப்பித்துத் தந்துள்ள கோவில் குட நீராட்டு மற்றும் நூற்றாண்டு விழா மலர்கள், சிறப்பு மலர்கள், விழா மலர்கள் வருமாறு :

1. நெற்குப்பை வைகாசி விசாகப் பொன்விழா மலர் (7.6.1971)
2. காசி விசாலாட்சி அம்மன் கோவில் குட முழுக்கு மலர் (1.11.1971)
3. நாசிக் - பஞ்சவடி கார்த்திக் சுவாமி கோயில் குட முழுக்கு மலர் (28.1.1972)

4. இராமநாதசுவாமி திருக்கோயில் மகா கும்பாபிஷேக சிறப்பு மலர் (1975)
5. அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில் கும்பாபிஷேக மலர் (1976)
6. காஞ்சிபுரம் மலர் (மார்ச்சு, 1979)
7. கோவிலூர் திருக்குட நீராட்டு மலர் (ஜூன், 1978)
8. நெற்குப்பை நகரத்தார் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் திருக்குட நன்னீராட்டு விழா மலர் (14.9.1978)
9. பெங்களூர் கெஞ்சனஹள்ளி அருள்மிகு அன்னை இராஜ ராஜேஸ்வரி அம்பாள் திருக்கோயில் திருக்குட நீராட்டு விழாச் சிறப்பு மலர் (6.7.1979)
10. கோவில் (டிசம்பர் 1979)
11. கோட்டையூர் அருள்மிகு மீனாட்சி அம்மை உடனாய அருள்மிகு சோமசுந்தரேசுவரர் திருக்கோவில் திருக்குட நீராட்டு மலர் (27.1.1980)
12. ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம் நூற்றாண்டு (1863-1963) விழா மலர் (14.9.1963)
13. சென்னை நகரத்தார் மாணவர் சங்கம் சிறப்பு மலர் (12.7.1964)
14. அண்ணாமலைப் பல்கலைக்கழக வெள்ளி விழா மலர் (1955)
15. அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பொன்விழா மலர் (டிசம்பர், 6, 1979)
16. அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பொன்விழா நிகழ்ச்சி மலர் (1979)

இம் மலர்களுள் அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில் கும்பாபிஷேக மலரும், அருள்மிகு இராமேஸ்வரம் இராமநாதசுவாமி திருக்கோயில் மகாகும்பாபிஷேக சிறப்பு மலரும் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவை ஆகும். "இந்த மலர் முழுவதையும் படிக்கச் சில நாளாகும். படித்து முடித்து விட்டால் நம் மனத்தில் திருவண்ணாமலை விசுவரூபம் எடுத்து நிற்கும்... இந்த மலரை உருவாக்குவதற்கு இதன் தொகுப்பாசிரியர் எவ்வளவோ உழைப்பும் பொறுமையும் மேற்கொண்டிருக்க வேண்டும். பல கும்பாபிஷேக மலர்களை வெளியிட்டு அனுபவம் பெற்ற திரு சோம.லெ.யை எவ்வளவு பாராட்டினாலும் தகும். திருவண்ணாமலையைப் பற்றிய எல்லாச் செய்திகளும் அடங்கிய கருத்துக் கருவூலம் இது" (முன்னுரை, பக். vii-viii) என்று 'கலைமகள்' ஆசிரியர் வாகீச கலாநிதி திரு. கி.வா. ஜகந்நாதன், திருவண்ணாமலை திருக்கோயில் குடநீராட்டு மலரைப் பற்றிக் கூறியுள்ள கருத்து, பொதுவாக, சோமலெ பதிப்பித்துள்ள அனைத்து மலர்களுக்கும் பொருந்தி வருகின்ற ஒன்றே ஆகும்.

திருவண்ணாமலை மலரைப் போல் இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில் மகாகும்பாபிஷேக சிறப்பு மலரை உருவாக்குவதற்கு சோமலெ எடுத்துக்கொண்ட தனி முயற்சியும் சிறப்பான ஒன்றாகும். ''விவரங்களைச் சேகரிக்கவும் கோயிலின் அன்றாட நடைமுறைகளை அறியவும் கட்டுரைகளில் சொல்லப் பெற்ற விவரங்களைச் சரி பார்ப்பதற்காகவும் நான் ஆறு முறை இராமேச்சரத்திற்குச் சென்றிருந்தேன். அங்குள்ள நூல் நிலையத்தையும் பயன்படுத்தினேன். இவ்வாறே அண்ணாமலைப் பல்கலைக்கழக நூல் நிலையம், சென்னையிலுள்ள மறைமலையடிகள் நூல் நிலையம், கன்னிமரா நூல் நிலையம், தமிழக அரசின் தலைமைச் செயலக நூல் நிலையம் ஆகியவற்றையும் பயன்படுத்தினேன்'' (ப. viii) என்னும் அவரது பதிப்புரைக் குறிப்பு இங்கே மனங்கொளத் தக்கதாகும்.

இங்ஙனம் கோவில் குடநீராட்டு மலர், நூற்றாண்டு விழா மலர், சிறப்பு மலர் என எம்மலர் ஆயினும் அதனைச் சிறப்பாகவும் செம்மையாகவும் பதிப்பிக்கும் திறன் கொண்டவராகத் தமிழ் கூறு நல்லுலகால் அடையாளம் காணப்பெற்றுள்ளார் சோமலெ.

## 'செந்தமிழ்த் தேனீ'

'இந்தத் துறையில் தமிழில் வெளிவரும் முதல் நூல் இது' என்னும் சிறப்புக்கு உரியது சோமலெயின் 'நீங்களும் தூதுவர் ஆகலாம்'. அவரது வாழ்நாள் சாதனையாக மதிக்கத்தகுந்த நூல் 'செட்டிநாடும் செந்தமிழும்'. அவரை ஒரு தேர்ந்த நகரத்தார் இயல் ஆய்வாளராக அடையாளம் காட்டும் நூல் இது. தமிழ் உரைநடையின் வளர்ச்சியைப் புலப்படுத்தும் நோக்கில் சோமலெ எழுதியிருக்கும் அரிய நூல் 'வளரும் தமிழ்'. 'தொழில் நகரம்' எனப் பெயர் பெற்ற நெய்வேலி பற்றிய சோமலெயின் சொற்சித்திரம் 'நெய்வேலி'. சோமலெயும் அவரது புதல்வர் சோமசுந்தரமும் இணைந்து எழுதியிருக்கும் நூல் 'வேளாண்மைப் பல்கலைக்கழகம்'. பசுமைப் புரட்சிக்கு வித்திட்ட ஒரு பல்கலைக்கழகத்தைப் பற்றிய முழுமையான படப்பிடிப்பு என்ற வகையில் சிறப்பாகக் குறிப்பிடத்தகுந்த நூல் இது. சோமலெயின் கை வண்ணத்தில் உருவாகியுள்ள ஆலயங்களின் குடநீராட்டு விழா மலர்களும் நூற்றாண்டு விழா மலர்களும் சிறப்பு மலர்களும் அவர் ஒரு 'செந்தமிழ்த் தேனீ' என்பதை நிலைநாட்டுகின்றன.

# 8

# நடை நயம்

"கருத்துககளைத் தொகுப்பதில் - செய்திகளைச் சேர்ப்பதில் - செந்தமிழ்த் தும்பியாகத் திரு. சோமலெ திகழ்கின்றார்கள். செல்வம் சேர்ப்பது போல செய்திகளைச் சேர்ப்பார்கள் என்பது கூடப் பொருந்தும்."

- ஒளவை நடராசன்*

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் நடை ஒரு வகையானதன்று. கற்றறிந்தார் ஏத்தும் சீரிய செந்தமிழ் நடை எனவும், பிறமொழிச் சொற்கள் கலக்காமல் எழுதப்பெறும் தனித்தமிழ் நடை எனவும், எளிமையைத் தலைமைப் பண்பாகக் கொண்ட பத்திரிகை நடை எனவும், மிகக் குறைந்த கல்வியறிவு உடைய மக்களும் புரிந்துகொள்ளத் தக்க வகையில் அமைந்த மறுமலர்ச்சி நடை எனவும் அதைப் பல்வகைப்படுத்தலாம். சோமலெயும் 'வளரும் தமிழ்' என்னும் நூலில் தமிழ் உரைநடை பற்றிய தம் கருத்துக்களை விரிவாக வெளியிட்டுள்ளார். அவரது நோக்கில் 'தமிழ் உரைநடை இலக்கியம் சிறப்புற்று விளங்க வேண்டும் எனில், எளிமை, தூய்மை, இனிமை, ஆற்றொழுக்கு, கவர்ச்சி, காலத்திற்கு ஏற்ற நெகிழ்ச்சி ஆகிய பண்புகளைப் பெற்றிருத்தல் வேண்டும்' (ப. 447). இங்ஙனம் தமிழ் உரைநடை பற்றிப் பொது நிலையில் கருத்துத் தெரிவித்ததோடு நின்றுவிடாமல், தம் மொழி நடையும் முன்னே சுட்டிக்காட்டிய ஆறு பண்புகளைப் பெற்று இலக்கிய நயத்தில் சிறந்து விளங்குமாறு பார்த்துக் கொண்டார்; படிப்பவர் உள்ளத்தை ஈர்க்கும் படியான நடையில் எழுதும் திறத்தினை வளர்த்துக் கொண்டார். இதனைக் கருத்தில் கொண்டே அறிஞர் மு. வரதராசன் 'நேரிய தமிழ் நடை' (சிறப்புரை, வட ஆர்க்காடு மாவட்டம், ப. 3) என்று சோமலெயின் நடை பற்றிய தம் மதிப்பீட்டினைத் தெரிவித்துள்ளார்.

## I. 'நேரிய தமிழ் நடை'

சோமலெ சின்னஞ் சிறு வாக்கியங்களைக் கையாண்டு அவ்வப்போது அழகான சொற்சித்திரங்களைத் தீட்டுவது உண்டு. ஒரு சான்று :

"நமக்கு ஒரு வாயும் இரண்டு காலும் உண்டு. பேசுவதைப் போல் இரண்டு பங்கு கேட்க வேண்டும் என்பதே அதன் பொருள்" (நீங்களும்

---

* அணிந்துரை, செட்டிநாடும் செந்தமிழும், ப vii.

தூதுவர் ஆகலாம், ப. 54). செவிச் செல்வத்தின் சிறப்பையும் சீர்மையையும் இதனினும் நயமாக ஒருவரால் வெளிப்படுத்தி விட முடியாது.

சில நேரங்களில் சோமலெயின் நடையில் அழகிய உருவகப் பாங்கு பளிச்சிடுவதும் உண்டு. ஓர் எடுத்துக்காட்டு :

"மொரிசியஸ் சின்னஞ்சிறு தீவு; இந்தியப் பெருங்கடலின்கண் உள்ள ஒரு முத்து" (உலக நாடுகள் வரிசை-9 : மொரிசியஸ், ப. 5). இந்தியாவைப் பெருங்கடல் எனச் சுட்டியதற்கு ஏற்ப, சின்னஞ்சிறு தீவான மொரிசியஸை ஒரு முத்து என சோமலெ குறிப்பிட்டிருப்பது நயம்.

வரைவிலக்கணம் (Definition) தரும் பாங்கில் சோமலெ எழுதிச் செல்லும் போக்கிற்கு ஓர் எடுத்துக்காட்டு வருமாறு :

"உலகை நல்வழிப்படுத்தும் நூல்கள் ஒரு சிலவே. ஏனைய எல்லாம் அவ்வப்போது ஒரு தடவை படித்துவிட்டுப் பழைய காகிதம் வாங்குபவனுக்கு விற்கப்படுகின்றன. அவ்வாறின்றி மீண்டும் மீண்டும் படித்து இன்புறத் தக்கவையே சாவா இலக்கியம் எனப்படுவன" (பல்சுவைக் கட்டுரைகள், பக். 27-28). 'சாவா இலக்கி'யத்திற்கு இங்கே சோமலெ தந்திருக்கும் விளக்கம் சுருக்கமும் செறிவும் கொண்டதாகும்.

வாசகரை விளித்தும் முன்னிலைப்படுத்தியும் எழுதிச் செல்லும் போக்கினையும் சோமலெயிடம் காணமுடிகின்றது. இவ்வகை நடைக்கு ஓர் உதாரணம் இதோ :

"குற்றாலம்! ஆ! எவ்வளவு இனிய பெயர்! நீங்கள் தாவர சாத்திர மாணவராக இருந்தால், அங்கு மலைப் பகுதிகளிலுள்ள மரம், செடி, கொடிகளின் பெயர்களும், அவற்றின் இயல்பும் உங்கள் நினைவுக்கு வரும்; நீங்கள் கலைப் பற்றுடையவராக இருந்தால், சித்திரசபைக் காட்சிகள் உங்கள் மனக்கண் முன்னே தோன்றும்; நீங்கள் இலக்கியத்தில் ஈடுபாடு உடையவராக இருந்தால்,

'வம்பார் குன்றம் நீடுயர் சாரல் வளர்வேங்கைக்
கொம்பார் சோலைக் கோலவண்டி யாழ்செய் குற்றாலம்'

என்ற ஞானசம்பந்தர் பாடல் உங்கள் நினைவுக்கு வரும்; நீங்கள் கடவுள் நெறி மறவாதவராக இருந்தால், தலத்தின் பெருமையும் குற்றாலநாதரின் அருள் வெள்ளமும் உங்கள் நினைவில் தோன்றும். ஆனால், உங்கள் எல்லோருக்குமே குற்றாலம் என்ற உடனேயே, உள்ளத்திலே ஒரு குளிர்ச்சி பிறந்திருக்கும்" (பிரயாணம் ஒரு கலை, ப. 56). இங்கே குற்றாலத்தின் இனிமையையும் குளிர்ச்சியையும் நேரடியாக - வெளிப்படையாக - விளக்கமாகப் படர்க்கை நடையில் சொல்லிக் கொண்டு செல்லாமல், வாசகரை இடையிடையே விளித்து முன்னிலை நடையில் எழுதிச் சென்றிருப்பது சோமலெயின் கை வண்ணத்திற்குக் கட்டியம் கூறுவதாகும்.

நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்னும் மெய்ப்பாடுகளின் திறம் விளங்க எழுதிச் செல்வது என்பது

சோமலெவுக்கு இயல்பாகக் கைவந்த ஒன்றாகும். காட்டாக, கவிமணியின் மறைவை ஒட்டி எழுதிய இரங்கல் கட்டுரையில் சோமலெயின் அவலமும் ஆற்றாமையும் நன்கு வெளிப்பட்டிருக்கக் காணலாம். 'பண் சுமந்த பாடல்' என்றாற் போல், 'அவலம் சுமந்து' நிற்கும் அக் கட்டுரையின் தொடக்கப் பத்தி வருமாறு :

"பல ஆண்டுகளுக்கு முன் ஓர் அமெரிக்கர் இந்தியாவுக்குப் புறப்பட்டார். இந்தியாவில் பார்க்க வேண்டியவை எவை எவை என்று அவர் ஒரு நண்பரைக் கேட்டாராம். தாஜ்மஹால், இமயமலை, மகாத்மா காந்தி' என்று அவருடைய நண்பர் குறிப்பிட்டாராம். அது போன்றே தமிழ்நாட்டின் தென்பகுதியான நாஞ்சில் நாட்டில் காணத்தக்கவை என்ன என்று கேட்பவரிடம் 'கன்னியாகுமரி, சுசீந்திரம் கோவில், தேசிக விநாயகம் பிள்ளை' என்று பெருமிதத்துடன் சொல்லிக் கொள்வது தமிழ்நாட்டில் வழக்கமாக இருந்து வந்தது.

அத்தகைய ஒரு தமிழ்மலை சாய்ந்து விட்டது. இலக்கியத் தென்றல் ஓய்ந்து விட்டது. தலைசிறந்த ஒரு கலைஞர் காலமாகிவிட்டார். மனிதருள் மாணிக்கமாக விளங்கிய ஒரு பெரியார் உயிர் நீத்துவிட்டார். நாஞ்சில் நாட்டுத் தமிழருக்கு வழி காட்டிய ஜோதி அணைந்துவிட்டது. தமிழ்ப் பண்பாட்டின் உருவமாக விளங்கிய தே.வி. இறைவன் திருவடி நிழலை அடைந்துவிட்டார்'" (பிரயாண இலக்கியம், ப. 63). கவிதையில் மட்டும்தான் ஆற்றல் வாய்ந்த உணர்வுகள் பொங்கிப் பெருக்கெடுத்து வெளிப்பட வேண்டுமா? உரைநடையிலும் அது இயலும் என்பதைக் காட்டும் அழகிய பகுதி இது! 'தமிழ் மலை, 'இலக்கியத் தென்றல்', 'கலைஞர்', 'மனிதருள் மாணிக்கம்', 'வழிகாட்டிய ஜோதி', 'பெரியார்'. 'தமிழ்ப் பண்பாட்டின் உருவம்' எனக் கவிமணிக்குச் சோமலெ சூட்டியுள்ள புகழாரங்கள் உள்ளத்தை உருக்கும் இயல்பின ஆகும்.

## II. உவமை நயம்

உவமை, உருவகம் போன்ற அணிநலன்கள் செய்யுளுக்கு மட்டுமே உரிமை உடையன என்றும், உரைநடையில் அவற்றிற்கு இடமில்லை என்றும் எண்ணுவது தவறு. "உரைநடையில் விளக்கத்திற்காகவும், சுருக்கத்திற்காகவும், அழகுக்காகவும் உவமை, உருவகம் முதலிய அணிகளை அமைத்து எழுதலாம்" எனக் குறிப்பிடுவார் அ.கி.பரந்தாமனார் (நல்ல தமிழ் எழுத வேண்டுமா? ப. 369). உவமை என்பது ஒரு பொருளோடு ஒரு பொருளினை ஒப்புமை கூறுதல் ஆகும். 'புலன் அல்லாதன புலனாதலும், அலங்காரமாகிக் கேட்டார்க்கு இன்பம் பயத்தலும்' உவமையின் பயன்கள் என்பார் இளம்பூரணர். "ஆப்போலும் ஆமா எனவுணர்த்தியவழி, அதனைக் காட்டகத்துக் கண்டான் முன் கேட்ட ஒப்புமை பற்றி இஃது ஆமாவென்று அறியும் 'தாமரை போல் வாள்முகத்துத் தையலீர்' என்ற வழி, அலங்காரமாகிக் கேட்டார்க்கு இன்பம் பயக்கும்" (இளம்பூரணர் உரை,

தொல்காப்பியம், பொருளதிகாரம், ப. 395) என்பது அவர் தரும் விளக்கம். இனி, சோமலெயின் மொழிநடையில் இடம்பெற்றிருக்கும் சில அழகிய உவமைகளைக் குறித்துக் காணலாம்.

## பொருள் புலப்பாட்டிற்குத் துணைநிற்கும் உவமை

பொதுவாக, நாளிதழ்களைப் படிப்பவர்களுள் பலர் தமிழ் இதழைப் படிப்பதோடு நின்றுவிடுவதில்லை; ஓர் ஆங்கில இதழையும் வாங்கிப் படிப்பார்கள். காரணம், வெளிநாட்டுச் செய்திகளோ, பல துறைகளில் அவ்வப்போது நிகழும் மாறுதல்களைப் பற்றிய தகவல்களோ பெரும்பாலான தமிழ் இதழ்களில் அவ்வளவாக வெளிவருவதில்லை. தமிழ் இதழ்களில் காணப்படும் இக்குறைப்பாட்டைச் சுட்டிக் காட்ட விரும்பும் சோமலெ, ஓர் அழகிய உவமையைக் கையாண்டு தம் உள்ளக் கருத்தினைத் திட்பமாகவும் நுட்பமாகவும் புலப்படுத்தி விடுகின்றார். அவ்வுவமை வருமாறு :

"ஆங்கிலத் தாள்களைப் படித்துப் பழகிப் போனவர்கள், தமிழ் இதழ்களை மட்டும் படித்தால் வயிறு நிறையச் சாப்பிட்டவர்களைப் பஞ்ச காலத்தில் அளவுச் சாப்பாடு சாப்பிடச் சொல்லுவது போன்று இருக்கிறது" (தமிழ் இதழ்கள், ப. 38). சோமலெயின் கருத்தில் ஆங்கிலச் செய்தித் தாள்களைப் படிக்கும்போது ஒரு விருந்தின் போது வயிறு நிறையச் சாப்பிடும் போது கிடைக்கும் மகிழ்ச்சியும் மனநிறைவும் கிடைக்கும்; மாறாக, தமிழ்ச் செய்தித் தாள்களை மட்டும் படிப்பது என்பதோ பஞ்ச காலத்தில் அளவுச் சாப்பாடு சாப்பிடச் சொல்லுவதைப் போன்றதாகும்; அதுவும் வயிறு நிறையச் சாப்பிட்டுப் பழகியவர்களைப் பார்த்து இப்படிக் கூறுவது என்பது எவ்வளவு கொடுமையிலும் கொடுமையாக இருக்கும்.

## அலங்காரமாகிக் கேட்டார்க்கு இன்பம் பயக்கும் உவமை

சோமலெ ஜெர்மனியில் இருந்தபோது, ஒருமுறை பிராஹா நகருக்குச் செல்ல 'சீபல்' என்ற விமானத்தில் பயணம் செய்கின்றார். அது போர்க்காலத்தில் கட்டப்பெற்ற சிட்டுக்குருவி போன்ற மிகச் சிறிய விமானம்; நிமிர்ந்து நிற்பதற்குக் கூடப் போதிய உயரம் இல்லாதது. இது போன்ற விமானங்களில் விமான மங்கையர் பணியாற்றும் வழக்கம் இல்லை. விமான மங்கை இல்லாத ஒரு விமானம் எப்படிக் காட்சியளிக்கும் தெரியுமா? இதோ, சோமலெயின் சொற்களிலேயே அதனைக் காணலாம் :

"தாமரை இல்லாத தடாகமும், விண்மீன் இல்லாத வானமும் கவிஞர்களுடைய மனத்தை எஞ்ஞான்றும் தொடுவதில்லை; விமான மங்கையில்லாத விமானமும் பிரயாணிகளுடைய உள்ளத்தை ஒருபோதும் தொடுவதில்லை!" (பிரயாணம் ஒரு கலை, ப. 104). விமான மங்கை இல்லாத விமானத்திற்கு ஒப்புமையாகச் சோமலெ இங்கே கையாண்டிருக்கும் இரு உவமைகளும் அலங்காரமாகிக் கேட்டார்க்கு இன்பம் பயக்கும் இயல்பினவாகும்.

சோமலெ, 'ஆஸ்திரேலியாவில் ஒரு மாதம்' தங்கியிருந்த நேரம். ஒரு கடையில் இருந்த மாம்பழம் அவரது கண்ணில் பட்டது. 8 பென்ஸ் (ஆறு அணா) கொடுத்து வாங்கி, அந்த மாம்பழத்தைச் சிறு துண்டுகளாக அறுத்துத் தரும்படி கடைக்காரனைக் கேட்டாராம் அவர். அதற்கு அவன், 'ஏ அசடே, உள்ளே கொட்டை இருக்கிறது, எப்படி அப்பா அறுக்க முடியும்? முன் பின் மாம்பழம் சாப்பிட்டிருந்தால் தானே உனக்குத் தெரியும்! சரி, கடித்துச் சாப்பிடு' என்று கூற, முடிவில் சோமலெயே மாம்பழத்தை அறுத்துக் காட்டினாராம். "இருபது ஆண்டுகளுக்கு முன் ஆகாய விமானத்தை நம் கிராம மக்கள் பார்த்த அதே ஆச்சரியக் கண்களோடு என் செயலைக் கண்டு என்னைச் சுற்றிலும் கூடிவிட்டனர் ஐம்பது ஆஸ்திரேலியர். மூத்தோர் வாக்கும் முதுநெல்லிக் கனியும் போல, ஆஸ்திரேலிய மாம்பழமும் முன் கசக்கும், பின் இனிக்கும் என்பதை அன்று உணர்ந்தேன்" (ஆஸ்திரேலியாவில் ஒரு மாதம், ப. 24) எனத் தமக்கு நேர்ந்த பயண அனுபவத்தைத் தகுந்த ஓர் உவமையைக் கொண்டு தெளிவுபடுத்துகிறார் சோமலெ.

## பிற மொழிப் புலமையை வெளிப்படுத்தும் உவமை

தமிழ் உரைநடை வளர்ச்சியில் ஆறுமுக நாவலருக்கு மிகச் சிறந்த பங்கு உண்டு. அதனைப் புலப்படுத்துவதற்குக் கையாளும் உவமையில் சோமலெயின் பிறமொழிப் புலமை கைகொடுத்து உதவிடக் காணலாம். அவ்வுவமை இதோ :

"சுருங்கச் சொன்னால், ஆங்கில மொழியில் டிரைடன் என்பவர் உரைநடைக்குத் தந்தையாக விளங்குவது போலவே, தமிழ் உரைநடையின் தந்தையாக ஆறுமுக நாவலர் மிளிர்கின்றார்" (வளரும் தமிழ், ப. 37). இங்கே 'தமிழ் உரைநடையின் தந்தை'யான ஆறுமுக நாவலரை, 'ஆங்கில உரைநடையின் தந்தை'யான டிரைடனோடு சோமலெ ஒப்பிட்டுக் காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## முன்னோர் மொழியைப் போற்றிக் கையாளும் உவமை

புகழ்பெற்ற இலக்கியங்களில் இருந்து பெரும்பான்மையோர் அடிக்கடி பயன்படுத்தும் சில தொடர்களை உவமை காட்டிச் செல்லும் போக்கும் சோமலெயிடம் காணப்படுகின்றது. கம்ப இராமாயணத்தில் தசரதன், இராமனிடம், 'நாளைக்கு உனக்கு முடிசூட்டு விழா' என்றபோதும் சரி, கைகேயி அவனிடம், 'இத்திரு துறந்து காட்டிற்குச் செல்' என்றபோதும் சரி, இராமனுடைய முகம், 'அன்றலர்ந்த செந்தாமரை' போல இருந்தது எனச் சுட்டிக்காட்டுவார் கம்பர். இத்தொடரினை, நாம் வாழ்க்கையில் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைப் பற்றிக் கூறும் இடத்தில் பயன்படுத்துகிறார் சோமலெ:

"முகமலர்ச்சி ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதது. வாழ்க்கையில் நம்பிக்கை இருக்க வேண்டும். அன்றலர்ந்த செந்தாமரை மலர் போல் உங்களுடைய முகம் எப்போதும் இருத்தல் வேண்டும்" *(பல்சுவைக் கட்டுரைகள், ப. 124)*. படிப்பவர் உள்ளத்தில் நம்பிக்கை ஒளியைப் பாய்ச்சும் நல்லதோர் உவமை இது!

## பயண அனுபவம் பளிச்சிடும் உவமை

சோமலெ 'உலகம் சுற்றிய தமிழர்' என்பது அனைவரும் அறிந்த ஒன்று. அதனால் அவரையும் அறியாமல், பயண அனுபவம் பற்றிய குறிப்பு அவருடைய உவமைகளில் எப்படியோ இடம் பெற்று விடுகின்றது. ஓர் எடுத்துக்காட்டு:

"ரயிலில் பிரயாணம் செய்பவர்களுக்கு 'ரயில்வே கைடு' எப்படி ஒரு வழிகாட்டியாக இருக்கிறதோ, அது போல வாழ்க்கை என்னும் பயணத்தை மேற்கொண்டவர்களுக்கு வாழ்வுக்கு வழிகாட்டும் ஒரு நூலாகத் திருக்குறள் விளங்குகிறது" *(பல்சுவைக் கட்டுரைகள், பக். 104-105)*. திருக்குறளின் இன்றியமையாமையை இதனினும் சிறப்பாக உவமை நயத்தோடு ஒருவர் வெளிப்படுத்திவிட முடியாது.

# III. நகைச்சுவைத் திறம்

நகைச்சுவை உணர்வு வாழ்க்கைக்குத் தேவையான ஒன்று. ஒருமுறை 'நகைச்சுவை உணர்வு வாழ்க்கைக்கு அவசியமா?' என்று ஒருவர் காந்தியடிகளிடம் கேட்டாராம்; அதற்கு காந்தியடிகள், "நகைச்சுவை இல்லையென்றால் நான் எப்பொழுதோ தற்கொலை செய்து கொண்டிருப்பேன்" என்று மறுமொழி கூறினாராம். இதுபோல் சோமலெயும் நகைச்சுவையாகப் பேசுவதில் வல்லவர். "வழியில் 'விழாக்களில், நிறுவனங்களில் இப்படி எங்கே பார்த்தாலும் சிறிதுநேரம் பேசி, நகைச்சுவைத் துணுக்குகளை உதிர்த்து, 'இப்பொழுது என்ன எழுதிக் கொண்டிருக்கிறீர்கள்?' என்று அன்பு தவழக் கேட்பவர் அன்பர் சோமலெ" *(ச. மெய்யப்பன், சோமலெ, ப. 48)* என்று தம் நெருங்கிய நண்பரான சோமலெயைப் பற்றி முல்லை முத்தையா குறிப்பிட்டுள்ளார். பேச்சில் மட்டுமன்றி, எழுத்திலும் நகைச்சுவை உணர்வு நிறைந்தவராக விளங்குகிறார் சோமலெ. பல்வேறு நாடுகளுக்குச் சென்று வந்த அவர் நகைச்சுவை உணர்வு மிக்க மக்களையும், அவ்வுணர்வு இல்லாத மக்களையும் பற்றித் தம் பயண நூல்களில் ஆங்காங்கே குறிப்பிட்டுச் சென்றுள்ளார்.

"உணவுப் பஞ்சம் மட்டுமன்று, செக் நாட்டில் சிரிப்புப் பஞ்சமும் ஏற்பட்டிருக்கிறது! இயற்கையாகவே, நகைச்சுவை இல்லாதவர்கள் செக் நாட்டவர்" *(என் பிரயாண நினைவுகள், ப. 35)* என்றும், "அமெரிக்கரிடம் இயற்கையாகவே நகைச்சுவை மிகுதியாக உண்டு; தன்னை மறந்து நகைச்சுவையில் ஈடுபட்டுச் சிரிப்பதும் அவர்களுடைய இயல்பு.... *சிரிப்பை*

அவர்கள் பயிற்சியாகக் கொள்கின்றனர். வாழ்வின் வெற்றிக்கு முகமலர்ச்சி இன்றியமையாதது என்பது அமெரிக்கர் கருத்து. தன்னைத்தான் சிரிக்க வைக்க வல்லவன் எல்லாத் துன்பங்களையும் எளிதில் வெல்ல முடியும்" (அமெரிக்காவைப் பார், ப. 31) என்றும் அவர் எழுதியிருக்கும் பகுதிகள் இவ்வகையில் நினைவுகூரத்தக்கவையாகும்.

மேலும், நகைச்சுவை உணர்வின் மீது சோமலெவுக்கு இருக்கும் ஆழ்ந்த, தனிப்பட்ட ஈடுபாட்டைப் புலப்படுத்துவதற்குப் பிறிதொரு சான்றையும் இங்கே சுட்டிக்காட்டலாம். 'ஆஸ்திரேலியாவில் ஒரு மாதம்' என்னும் நூலில் இடம் பெற்றிருக்கும் அப்பகுதி வருமாறு :

"ஆஸ்திரேலியர் நகைச்சுவை படைத்தவர்கள். இவ்விஷயத்தில் இவர்கள் பிரிட்டிஷாருக்கு முற்றிலும் மாறுபட்டவர்கள். ஒரு நாள், ஏதோ நினைவில் ஆஸ்திரேலியர் சிலரிடம் நான் தமிழில் பேசியபோது, அவர்களும் என்னுடன் சேர்ந்து சிரித்தனர். ஜெர்மானியராகவோ, பிரிட்டிஷாராகவோ இருந்திருந்தால் நான் அவர்களை அவமதித்ததாகவே கருதுவர். வேதாந்த மனப்பான்மையாலும், வாழ்க்கைத் துயரங்களாலும் அல்லற்படும் நாம், நகைச்சுவை உணர்ச்சியை வளர்க்க வேண்டும். அதுவே இன்பத்துக்கு மணம் தந்து, துன்பத்துக்குச் சுவையூட்டும் ஊறுகாய். 'இடுக்கண் வருங்கால் நகுக' என்பது தமிழ் மறையன்றோ?" (ப. 37) இங்கே வள்ளுவர் வாக்கையும் தம் கருத்திற்கு அரண்சேர்க்கும் வகையில் திறம்படப் பயன்படுத்திக் கொண்டுள்ளார் சோமலெ.

இனி, சோமலெயின் மொழிநடையில் பயின்று வரும் நகைச்சுவை உணர்வுக்கு ஓரிரு சான்றுகளைக் காணலாம்.

மக்கள் தொகைப் பெருக்கத்தில் முன்னணியில் நிற்கும் நாடு சீனா. "சீனரின் பெரிய பிரச்சினை எப்படித் தம் குழந்தைகளுக்கு உணவு அளிப்பது என்பதே. ஒரு டஜன் குழந்தைகளிருப்பது அவர்கள் குடும்பங்களில் சாதாரணக் காட்சி. பெற்றோர்கள் குழந்தைகளை எண் வரிசைப்படி அழைப்பதும் உண்டு" (என் பிரயாண நினைவுகள், ப. 117) என்று எழுதிப் படிப்பவர் முகத்தில் மெல்லிய புன்முறுவல் தோன்றும் வண்ணம் சீன நாட்டின் பெரும்பிரச்சினையான மக்கள் தொகைப் பெருக்கம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார் சோமலெ. இங்கே புறநானூற்றுப் பாடல் ஒன்றின் கருத்தினையும் எண்ணிப் பார்க்கலாம். 'இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும் நெய்யுடை அடிசில் மெய்ப்பட விதிர்த்தும் மயக்குறு மக்கள்' என்று பாடியது ஒரே குழந்தையின் பல செயல்களைத்தான். இங்ஙனம் இன்றி இடுவது ஒரு குழந்தை, தொடுவது ஒரு குழந்தை, கவ்வுவது ஒரு குழந்தை, துழாவுவது ஒரு குழந்தை, நெய்யுடை அடிசில் மெய்ப்பட விதிர்ப்பது ஒரு குழந்தை என அடுத்தடுத்துக் குழந்தைகளின் பட்டாளமே இருந்தால், அந்த வாழ்க்கையில் இன்பம் இருக்காது! வள்ளுவர் கருத்தியலின் படி, குழல் போல் ஓர் ஆண் குழந்தையும், யாழ் போல் ஒரு பெண் குழந்தையும் இருந்தால் அந்த வாழ்க்கையில் இன்பம் என்றென்றும் தவழ்ந்து கொண்டிருக்கும்.

'தென்னாட்டுத் திலகர்' என்னும் அழகிய தலைப்பில் வ.உ.சி.யைப் பற்றி ஒரு கட்டுரை எழுதியுள்ளார் சோமலெ. அக்கட்டுரையில் மாணவர்கள் தங்கள் கட்டுரைகளை எழுதும்போது செய்யும் பிழையினை அவர் நகைச்சுவை உணர்வோடு சுட்டிக் காட்டியுள்ளார் :

"ஒருவர் புகழ் பெற்ற பின்னர் அவருடைய பெயரை அடிக்கடி சொல்லவும் எழுதவும் நேரிடுகிறது. ஆகையால் பெரியவர்களுடைய பெயர்களைச் சுருக்கமாகச் சொல்லியும் எழுதியும் வருகின்றோம்... சர் சி.பி. இராமசாமி அய்யர் என்பதற்கு 'சர் சி.பி.' என்றும், திருவாரூர் வி. கலியாண சுந்தர முதலியார் என்பதற்குத் 'திரு.வி.க.' என்றும் சுருக்கிச் சொல்லியும் எழுதியும் வருகிறோம். இவற்றைப் போலவே வ.உ.சிதம்பரம் பிள்ளை என்பதை வ.உ.சி. என்று குறிப்பிடுகின்றோம். ஆனால், பல மாணவர்கள் வ.உ.சி. என்பதை *வ.ஊசி* என்று எழுதி வருகின்றனர்" (*பிரயாண இலக்கியம்*, ப. 53). இங்ஙனம் சுட்டிக் காட்டுவதன் வாயிலாகப் பெரியவர்களின் பெயர்களைச் சுட்ட நேரும் போது மாணவர்கள் கவனமாகச் செயல்பட வேண்டும் என்னும் கருத்தினையும் பெற வைக்கின்றார் சோமலெ.

நகைச்சுவை உணர்வின் இன்றியமையாமையைப் புலப்படுத்துவதோடு, நகைச்சுவைத் திறம் படைத்த சான்றோர்களைத் தம் நூல்களில் ஆங்காங்கே போற்றி எழுதியுள்ளார் சோமலெ. பண்டிதமணியும் கல்கியும் இவ்வகையில் சோமலெயின் பாராட்டைப் பெற்ற பெருமக்களுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். "மிக எளிய நடையில் எழுதுவதைப் பண்டிதமணி விரும்பியதில்லை. எளிமை கயமை ஆகிவிடக் கூடாதென்பது அவர் கருத்து. அவர் எழுதிய ஒரு பகுதியைப் படித்துவிட்டு ஒருவர் அவரிடம் சென்று சில இடங்களில் விளங்குவதாகவும், வேறு சில இடங்கள் எளிமையாக எழுதப்படாததால் விளங்கவில்லை என்றும் சொன்னாராம். உடனே, பண்டிதமணி, 'அப்படியானால், விளங்கின பகுதியைச் சொல்லுக; அதையும் மாற்றி விடுகிறேன்' என்று நகைச்சுவை ததும்ப விடை பகர்ந்தனராம்" (*வளரும் தமிழ்*, ப. 60) எனப் பண்டிதமணியின் திறமான நகைச்சுவை உணர்வைப் புலப்படுத்துவார் சோமலெ.

இதே போல், கல்கியின் எழுத்திலும் பேச்சிலும் இயல்பான நகைச்சுவையின் வெளிப்பாட்டைக் காணலாம். சோமலெ சுட்டிக்காட்டும் ஓர் எடுத்துக்காட்டு : "ஒரு கூட்டத்தில் டி.கே.சி., ம.பொ.சி., கல்கி மூவரும் பேசினர். பேச்சாளரை அறிமுகப்படுத்திய அன்பர் 'மும்மணிகள் இன்று பேசுவார்கள்' என்று சொன்னார். அதைப் பற்றிக் கல்கி குறிப்பிட்டது வேடிக்கையாக இருந்தது. 'டி.கே.சி. ரசிகமணி; ம.பொ.சி. கிராமணி; நான் மூன்றாவது மணியாக இருக்க ஒரு பெண்மணியாகக் கூட இல்லையே' என்று கல்கி கூறினார்" (*பல்சுவைக் கட்டுரைகள்*, ப. 71). மேலும், "கல்கியின் எழுத்துக்களில் நகைச்சுவை மிகுதியாக இருந்தது. ஆனால் அந்த நகைச்சுவை பிறருடைய மனத்தைப் புண்படுத்துகின்ற நகைச்சுவையாக

விளங்கியதில்லை. மாற்றுக் கட்சியாரையும் அவருடைய நகைச்சுவை சிரிக்கச் செய்தது. மேலும் அவர் நகைச்சுவையாக எழுதியதெல்லாம் வாழ்க்கையில் அவருக்கிருந்த நிறைந்த அனுபவத்தின் வாயிலாக அவருக்குத் தோன்றிய சில கருத்துக்களேயாகும்" *(பல்சுவைக் கட்டுரைகள், ப. 64)* என்று கல்கியின் நகைச்சுவை பற்றிய தம் மதிப்பீட்டினையும் தந்துள்ளார் சோமலெ.

இங்ஙனம் நகைச்சுவை உணர்வுக்குத் தம் தனிவாழ்வு, எழுத்து, பேச்சு என்னும் மூன்றிலும் நல்லதோர் இடத்தினைத் தந்துள்ளார் சோமலெ. சுருங்கக் கூறின், "நகைச்சுவை, வாழ்க்கையை வாழ்வாங்கு வாழ விரும்பும் எல்லோருக்கும் இன்றியமையாததாகும்" *(பல்சுவைக் கட்டுரைகள், 93)* என்பது அவரது அழுத்தம் திருத்தமான கருத்தாகும்.

## IV. அங்கதச் சுவையின் ஆட்சி

"ஒருவனுடைய குறையையோ, ஒரு சமூகத்தாரின் குறையையோ, அன்னார் நெஞ்சில் உறுத்தும் வண்ணம் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் கூறுதல் அங்கதமாகும்" *(உரைநடைக் கோவை : இரண்டாம் பகுதி, ப. 86)* என அங்கதத்திற்கு வரைவிலக்கணம் தருவார் பண்டிதமணி. தொல்காப்பியர் 'செம்பொருள் அங்கதம்' என்றும் 'பழிகரப்பு அங்கதம்' என்றும் அங்கதத்தை இரு வகைப்படுத்திக் கூறுவதும் இந்த அடிப்படையில் தான். சோமலெ *தனி ஒரு மனிதனின் குற்றங்குறைகளை எடுத்துக் காட்டுவதற்குப்* பயன்படுத்தாமல், பெரும்பாலும் தமிழ்நாட்டு மக்களிடையே காணப்படும் குற்றங்குறைகளைப் புலப்படுத்துவற்கே அங்கதத்தை ஒரு வலிமையான கருவியாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளார்.

நாம் 'ஆகாஷ்வாணி' என்ற வட சொல்லால் வானொலியைச் சுட்டுகிறோம்; 'தூரதர்ஷன்' என்ற வட சொல்லால் தொலைக்காட்சியைக் குறிப்பிடுகின்றோம். ஆனால் மேடையிலோ 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்' என்று உணர்ச்சி மிக்க குரலில் முழங்குகின்றோம். அயல்நாட்டு வானொலி நிலையத்தினரோ 'தமிழோசை' என்ற அழகிய பெயரில் தமிழ் நிகழ்ச்சிகளை உலகெலாம் ஒலி பரப்பி வருகின்றனர். அங்கதச் சுவை விளங்க இது பற்றிச் சோமலெ எழுதியிருப்பது வருமாறு :

"தமிழை எங்கே வளர்க்கலாம் என்ற வினாவுக்கு விடை கூறுவார் போலப் பாரதியார், 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்று பாடியிருக்கிறார். 'தமிழோசை' என்ற அழகான சொற்றொடரையும் அவர் பயன்படுத்தியிருக்கிறார். வானொலி என்ற சொல்லைப் பயன்படுத்த நம் நாட்டில் வம்பும் சண்டையும் தேவைப்படுகிறது. ஆனால், இலண்டனிலிருந்து தமிழ் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பும்போது பிரிட்டிஷ் வானொலி நிலையத்தார், பாரதியாரிடமிருந்து இந்தச் சொற்றொடரைக் கடன் வாங்கி 'தமிழோசை' என்ற தலைப்பில் தமிழ் நிகழ்ச்சிகளை உலகெலாம்

பரப்பி வருகிறார்கள்" (பல்சுவைக் கட்டுரைகள், பக். 9-10). அயல்நாட்டினரின் மொழிப் பற்றுக்கும் நம்மவரின் மொழிப் பற்றுக்கும் இடையிலான வேறுபாட்டை இங்கே அங்கதச் சுவையோடு எடுத்துக் காட்டியுள்ளார் சோமலெ.

இதே போல், 1958 நவம்பர் மாதம் 12-ஆம் நாளன்று இராசபாளையம் காந்தி கலை மன்றத்தின் சார்பில் திருக்குறள் வகுப்பினைத் தொடங்கி வைத்து ஆற்றிய சொற்பொழிவிலும் சோமலெ அங்கதச் சுவையை அழகுறக் கையாண்டுள்ளார். அவரது சொற்களிலேயே அதனைக் காண்பது நயமாக இருக்கும். இதோ அவரது பொழிவின் முடிவுப் பகுதி : "பிற நாட்டவரெல்லாம் போற்றும் நூலாகத் திருக்குறள் இருப்பதால் தான் சுப்பிரமணிய பாரதியார், 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று பாடியுள்ளார். திருக்குறளையும் வள்ளுவரையும் உலகுக்கே விட்டுவிடாமல் தமிழர்களாகிய நாமும் சிறிது படித்துப் பயனடைய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு திருக்குறள் வகுப்பை மிக்க மகிழ்ச்சியுடன் தொடங்கி வைக்கிறேன்" (பல்சுவைக் கட்டுரைகள், ப. 106). 'திருக்குறளையும் வள்ளுவரையும் உலகுக்கே விட்டுவிடாமல் தமிழர்களாகிய நாமும் சிறிது படித்துப் பயனடைய வேண்டும்' - நகைச்சுவையும் நையாண்டியும் - கேலியும் கிண்டலும் - கைகுலுக்கிக் கொள்ளும் அற்புதமான இந்த வரியின் வாயிலாகத் தமிழர்களின் 'தனிக் குண'த்தினைச் சாடியுள்ளார் சோமலெ.

அழகிய, இனிய தமிழ்ச் சொற்கள் இருக்க, தேவையின்றிப் பிறமொழிச் சொற்களைக் கையாளுவதில் சோமலெவுக்குச் சிறிதும் உடன்பாடு இல்லை. இங்ஙனம் கையாளுவோரைச் சற்றுக் கடுமையாகவே சாடுகின்றார், அவர். கூடிய வரையில் எழுத்திலும் பேச்சிலும் தமிழ்ச் சொற்களையே பயன்படுத்த வேண்டும் என்றே அவர் விரும்புகின்றார். இவ்வகையில் அவரது உள்ளக் கருத்தைப் புலப்படுத்தும் இரு இடங்கள் வருமாறு :

"திரு. திருமதி. திருவாட்டி என்ற தமிழ்ச் சொற்களிருக்க, பலர் அழைப்பிதழ்களில் சிரஞ்சீவி, சௌபாக்கியவதி என்ற வட சொற்களைப் பயன்படுத்தி வருகின்றனர். அச்சொற்களைக் குறிப்பதற்காகச் சுருக்கமாக, சி.சௌ. எனத் தமிழிலும் Chi. Sow. என்று ஆங்கிலத்திலும் எழுதி வருகின்றனர். இவ்வாறு எழுதி வருபவர்கள் Sow என்று ஆங்கிலத்திலும் ஒரு சொல் இருப்பதையும் அச் சொல்லுக்குப் பெண் பன்றி என்று பொருள் இருப்பதையும் அறியார் போலும். இத்தகைய தவறுகளை நீக்கவேனும் தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துவார்களாக!" (வளரும் தமிழ், ப. 113).

"குற்றால அருவி தமிழர்க்குச் சிறப்பாக உரியது. அருவி என்பதற்கு ஏற்ற ஆங்கிலச் சொல் 'வாட்டர் பால்ஸ்' என்பது. ஆங்கிலம் படித்த தமிழர் சிலர் அறிவுச் செல்வத்தையெல்லாம் அந்த மொழியின் வாயிலாகவே பெற்று

வருகின்றனர்; எனவே, தமிழ் மொழியில் இனிய சொற்கள் இருப்பதும், அவற்றில் சில சொற்கள் வழக்கொழிந்திருப்பதும் அவர்களுக்குத் தெரியாது. ஆகையால் அவர்கள் வாட்டர் பால்ஸ்' என்ற ஆங்கிலச் சொல்லை 'வாட்டர்-நீர்', 'பால்ஸ்-வீழ்ச்சி' என்று சொல்லுக்குச் சொல் மொழிபெயர்த்து, 'நீர் வீழ்ச்சி' என்ற புதுத்தொடரை ஆக்கியுள்ளனர். அருவி என்ற சொல், சங்க இலக்கியங்களில் பயன்படுத்தப் பெற்றிருக்கிறது; இன்றும், பல இடங்களில் வழங்கி வருவது. 'நீர் வீழ்ச்சி' என்னும் சொல்லில், தமிழ் மொழியின் வீழ்ச்சியைத் தான் காணுகின்றோம்; ஆறு எழுத்துக்கள் உள்ள இந்தச் சொல்லில், மூன்று எழுத்துக்களைக் கொண்ட 'அருவி' என்னும் சொல்லில் உள்ள பொருள் ஆழத்தையோ, தெளிவையோ, தண்மையையோ, ஓசை இனிமையையோ கண்டோமில்லை. எனவே குற்றால அருவி, தமிழ் அருவி என்பதையும், 'அருவி' என்பது தூய தமிழ்ச் சொல் என்பதையும் மீண்டும் ஒரு முறை தெரிவிக்க விரும்புகிறேன்" (பிரயாணம் ஒரு கலை, ப. 57). சோமலெயின் தமிழ் நெஞ்சைத் திறந்து காட்டும் அற்புதமான பகுதிகள் இவை. "இவ்வாறு எழுதி வருபவர்கள் Sow என்று ஆங்கிலத்தில் ஒரு சொல் இருப்பதையும், அச்சொல்லுக்குப் பெண் பன்றி என்று பொருள் இருப்பதையும் அறியார் போலும்!" என்றும், " 'நீர் வீழ்ச்சி' என்னும் சொல்லில் தமிழ் மொழியின் வீழ்ச்சியைத் தான் காணுகின்றோம்; ஆறு எழுத்துக்கள் உள்ள இந்தச் சொல்லில், மூன்று எழுத்துக்களைக் கொண்ட 'அருவி' என்னும் சொல்லில் உள்ள பொருள் ஆழத்தையோ, தெளிவையோ, தண்மையையோ, ஓசை இனிமையையோ கண்டோமில்லை" என்றும் இப்பகுதிகளில் இடம்பெற்றிருக்கும் வரிகள் சோமலெயால் அங்கதச் சுவையினைக் கடுமையாகவும் காரசாரமாகவும் கையாள முடியும் என்பதைக் காட்டுவன ஆகும்.

## V. கதைகளையும் நிகழ்ச்சிகளையும் துணுக்குகளையும் கையாளல்

'அருமையில் எளிய அழகே போற்றி' என மாணிக்கவாசகர் திருவாசகத்தில் இறைவனைப் போற்றிப் பரவுவார். பொதுவாக, அருமையாக இருக்கும் ஒன்று எளிமையாகக் கிட்டாது; அதே போல், எளிமையாக இருக்கும் ஒன்று அழகாகத் தோன்றாது. எனவே, அருமை, எளிமை, அழகு என்னும் முப்பெருங்குணங்களும் ஒரே இடத்தில் அல்லது ஒரே பொருளில் காணப்படுவது என்பது அரிதினும் அரிதாகும். மாணிக்கவாசகரின் கருத்தின்படி, அருமை, எளிமை, அழகு என்னும் மூன்று குணங்களும் ஒருங்கே கொண்டவனாக விளங்குபவன் எல்லாம் வல்ல இறைவன் ஒருவனே ஆவான். இறைவனைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கும் இக் கருத்தினை நாம் ஒரு தேர்ந்த எழுத்தாளரின் மொழிநடைக்கும் பொருத்திப் பார்க்கலாம். ஓர் அருமையான செய்தியை எளிய நடையில், அழகிய வடிவில் சொல்லும்போதுதான் அச்செய்தி அனைவரிடமும் சென்று சேரும். பார்ப்பதற்கு எளிதாகத் தோன்றினாலும் ஓர் எழுத்தாளர் அடைவதற்கு

மிகவும் அரிய திறம் இது! சோமலெ அரிதின் முயன்று இத்திறத்தைப் பெற்றுள்ளார். இவ்வகையில் அவருக்குக் குட்டிக் கதைகளும், வாழ்க்கை நிகழ்ச்சிக் குறிப்புகளும், வேடிக்கை நிகழ்ச்சிகளும், துணுக்குகளும் பெரிதும் கைகொடுத்துள்ளன. இவற்றைக் கையாண்டு கூறும்போது ஒரு கருத்திற்கு அல்லது செய்திக்குப் 'படிப்பதற்கு இனிதாம் தன்மை' *(Readability)* இயல்பாகவே வந்துவிடுகின்றது.

'அமெரிக்காவைப் பார்!" என்பது சோமலெயின் புகழ் பெற்ற பயண நூல். அதில் அவர், 'அமெரிக்க மோட்டார்த் தொழிற்சாலைகளுக்குத் தொழிலாளிகள் தம் இல்லங்களிலிருந்து சொந்த மோட்டார் கார்களிலாவது அல்லது சொந்த மோட்டார் சைக்கிள்களிலாவது வருவது வழக்கம்' என அமெரிக்கத் தொழிலாளர் நிலை குறித்து எழுதும் இடத்தில், அதை ஒட்டி வழங்கும் ஒரு குட்டிக் கதையையும் எடுத்துக் காட்டியுள்ளார். அக் கதை வருமாறு:

"ஓர் அமெரிக்கத் தொழிலாளி ரஷ்யாவுக்குச் சென்றான். அங்கிருந்த ரஷ்யத் தொழிலாளி தொழிற்சாலை ஒன்றைக் காட்டி 'இது தொழிலாளரைச் சேர்ந்தது. இந்நாட்டில் எல்லாம் பொது உடைமை!' என்று பெருமையாகச் சொன்னான். அங்கே நிற்கும் ஒரு சிலர் கார்கள் யாருடையன என்ற வினாவுக்கு, அவை தொழிற்சாலையை மேற்பார்வை பார்க்கும் ஒரு சிலரைச் சேர்ந்தவை என ரஷ்யத் தொழிலாளி விடை பகர்ந்தான். சில வாரங்களுக்குப் பின்னர் அந்த ரஷ்யத் தொழிலாளி அமெரிக்கத் தொழிலாளியின் விருந்தினனாக வந்து, டெட்ராயிட் நகரிலுள்ள ஒரு தொழிற்சாலையைப் பார்வையிட்டான். 'இத் தொழிற்சாலை யாருடையது?' என்று ரஷ்யத் தொழிலாளி கேட்டான். 'தொழிற்சாலை முதலாளிகளைச் சேர்ந்தது; ஆனால் தொழிற்சாலைக்கு வெளியே நிற்கும் பல்லாயிரக்கணக்கான கார்கள் தொழிலாளருக்குச் சொந்தமானவை!' என்று அமெரிக்கத் தொழிலாளி கூறவே, ரஷ்யத் தொழிலாளி வாயடங்கிப் போனான்" *(ப. 35)*.

'வளரும் தமிழ்' என்னும் நூலில், 'பேசுவது போல எழுதுவதும்" எழுதுவது போலப் பேசுவதும் தவறான முறை என்னும் தம் கருத்திற்குச் சான்றாக ஒரு சுவையான வாழ்க்கை நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்டியுள்ளார் சோமலெ. அந் நிகழ்ச்சி இதோ:

"யாழ்ப்பாணத்திலிருந்து தமிழகத்துக்கு வந்ததும் ஒரு புலவர், தனுசுகோடி ரயில் நிலையத்தில் தாம் சந்தித்த ஒரு வழிப்போக்கரை, 'சோறு எங்கே விற்கும்?' என்று கேட்டாராம்; அதற்கு அவர், 'சோறு தொண்டையில் விக்கும்' என்று மறுமொழி கூறினாராம்" *(வளரும் தமிழ், ப. 173)*. இங்கே 'விற்கும்' என்பது எழுத்து வடிவம்; 'விக்கும்' என்பது பேச்சு வடிவம். இரண்டையும் பயன்படுத்தித் தாம் கூற வரும் கருத்திற்கு வலிமை சேர்க்கிறார் சோமலெ.

தூய உள்ளத்திற்குச் சொந்தக்காரர் கவிமணி. இதனை எடுத்துக் காட்டுவதற்குக் கவிமணியின் வாழ்க்கையில் நடந்த உண்மை நிகழ்ச்சி

ஒன்றைத் தம் கட்டுரையில் பயன்படுத்திக் கொண்டுள்ளார் சோமலெ. படிப்பவர் உள்ளத்தைத் தொட வல்ல அந் நிகழ்ச்சி வருமாறு:

"கவிமணி இயற்றிய பாடல்களில் மிகுதியானவை வாழ்த்துப் பாக்கள். சந்ததமும் வாழ்க தழைத்து, மன்னுலகில் வாழ்க மகிழ்ந்து, நித்தமும் வாழ்க நிலைத்து என்ற ஈற்றடிகளை நிரந்தரமாக வைத்துக் கவிமணி நூற்றுக் கணக்கானவர்களை வாழ்த்தியிருக்கிறார். இவ்வாறு வாழ்த்துப் பெற்றிருப்பவருள் சிலர், நிறைந்த தகுதிகளோ அன்றி இனிய இயல்புகளோ இல்லாதவராக இருக்கக்கூடுமே என்று ஒருவர் கேட்டார். அதற்குக் கவிமணி தெரிவித்த மறுமொழி சுவையாக இருந்தது. கேள்வி கேட்டவர் முகத்தை உற்றுப் பார்த்துக் கொண்டே, கவிமணி அமைதியாகச் சொன்னார்கள் : 'ஒரு வகையில் நீங்கள் கருதுவது சரி. ஆனால் நானும் இறந்து போவேன். பாடப்பட்டவரும் இறந்து போவார். எத்தனையோ நூற்றாண்டாகும். பாட்டு நிற்கும். ஒரு தமிழ்ப் பாட்டு ஏன் கெட்ட விஷயத்தைத் தாங்கி நிற்கவேண்டும்? நல்ல விஷயத்தைத் தாங்கித் தமிழ்ப் பாட்டுக்கள் நிலைக்கட்டுமே?' (பிரயாண இலக்கியம், ப. 86).

'ஆகாதவற்றுக்கு உதாரணம் காட்ட வேண்டுவதில்லை' என்பர் இலக்கண நூலார். அதுபோல், 'ஒரு தமிழ்ப்பாட்டு எப்போதும் நல்ல பொருளையே தன்னகத்தே தாங்கி நிற்க வேண்டும்; கெட்ட அல்லது அமங்கலமான பொருள் ஒருபோதும் தமிழ்ப் பாட்டில் இடம்பெறக்கூடாது' என்பதே கவிமணியின் கருத்தாகும். 'தீய வழுக்கியும் வாயால் சொலல்' (குறள் ) என்னும் வள்ளுவர் வாக்கு இவ்வகையில் மனங்கொள்ளத் தக்கதாகும்.

சோமலெயின் மொழிநடையில் சுவையான துணுக்குகளுக்கும் பஞ்சம் இல்லை. அவர் எடுத்துக்காட்டும் ஓர் ஆஸ்திரேலியத் துணுக்கு இதோ :

"வயதான ஒருவர் ஒரு பத்திரிகையின் அலுவலகத்துக்கு வந்தார்.

வந்தவர் : 'என் தம்பி இறந்துவிட்டார். அதைப் பத்திரிகையில் போட என்ன ஆகும்?'

பத்திரிகைக்காரர் : 'அங்குலத்திற்கு 3 சில்லிங்'

வந்தவர் : 'அடேயப்பா! அவன் $6^1/_2$ அடி உயரம் இருந்தானே!"

(ஆஸ்திரேலியாவில் ஒரு மாதம், ப. 100)

இதே போல் பிரெஞ்சு நாட்டில் காதலைப் பற்றி வழங்கும் இரு சுவையான துணுக்குகளை சோமலெ 'உலக நாடுகள் வரிசை' என்னும் தம் நூலில் எடுத்துக் காட்டியுள்ளார். அத்துணுக்குகள் வருமாறு : "பாரிஸ் நகரச் சாலைகளில் எண்ணற்ற கார்கள் எந்த நேரமும் சென்று கொண்டிருக்கும். அந்நகரில் யாராவது தம் மனைவியிடம் காரைக் கொடுத்து ஓட்டச் சொன்னால், ஒன்று அவன் ஒரு புதுக்கார் வாங்க ஆசைப்படலாம்; அல்லது புதிய மனைவி ஒருத்தியை அடைய அவன் திட்டமிட்டிருக்கலாம்".

"சிறுகதை ஆசிரியரான மொபசான் காதலித்த ஒரு பெண்ணை பாரிஸ் நகரத்து மருத்துவர் ஒருவரும் காதலித்தார். மூவரும் ஒரு நாடகக் கொட்டகையில் சந்தித்தனர். 'இப்பேரழகி தங்கள் அசட்டு உளறலைக் கேட்டுக் கேட்டு நோயுறும்போது நான் இவளைக் காப்பாற்றுகிறேன்' என்றார் மருத்துவர். 'நீங்கள் கொடுக்கும் மருந்தைத் தின்று தின்று இவள் சாகும் தருவாயில் இருக்கும்போது, நான் என் கற்பனைகளால் இவளை வாழ வைக்கிறேன்' என்றார் கதை ஆசிரியர்" (உலக நாடுகள் வரிசை - 5: பிரான்ஸ், பக். 15-16). இத்துணுக்குகள் எளிய நிலையில் உள்ள வாசகர்களை விரைவாகச் சென்று சேரும் வல்லமை படைத்தவை ஆகும்.

இங்ஙனம் குட்டிக் கதைகளையும் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் நகைச்சுவைத் துணுக்குகளையும் ஆங்காங்கே கையாண்டு தாம் சொல்ல வரும் எந்தக் கருத்தையும் சுவைபடச் சொல்லிவிடுகின்றார் சோமலெ.

## VI. மேற்கோள் ஆட்சி

உரைநடையில் காணப்பெறும் பல்வேறு திறன்களுள் இடையிடையே மேற்கோள் காட்டுவதும் ஒன்று ஆகும். ஓர் ஆசிரியர் தம் கருத்துக்கு அரண் செய்யும் வகையிலும், கருத்தைத் தெளிவாகவும் சரியாகவும் புலப்படுத்த எண்ணும்போதும் மேற்கோள்களைக் கையாளுகின்றார். 'மேற்கோளுக்காக மேற்கோள்' என்று இல்லாமல், இன்றியமையாது தேவைப்படும் இடங்களில் மட்டும், அதுவும் தேவைப்படும் அளவிற்குக் கையாளும்பாது தான் மேற்கோளுக்குச் சிறப்பும் மதிப்பும் கிட்டும். ஓர் எளிய உவமையின் வாயிலாகச் சொல்ல வேண்டும் என்றால், 'உரைநடையில் மேற்கோள் ஆட்சி என்பது இல்லற வாழ்க்கையில் ஊடலைப் போல் - உணவில் உப்பைப் போல் - அளவாக இருக்க வேண்டும்' எனலாம்.

'முன்னோர் மொழிபொருளேயன்றி, அவர் மொழியும் பொன்னே போல் போற்றுதல்' (நன்னூல், 9) என்னும் விதியைப் பின்பற்றி, சோமலெ தம் கட்டுரைகளின் இடையிடையே காட்டும் மேற்கோள்கள் பலவாகும். சங்க இலக்கியம், திருக்குறள், சிலப்பதிகாரம், கம்பராமாயணம், சித்தர் பாடல்கள், சிற்றிலக்கியங்கள் முதலான பழந்தமிழ் இலக்கியங்களில் இருந்தும், பாரதியார், பாரதிதாசன், கவிமணி போன்ற இருபதாம் நூற்றாண்டு மறுமலர்ச்சிக் கவிஞர்களின் படைப்புக்களில் இருந்தும் அவர் எடுத்தாளும் மேற்கோள்கள், அவருக்கு இருந்த பழுத்த தமிழ்ப் புலமையையும் பரந்துபட்ட நூலறிவையும் தெளிவாகக் காட்டுகின்றன. ஒரு சில சான்றுகள் கொண்டு இக்கருத்தை உறுதிப்படுத்தலாம்.

'நீங்களும் தூதுவர் ஆகலாம்' என்னும் நூலில் தூதுவரின் தகுதிகள் இன்னின்ன என்று குறிப்பிடும் இடத்தில் சோமலெ பழந்தமிழ் நீதி நூலான திருக்குறளில் இருந்து ஒரு குறட்பாவினைப் பொருத்தமாக மேற்கோள் காட்டியுள்ளார் : "செல்வாக்கு, திறமை, நாவன்மை, நுண்ணறிவு - இவை

உள்ளவரையே தூதுவராக அனுப்புவது வழக்கம். அயல்நாடுகளுக்குத் தூதுவராகச் செல்வோர் அறிவும், தோற்றமும், ஆழ்ந்த படிப்பும் நிரம்பப் பெற்றவராக இருக்க வேண்டும் என்பதை,

'அறிவுஉருவு ஆராய்ந்த கல்விஇம் மூன்றும்
செறிவுடையான் செல்க வினைக்கு'

என்று வள்ளுவர் அளந்து கூறியிருப்பது உள்ளுந்தோறும் உவகை பயப்பதாகும்" (நீங்களும் தூதுவர் ஆகலாம், ப. 23).

முன்னைப் பழமையோடு பின்னைப் புதுமையையும் உரிய இடங்களில் மேற்கோள் காட்டியுள்ளார் சோமலெ. பயணத்தால் விளையும் நன்மைகளை நிரல்படுத்திக் கூறும் இடத்தில் அவர், கவியரசர் பாரதியாரின் பாடல் வரிகளைப் பொருத்தமாக மேற்கோள் காட்டியுள்ளார் : "பயணத்தால் விளையும் நலன்கள் எத்தனையோ உள்ளன : மனத்திற்கு உற்சாகம், உள்ளத்தை ஈர்க்கும் காட்சிகள், சிந்தனையைத் தூண்டும் கல்வியும் கேள்வியும், சிறந்த பழக்க வழக்க ஒழுக்கங்களை அறிந்து கொள்ளும் வாய்ப்பு, புதிய நண்பர்களுடன் பழகும் சூழ்நிலை. முகத்துக்கு முகம் கண்ணாடி. வேறுபட்ட மக்கள் ஒருவரை ஒருவர் சந்திப்பதால் உலகில் ஒற்றுமை நிலவும். நல்லுறவு வளரும். எனவே 'சென்றிடுவீர் எட்டுத் திக்கும், கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்' " (பிரயாணம் ஒரு கலை, ப. 16).

இலக்கிய மேற்கோள்கள் மட்டுமின்றி, மேனாட்டு அறிஞர்களின் பொன்மொழிகளையும் சோமலெ பற்பல இடங்களில் மேற்கோள் காட்டிச் சென்றுள்ளார். உள்ளங்கவர் ஓர் எடுத்துக்காட்டு இதோ:

" 'ஒரு நாட்டின் வரலாறு அந்த நாட்டில் தோன்றிய பெருமக்களின் வரலாறேயாகும்' என்று அறிஞர் கார்லைல் கூறியுள்ளார். இது உண்மையானால், கடந்த நூறு ஆண்டுகளில் இலங்கையின் வரலாறு ஆறுமுக நாவலர், சர்.பொன். இராமநாதன் ஆகியோரின் வரலாறேயாகும்" (பல்சுவைக் கட்டுரைகள், ப. 38). 'சர். பொன்னம்பலம் இராமநாதன்' பற்றிய இந் நடைச் சித்திரத்தினை அறிஞர் கார்லைலின் பொருத்தமான மேற்கோளோடு தொடங்கியுள்ளார் சோமலெ.

'அமெரிக்காவைப் பார்!' என்னும் தம் பயண நூலினை அறிஞர் பெர்னார்ட் ஷாவின் புகழ்பெற்ற மேற்கோளுடன் சோமலெ நிறைவு செய்துள்ளார்: "நேரமும் பணமும் ஒன்றே. நேரந்தான் நாகரிகம், கலை, இலக்கியம், ஓய்வு, இன்பம். சுருங்கச் சொன்னால் வாழ்க்கையின் பயனை நன்றாக அனுபவிக்க உதவுவது நேரமே" (ப. 191).

பழந்தமிழ் நூல்கள், உலக அறிஞர்களின் பொன்மொழிகள் ஆகியவற்றோடு வானொலிப் பொழிவுகள், பத்திரிகைப் பேட்டிகள், பத்திரிகைக் கட்டுரைகள் போல்வனவற்றில் இருந்தும் தக்க மேற்கோள்களை எடுத்தாளும் இயல்பு சோமலெயிடம் காணப்படுகின்றது. தமக்குத்

தேவையான செய்திகள் எங்கே இருந்தாலும் அதை விடாமல் தேடிப் பிடித்து, உரிய இடத்தில் அதனைப் பயன்படுத்தும் அவரது விடாமுயற்சி வியந்து போற்றத்தக்கதாகும்.

ஒரு தமிழ்ச் சான்றோரின் வானொலிப் பொழிவிலிருந்து சோமலெ மேற்கோள் எடுத்தாண்டுள்ளமைக்கு ஒரு சான்று வருமாறு : "பிரயாண நூல்கள் தமிழில் மிகக் குறைவு. டாக்டர் மு.வ. ஒரு முறை வானொலியிற் கூறியது போல, 'அறிஞர்கள் வெளிநாட்டில் சுற்றுப்பயணம் செய்யும்போது, அல்லது வெளிநாட்டில் சில காலம் தங்கியிருக்கும்போது, தாம் கண்டவை, கேட்டவைகளையெல்லாம் விடாமல் குறிப்பெடுத்து வைத்து நூல்கள் எழுத வேண்டும். அந்த நூல்கள் இரு வகையில் பயன்படும். ஒன்று, வெளியுலகத்தைப் பற்றிய பரந்த அறிவு வளர்வதற்குப் பயன்படும்; மற்றொன்று, அடுத்தாற்போல் வெளிநாட்டிற்குச் செல்வோர்க்கு வழிகாட்டியாகவும் துணையாகவும் விளங்கும்" (பிரயாண இலக்கியம், ப.15).

'செய்தி இதழ்களில் ஈடுபட்டிருப்பவர்கள் மன உறுதி கொள்வார்களானால் தமிழ் மொழி மேன்மேலும் வளருவதற்கு அவர்கள் பேருதவியாக இருக்கலாம்' என்னும் தம் கருத்திற்கு வலிமையும் வளமும் சேர்க்கும் விதத்தில் சோமலெ எழுத்தாளர் கல்கி கிருஷ்ணமூர்த்தியின் 'பொன்னி' பத்திரிகைப் பேட்டியில் இருந்தும், கி.வா.ஜகந்நாதன் 'நவமணி' முதல் இதழில் (10.9.1960) எழுதிய பத்திரிகைக் கட்டுரையில் இருந்தும் தக்க மேற்கோள் காட்டிச் செல்கின்றார் (வளரும் தமிழ், பக். 256-257).

இங்ஙனம் நுண்ணிய பல நூல்களில் இருந்தும், உலக அறிஞர்கள் பலரது எழுத்து மற்றும் உரைகளில் இருந்தும் நல்ல நல்ல மேற்கோள்களை எடுத்தாண்டு தம் கருத்துக்களுக்கு வண்ணமும் வனப்பும் சேர்த்துள்ளார் சோமலெ.

## VII. பழமொழிகளின் பயன்பாடு

சோமலெவுக்கு நீண்ட நெடுங்காலமாக நாட்டுப்புறவியல் துறையின் மீது மிகுந்த ஈடுபாடு உண்டு. அதிலும் குறிப்பாக, பழமொழிகளின் மீது அவருக்குத் தனிப்பட்ட பற்றும் பாசமுமே உண்டு. அவருடைய பயண நூல்கள், மாவட்ட வரிசை நூல்கள் முதலானவற்றில் இயலும் வகையில் எல்லாம் பழமொழிகளைத் தொகுத்துத் தந்திருப்பார் அவர். மேலும், தம் கருத்திற்கு அரண் சேர்க்கும் முறையிலும், அணி சேர்க்கும் விதத்திலும், கருத்தினைப் பொதுமக்களுக்கு எளிதில் கொண்டு செல்லும் நோக்கிலும் பழமொழிகளைப் பயன்படுத்திக் கொள்ளும் போக்கும் அவரிடம் உண்டு. இவ்வகையில் குறிப்பிடத்தக்க இரு சான்றுகள் வருமாறு:

1. "சுவரை வைத்துக் கொண்டு தான் சித்திரம் எழுத வேண்டும்; உடல் நலத்தைப் பேணிக் கொண்டு தான் பயணத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டும்" (பல்சுவைக் கட்டுரைகள், ப. 155).

2. "இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன? என்பது ஒரு தமிழ்ப் பழமொழி. 'நமக்கு வேண்டியது அமைதியான வாழ்க்கைக்கு இடையூறு இல்லாத அரசியல் நிலைமை' என்ற தமிழன் கொள்கைக்கு இது சான்று" (தமிழ் நாட்டு மக்களின் மரபும் பண்பாடும், பக். 1-2).

தமிழக, இந்தியப் பழமொழிகள் மட்டுமன்றி, உலக நாடுகளில் வழங்கும் பழமொழிகளையும் சோமலெ தம் நூல்களில் உரிய இடங்களில் பயன்படுத்திக் கொண்டுள்ளார். இவ்வகையில் குறிப்பிடத்தக்க இரு சான்றுகள் வருமாறு :

1. " 'உன்னால் நடக்க முடியுமாயின், உன்னால் நடனமாடவும் முடியும்' என்பது ஒரு சுவீடிஷ் பழமொழி" (பல்சுவைக் கட்டுரைகள், ப. 134).
2. " 'நெய் இல்லா உண்டி பாழ்' என்பது நம் ஊர்ப் பழமொழி; 'மீன் இல்லா உணவு பாழ்' என்பது ஜப்பானியப் பழமொழி" (உலக நாடுகள் வரிசை 6 : ஜப்பான், ப. 8).

பழமொழிகளின் அடிப்படையில் புதுமொழிகளைப் படைக்கும் திறமும் சோமலெயிடம் சிறப்பாகக் காணப்படுகின்றது. ஓர் எடுத்துக்காட்டு இதோ:

" 'விருந்தும் மருந்தும் மூன்று நாள்' என்பது பழைய பழமொழி. 'மாநாடும் அறக்கட்டளைச் சொற்பொழிவும் மூன்று நாள்' என்பது புதிய பழமொழி" (தமிழ் இதழ்கள், ப. 3).

'வீட்டைக் கட்டிப் பார், கல்யாணத்தைச் செய்து பார்!' எனத் தமிழ்நாட்டில் வழங்கும் பழமொழியுடன் சோமலெ சேர்த்துச் சொல்லும் புதுமொழி 'உலகத்தைச் சுற்றிப் பார்!' என்பதாகும் (பிரயாண இலக்கியம், ப. 14).

வாய்ப்பான சூழல்களின் போது சோமலெ ஓரிரு 'புதுக்குறள்க'ளையும் படைத்துள்ளார். பதச்சோறு இதோ :

"இயற்கையின் கவின்பெரு வனப்பு, குளிப்பவர்களைக் குறள் பாடச் சொல்லும்.

'குளிப்பின் குற்றால அருவியிலே குளிக்க; அஃதின்றேல்,
குளிப்பின் குளியாமை நன்று'

என்பது போன்ற புதுமாதிரியான குறள்களைப் பாடத் தோன்றும்" (பிரயாணம் ஒரு கலை, ப. 66).

பழமொழி எனச் சுட்டிக் கூறாமல், போகிற போக்கில் தம் தனி நடையில் பழமொழிகளைக் கையாண்டு எழுதிச் செல்லும் போக்கும் சோமலெயிடம் உண்டு. சான்றுகள் சில வருமாறு :

1. "உலகம் பலவிதம், அதில் மலாவி ஒரு விதம் என்று சொல்லலாம்" (ஆப்பிரிக்க நாடுகள் வரிசை-10 : நடு ஆப்பிரிக்கா, ப. 35).

2. "சிறிது நேரம் பரோடாவில் இருந்தாலும் ஏனைய மாவட்டங்களுக்கும் பரோடாவுக்கும் உள்ள வேறுபாடு தெளிவாகத் தெரியும். கடுகு சிறுத்தாலும் காரம் போகுமா?" (பிரயாணம் ஒரு கலை, ப. 49).
3. " 'ஆரியக் கூத்தாடினாலும் காரியத்திலே கண்ணாயிருக்கும்' அமெரிக்கர், உணவு உட்கொள்ளும்போது கூட வேறொரு வேலையிலும் ஈடுபடுவர்".

இங்ஙனம் பல நிலைகளிலும் - பல வழிகளிலும் - பழமொழிகளைக் கையாண்டு பழமொழிகளின் மீது தமக்கு இருக்கும் ஆழ்ந்த பற்றையும் பாசத்தையும் வெளிப்படுத்தியுள்ளார் சோமலெ.

## VIII. மரபுத் தொடர்களும் வழக்குத் தொடர்களும் பயின்று வருதல்

தமிழ், உலகின் தொன்மையான மொழிகளுள் ஒன்று; அது செவ்வியல் மொழியும் (Classical Language) கூட. எனவே அதில் எண்ணற்ற மரபுத் தொடர்புகளும் வழக்குத் தொடர்களும் (Idioms and Phrases) காணப்பெறுவது என்பது இயல்பினும் இயல்பே ஆகும். சோமலெயின் மொழிநடையில் மரபுத் தொடர்களும் வழக்குத் தொடர்களும் பயின்று வருகின்றன; இவ்வகையில் குறிப்பிடத்தக்க சில சான்றுகள் வருமாறு :

"பாரதியாருடைய பாடல்கள் படிப்பவர் மனத்தில் படும்படி 'வெட்டு ஒன்று துண்டு இரண்டு' என்று உறுதியான கருத்துக்களைத் துணிந்து தெரிவிக்கின்றன" (பல்சுவைக் கட்டுரைகள், ப. 12).

"சண்முகம் செட்டியார் சிறந்த பேச்சாளர்; 'காரசாரமான' கேள்விகளுக்கு விடை கூறும்போது தான் அவருடைய கூர்ந்த அறிவு வெளிப்படும்" (பல்சுவைக் கட்டுரைகள், ப. 81).

"கானாவின் கனா : 'சுண்டைக்காய் நாடான கானாதான் ஆப்பிரிக்காவில் குரல்' என்ற முழக்கத்தைக் கேட்க வேண்டும் என்பது" (ஆப்பிரிக்க நாடுகள் வரி-5 : கானா, பக். 32).

இங்ஙனம் தமிழக மக்களின் நாவிலே நடம் பயிலும் மரபுத் தொடர்களையும் வழக்குத் தொடர்களையும் கையாண்டு எழுதும் போது சோமலெயின் மொழிநடைக்குத் தனிப்பட்ட ஓர் ஈர்ப்பும் எடுப்பும் சேருவது கண்கூடு.

## IX. சொல்லாட்சி

தமிழ் மொழியில் இன்று பல்வேறு அறிவுத் துறைகளைச் சார்ந்த நூல்களும் கட்டுரைகளும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அந்த அந்தத் துறைகளைச் சார்ந்த ஆங்கிலச் சொற்களை அப்படியே தமிழில் எழுதுவதும், ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை ஆளுவதும்

இன்று தமிழில் மிகுதியாகக் காணப்படுகின்றன. தமிழ் மரபு கெடாது பிற மொழிச் சொற்களை மொழிபெயர்க்க வேண்டும் என்பது சோமலெயின் அழுத்தமான எண்ணம் ஆகும். இதனைப் புலப்படுத்தும் ஒரு சான்று வருமாறு:

" 'Film Fans Association' என்பதற்கு 'சினிமா விசிறிகள் சங்கம்' என்று சிலர் மொழிபெயர்த்து வருகின்றனர். ஆங்கிலச் சொற்றொடரிலுள்ள 'Fans' என்னும் சொல் 'Fanatics' என்னும் சொல்லின் சுருக்கம் என்பதை அவர்கள் அறியவில்லை போலும். இதைப் போலவே 'from time to time' என்பதற்கு 'காலத்துக்கு காலம்' என்றும், 'Light house' என்பதற்கு 'வெளிச்ச வீடு' என்றும் தவறாக மொழிபெயர்த்து வருகிறார்கள். இவற்றுக்கு முறையே 'படம் பார்ப்பவர்கள் கழகம்', 'அவ்வப்போது' அல்லது 'இடையிடையே' 'கலங்கரை விளக்கு' என மொழிபெயர்ப்பதே பொருந்தும். 'All the three lectures' என்பதை 'எல்லா மூன்று சொற்பொழிவுகளும்' என்று தமிழ்ப்படுத்தும் மொழிபெயர்ப்பாளர்களும் இருக்கிறார்கள். 'மூன்று சொற்பொழிவுகளுமே' என்று மொழிபெயர்ப்பதே சரியாகும். 'Strike the iron while it is hot' என்பதைச் 'சூடாயிருக்கும்போதே இரும்பை அடித்துக் கொள்' என்று சிலர் மொழிபெயர்த்து வருகின்றனர். 'காற்றுள்ள போதே தூற்றிக்கொள்' என்று இதை மொழிபெயர்த்திருந்தால், படிப்பவர் பொருளை எளிதில் உணர்ந்து கொள்வர். 'Between the devil and the deep sea' என்பதை 'இரு நாய்களுக்கிடையே அகப்பட்ட எலும்பு போல்' என்று மொழிபெயர்ப்பதே பொருந்தும். இன்னும் சிலர் 'Took part' என்பதற்கு 'பங்கெடுத்துக் கொண்டனர்' என்றும், 'Did not take much time' என்பதற்கு 'அதிக காலம் எடுத்துக் கொள்ளவில்லை' என்றும், 'Beware of thieves' - 'திருடர்கள் ஜாக்கிரதை', 'Spit here' - 'துப்பு இங்கே', 'Push' - 'தள்ளு' என்று தமிழில் எழுதி வருகின்றனர். இவற்றிற்குப் பதிலாக, 'ஈடுபட்டனர்;' 'கலந்து கொண்டனர்' என்ற சொற்களையும், 'நெடுநேரம் ஆகவில்லை', 'திருடர்கள் இருக்கக்கூடும் கவனமாக இருக்கவும்', 'இங்கே துப்புக', 'தள்ளுக' என்று குறிப்பிட்டால், தமிழ் மரபு கெடாது", (வளரும் தமிழ் பக். 348-349). தமிழ் மரபு கெடாமல் சொற்களைப் பேணிக் காக்க வேண்டும் என்பதில் சோமலெவுக்கு உள்ள ஆழ்ந்த ஈடுபாட்டினை இதனால் அறியலாம்.

சோமலெயைப் பொறுத்த வரையில் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை ஆளுவதிலும் தனிக்கவனம் செலுத்தியுள்ளார். இவ்வகையில் சிறப்பாகக் குறிக்கத்தக்க அவரது சொல்லாக்கங்கள் சில வருமாறு :

1. Pass-port - அடையாளச் சீட்டு
2. Bank - வங்கி
3. Co-education - கலப்புக் கல்வி
4. Time-Table - கால அட்டவணை

5. Queue - வரிசை முறை (பிரயாணம் ஒரு கலை, பக்.10, 82, 88, 91, 96)
6. Menu Card - உணவுப் பட்டியல்
7. Air-Hostess - விமான மங்கை
8. Canteen - உணவுச் சாலை
9. Badge - அடையாளச் சீட்டு (என் பிரயாண நினைவுகள், பக்.7, 26, 67, 79)
10. Codes - மறைவான மொழிகள்
11. Nationality - நாட்டுரிமை
12. Microphone - ஒலி பெருக்கிக் கருவி
13. Information Officer - செய்தி அலுவலர்
14. T.V. Set - தொலைக்காட்சிக் கருவி
15. Enquiry Officer - விசாரணை அலுவலர்
16. Liaison Officer - தொடர்பு அலுவலர்

(நீங்களும் தூதுவர் ஆகலாம், பக். 67, 71, 84, 161)

## X. தமிழ் உரைநடை வளர்ச்சியில் சோமலெயின் பங்களிப்பு

'வளரும் தமிழ்' நூலின் முடிவுரையில் சோமலெ கூறியுள்ள ஓர் இன்றியமையாத கருத்துடன் இவ்வியல் நிறைவு பெறுவது பொருத்தமாக இருக்கும். அக்கருத்து வருமாறு:

''தமிழ் உரைநடை விரைவாகவும் சீரிய முறையிலும் வளர்ச்சியடையுமானால் தமிழ் மொழி உலகின் பழமையான மொழிகளுள் ஒன்றாக மட்டுமின்றி, உலகிற் சிறந்த மொழிகளுள் ஒன்றாகவும் விளங்கும்; இந்த நிலையை நம் தாய்மொழி அடைந்ததும், நாமும் நாமக்கல் கவிஞரோடு சேர்ந்து, ஆடிப்பாடி மகிழ்வோம்.

'தமிழனென்று சொல்லடா!
தலை நிமிர்ந்து நில்லடா!" (ப. 448)

இங்ஙனம் கருத்துக் கூறியதோடு நின்றுவிடாமல், தமிழ் உரைநடை உயர்நிலை அடையத் தம் நூல்களின் வாயிலாக உரிய பங்களிப்பினையும் செலுத்தியுள்ளார் சோமலெ.

# 9

## முடிவுரை

"மேதனிக்கும் வகுப்பெடுக்கும் சுறுசுறுப்பு, கடின உழைப்பாளி, சிந்தித்துக் கொண்டே இருப்பவர், நேரமே செல்வம் *(Time is Money)* என்ற கருத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர்..."* - சோமலெ சோமசுந்தரம்*

தமிழ் கூறு நல்லுலகிற்கு நன்கு அறிமுகமான பெயர் 'சோமலெ'. சோம.லெ.இலக்குமணச் செட்டியார் என்பது அவரது இயற்பெயர். அவரது குடும்பத்தினர் நடத்தி வந்தது ஏற்றுமதி - இறக்குமதி வணிகம்; ஆனால், அவர் ஆர்வத்தோடு நடை பயின்றதும், தடம் பதித்ததும் எழுத்துத் துறையில். நகரத்தார் மரபில் தோன்றிய அவர், உலக நாடுகள் பலவற்றிற்குச் சுற்றுப் பயணம் செய்து 'உலகம் சுற்றிய தமிழர்' என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றார். இந்த உலகச் சுற்றுப்பயணம் அவருள் குடிகொண்டிருந்த தகவல் தொகுக்கும் திறம், அவற்றை வகைப்படுத்தி, முறைப்படுத்தி நூலாகப் படைக்கும் ஆற்றல் ஆகியவற்றை வெளிக்கொணர்ந்தது என்று கூறினால் மிகையாகாது. வணிக மரபில் தோன்றிய சோமலெ, ஓர் எழுத்தாளராக மலருவதற்குப் பயண இலக்கிய முன்னோடி ஏ.கே. செட்டியாரின் நூல்களே தொடக்கத்தில் காரணமாக அமைந்தன. அவரது நூல்களைப் படித்ததன் விளைவாகவே உலகப் பயணம் மேற்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் - தூண்டுதல் - சோமலெயின் உள்ளத்தில் அரும்பியது எனலாம்.

'பயணம் என்பது மனிதனுக்கு இயற்கையாக அமைந்த ஒன்று. இல்லாவிட்டால் கடவுள் நமக்குக் கால்களையே படைத்திருக்க மாட்டார்' என்பது சோமலெயின் கருத்து. இக்கருத்திற்கு ஏற்ப, 1948 ஆகஸ்டு முதல் 1949 பிப்ரவரி வரை உலகம் - இந்தியா - தமிழ்நாடு என்னும் மூன்று நிலைகளிலும் விரிவான சுற்றுப்பயணம் மேற்கொண்டார் அவர். 'நான் கண்ட வெளிநாட்டுக் காட்சிகள்' என்பது அவர் எழுதிய முதல் பயண இலக்கிய நூல். தொடர்ந்து 'அமெரிக்காவைப் பார்!', 'ஆஸ்திரேலியாவில் ஒரு மாதம்', 'என் பிரயாண நினைவுகள்', 'பிரயாணம் ஒரு கலை', 'பிரயாண இலக்கியம்', 'உலக நாடுகள் வரிசை', 'ஆப்பிரிக்க நாடுகள் வரிசை' என அவரது பயண நூல்கள் பல அடுத்தடுத்து வெளிவந்தன. இந்த நூல்களின் வாயிலாக சோமலெ

---

* இந் நூலாசிரியருக்கு எழுதிய கடிதத்தில் இருந்து.

தமிழ்நாட்டில் பயண இலக்கியங்களைப் படிப்பதில் வாசகர்களுக்கு ஓர் ஆர்வத்தை உண்டாக்கினார்; தமிழக மக்களுக்கு உலக நாடுகளைப் படம்பிடித்துக் காட்டினார். இங்ஙனம் 'நாட்டின் நாட்டின், ஊரின் ஊரின், குடிமுறை குடிமுறை தேரின்' என்னும் சங்கச் சான்றோர் வெள்ளிவீதியாரின் வாக்கினை நினைவில் கொண்டு சோமலெ தமது நூல்களில் முதன்முதலில் உலக நாடுகளைப் பற்றி எடுத்துரைத்தார்; அடுத்து, 'இமயம் முதல் குமரி வரை' உள்ள இந்தியத் திருநாட்டைப் படம்பிடித்துக் காட்டினார்; முத்தாய்ப்பாகத் தமிழகத்தின் மாவட்டங்களைப் பற்றித் தனித்தனியே நூல்களைப் படைத்தார்.

'பயணம் என்பது வெளிநாட்டுப் பயணம் மட்டுமன்று; நம் நாட்டைப் பற்றியே அறிந்து கொள்ள வேண்டியது ஏராளமாக இருக்கிறது. அந்த வகையிலும் பல நூல்கள் தோன்ற வேண்டும்' என்ற எண்ணம் சோமலெயின் அடிமனத்தில் இருந்தது. இதன் அடிப்படையிலேயே, 'உலக நாடுகள் வரிசை', 'ஆப்பிரிக்க நாடுகள் வரிசை' என்றாற் போல் வெளிநாடுகளைப் பற்றிப் பற்பல பயண நூல்களைப் படைத்திட்ட அவர், தம் தாய்த்திரு நாட்டைப் பற்றியும் 'இமயம் முதல் குமரி வரை', 'நமது தலைநகரம்', 'வட மாநிலங்களில் தமிழர்' என்ற பயண நூல்களை எழுதினார்.

உலக நாடுகள், இந்திய மாநிலங்கள் ஆகியன பற்றி மட்டுமன்றி, தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்களைக் குறித்தும் விரிவாக நூல்கள் வெளிவர வேண்டும் என்ற எண்ணம் 1950-இல் சோமலெவுக்கு ஏற்பட்டது. இதன் விளைவாக அவர் தம் கருத்திற்குச் செயல் வடிவம் தரும் முயற்சியில் ஈடுபட்டார்; நூலுக்கு வேண்டிய செய்திகளை எல்லாம் தேனீ போல் அலைந்து திரிந்து தொகுக்க முற்பட்டார்; 1958-இல் நூல் எழுதும் பணியைத் தொடங்கினார். எனினும், இவ் வரிசையில் முதல் நூலான 'சேலம் மாவட்டம்' 1961-இல் தான் வெளிவந்தது; பத்தாவது நூலான 'மதுரை மாவட்டம்' 1980-இல் வெளிவந்தது. இடைப்பட்ட இருபது ஆண்டுக் கால இடைவெளியில் சோமலெ அரிதின் முயன்று இன்னும் எட்டு மாவட்டங்களைப் பற்றிய நூல்களை எழுதினார். பல நூல்களைப் படித்துத் தெளிந்ததோடு, அந்தந்த மாவட்டத்தில் வாழும் மக்களுடன் நெருங்கிப் பழகி, அவர்தம் பழக்கவழக்கங்கள், பேச்சு மொழி, நாட்டுப்பாடல்கள் முதலியவற்றையும் நேரில் கண்டறிந்து, ஆற்றொழுக்கான எளிய தமிழ் நடையில் செய்திகளைத் தொகுத்தும் வகுத்தும் வெளியிட்டார். சுருங்கக் கூறின், செந்தமிழ் நாட்டை அறிந்து நம் சிந்தை குளிரச் செய்வன சோமலெயின் 'தமிழ்நாடு மாவட்ட வரிசை நூல்கள்'.

'அவனருளாலே அவன் தாள் வணங்கி' என்ற மாணிக்கவாசகரின் வாக்கின்படி, சோமலெயின் சொற்களைக் கொண்டே அவரது பயண நூல்களைப் பற்றி நாம் மதிப்பீடு செய்யலாம். 'பயணத்தால் விளையும் நலன்கள் எத்தனையோ உள்ளன. மனத்திற்கு உற்சாகம், உள்ளத்தை ஈர்க்கும்

காட்சிகள், சிந்தனையைத் தூண்டும் கல்வியும் கேள்வியும், சிறந்த பழக்க வழக்க ஒழுக்கங்களை அறிந்துகொள்ளும் வாய்ப்பு, புதிய நண்பர்களுடன் பழகும் சூழ்நிலை, முகத்துக்கு முகம் கண்ணாடி. வேறுபட்ட மக்கள் ஒருவரை ஒருவர் சந்திப்பதால் உலகில் ஒற்றுமை நிலவும், நல்லுறவு வளரும்' என்னும் கருத்தின் விளக்கமாகவே சோமலெயின் பயண நூல்கள் விளங்கின எனலாம்.

பயண இலக்கியத்திற்கு அடுத்து, சோமலெயின் படைப்பு உள்ளத்தைச் சிக்கெனப் பற்றிக் கொண்டது வாழ்க்கை வரலாற்று இலக்கியம் ஆகும். மக்கள் எல்லோரும் வாழ்க்கையில் உயர்ந்த குறிக்கோளுடன் வாழ்வதற்குப் பெரிதும் பயன்படும் வகையில் அவர் மூன்று முத்தான வாழ்க்கை வரலாறுகளைப் படைத்துத் தந்தார். இவ்வகையில் அவர், முயற்சியும் மன உறுதியும் இருக்குமானால் உடல் ஊனமுற்றவர்களும் உயர்நிலையை அடைய இயலும் என்பதற்கு எடுத்துக்காட்டாக அமைந்த பெரும்புலவர் பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியாரின் வாழ்வையும், ஒரு மனிதன் வாழ்க்கையில் அவ்வப்போது தனக்கு ஏற்படும் ஒவ்வொரு சோதனையிலும் எப்படி ஈடுகொடுத்து உயரலாம், நேர்மைக்கும் நியாயத்திற்கும் மதிப்புத் தந்து வாழலாம் என்பதை உணர்த்தும் வகையில் 'விவசாய முதலமைச்சர்' ஓ.பி. ராமசாமி ரெட்டியாரின் வாழ்வையும், இந்திய விடுதலை இயக்கத்தின் குறுமுனிவராக விளங்கிய வேதாரண்யம் வீரர் - *'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்' - சர்தார் வேதரத்தினம் பிள்ளையின்* வியத்தகு வாழ்வையும் நூல் வடிவில் படம்பிடித்துக் காட்டியுள்ளார். சோமலெயின் இம்மூன்று நூல்களும் வாழ்க்கை வரலாற்று இலக்கியத்திற்கு அவர் அளித்துள்ள பெருங்கொடைகள் எனச் சுட்டலாம்.

இதழியலும் நாட்டுப்புறவியலும் சோமலெ ஆர்வம் காட்டிய இன்னும் இரு துறைகள் ஆகும். சென்னைப் பல்கலைக்கழக வெளியீடான 'தமிழ் இதழ்கள்' என்னும் நூல் இதழியலில் சோமலெ பெற்றிருந்த ஆழ்ந்த அனுபவத்தை வெளிப்படுத்துவதாகும். இந்நூல் 1974-ஆம் ஆண்டுக்கான கல்கி நினைவுச் சொற்பொழிவுகள் மூன்றின் தொகுப்பாகும். இதழியலைப் போல் சோமலெயின் மனத்தைக் கவர்ந்த மற்றொரு துறை நாட்டுப்புறவியல். இத்துறைக்கு அவர் அளித்திருக்கும் நிலையான பங்களிப்பே 'தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும்'. இதழியலிலும் நாட்டுப்புறவியலிலும் அவ்வளவாக நூல்கள் வெளிவந்திராத ஒரு காலகட்டத்தில் சோமலெ ஈடுபாடு காட்டி, முனைப்புடன் உழைத்து நூல்கள் படைத்தது என்பது அவரது இலக்கியப் பயணத்தில் ஒரு மைல் கல் ஆகும்.

பயண இலக்கியம், வாழ்க்கை வரலாற்று இலக்கியம், இதழியல், நாட்டுப்புறவியல் என்றாற் போல் பல்வேறு துறைகளைச் சார்ந்த நூல்களை எழுதியும் பதிப்பித்தும் பணியாற்றிய சோமலெயின் இலக்கியச் சாதனை என்னும் கோபுரத்தின் மணிமுடிகளாகத் திகழ்பவை 'வளரும் தமிழ்',

'செட்டிநாடும் செந்தமிழும்' என்னும் இரு சீரிய ஆய்வு நூல்கள் ஆகும். இவற்றுள் முன்னது, தமிழ் உரைநடை வளர்ச்சி பற்றிய முறையான வரலாற்றுப் பதிவு; பின்னது, தமிழ் மொழிக்கும் இலக்கியத்திற்கும் செட்டிநாடு ஆற்றியிருக்கும் தனிப்பெருந் தொண்டினைப் புலப்படுத்தும் தகவல் பெட்டகம். பல்வேறு நாடுகளிலும் நகரத்தார்கள் ஆற்றியுள்ள அறப்பணிகளை - கோயில் திருப்பணிகளை - விளக்கிக் கூறும் வண்ணம் சோமலெ படைத்துத் தந்துள்ள பிறிதொரு நூல் 'அலைகடலுக்கு அப்பாலும் நகரத்தார்களின் ஆலயப் பணிகள்'. இவ்வகையில் நகரத்தார் இயல் ஆய்வைச் சிறப்பாகவும் முறையாகவும் செய்த முன்னோடியாக விளங்குகிறார் சோமலெ.

புதிய புதிய துறைகளைச் சார்ந்த நூல்களைப் படைப்பதிலும் பெருவிருப்பம் கொண்டவராக விளங்கினார் சோமலெ. 'இந்தத் துறையில் தமிழில் வெளிவரும் முதல் நூல் இதுவே' என ஆய்வுலகம் சுட்டிக் கூறும் வண்ணம் அவர் ஒரு சில நூல்களைப் படைத்துத் தந்துள்ளார். 'நீங்களும் தூதுவர் ஆகலாம்', 'நெய்வேலி', 'வேளாண்மைப் பல்கலைக்கழகம்' என்னும் அவரது நூல்கள் இவ்வகையில் முத்திரை பதித்தவை ஆகும்.

முத்தாய்ப்பாக, கோவில் குட நீராட்டு விழா மலர் என்றாலே அதனைச் சிறப்பாகவும் செம்மையாகவும் பதிப்பிக்கும் ஆசிரியர் என இலக்கிய உலகில் இனம் காணப் பெற்றார் சோமலெ. அதன் விளைவாக, சிதம்பரம், திருவண்ணாமலை, இராமேசுவரம் முதலான பல்வேறு ஆலயங்களின் குட நீராட்டு விழா மலர்கள் அவரது கை வண்ணத்தில் மலர்ந்தன. இப்பட்டறிவின் துணையோடு நூற்றாண்டு விழா மலர், சங்கச் சிறப்பு மலர் என்ற வகையிலும் சோமலெ பற்பல மலர்களைப் பதிப்பித்துள்ளார். இவற்றால் இவருக்கு 'மலர் மன்னர் சோமலெ' எனப் பதிப்புலகில் ஒரு சிறப்புப் பெயர் வழங்கி வரலாயிற்று.

அறுபத்தைந்து ஆண்டுக் காலம் இம்மண்ணுலகில் நல்ல வண்ணம் வாழ்ந்து, தமிழில் அறுபதுக்கும் மேற்பட்ட நூல்களும், ஆங்கிலத்தில் பத்துக்கும் மேற்பட்ட நூல்களும், இரு மொழிகளிலும் எண்ணற்ற கட்டுரைகளும் எழுதி இலக்கியப் பணி ஆற்றியுள்ள சோமலெ, உண்மையான தரவுகளை அரிதின் முயன்று தொகுத்து, அவற்றை ஆய்வு நெறிமுறையின்படி ஒழுங்குபடுத்தி, ஒரு கலைக்களஞ்சியம் போன்ற அமைப்பில் நூல்கள் படைத்த எழுத்தாளர் எனப் பொதுநிலையிலும், குறிப்பாக நகரத்தார் இயல் ஆய்வை முறைப்படியாகத் தொடங்கி வைத்த முன்னோடி எனச் சிறப்பு நிலையிலும் என்றென்றும் போற்றப்படுவார்.

---

# பின்னிணைப்பு

## சோமலெ எழுதிய நூல்கள்

### I. பயண நூல்கள்

1. நான் கண்ட வெளிநாட்டுக் காட்சிகள். கண்டனூர் : வெள்ளையன் பதிப்புக் கழகம், மூன்றாம் பதிப்பு 1952.
2. அமெரிக்காவைப் பார்! சென்னை : இன்ப நிலையம், முதற்பதிப்பு 1950.
3. ஆஸ்திரேலியாவில் ஒரு மாதம். சென்னை : பாரி நிலையம், முதற்பதிப்பு 1950.
4. என் பிரயாண நினைவுகள். சென்னை : பாரி நிலையம், முதற் பதிப்பு 1950.
5. இமயம் முதல் குமரி வரை. சென்னை : மணிவாசகர் பதிப்பகம், முதற் பதிப்பு 1998.
6. நமது தலைநகரம். சென்னை : இன்ப நிலையம், முதற்பதிப்பு 1952.
7. பிரயாணம் ஒரு கலை. சென்னை : மலர் நிலையம், முதற்பதிப்பு 1955.
8. பிரயாண இலக்கியம். சென்னை : இன்ப நிலையம், முதற்பதிப்பு 1958.
9. உலக நாடுகள். சென்னை : வானதி பதிப்பகம், முதற்பதிப்பு 1987.
10. வட மாநிலங்களில் தமிழர். தஞ்சாவூர் : தமிழ்ப் பல்கலைக்கழகம், முதற்பதிப்பு 1988.

### II. உலக நாடுகள் வரிசை *(10)*

11. கனடா சென்னை : பாரி நிலையம், இரண்டாம் பதிப்பு 1965.
12. சுவீடன். சென்னை : பாரி நிலையம், இரண்டாம் பதிப்பு 1965.
13. குவாயிட் சென்னை : பாரி நிலையம், இரண்டாம் பதிப்பு 1965.
14. தாய்லந்து. சென்னை : பாரி நிலையம், திருத்திய இரண்டாம் பதிப்பு 1965.
15. பிரான்ஸ். சென்னை : பாரி நிலையம், திருத்திய இரண்டாம் பதிப்பு 1965.
16. ஜப்பான். சென்னை : பாரி நிலையம், திருத்திய இரண்டாம் பதிப்பு 1965.
17. பீஜித் தீவுகள். சென்னை : பாரி நிலையம், திருத்திய இரண்டாம் பதிப்பு 1965.
18. வத்திக்கான். சென்னை : பாரி நிலையம், இரண்டாம் பதிப்பு 1965.
19. மொரிசியஸ், சென்னை : பாரி நிலையம், திருத்திய இரண்டாம் பதிப்பு 1965.
20. இந்தோனேசியா. சென்னை : பாரி நிலையம், இரண்டாம் பதிப்பு 1965.

### III. ஆப்பிரிக்க நாடுகள் வரிசை *(12)*

21. ஆப்பிரிக்கா *(முன்னுரை)*. சென்னை : பாரி நிலையம், முதற் பதிப்பு 1964.
22. ஐக்கிய அரபுக் குடியரசு *(எகிப்து)*. சென்னை : பாரி நிலையம், முதற்பதிப்பு 1964.

23. எத்தியோப்பியா. சென்னை : பாரி நிலையம், முதற்பதிப்பு 1965.
24. தென்ஆப்பிரிக்கா. சென்னை : பாரி நிலையம், முதற்பதிப்பு 1968.
25. கானா. சென்னை : பாரி நிலையம், முதற்பதிப்பு 1964.
26. நைஜீரியா. சென்னை : பாரி நிலையம், முதற்பதிப்பு 1964.
27. மேற்கு ஆப்பிரிக்கா. சென்னை : பாரி நிலையம், முதற்பதிப்பு 1968.
28. கிழக்கு ஆப்பிரிக்கா. சென்னை : பாரி நிலையம், முதற்பதிப்பு 1968.
29. வடமேற்கு ஆப்பிரிக்கா. சென்னை : பாரி நிலையம், முதற்பதிப்பு 1969.
30. நடு ஆப்பிரிக்கா. சென்னை : பாரி நிலையம், முதற்பதிப்பு 1968.
31. சஹாரா. சென்னை : பாரி நிலையம், முதற்பதிப்பு 1969.
32. சூடானும் காங்கோவும். சென்னை : பாரி நிலையம், முதற்பதிப்பு 1969.

## IV. நமது தமிழ்நாடு வரிசை *(10)*

33. சேலம் மாவட்டம். சென்னை : பாரி நிலையம், முதற்பதிப்பு 1961.
34. கோயம்புத்தூர் மாவட்டம். சென்னை : பாரி நிலையம், முதற்பதிப்பு 1961.
35. கன்னியாகுமரி மாவட்டம். சென்னை : பாரி நிலையம், முதற்பதிப்பு 1961
36. தஞ்சாவூர் மாவட்டம். சென்னை : பாரி நிலையம், முதற்பதிப்பு 1961.
37. வட ஆர்க்காடு மாவட்டம். சென்னை : பாரி நிலையம், முதற்பதிப்பு 1961.
38. தென் ஆர்க்காடு மாவட்டம். சென்னை : பாரி நிலையம், முதற்பதிப்பு 1963.
39. திருநெல்வேலி மாவட்டம். சென்னை : பாரி நிலையம், முதற்பதிப்பு 1963.
40. செங்கற்பட்டு மாவட்டம். சென்னை : பாரி நிலையம், முதற்பதிப்பு 1963.
41. இராமநாதபுர மாவட்டம். சென்னை : பாரி நிலையம், முதற்பதிப்பு 1972.
42. மதுரை மாவட்டம். வேதாரண்யம் : கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலம், முதற்பதிப்பு 1980.

## V. வாழ்க்கை வரலாறு

43. பண்டிதமணி. மதுரை : ஒளி பதிப்பகம், இரண்டாம் பதிப்பு 1971.
44. விவசாய முதலமைச்சர். வேதாரண்யம் : கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலம், முதற்பதிப்பு 1979.

## VI. இதழியல்

45. தமிழ் இதழ்கள். சென்னை : சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு, முதற்பதிப்பு 1975.

## VII. நாட்டுப்புறவியல்

46. தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும். புதுதில்லி : நேஷனல் புக் டிரஸ்ட், மறுபதிப்பு 1981.

## VIII. மொழி ஆராய்ச்சி

47. வளரும் தமிழ். சென்னை : வானதி பதிப்பகம், முதற்பதிப்பு 1988.

## IX. நகரத்தார் இயல் ஆய்வு

48. செட்டிநாடும் செந்தமிழும். சென்னை : வானதி பதிப்பகம், முதற்பதிப்பு 1984.
49. அலைகடலுக்கு அப்பாலும் நகரத்தார்களின் ஆலயப் பணிகள். சென்னை: சோமு நூலகம், முதற்பதிப்பு 1979.

## X. அரசியல்

50. நீங்களும் தூதுவர் ஆகலாம். சென்னை : பாரி நிலையம், முதற்பதிப்பு 1958.

## XI. தொழில்

51. நெய்வேலி. சென்னை : இன்ப நிலையம், முதற்பதிப்பு 1960.

## XII. பல்கலைக்கழக வரலாறு

52. சோமலெ & லெ. சோமசுந்தரம். வேளாண்மைப் பல்கலைக்கழகம். சிதம்பரம் மணிவாசகர் பதிப்பகம், முதற்பதிப்பு 1985.

## XIII. கட்டுரை

53. நான் கண்ட விழாக்கள். சென்னை : இன்ப நிலையம், முதற்பதிப்பு 1960.
54. பல்சுவைக் கட்டுரைகள். சென்னை : இன்ப நிலையம், முதற்பதிப்பு 1961.

## XIV. சிறுவர் இலக்கியம்

55. சிறுவர்களுக்கு ஒரு சில கதைகள். சென்னை : கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், முதற்பதிப்பு 1972.

## XV. சமயம்

56. பழனி. பழனி : அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், 1975.

## XVI. கோவில் குட நீராட்டு மலர்களும் பிறவும்

57. ஸ்ரீகாசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம் நூற்றாண்டு விழா மலர், 1963.
58. சென்னை நகரத்தார் மாணவர் சங்கம் சிறப்பு மலர், 1964.
59. நெற்குப்பை இளையாத்தக்குடி - கழனிவாசல் நகரத்தார் வைகாசி விசாகப் பொன்விழா மலர், 1971.
60. நாசிக் - பஞ்சவடி ஸ்ரீ கார்த்திக் சுவாமி மந்திர் குட முழுக்கு மலர், 1972.
61. இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில் மகாகும்பாபிஷேக சிறப்பு மலர், 1975.

62. அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில் கும்பாபிஷேக மலர், 1976.
63. கோவிலூர் அருள்மிகு திருநெல்லைநாயகி உடனாய அருள்மிகு கொற்றவாள் ஈசுவரன் கோவில் திருக்குட நீராட்டு மலர், 1978.
64. நெற்குப்பை நகரத்தார் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் திருக்குட நன்னீராட்டு விழா மலர், 1978.
65. தில்லை மூலட்டான ஈசுவரர் கோயில் குடமுழுக்கு விழா மலர், 1979.
66. காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரேசுவரர் திருக்கோயில் திருக்குட நீராட்டு மலர், 1979.
67. பெங்களூர் கெஞ்சனஹள்ளி அருள்மிகு அன்னை இராஜராஜேஸ்வரி அம்பாள் திருக்கோயில் திருக்குட நீராட்டு முதலாண்டு நிறைவு விழாச் சிறப்பு மலர், 1979.
68. கோட்டையூர் அருள்மிகு மீனாட்சி அம்மை உடனாய அருள்மிகு சோமசுந்தரேசுவரர் திருக்கோயில் திருக்குட நீராட்டு மலர், 1980.

## XVII. ஆங்கில நூல்கள்

1. *Travel Literature in Tamil*. Madras : Paari Nilayam, 1969.
2. *Folklore of Tamil Nadu*. New Delhi : National Book Trust, 1973.
3. *Palani. Palani :* Arulmigu handayuthapani Swamy Temple, 1975.
4. *European Impact on Modern Tamil Writing and Literature*. Kerala : Dravidian Linguistics Association, 1976.
5. *AVM's Guide to South India*. Madras : Vadapalani Press, 1981.
6. Coast to Coast Kaleidoscope. A Pictoral Tour of Rotary District 320.

## XVIII. தட்டச்சுப் படி

1. தமிழ்நாட்டில் ஒரு சர்தார் அல்லது வேதாரண்யம் தந்த வேதரத்தினம் *அல்லது விந்தை மனிதர் வேதரத்தினம் பிள்ளை. (தந்து உதவியவர்:* சோமலெயின் மகன் சோமலெ சோமசுந்தரம்).

# துணை நூற்பட்டியல்

## I. நூல்கள்


1. சாலினி இளந்திரையன். வாழ்க்கை வரலாற்று இலக்கியம். சென்னை: தமிழ்ப் புத்தகாலயம், முதற்பதிப்பு 1974.
2. தமிழண்ணல் (தொகுப்பாசிரியர்). சோமலெ சோமசுந்தரம் - சௌந்தரம் திருமண வாழ்த்து மலர்கள். சிவகங்கை : அகரம் அச்சகம், 22.8.1988.
3. பண்டிதமணி. உரைநடைக் கோவை (இரண்டாம் பகுதி) : இலக்கியக் கட்டுரைகள். சென்னை : பழனியப்பா பிரதர்ஸ், ஏழாம் பதிப்பு 1963.
4. பரந்தாமனார், அ.கி. நல்ல தமிழ் எழுத வேண்டுமா? சென்னை: பாரி நிலையம், நான்காம் பதிப்பு 1967.
5. .......... சோமலெ. சென்னை : மணிவாசகர் பதிப்பகம், முதற்பதிப்பு, 1988.
6. மெய்யப்பன், ச. (பதிப்பாசிரியர்) நகரத்தார் கலைக்களஞ்சியம். சென்னை: மணிவாசகர் பதிப்பகம், முதற்பதிப்பு 1998.
7. வரதராசன், மு. தமிழ் இலக்கிய வரலாறு. புதுதில்லி : சாகித்திய அக்காதெமி, முதற்பதிப்பு 1972.


## II. இதழ்கள்


1. நகரத்தார் குரல், நவம்பர் 1993.
2. தினமணி சுடர், 'பயண இலக்கியத்திற்கு வளம் கூட்டியவர்', மார்ச் 4, 1995.

**சோமலெ** என்று புனைபெயர் கொண்ட சோம.லெ. இலக்குமணச் செட்டியார் (1921-1986) ஓர் எளிய குடும்பத்தில் பிறந்து, தமது கடுமையான உழைப்பின் மூலம் வாழ்வில் படிப்படியாக முன்னேறிப் புகழேணியில் உச்சிக்கு வந்தவர்; ‘உலகம் சுற்றிய தமிழர்’ ஏ.கே. செட்டியாரின் படைப்புக்களால் தூண்டப்பெற்று, பயண இலக்கியத் துறையில் அடியெடுத்து வைத்து, அதில் அழுத்தமான முத்திரை பதித்தவர்; உலகம்-இந்தியா-தமிழ்நாடு என்றாற் போல் முப்பெரும் பரிமாணங்களிலும் நூல் வரிசைகளை வெளியிட்டுத் தனிப்பெருஞ் சாதனை படைத்தவர்; வாழ்க்கை வரலாற்று இலக்கியத் துறைக்கும் தமது முத்தான மூன்று நூல்களால் வளம் சேர்த்தவர்; இதழியல், நாட்டுப்புறவியல் என்னும் இரு துறைகளையும் குறித்துத் தனித்தனியே இரு அரிய நூல்களை வெளியிட்டவர்; ‘தமிழில் இத்துறையில் வெளிவரும் முதல் நூல் இதுவே’ எனப் பெருமிதத்தோடு சுட்டிக் கூறத்தக்க வண்ணம் சில நூல்களைப் படைத்திட்ட எழுத்தாளர்; பல்வேறு கோவில் குடநீராட்டு விழா மலர்களைப் பதிப்பிப்பதிலும் தம் கைவண்ணத்தைக் கவினுறக் காட்டிய பதிப்பாசிரியர். இங்ஙனம் எழுத்துத் துறையில் பல்வேறு பரிமாணங்கள் கொண்ட சோமலெயைத் தமிழ் கூறு நல்லுலகிற்கு எளிய முறையில் அறிமுகம் செய்துவைக்கும் நூல் இது.

இந்நூலாசிரியர் **நிர்மலா மோகன்** ‘நான்காம் தமிழ்ச் சங்கம்’ எனச் சிறப்பித்துப் பேசப்படும் மதுரை செந்தமிழ்க் கல்லூரியில் பணியாற்றி வரும் பேராசிரியர்; குறம், குறவஞ்சி, குறவ நாடகம் ஆகியவற்றை ஆராய்ந்து முனைவர் பட்டம் பெற்றவர்; ‘குறவஞ்சி’, ‘குறவஞ்சி இலக்கியம்’, ‘சிற்றிலக்கியங்களின் தோற்றமும் வகையும்’, ‘இலக்கியத் தென்றல்’, ‘இலக்கிய மனிதன்’, ‘கி.வா. ஜகந்நாதன்’ முதலான நூல்களின் ஆசிரியர்.

***Somale* (Tamil)**
**ISBN 81-260-1242-0** **Rs.25**

**இருபத்திரண்டு இந்திய மொழிகளில் நூல்கள் வெளியிடும் சாகித்திய அக்காதெமி, உலகிலேயே மிகப் பெரிய வெளியீட்டகம்.**